5500 இறையனாரகப்
பொருள்
உரையுடன்
தி. வை. தாமோதரம்பிள்ளை
பதிப்பு.

1883 ஆம் ஆண்டுப் பதிப்பு

சிவமயம்.

அந்தமுமாதியு மவ்வுனவ்வுநின் றமலன்றந்த
செந்தமிழென்னுந் திறங்காட்டியீதைந் திணையகநூல்
வந்தனயாவும் வளரன்பின்மேனவென் வாய்மைக்கன்றே
முந்துமன்பின் முதலாய் மேனவென்று முடிந்ததுவே.

ஜயமயம்.

## திரிசிரபுரம்

## சி - தியாகராசச்செட்டியாரាற்

செய்யப்பட்ட

# சிறப்புப்பாயிரம்.

மாமேவுமதமொருபாற்புனலருவிமற்றொருபால்வழியமுன்னர்த்
தேமேவுமுகிறவழப்பொதியநிலவுறவொருபாற்றேவிமேவத்
தூமேவுமற்றொருபானீறிலங்கமர்யனிலர்தோயத்தாழப்
பாமேவுமெம்பெருமானெழுந்தருளல்காட்டுதமிழ்ப்பாண்டிநாட்டில்.()

கூன்றாங்குமதிநுதற்பூங்கோதையர்பல்லணிக்குமெழில்குல்வுகண்டர்
தான்றாங்குமங்கலநாணரசாகிநனிசிறந்துதயங்கன்மானத்
தேன்றாங்குமலர்ப்பொழில்சூழ்பன்னகர்க்குமரசாகிச்சிறந்துமேவும்.
வான்றாங்குமணிமாடவணிதிகழுந்திருவாலவாய்மூதூரில். (உ)

கண்டவர்யாரொனினும்பின்னிரயவழிகாணுமற்கவினுமின்பங், கொ
ண்டவராயினிதுறையப்புரிதருபோராலயத்துட்கோதிலாத, வொண்ட
வஞ்செய்முனிவரருமமரர்களுமடியவருமொத்துத்தம்வாய், விண்டவ
ணிசெய்தவமேனீதுவென்னும்விண்ணிழிந்தவிமானந்தன்னில். (௩)

மருவேர்துமிதழ்க்கமலமலரோந்துபண்ணவனும்வண்ணவொண்கட்
டிருவேந்துமறுமார்பிற்செம்மணியேந்தியகோவுஞ்செழிக்குந்தேவ
தருவேந்துநறியமலர்த்தாரேந்துசதமகனுந்தகையுமற்றைக்
குருவேந்துமுருவேந்துவானவருந்தானவருங்கும்பிட்டேத்த. (௪)

கண்ணருவிபுரளமொழிதழுதழுப்பவெண்ணிலவுகாலுமீற்றுத், தண்ணி
யமெய்ப்புளகரும்பமெய்யன்பர்சூழாநெருங்கித்தலைமேற்கூம்பி, யண்ணி
யசெங்கரங்களொடுபுகுந்துபணிந்தெழுந்துகூத்தாடியெங்கள், புண்ணி
யமேபுண்ணியத்தின்பொருவரும்பேறேயென்றுபுரிந்துவாழ்த்த. (௫)

எழுந்தருளிவிளங்குதனிமுதல்யாவன்வெம்பிறவிக்கிடைந்தடைந்து,வி
ழுந்தடியிலிரந்தவனைப்புரந்திடுதலுலகுணர்த்தமெலிந்ததிங்கட், கொழு
ந்தணிந்தோன்யாவனுயர்பசுபதிப்பேர்பொதுநீக்கிக்கொண்டோன் யா
வன், செழுந்தளக்கொன்றையைச்சூடிப்பிரணவச்செம்பொருடானு
ந்திகழ்ந்தோன்யாவன். (௬)

அனையபிரான்பெருங்கருணை பெருகநறவிழிநிம்பத்தலங்கல்வேய்ந்த
முனையவடிவேல்வலக்கைப்பூழியனுநண்ணறிவான்முதிர்வுற்றோங்கி
வினையமலிபுலவர்களும்பணிந்திறைஞ்சிநனியிரந்துவேண்டநீண்ட
கனையுகடலுலகினியணிகழமுதுமறைமுளைத்தகனிவாய்விண்டு. (எ)

தெள்ளியவான்சுவையமுதந்திரட்டியெடுத்தினிதளித்தசெயலேமான
வள்ளியநீந்தமிழினன்பினைந்திணையென்றெடுத்தருளிவனைந்துநல்கு
மொள்ளியமாணகப்பொருளையுயர்புலமைநக்கீரருஏற்றித்தந்த
தள்ளியவொப்புரையோடுதயங்கவச்சிற்பதிப்பித்துத்தருகவென்று. (அ)

பொன்றுடும்வில்லவர்கோன்புரந்தளிக்கப்பொலிநாடும்புகழ்சேர்தொ
ண்டை, நன்றுடுங்காவிரிநன்னதிபெருகிவளஞ்சுரக்குநலஞ்சேர்சென்
னி, மன்றுமெழவர்பிரான்வளநாடும்வேம்பணிதோண்மாறன்காக்குந்,
தென்றுமெந்நாடும்புகழீழநாடென்னுஞ்செல்வநாடன். (கூ)

பண்காட்டுமெந்தீஞ்சொற்பணைகாட்டுந்தோட்டீம்பாற்பரவைகாட்டும்
பெண்காட்டுமெழில்காட்டும்பிறைகாட்டுஞ்சிறியநுதற்பேதைமார்தம்
விண்காட்டுமருங்குலிறவீங்குகடங்காட்டுமுலைவிராயசாந்தம் [பண்.
புண்காட்டுவேலிளைஞர்புயங்காட்டப்பொலிகொழும்புத்துறைவாழ்பூ

கடியிருக்குந்தளவப்பூமாலையொடுகுறளடிமுற்களையுமைந்தா [டோளை
மடியிருக்குஞ்செந்தமிழ்ப்பாமாலையுஞ்சேர்ந்தளாய்மணக்கவணிதிண்
வடியிருக்குங்கருநெடுங்கண்மதியிருக்குமுகவிசயமாதுநாளுங் [வோன்.
குடியிருக்கும்பூங்கோயிலென்றுமகிழ்கொண்டிருக்கக்கொடுத்துவாழ்

விடங்கவிழ்க்குங்கடியநுனைவேலொடுவெஞ்சமர்க்கெழுந்தவேண்டலா
ர்தம், படங்கவிழ்க்குமணிமுடிகொண்முடிதண்டங்கொடுதாக்கும்பரூஉ
த்தடக்கைக், கடங்கவிழ்க்குங்கவுட்களிற்றின்கூற்றொடும்பேர் [சயற்க
ஞ்சாக்கலினமாவான், மடங்கவிழ்க்குங்கலைகண்முழுதுணர்ந்து [ணம
லையேறிவயங்கநின்றோன். (கஉ)

பொன்செய்துணர்க்கற்பகமேயிருநிதியேபொன்மாரிபொழியுங் [மோ
மின்செய்சிந்தாமணியேயென்றிரந்தார்தமைமுன்னமேவித்தீ
புன்செய்கைநனிவிளைத்தவறுமைபுகலிடமின்றிப்புலம்பியந்தோ
வென்செய்வேனென்செய்வேனெனக்கலங்கியலையவினிநீயுங்கையான்

நீங்குகளுக்கரசாயகொலைமுதன்மாபாதகத்தைச்செப்பலென்றே
வோங்குசிவமேபொருளென்றுணராதாருள்ளகத்திலோங்கிநாளும்
வீங்குகடுங்காரிருளாமவிச்சையெதிர்ப்படிறுமுறவெளிறச்செய்புந் [ன்
தேங்குறுவெண்ணிறமருவுபெரும்புகழினனிமூழ்கித்திகைக்குமேலோ

என்றவுமேயென்னவடமொழிநூலுமோவாமலிலங்கயான்செய்
யின்றவமேயென்னச்செந்தமிழ்நூலுமிசைநூலுமியையயான்செய்
மன்றவமேயெனவிருப்பத்தில்லையம்பலமகிபன்வயங்கச்செய்த
மின்றவமேதிரண்டொளிருங்குமாரசாமிக்குரிசில்விளம்பக்கேட்டு (கட

ஈண்டார்வம்விலைக்குநமக்கிவனேவலிதன்மேற்பேறென்னேயன்பு
பூண்டார்மெய்யடியாருதிருக்கோவையாரெழுதிப்புவிமேவச்செய்
யாண்டார்செய்பொருளிந்நூல்பதிக்கநுவன்றமையினந்தவடியாருக்
நீண்டாரவ்வாண்டார்க்குமோவாதபேருவகைநிரப்பலாலே. (கச

என்றுநினைந்திடையறாமகிழ்வோங்கவினிதாராய்ந்தெழுதுவோர்கை
துன்றுவழுவறக்களைந்துநெடுகடல்சூழ்ஞாலத்திற்றுலங்கிமேவ
நன்றுறவேபதிப்பித்துமுற்றுவித்தானனையபெருநலமெஞ்ஞான்றுங்
குன்றலிலாப்பெரியோன்யாவனெனவினவிடின்யாங்கூறுவாமே.

குளநாடுசெவ்விழியுங்களநாடுகருவிடமுங்குருஉப்பொற்கொன்றைத்
தளநாடுபூந்தொடையுமுடையபிரானமரிரண்டுதலங்களன்ப
ருளநாடுமுயர்சிறப்பினுளநாடுபெருஞ்செல்வமோங்குமீழ
வளநாடுதழுவியொளிர்சிற்றூரொன்பேரூரில்வந்தசீலன். (கஅ

பெரும்புலவர்பலர்குழுமிப்புகழ்ந்திடினுமுலவாதபெருமைவாய்ந்த
வரும்புலவன்வைரவநாதப்பெயர்பூண்டமைபெரியோனரிதினீன்றும்
விரும்புதவப்பயனாகிமேதினியினனிவிளங்குமேன்மையாளன்
கரும்புகசந்திடப்புரிசெந்தமிழ்க்கடலிற்றுளைந்தாடுகளிறுபோல்வான்.

பன்னெறிநூன்முழுவதுமுக்குற்றமறவாய்ந்துணர்ந்துபகரவற்றுட்
புன்னெறியையுணர்த்துபுறமதநூற்கோளறக்கடிந்துபுகரிலாத
மின்னெறிசெஞ்சடாமவுலிவிமலரருளியமெய்ந்நூல்விளக்குந்தூய
நன்னெறிவீறியதாமோதரனெனஞாலம்புகழுநலமிக்கோனே. (உ0)

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௩ | ௧௧ | தலை | கலை |
| ௪ | ௨௩ | | கீரந்தை |
| ௮ | ௭ | யாசிரிய | யாசிரியர் |
| ,, | ௨௮ | களவகா | களவாகா |
| ௯ | ௨௩ | கட்டிப் | கட்டி |
| ௧௦ | ௨௦ | னிக் | இனிய |
| ௧௨ | ௩ | நானுற்ற | நானூற்ற |
| ௧௭ | ௩௦ | குஉரிப் | குஉரிய |
| ௧௮ | ௨௧ | இவை | இணை |
| ௨௧ | ௭ | பட்டு | பட்டுப் |
| ௨௯ | ௨௭ | சென்னல | செந்நில |
| ௩௧ | ௪ | மங்கை | கருமங்கை |
| ,, | ௧௮ | பெய்து | பொது |
| ௩௨ | ௨௫ | பதுட் | பது |
| ,, | ௨௬ | தியது | தியது. |
| ௩௩ | ௧௨ | அவற் | அவர்க் |
| ,, | ௨௯ | நாறுா | நாறுங் |
| ௩௬ | ௭ | மங்கைக் | மங்கை |
| ௩௯ | ௭ | பொறை | புறை |
| ௪௨ | ௧ | கும | குமா |
| ,, | ௩௨ | தொலை | கொலை |
| ௪௩ | ௯ | புலவு | புலவ |
| ௪௪ | ௧௯ | வெண்ணை | வெண்ணெ |
| ,, | ௨௫ | அன்னீர் | அந்நீர் |
| ௪௯ | ௨௪ | கேழ் | கேழ்க் |
| ,, | ௨௫ | காந்தண் | சாந்தள் |
| ௫௮ | ௧௭ | மலிந்து | மலிந்த |
| ,, | ௧௯ | பெயரும | பேரும |
| ௫௯ | ௬ | புணரா | புணரு |
| , | ௨௭ | தனும் | தானும் |
| ௬௦ | ௨௯ | நீங்கி | நீர்ந்தி |
| ௬௧ | ௩௦ | லைவா | லலைவா |
| ௬௪ | ௧௬ | ஐயுண | ஐயவுண |
| ௬௫ | ௩௧ | குறிப்பு | குறையு |
| ௬௬ | ௨௧ | இகக்கும் | இக்கருமம் |
| ௭௧ | ௨௭ | பாழி | பாழிப் |
| ௭௩ | ௪௫ | புணர்ந்த | யுணர்ந்த |
| ௭௬ | ௩ | கல் | கலால் |
| ௮௧ | ௮ | வரிற் | வரிப் |
| ௮௫ | ௯ | விருப் | விருவப் |
| ௮௯ | ௧௮ | பொறை | புறை |
| ௯௧ | ௧ | உம்மீறு | தம்மீறு |
| ௯௫ | ௧௪ | டைதும் | டைந்து |
| ௧௦௨ | ௯ | கட்ட | |
| ௧௦௫ | ௫ | னெடு | னொடு |
| ௧௦௬ | | | தான் |
| ,, | ௨௪ | வ | வழிப்படு |
| | ௧௪ | நீழ் | நீள் |
| ௧௧௨ | ௧௦ | வல்லான் | வில்லான் |
| ௧௧௪ | ௧௦ | னும்மக | ளும்மக |
| | ௨௪ | மறுத்து | மறித்து |
| ௧௧௫ | ௨௫ | மூனை | |
| ௧௧௮ | ௧௦ | மகளை | மகளோ |
| | ௧௨ | குலம | குலமா |
| ௧௩௯ | ௨௮ | டுயெ | டெ |
| | ௧௪ | புறத் | புறுத் |
| ௧௪௨ | ௫ | யந் | யர்ந் |
| ௧௪௪ | ௧௬ | விசைய | வி[illegible]ய |
| ,, | ௨௪ | குமரி | குமரிக் |
| ௧௪௯ | ௯ | தியரி | திரிய |
| ,, | ௨௬ | றுணைக | றுணைக |
| ௧௫௬ | ௨௦ | சேரிசோ | சேரிசேர |
| ௧௬௧ | ௯ | மழையு | மமையு |
| ,, | ௨௬ | கரியண | கரியவை |
| ௧௬௩ | ௨௭ | வேது | |
| ௧௬௭ | ௨௨ | பொறை | புறை |
| ,, | ௨௮ | ,, | ,, |
| ௧௬௮ | ௨௬ | கோடலின் | கோடலு |
| ௧௬௯ | ௨௩ | பொறை | புறை |
| ௧௭௦ | ௧௨ | ,, | |
| ,, | ௨௨ | ,, | ,, |
| ௧௭௭ | ௨௮ | | இருதுவும் |

கொழுக்சென்றவழி! பழமொழி,
தொகை. 21-99 பக்கம் 7.

சிவமயம்.

# இறையனாரகப்பொருள்.

க. அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்ற லெட்டினுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்.

என்பது சூத்திரம். எந்நூலை உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்துரைக்கற்பாற்று; என்னை? "ஆயிர முகத்தா னகன்ற தாயினும் பாயிர மில்லது பனுவ லன்றே." என்பதாகலானும், பருப்பொருட்டாகிய பாயிரங்கேட்டார்க்கு நுண்பொருட்டாகிய நூல் இனிது விளங்கும் என்பதாகலானும் பாயிரம் உரைத்துரைக்கவேண்டுமென்பது. என்போலவோவெனின், கொழுச் சென்றவழித் துன்னூசி இனிது செல்லும்; அதுபோலவென்பது.

அப்பாயிரம் இரண்டுவகைப்படும், பொதுவுஞ் சிறப்புமென. அவற்றுட் பொதுப்பாயிரம் என்பது எல்லாநூன்முகத்தும் உரைக்கப்படும்; சிறப்புப்பாயிரம் என்பது தன்னால் உரைக்கின்ற நூற்கு இன்றியமையாதது.

பாயிரம் என்ற சொற்குப் பொருள் யாதோவெனின், புறவுரை என்றவாறு. ஆயின், நூல் கேட்பான் புகுந்தோன் நூல் கேளாமுன் புறவுரை கேட்பதென்னையோவெனின், நூற்குப் புறனாய் வைத்தும் இன்றியமையாததாதலினென்க. என்போலவோவெனின், கருவமைந்த மாநகரிற்கு உருவமைந்த வாயின்மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகைமாண்ட பாவைபோலவும் என்பது. ஆகலிற் பாயிரங்கேட்டே நூல் கேட்கப்படும்.

அவற்றுள் அப்பொதுப்பாயிரந்தான் நான்குவகைப்படும், ı வோன்றன்மையும் ஈதலியற்கையுங் கொள்வோன்றன்மையுங் கோடன்மரபுமென ; என்னை ? "ஈவோன் றன்மை யீத லியற்கை-கொள் வோன் றன்மை கோடன் மரபென-வீரிரண் டென்ப பொதுவி னியற்கை." என்பதாகலின்.

ஈவோன்றன்மை என்பது ஆசிரியனது தன்மை என்றவாறு; ஈதலியற்கை என்பது அவன் உரைக்கும் முறைமை என்றவாறு; கொள்வோன்றன்மை என்பது மாணாக்கனது தன்மை என்றவாறு; கோடன்மரபு என்பது அவன்கேட்கும் முறைமை என்றவாறு; அவையெல்லாம் விரித்துரைப்பிற் பெருகும், முடிந்தநூலிற் கண்டுகொள்க.

இனிச் சிறப்புப்பாயிரம் எட்டுவகைப்படும். அவை யாவையோவெனின், ஆக்கியோன்பெயரும் வழியும் எல்லையும் நூற்பெயரும் யாப்பும் நுதலியபொருளுங் கேட்போரும் பயனுமென இவை; என்னை? "ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை-நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே -கேட்போர் பயனோ டாயெண் பொருளும் - வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே." என்றாராகலின். "காலங் களனே காரண மென்றிம் - மூவகை யேற்றி மொழிநரு முளரே." எனவுங் கூறுவாராதலின், இவை மூன்றுஞ் சேர்த்துப் பதினொன்றுமென்பது.

ஆக்கியோன்பெயரென்பது நூல்செய்த ஆசிரியன்பெயர் என்றவாறு. இந்நூல்செய்தார் யாரோவெனின், மால்வரைபுரையு மாடக்கூட லாலவாயிற் பால்புரைபசுங்கதிர்க் குழவித்திங்களைக் குறுங்கண்ணியாக வுடைய அழலவிர்சோதி அருமறைக் கடவுளென்பது.

வழியென்பது இந்நூல் இன்னவழித்து என்பது. இது வினையி னீங்கி விளங்கிய அறிவின் முனைவனாற் செய்யப்பட்டமையால் வழிநூலென்று சொல்லப்படாது முதனூலெனப்படுமென்பது.

எல்லையென்பது இந்நூல் இன்ன எல்லையுள் நடக்குமென்பது. இந்நூல் எவ்வெல்லையுள் நடக்குமோவெனின்; வடக்கு வேங்கடம், தெற்குக் குமரி, கிழக்குமேற்குக் கடல் எல்லையாக நடக்குமென்பது. என்னை ? " வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும் - வேங்கடங் கு

[illegible]
[illegible]

மரி நீம்புணற் பௌவமென் - றந்நான் கெல்லை யகவயிற் கிடந்த - நூல
தின் முறையே வாலிதின் விரிப்பின்" எனவும், "வடவேங்கடந்
தென்குமரி - யாயிடைத் - தமிழ்கூறு நல்லுலகத்து" எனவுங் காக்கை
பாடினியாருந் தொல்காப்பியனாருஞ் சொன்னாராகலின் என்பது.

நூற்பெயரென்பது நூலதுபெயர் என்றவாறு. நூல் பெயர்பெ
று மிடத்துப் பலவிகற்பத்தாற் பெயர்பெறும்; என்னை? செய்தானாற்
பெயர்பெறுதலுஞ், செய்வித்தானாற் பெயர்பெறுதலும், இடுகுறியாற்
பெயர்பெறுதலும், அளவினாற் பெயர்பெறுதலுஞ், சிறப்பினாற் பெயர்
பெறுதலுமென்க. செய்தானாற் பெயர்பெற்றன அகத்தியந் தொல்கா
ப்பியமென இவை; செய்வித்தானாற் பெயர்பெற்றன சாதவாகனம் இ
ளந்திரையமென இவை; இடுகுறியாற் பெயர்பெற்றன நிகண்டு கலை
க்கோட்டுத்தண்டென இவை; அளவினாற் பெயர்பெற்றது பன்னிரு
படல மென்பது; சிறப்பினாற் பெயர்பெற்றது களவியலென்பது ; எ
ன்னை? களவு கற்பு என்னுங் கைகோளிரண்டனுட் களவினைச் சிறப்பு
டைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்; என்னை? "முற்படப் பு
ணர்ந்த சொல்லி னமையிற் - கற்பெனப் படுவது களவின் வழித்
தே." என்று வேண்டுதலின். கற்புக் களவுபோல ஒருதலையான அன்
பிற்றன்று.

இனி யாப்பென்பது நூல்யாப்பு. நூல் யாக்குமிடத்து நான்
கு வகையால் யாக்கப்படும், தொகுத்தும் விரித்துந் தொகைவிரியா
கவும் மொழிபெயர்த்துமென; என்னை? "தொகுத்தல் விரித்த றொகை
விரி மொழிபெயர்த் - ததர்ப்பட யாத்தலோ டனைவகைப் படுமே."
என்றாராகலின். அவற்றுள் இதுதொகுத்து யாக்கப்பட்டது; என்னை?
உலகத்துள் நடக்கும் அகப்பொருட்செய்யுளிலக்கணமெல்லாம் இவ்
வறுபது சூத்திரத்துள்ளே தொகுத்தானாதலின் என்பது.

இனி நுதலியபொருளென்பது நூற்பொருளைச் சொல்லுதலெ
ன்பது. இந்நூல் என்னுதலிற்றோவெனின் தமிழ்நுதலியதென்பது.

கேட்போர் என்பது இன்னார் கேட்டார் என்பது. இந்நூல்
யார் கேட்டாரோவெனின், குற்றமுடைய நூலாயினன்றே குற்ற
மின்மை ஆராயவேண்டுவது. இது முனைவன்றன்னாற் செய்யப்பட்ட

# இறையனாரகப்பொருள்.

நூலாகலாற் குணமின்மையின் கேட்டாரையின்றென்பது; இன்றெனினும், உரைநடந்துவாராநின்றமை நோக்கிக் கேட்டாரையுடைத்தென்பது. யார் கேட்டாரெனின், மதுரை உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசருமன் என்பது. அவனங்கடடறகுக காரணஞ் சொல்லுதும்.

தலைச்சங்கம் இடைச்சங்கங் கடைச்சங்கமென மூன்றுசங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாருந் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளுங் குன்றமெறிந்த முருகவேளும் முரிஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின்கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐநூற்று நாற்பததொன்பதின்மர் என்பது. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்பது. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகுங் களரியாவிரையுமென இத்தொடக்கத்தன; அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்பது; அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதிமுதலாகக கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறினார் எழுவர்பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரையென்ப; அவர்க்கு நூல் அகத்தியமென்ப.

இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க்கருங்கோழியும் மோசியும் வெள்ளூர்க்காப்பியனுஞ் சிறுபாண்டரங்கனுந் திரையன்மாறனுந் துவரைக்கோமானுங் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினாரென்ப; அவர்களாற் பாடப்பட்டன கலியுங் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலுமென இத்தொடக்கத்தன என்ப; அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவை; அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப; அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவ

ருட் கவியரங்கேறினார் ஐவர்பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்பது. அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாருஞ் சேந்தம்பூதனாரும் அறிவுடையானாரும் பெருங்குன்றூர்க்கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரியனல்லந்துவனாரும் மருதனிளநாகனாருங் கணக்காயனார்மகனார் நக்கீரனாருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப; அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகைநானூறுங் குறுந்தொகைநானூறும் நற்றிணைநானூறும் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் நூற்றைம்பதுகலியும் எழுபதுபரிபாடலுங் கூத்தும் வரியும் பேரிசையுஞ் சிற்றிசையுமென்று இத்தொடக்கத்தன; அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமுமென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப; அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த *முடத்திருமாறன்முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரையென்ப; அவருட் கவியரங்கேறினார் மூவர்பாண்டியரென்ப.

அக்காலத்துப் பாண்டியனாடு பன்னிருயாண்டு வற்கடஞ்சென்றது. செல்லவே, பசிகடுகுதலும் அரசன் சிட்டரையெல்லாங் கூவி, "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என்தேயம்—பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயினஞான்று என்னையுள்ளி வம்மின்" என்றான். என, அரசனைவிடுத்து எல்லாரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடுமலிய மழைபெய்தது. பெய்தபின், அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல்வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக்கொணர்ந்து, பொருளதிகாரம்வல்லா

---

* கடைச்சங்கமிரீஇய முதற்பாண்டியன் வங்கியசேகரனென்பது திருவிளையாடற் புராணமுடையார் கூற்று.

ரை எங்குந்தலைப்பட்டிலேமென்று வந்தார். வர,அரசனும் புடைபடக் கவன்று, "என்னை? எழுத்துஞ் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின்பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவைபெற்றும் பெற்றிலேம்." எனச் சொல்லாநிற்ப; மதுரை ஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான்: "என்னைபாவம் ! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்." என்று, இவ்வறுபதுசூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின்கீழிட்டான்.

இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந்துடைத்து, நீர் தெளித்துப், பூவிட்டுப், பீடத்தின்கீழ் என்றுமலகிடான் அன்று தெய்வத்தகவுக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அலகினோடும் இதழ்போந்தன. போதரக், கொண்டு போந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப், பிராமணன் சிந்திப்பான்: அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பதுகேட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம்பெருமான் அருளிச்செய்தானாகும் என்று, தன் அகம்புகுதாதே கோயிற்றலைக்கடைச் சென்றுநின்று கடைகாப்பார்க்குணர்த்தக், கடைகாப்பார் அரசற்குணர்த்த, அரசன் புகுதுகவென்று பிராமணனைக் கூவச், சென்றுபுக்குக் காட்ட,ஏற்றுக்கொண்டு நோக்கிப்,"பொருளதிகாரம்,இது நம்பெருமான் நமதிடுக்கண்கண்டு அருளிச்செய்தானாகற்பாலது." என்று, அத்திசைநோக்கித் தொழுதுகொண்டுநின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, "நம்பெருமான் நமது இடுக்கண்கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம், இதனைக் கொண்டுபோய்ப் பொருள்காண்மின்." என, அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கனமாப்பலகை ஏறியிருந்தாராய் வழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நல்லதென்று சிலநாளெல்லாஞ் சென்றன. செல்ல, நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச்சென்று நமக்கோர் காரணிகனைத்தரல்வேண்டுமென்று, கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக்காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். அரச

८. ண்று ஷிர சண் க லண்று

னும் எதிர்சென்று, "என்னை, நூலுக்குப் பொருள்கண்டீரோ?" என, "அஃதுகாணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்." எனப், "போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவர் ஒருவர் இம்மையினின்றே." என்று அரசன்சொல்லப், போந்து கணமாப்பலகையின் ஏறியிருந்து, அரசனும் இதுசொல்லினன்; காரணிகனைப் பெறுமாறு என்னைகொலென்று சிந்திப்புழிச், சூத்திரஞ்செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே! அவனையே காரணிகனைத் தரல்வேண்டுமென்று சென்று வரங்கிடக்குமென்று வரங்கிடப்ப; இடையாமத்து, "இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனுவான் உருத்திரசன்மனென்பான், பைங்கண்ணன் புன்மயிரன் ஐயாட்டைப்பிராயத்தான் ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப்பொருளுரைத்தாற், கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரைகேட்டவிடத்து; மெய்யல்லா உரைகேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமாரதெய்வம்; அங்கோர் சாபத்தினாற் தோன்றினன்." என மூக்காவினைத்தகுரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர்குலத்தை வலங்கொண்டுபோந்து, உப்பூரிகுடிகிழாருழைச் சங்கமெல்லாஞ்சென்று, இவ்வார்த்தையெல்லாஞ் சொல்லி, ஐயனுவான் உருத்திரசன்மனைத் தரல்வேண்டுமென்று வேண்டிக்கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கணமாப்பலகையேற்றிக், கீழிருந்து சூத்திரப்பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைக்கக்கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிறத்திப், பின்னர்க் கணக்காயனார்மகனார் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரைபெற்றாம் இந்நூற்கென்றார்.

அதனால், உப்பூரி குடிகிழார் மகனுவான் உருத்திரசன்மனுவான் செய்தது இந்நூற்குரையென்பாருமுளர்; அவர்செய்திலர், மெய்யுரைகேட்டாரென்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு, குமாரசுவாமியாற் கேட்கப்பட்டதென்க. இனி உரை நடந்து வந்தவாறுசொல்லுதும்.

மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரவி கொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்குரைத்தார், அவர் படியங் கொற்றனார்க்குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்குரைத்தார்; அவர் மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்குரைத்தார்; அவர் சொல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்குரைத்தார்; அவர் திருக்குன்றத் தாசிரியர்க் குரைத்தார்; அவர் மாதளவனார் இளநாகனார்க்குரைத்தார்; அவர் முசிறியாசிரிய நீலகண்டனார்க்குரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை.

பயனென்பது இதுகற்க இன்னது பயக்கும் என்பது. இதுகற்க இன்னது பயக்குமென்பதறியேன், யான் நூற்பொருள் அறிவலென்னுமேயெனிற்; சில்லெழுத்தினான் இயன்ற பயன் அறியாதாய் பல்லெழுத்தினான் இயன்ற நூற்பொருள் எங்ஙனம் அறிதியோ பேதாய் எனப்படுமாகலின், இன்னது பயக்குமென்பது அறியல்வேண்டும்: என்பயக்குமோ இது கற்கவெனின், வீடுபயக்குமென்பது. என்னை? இதுகளவியலன்றே? இதுகற்க வீடுபயக்குமாறென்னை? களவு கொலை காமம் இணைவிழைச்சி என்பனவன்றோ சமயத்தாரானும் உலகத்தாரானுங் கடியப்பட்டன? அவற்றுள் ஒன்றன்றோ இது? எனின்; அற்றன்று, களவெனுஞ் சொற்கேட்டுக் களவு தீதென்பதூஉங் காமமெனுஞ் சொற்கேட்டுக் காமந் தீதென்பதூஉமன்று; மற்றவை நல்லவாமாறுமுண்டு: என்னை? ஒருபெண்டாட்டி தமரொடு கலாய்த்து நஞ்சுண்டு சாவலென்னும் உள்ளத்தாளாய் நஞ்சுகூட்டிவைத்து, விலக்குவார் இல்லாதபோழ்து உண்பலென்று நின்றவிடத்து, அருளுடையானொருவன் அதனைக்கண்டு இவள் இதனையுண்டு சாவாமைக் கொண்டுபோய் உகுப்பலென்று அவளைக்காணாமே கொண்டுபோய் உகுத்திட்டான்; அவளுஞ் சனநீக்கத்துக்கண் நஞ்சுண்டு சாவான் சென்றாள் அதுகாணாளாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக்களவினான் அவளை உயக்கொண்டமையான் நல்லுழிச்செல்லுமென்பது. மற்றும் இதுபோல்வன களவு நன்மை பயக்குமென்பது

இனிக் காமம் நன்றாமாறுணர்க. சுவர்க்கத்தின்கட் சென்று போகந்துய்ப்பலென்றும் உத்தரகுருவின்கட் சென்று போகந்துய்ப்பலென்றும் நன்ஞானங்கற்று வீடுபெறுவலென்றுந் தெய்வத்தை வழிபடுவலென்றும் எழுந்த காமங் கண்டாயன்றே! மேன்

மக்களானும் புகழப்பட்டு மறுமைக்கும் உறுதிபயக்குமாகலின், இத்தாமம் பெரிதும் உறுதியுடைத்தென்பது. உடைத்தாமாறு; அறுவகைப்பட்ட பாசாண்டிகரும் இணைவிழைச்சி நீதென்ப. அஃது உண்டாமிடத்துச் சுற்றத்தொடர்ச்சி உண்டாம்; உண்டாகவே, கொலையே களவே செருக்கே மானமே என்றித்தொடக்கத்துக் குற்றம் நிகழுமென்பது. அதுகேட்டே தலையாயினார் அதன்கணின்று நீங்குவார். இனி இடையாயினார் பெண் என்பது எற்புச்சட்டகம், முடைக்குரம்பை, புழுப்பிண்டம், பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைகைமத்து, ஐயும் பித்தும் வளியுங் குடருங் கொழுவும் புரளியும் நரம்பும் மூத்திரப்புருடங்களும் என்று, இவற்றதியைபு பொருளன்று; பொருளாயிற், பூவே சாந்தே பாகே எண்ணெயே அணிகலமே என்றிவற்றாற் புனையவேண்டா, தான் இயல்பாக நன்றாயினென்று, அதனசுபத்தன்மை உணரப்பக்கேட்டு நீங்குவர். கடையாயினார் எத்திறத்தாவது நீங்கார்; என்னை? பலபிறப்பிடை ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந் துய்த்து வருகின்றமையின், அவர்க்கு இது காட்டப்பட்டது. என்னை? பேதையைக் காதல்காட்டிக் கைவிடுக்க என்பதனால் அவன் தாழ்ப்பட்ட இணைவிழைச்சியினுள்ளே மிக்கதொன்றுகாட்டப்பட்டது. எஞ்ஞான்றும் மூப்புப் பிணி சாக்காடில்லது நிச்சநிரப்பிடும்பையில்லது. இவனும் பதினாறுட்டைப் பிராயத்தானாய் இவளும் பன்னீராட்டைப் பிராயத்தாளாய் ஒத்தபண்பும் ஒத்தநலனும் ஒத்தஅன்பும் ஒத்தசெல்வமும் ஒத்தகல்வியும் உடையராய்ப் பிரிதொன்றிற் கூனமின்றிப் போகந்துய்ட்டாரொன்று காட்டப்பட்டன. என்போலவோவெனின், கடுத்தின்னுதானைக் கட்டிபூசிக் கடுத்தீற்றியவாறுபோலவும், கலங்கற்சின்னீர் தெருளாமையான் உண்பானை அறிவுடையானொருவன் பேய்த்தேனாக் காட்டி, "உதகானாய் நல்லதொருநீர் தோன்றுகின்ற தண்ணீர் பருகாய், இச்சேற்றுநீர் பருகி என்செய்தி?" என்று நன்னீர் காட்டி ஊட்டியதுபோலவும், தான் ஒழுகாநின்றதோர் இணைவிழைச்சியுள்ளே மிக்கதோர் ஒழுக்கங்காட்டினான். காட்டக்கேட்டு அதுபெறுமாறு என்னைசொல்லோ எனும்; எனவே, மக்கட் பாட்டினுள்ளும் வலியானும் வனப்பானும் பொருளானும் பெறலாவதன்று, தவஞ்செய்தாற் பெறலாம்; என்னை? " வேண்டிய வேண்டியாங்கெய்தலாற் செய்தவமீண்டு முயலப் படும்." என்பதாகலான் என்பது. அது

கேட்டு, இனி யானுந் தவஞ்செய்து இதனைப்பெறுவனென்று தன்மாட்டு வேட்கையாற் தவஞ்செய்யும்; செய்யாநின்றானை ட் பாவீ இதன்பரத்ததோ வீடுபேற்றின்பம் என்று வீடுபேற்றின்பத்தை விரித்துரைக்கும். அதுதான் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடு அவலக் கவலைக் கையாற்றினீங்கி மணியினது ஒளியும் மலரினது நாற்றமுஞ் சந்தனத்துத் தட்பமும்போல உண்ணின்றெழுந்ததொரு பேரின்பவெள்ளத்ததென்பது கேட்டு, அதனைவிட்டு வீடுபேற்றின்கண்ணே அவாவிநின்று தவமும் ஞானமும்புரிந்து வீடுபெறுவானாமென்பது. அவனை வஞ்சித்துக்கொண்டு சென்று நன்னெறிக்கண் நிறீஇயினமையிற் களவியலென்னுங் குறிபெற்றது.

இனிப் புகழ்பொருள்நட்பு அறனென்னும் நான்கினையும் பயக்கும் ஈது வல்லானுக; என்னை? கற்றுவல்லன் என்பதனின் மிக்கபுகழ் இல்லை, உலகத்தாரானுஞ் சமயத்தாரானும் ஒருங்குபுகழப்படுமாகலான் என்பது. இனிப் பொருளும் பயக்கும்; என்னை? பொருளுடையாரும் பொருள்கொடுத்துக் கற்பாராகலின். இனிநட்பும் பயக்கும்; என்னை? கற்றாரைச்சார்ந்து ஒழுகவே எமக்கும் அறிவுபெருகுமென்று பலருஞ் சார்ந்து ஒழுகலான் என்பது. இனி அறனும் பயக்கும்; என்னை? ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது. இதுபயன்.

இனிக் காலமென்பது கடைச்சங்கத்தார் காலத்துச் செய்யப்பட்டது. இனிக் களமென்பது உக்கிரப்பெருவழுதி அவைக்களமென்பது. காரணமென்பது அக்காலத்துப் பாண்டியனுஞ் சங்கத்தாரும் பொருளிலக்கணம்பெறாது இடர்ப்படுவாரைக்கண்டு ஆலவாயிற் பெருமானடிகளால் வெளிப்படுக்கப்பட்டது. பாயிரம் முற்றும்.

இனிப் பாயிரமுரைத்தபின்றை நூலாமாறும் உரைக்கற்பாலது. அதுதான் நான்குவகையான் உரைக்கப்படும். அவை யாவையோவெனின், நூனுதலியதுரைத்தல் நூலுள் அதிகாரநுதலியதுரைத்தல் அதிகாரத்துள் ஒத்துநுதலியதுரைத்தல் ஒத்தினுட் சூத்திரநுதலியதுரைத்தலென இவை. அவற்றுள், நூனுதலியதுரைக்குமிடத்து நூலாமாறும் நூலென்றசொற்குப் பொருளாமாறும் உரைத்துரைக்கற்பாற்று.

அவற்றுள் நூலாமாறுரைக்குமிடத்து நூல்தான் மூன்றுவகைப்படும், முதனூலும் வழிநூலுஞ் சார்புநூலுமென; என்னை? “முதல்

வழி சார்பென நூன்மூன் ரூகும்." என்ருராகலின். அவற்றுள் முத னூலாவது வரம்பிலறிவன் பயந்ததாகும் ; என்னை ? " வினையி னீங் கி விளங்கிய வறிவின் - முனைவன் கண்டது முதனூ லாகும்." என வும்," முதல்வ னூற்குப் பிறன்கோட் கூருது" எனவும், "தந்திரஞ் சூத்திரம் விருத்தி மூன்றற்கு - முந்துநூ லில்லது முதனூ லாகும்." எனவுஞ் சொன்னூராகலின். இனி அந்நூலொடு ஒத்த மரபிற்ருய் ஆசிரியமதவிகற்பம்படக் கிடப்பது வழிநூலெனப்படும் ; என்னை?" முன் ஞேர் நூலின் முடிபொருங் கொத்துட் - பின்ஞேன் வேண்டும் விக ற்பங் கூறி - யழியா மரபினது வழிநூ லாகும்." என்ருராகலின். இவ்விருவர் நூலுள்ளும் ஒருவழிமுடிந்த பொருளை ஒருபகரநோக்கி ஒருகோவைப்படவைப்பது சார்புநூலாகும் ; என்னை ? " இருவர் நூற்கு மொருசிறை தொடங்கித் - திரிபுவே றுடையது புடைநூ லாகும்." என்ருராகலின்.

எதிர்நூல் என்பதும் ஒன்றுண்டு. அது யாதோவெனின், முத னூலின் முடிந்தபொருளை ஓராசிரியன் யாதானும் ஒருகாரணத்தாற் பிறழவைத்தால் அதனைக் கருவியாற் றிரிவுகாட்டி ஒருவாமைவைத்தற்கு ஒள்ளியான் ஒருபுலவனுல் உரைக்கப்படுவது ; என்னை ? " தன்கோ ணிறீஇப் பிறன்கோண் மறுப்ப- தெதிர்நூ லென்ப வொருசா ரோரே." என்ருராகலின்.

அல்லதூஉம், "நூலெனப் படுவது நுதலிய பொருளை - யாதி க் கண்ணே யறியச் சுட்டி - யோத்துமுறை நிறுத்துச் சூத்திர நிரைஇ- முதல்வழி சார்பென மூவகை மரபிற் - ருெகைவகை விரியின் வகையுற த்தெரித்து -ஞாபகஞ் செம்பொரு ளாயிரு வகையிற்-பாவமைந் தொழுகு ம் பண்பிற் ருகிப்-புணர்ச்சியி னமைந்து பொருளகத் தடக்கித்-தனக்கு வரம் பாகித் தான்முடி வதுவே." எனவுஞ் சொன்னூராகலின். அன்றி யும்," நூலெனப் படுவது நுவலுங் காலை - நுதலிய பொருளை முதலிற் கூறி - முதனடு விறுதி மாறுகோ ளின்றித் - தொகையினும் வகையி னும் பொருண்மை காட்டி - யுண்ணின் றமைந்த வுரையொடு பொருந்தி நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே." என்ருராகலானும் இவ்வ கைச்சொல்லப்பட்டது நூலென்ப. இனி நூலென்ற சொற்குப் பொ ருளுரைக்கப்படும் : நூல்போறலின் நூலென்ப ; பாவைபோல்வாளைப்

பாவையென்றது போல. நூல்போறலென்பது ;—நுண்ணிய பலவாய பஞ்சின் நுனிகளாற் கைவன்மகமேடத் தனது செயற்கைநலந் தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூனூற்றலென்பது ; அவ்வாறே சுகிர்ந்து பரந்த சொற்பரவைகளாற் பெரும்புலவன் தனது உணர்வுமாட்சியிற் பிண்டம் படலம் ஒத்துச் சூத்திரமென்னும் யாப்புநடைபடக் கோத்தலாயிற்று நூல்செய்தலாவது ; அவ்வகை நூற்கப்படுதலின் நூலெனப்பட்டது. இனி ஒருசாரார் நூல்போலச் செப்பஞ்செய்தலின் நூலென்ப. இனித் தந்திரம் என்னும் வடமொழிப் பொருளை நூலெனவழங்குதல் தமிழ்வழக்கெனக் கொள்க. இது நூலென்ற சொற்குப்பொருள்.

இனி நுனுதலிய தூஉம் உரைக்கற்பாலது. அது பாயிரத்துள்ளே உரைத்தாம் ; தமிழ்நுதலிற்றென்பது. தமிழ் நான்குவகைப்படும், எழுத்துஞ் சொல்லும் பொருளும் யாப்புமென.

அவற்றுள் இவ்வதிகாரம் என்னுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோவெனின், பொருளாராய்தலை எடுத்துக்கொள்ளப்பட்டது. இனி அதிகாரம் முதலியதெல்லாம் அதிகாரத்துள் ஒத்து முதலாவன்றே, பல ஒத்துக்கொண்டது ஓர்அதிகாரமாதலான்; இதனுள் இவ்வோத்து என்னுதலி எடுத்துக்கொள்ளப்பட்டதோவெனின், ஒத்தினது பன்மையின்மையின் ஓத்தின்றென்பது.

26 இனிச் சூத்திரம் நுதலிய தூஉம் உரைக்கற்பாலது. இச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின்; சூத்திரம் உரைக்கின் அது நான்குவகையான் உரைக்கப்படும், கருத்துரைத்துக் கண்ணழித்துப் பொழிப்புத்திரட்டி அகலங்கூறலென.

இச்சூத்திரத்தின் கருத்தென்னையோவெனின், இவ்வதிகாரத்துரைக்கின்ற பொருளின்னதென்பதூஉம் இன்னதற்கேறெடாக்குமெ பதூஉம் உணர்த்துதனுதலிற்று. அன்னதாகலி இச்சூத்திரங் கண்ணழிப்ப விளங்கும். கண்ணழித்தல் என்பது பதப்பொருள் சொல்லுதல்.

(இதன்பொருள்.) அன்பின் ஐந்திணைக் களவு எனப்படுவது = அன்பினுடைய ஐந்திணையிற் களவுவெனப்பட்ட ஒழுக்கம் : அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள் = அந்தணர் என்பார் பார்ப்பார், அரு

மறை என்பது வேதம், மன்றல் என்பது மணம், எட்டு என்பது அவற்றது தொகை. கந்தருவ வழக்கம் என்மனார் புலவர் = கந்தருவ வழக்கத்தோடு ஒக்கும் பழக்கினைக் களவென்று சொல்லுவர் கற்றுவல்லோர் என்றவாறு.

இனிப் பொழிப்புத்திரட்டல் என்பது, அன்பினுடைய ஐந்திணையிற் களவெனப்பட்ட ஒழுக்கம் பார்ப்பார் வேதத்துக்கண் மகட்கோடலாறென்னும் எட்டினுட் கந்தருவர் ஒழுகலாறொப்பதனைக் களவென்று சொல்லுவர் கற்றுவல்லோர்—எ-று.

இனிச் சூத்திரத்துப் பொருளைத் தூய்மைசெய்தற்குக் கடாவிடையுள்ளுறுத்து உரைக்கும் உரையெல்லாம் அகலவுரையெனக் கொள்க. அன்பின் ஐந்திணை என்றவிடத்து அன்பு அறிந்தேனாயினன்றே அன்பினுடைய ஐந்திணையும் அறிவதெனின், அது கூடத்துள் விளக்குந் தடற்றுள் வாளும்போல இதுகாண் அன்பென்று தந்து காட்டலாகாது. அன்புடையரான குணங்கண்டவிடத்து இவையுண்மையான் ஈங்கு அன்புண்டென்று அனுமதித்துக்கொள்ளற்பாற்று. அன்புடையாரான குணம் யாவையோவெனின்; சாவிற்சாதல், நோவின்நோதல், ஒண்பொருள்கொடுத்தல், நன்கினிதுமொழிதல், புணர்வுநனி வேட்டல், பிரிவு நனியிரங்கல் என இவை, என்றார்க்கு, இவை திரிபுடைய: என்னை இவைதிரிபுடையவாறெனின்; சாவிற்சாதல் என்பது அன்பினானே நிகழ்வதன்று, பிணியுடையளாய் வாழ்க்கையை முனிந்துசெல்வாள் இது தலைக்கீடாகச் சாவலென்று சாவவும் பெறும்; இனிக் கண்டாரன்றே, குடுமிக்கூந்தலில் நறுநெய் பெய்து, கொண்டான் இறப் பின்னையுமிருந்து, சோறுதின்று வாழ்கின்றாளோ கொடியளே காணென்று நித்தல் பழிதூற்றப்பட்டிருந்து பின்னுமே ஒருநாட் சாவன், அதனானன்றே சாவனெனச் சாவவும் பெறும்; அதுவன்றிப் பிழைவேண்டிச் சாவவும்பெறும்; கணவனொடு செத்தார் சுவர்க்கம் புகுவரென்னும் உரைகேட்டு அதுவேட்கையானுஞ் சாம்; அப்பரிசன்றா அன்பினானுஞ் சாம்; அஃது ஒருவகையாக நிகழ்வதன்றென்பது. இனி நோவின்நோதலென்பது இன்னநோ என்றறியலாகாது; அதுவுந் திரிவுடைத்து, அன்பின்வழியும் அன்பு இல் வழியும் நோவுமென்று மறுக்கப்படும். ஒண்பொருள்கொடுத்த

லென்பது கணிகையர்கூட்டம் பொருளானும் ஆகலின் அதுவும் அன்பன்று. நன்கினிதுமொழிதலென்பது நன்கினிதுசொல்லிப் பகைவருந் தங்கருமம் முடிப்பாராகலின் அதுவும் அன்பன்று. புணர்வுநனிவேட்டலென்பது அச்சங்காரணத்தானும் புணர்வுவேட்டார்போலப் புணர்வர். பிரிவுநனியிரங்கலென்பது நீரும் ஆடார் பூவுஞ்சூடார் சாந்தும் அணியாராய்ப் பிரிந்திருந்தார்போல வாடியிருப்பர் அன்பில்லாதாருமாகலின், அதுவுந் திரிவுடைத்து. இனித் திரிவின்றி இக்குணங்கள் நிகழ்ந்தவழி அன்புண்டெனக்கொள்க. அஃதெதங்ஙனம் நிகழுமெனின், அவன் இறந்துபட்டவாறே தானும் இறந்துபட்டவழி அன்பினானே ஆயிற்றெனக்கொள்க. அல்லாதனவும் இவ்வகையாற் றிரிவில்லன அன்பினானே ஆயிற்றெனக்கொள்க. அல்லதூஉம், அன்பெனப்பட்டது தான் வேண்டப்பட்ட பொருளின்கட் டோன்றும் உள்ளநிகழ்ச்சி, அதனைக் காட்டிக் காண்க என்றானன்றே! தான் அறிந்தபொருளாகலின்; என்னை, மாறனுக்கு நீர்வேட்ட வேட்கையைக் காட்டுக என்றான், தான் அறிந்தபொருளாகலின்; காட்டுக என்னுமேயெனின் வஞ்சித்தானாம். அவனை ஆசிரியன் அறிவிக்கலுமாமெனிற் பேதையாயினானாம். அல்லதூஉம், உலகத்துப் பொருள் தான் இரண்டுவகையான் உணரப்படும், உண்மைமாத்திரை உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவனவுமென. அவற்றுள், உண்மையுணர்த்திப் பிழம்புணர்த்தப் படாதன காமமும் வெகுளியும் மயக்கமும் இன்பமுந் துன்பமும் முதலாகவுடையன;—“ஒப்பு முருவும் வெறுப்பு மென்றா - கற்பு மேரு மெழிலு மென்றா - சாயலு நாணு மடனு மென்றா - நோயும் வேட்கையு நுகர்ச்சியு மென்றாங் - காவயின் வரூஉங் கிளவி யெல்லா - நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது - காட்ட லாகாப் பொருள வென்ப,” என்றாராகலின். இனி உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவன மாடக்கூடன் மாநிலத் தொடக்கத்தன என்றுகொள்க. அன்பென்னும்பொருள் உண்மைமாத்திரையல்லது பிழம்பு உணர்த்தப்படாதென்பது என்றார்க்கு, அன்பென்பது தான்கருதப்பட்ட பொருளின்கட் டோன்றும் வேட்கையென்றே ஈண்டு நம்பால் அன்பென்று விகற்பிக்கப்படாநின்றது. அஃது யாதோவெனின், நா

னுச் சுருங்கப் புணர்வுவேட்கை பெருக ஒருவனோடு ஒருத்தியிடை நிகழும் அன்பு விசேட இலக்கணமுடைத்தென்றுகொள்க.

அஃதேயெனின், அன்பு அறிந்தேன். ஐந்திணையாவன யாவையோவெனின், குறிஞ்சி நெய்தல் பாலை முல்லை மருதமென இவை. ஆயின், ஐந்திணை என்றதல்லது அவற்றது பெயரும் முறையும் இலக்கணமும் அறியச் சொல்லிற்றிலரோவெனின், இது சுருக்கநூலாகலிற் சொல்லிற்றிலர்; அவை முடிந்தநூலிற் கொண்டுரைக்கப்படும். உரைக்குமிடத்து முதல் கரு உரிப்பொருளென மூன்றுவகையான் உரைக்கப்படும்;—"முதல்கரு வுரிப்பொருளென்ற மூன்றே - நுவலுங் காலை முறைசிறந் தனவே." என்றாராதலின். அவை வருமாறு:—

அவற்றுள் முதல் இரண்டுவகைப்படும், நிலமும் பொழுதுமென; என்னை? "முதலெனப் படுவது நிலம் பொழு திரண்டி-னியல்பென மொழிப வியல்புணர்ந் தோரே." என்றாராகலின். குறிஞ்சிக்கு மலையும் மலைசார்ந்த இடமும், நிலம்; பொழுது, கூதிரும் யாமமும் முன்பனியும். நெய்தற்குக் கடலுங் கடல்சார்ந்த இடமும், நிலம்; பொழுது, எற்பாடு. பாலைக்கு நிலமில்லை; "நடுவ ணைந் திணை நடுவண தொழியப் - படுதிரை வையம் பாத்திய பண்பே." என்றார் தொல்காப்பியனார்; பொழுது, நண்பகலும் வேனிலும் பின்பனியும். நிலமின்றிப் பொழுதினானே திணையாமோவெனின், குறிஞ்சியும் முல்லையும் அடுத்த நிலமே காலம்பற்றிப் பாலையா மென்பது. முல்லைக்குக் காடுங் காடுசார்ந்த இடமும், நிலம்; பொழுது, காரும் மாலையும். மருதத்திற்குப் பழனமும் பழனஞ்சார்ந்த இடமும், நிலம்; பொழுது, வைகறை யாமம். அஃதென்னை பெறுமாறெனின்;—"மாயோன் மேய காடுறை யுலகமுஞ் - சேயோன் மேய மைவரை யுலகமும் - வேந்தன் மேய தீம்புன லுலகமும் - வருணன் மேய பெருமண லுலகமு - முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச் - சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." "காரு மாலையு முல்லை குறிஞ்சி-கூதிர் யாம மென்மனார் புலவர்." "பனியெதிர் பருவமு முரித்தென மொழிப." "வைகறை விடியல் மருத மெற்பாடு - நெய்த லாதன் மெ யெறத் தோன்றும்." "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு-

முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே." "பின்பனி தானு முரித்தென மொழிப." மருதத்திற்கும் நெய்தற்கும் பெரும்பொழுது சொல்லிற்றின்மையின் அறுவகையிருதுவும் உரியவெனக்கொள்க. இவை முதல்.

இனிக் கரு என்பன தெய்வமும் உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையுஞ் செய்தியும் யாழும் முதலாகவுடையன; என்னை? "தெய்வ முணவே மாமரம் புட்பறை - செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ - யின்னவை பிறவுங் கருவென மொழிப." என்றாராகலின். அம்முறையானே சொல்லுதும்.

குறிஞ்சிக்குத் தெய்வம், முருகவேள்; உணா, ஐவனநெல்லுந் தினையும்; மா, புலியும் பன்றியும் யானையும்; மரம், அகிலும் ஆரமுந் திமிசுந் தேக்கும் வேங்கையும்; புள், கிளியும் மயிலும்; பறை, வெறியாட்டுப்பறையுந் தொண்டகப்பறையுங் குரவைப்பறையும்; செய்தி, தேனழித்தலுங் கிழங்ககழ்தலுங் குன்றமாடுதலுந் தினைக்கிளிகடிதலும்; யாழ், குறிஞ்சியாழ். பிறவுமென்றதனாற் தலைமகன்பெயர் சிலம்பன் வெற்பன் பொருப்பன்; தலைமகள்பெயர், கொடிச்சி குறத்தி; நீர், அருவிநீருஞ் சுனைநீரும்; ஊர், சிறுகுடி; பூ, குறிஞ்சியுங் காந்தளும் வேங்கையுஞ் சுனைக்குவளையும்; மக்கள்பெயர், குறவர் இறவுளர் குன்றவர்.

நெய்தற்குத் தெய்வம், வருணன்; உணா, மீன்விலையும் உப்புவிலையும்; மா, சுறாவும் முதலையும்; மரம், புன்னையும் ஞாழலுங் கண்டலும்; புள், அன்னமும் அன்றிலும் [illegible]; பறை, மீன்கோட்பறையும் நாவாய்ப்பறையும்; செய்தி, மீன்விற்றலும் உப்புவிற்றலும் அவைபடுத்தலும்; யாழ், விளரியாழ். இனிப் பிறவுமென்றதனாற் தலைமகன், துறைவன் கொண்கன் சேர்ப்பன்; தலைமகள், நுளைச்சி பரத்தி; நீர், மணற்கிணறும் உவர்க்கழியும்; பூ, வெள்ளிதழ்க்கைதையும் நெய்தலும்; ஊர், கலமேறுபட்டினமுஞ் சிறுகுடியும் பாக்கமும்; மக்கள், பரதர் பரத்தியர் நுளையர் நுளைச்சியர்.

தொல்காப்பியனார் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையிற் தெய்வமும் வேண்டிற்றிலர். பிறர் பகலிலையும் ஆதித்

தனையுந் தெய்வமென்று வேண்டுவர் ; உணா, ஆறலைத்தனவும் சூறை கொண்டனவும்; மா,வலியழிந்த யானையும் புலியுஞ் செந்நாயும்; மரம், இருப்பையும் ஓமையும் ; புள், கழுகும் பருந்தும் புறவும் ; பறை, பூசற்பறையும் சூறைகொண்டபறையும் நிரைகோட்பறையும் ; செய்தி, நிரைகோடலுஞ் சாத்தெறிதலுஞ் சூறையாடலும்; பண், பஞ்சுரம். பிறவுமென்றதனாற் தலைமகன், மீளி விடலை காளை ; தலைமகள், எயிற்றி பேதை ; பூ, மராம்பூவுங் குராம்பூவும் பாதிரிப்பூவும்; நீர், அறுநீர்க்கூவலும் அறுநீர்ச்சுனையும் ; மக்கள், எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர் ; ஊர், கொல்குறும்பு.

முல்லைக்குத் தெய்வம், வாசுதேவன் ; உணா, வரகுஞ் சாமையும் ; மா, முயலுஞ் சிறுமானும், மரம், கொன்றையுங் குருந்தும்; புள், கானங்கோழியும் மயிலுஞ் சிவலும்; பறை, ஏறுகோட்பறையும் முரசும் ; செய்தி, வரகுகளைகட்டலும் வையறுத்தலுங் கடாவிடுத்தலும் நிரைமேய்த்தலும்; பண், முல்லை. பிறவுமென்றதனாற் தலைமகன், குறும்பொறைநாடன் ; தலைமகள், கிழத்தி மனைவி ; இப்பெயர் மருத நிலத்துத் தலைமகட்கும் உரிய ; பூ, முல்லையுந் தோன்றியும்; நீர், கான் யாறு ; ஊர், பாடியுஞ் சேரியும் ; மக்கள், இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்.

மருதநிலத்துக்குத் தெய்வம், இந்திரன் ; உணா, செந்நெல்லும் வெண்ணெல்லும் ; மா, எருமையும் நீர்நாயும் ; மரம், வஞ்சியுங் காஞ்சியும் மருதும் ; புள், நீர்க்கோழியுந் தாராவும் ; பறை, மணமுழவும் நெல்லரிகிணையும் ; செய்தி, நெல்லரிதலும் வைகடாவிடுதலும் பயிர்க்குக்களைகட்டலும் ; யாழ், மருதயாழ். பிறவுமென்றதனாற் தலைமகன் ஊரன் மகிணன் ; தலைமகள், கிழத்தி மனைவி ; பூ, தாமரைப்பூவுஞ் செங்கழுநீர்ப்பூவும் ; நீர், மனைக்கிணறும் பொய்கையும் ; மக்கள், கடையர் கடைச்சியர் உழவர் உழத்தியர் ; ஊர், பேரூர் எனப்படும்.

இக்கூறப்பட்ட கரு மயங்கியும் வரப்பெறும் ; என்னை ? " எந் நில மருங்கிற் பூவும் புள்ளு - மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும் வந்த நிலத்தின் பயத்த வாகும்." என்றுராகலின்.

உரிப்பொருளாவது திணைக்குஉரிப்பொருள் என்றவாறு. அவை பாலையையொவெனின் :—புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல்

அவற்றின் நிமித்தமெண் இவை; என்னை? "புணர்தல் பிரித லிருத்த லிரங்க - லூட லிவற்றி னிமித்த மெனவிவை - தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே." என்றாராகலின். அவற்றுட் புணர்தலும் புணர்தனிமித்தமுங், குறிஞ்சி; பிரிதலும் பிரிதனிமித்தமும், பாலை; இருத்தலும் இருதனிமித்தமும், முல்லை; இரங்கலும் இரங்கனிமித்தமும், நெய்தல்; ஊடலும் ஊடனிமித்தமும், மருதம். புணர்தலே கொல்லோ குறிஞ்சியெனிற் புணர்தலேயன்று; பிரிவச்சமும், வன்பொறையுந், தலைமகனீங்கினவும், பாங்கற்குரைத்தனவும், பாங்கன் கழறினவுந், தலைமகன் எதிர்மறுத்தனவும், பாங்கன் எதிர்ந்தனவுந், தலைமகளைக் கண்டனவும், ஆற்றானுயினவுந், தலைமகன் சென்றனவுந், தலைமகன் தலைப்பெய்தனவும் இத்தொடக்கத்தனவெல்லாந் தலைமகட்குந் தோழிக்கும் இவ்வகையானே நோக்கி விகற்பிக்க இறப்பவும் பலவாம். அவையெல்லாம் புணர்தலும் புணர்தனிமித்தமுமாய் அடங்கும். ஏனையவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

இனி ஒழுக்கத்தினைத் திணையென்பாரும் நிலத்தினைத் திணையென்பாருமென இருபகுதியர் ஆசிரியர். அதுபொருந்தாது; ஒழுக்கமே திணையெனப்படும், குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமுங் குறிஞ்சியெனப்பட்டது; என்னை? விளக்காகிய சுடர் இருந்தவிடமே விளக்கெனப்பட்டதுபோல என்பது. இனி ஒருசாரார் ஒழுக்கத்திணையுந் திணையென்ப நிலத்திணையுந் திணையென்ப வாகலானன்றே அன்பினைந்திணை யென்றது, ஐந்திணை இவை ஐந்திணையும்; ஐஞ்சிகை என்றதுபோல என்ப; அது பொருந்தாது. அஃதே கருதியதேனின், முன்னர்த் "திணையே கைகோள்" என்றானன்றே இணையே கைகோ ளென்னுமன்றே இணையென்று கருதினானுயினென்பது. அஃதேயெனின், ஐந்திணையென்றது ஐந்துசான் ஐந்துகணம் என்றதுபோலவெனின், அறியாது கடாவினாய், ஐந்துதலையுடைய நாகத்தை ஐந்தலைநாகமு மென்ப ஐந்துதலைநாகமு மென்ப; இருமுடிபுமுடைத்து: என்னை? குற்றியலுகரப்புணரியலுள், "முதனிலை யெண்ணின்முன் வல்லெழுத்து வரினு - ஞமவந் தோன்றினும் யவ்வந் தியையினு - முதனிலை யியற்கை யென்மனார் புலவர்." என்றாராகலின். அஃதேயெனின், அன்பினைய ஒழு

க்கத்தை அன்பின்வேறென்று கொள்வன், தச்சனுடைய மாடந் தச்சனின் வேறாயதுபோல என்றற்கு, அதுவன்று; பொன்னினுடைய குடம் பொன்னின் வேறல்லதுபோல என்பது. மூன்றாம் வேற்றுமை காரணகாரியத்தை வேறுணரநிற்கும், வேறன்றியுணரநிற்கும். வேறன்றியுணரவும் நிற்கும் பகுதிகொள்க. அஃதேயெனின், ஐந்திணையென்பதின் முன்னர்க் களவென்னுஞ்சொல் எத்திறத்தால் வந்தது? ஒருசொன்முன் ஒருசொல்வருங்காற் பயனிலைவகையானுந் தொகைநிலைவகையானும் எண்ணுநிலைவகையானுமென மூன்றனுள் ஒன்றுபற்றியன்றே வருவது? அவற்றுள், இஃது எவ்வகையான் வந்ததோவெனின்; தொகைநிலைவகையான் வந்ததென்பது. தொகைதாம் பல; அவற்றுள் இஃது எத்தொகையான் வந்ததோவெனின், வேற்றுமைத்தொகையான் வந்ததென்பது. அவ்வேற்றுமைத் தொகைதாம் பல; அவற்றுள் இஃது எவ்வேற்றுமைத்தொகையோவெனின் ஏழாம் வேற்றுமைத் தொகையென்பது. ஏழாம்வேற்றுமையுருபுதாம் பல; அவற்றுள் யாது தொக்கதெனின், உள்ளென்பது தொக்கது. ஐந்திணையுட் களவென்பதாயின், ஐந்திணையுள்ளுங் களவு வேறாகாதோ குடத்துள் விளக்குந் தடத்துள் வாளும் அவ்விடத்தின் வேறாயது போலவெனின்; ஏழாம்வேற்றுமை இடத்தையும் இடத்துநிகழ்பொருளையும் வேறுணரவு நிற்கும் வேறன்றியுணரவு நிற்கும். அவற்றுள், வேறுணரவுநின்றவழிக் காட்டிக் கடாவினாய்; வேறன்றியுணரவு நின்றவழிக் காட்டியக்கால் அதுபோலக்கொள்க. அரங்கினுள் அகழ்ந்தான் மாடத்தினுள் அகழ்ந்தான் என்றதுபோல, ஐந்திணையுள்ளுங் களவு வேறன்றென்பது. அஃதேயெனின், அன்பினைந்திணைக்களவந்தண ரருமறையென அமையாதோ? எனப்படுவது என்றது எற்றிற்கோவெனின்; செய்யுளின்பத்தின்பொருட்டு வந்ததென்னும் ஒருவன்; அற்றன்று. அதனானொருபொருள் உரைப்பனென்னும் ஒருவன்; அதனான் ஒருபொருளுரைப்பான் பக்கம் வலியுடைத்து. அஃது யாதோவெனின், களவென்றற்குச் சிறப்புடைத்தென்றவாறு. எனப்படுவது உறையூரென்றவிடத்துப் பிறவும் ஊருண்மைசொல்லி அவற்றுளெல்லாம் உறையூர் சிறப்புடைமை சொல்லும். இங்ஙனம் பிறவுங் களவுண்மைசொல்லி அக்களவுகட்கெல்லாம் இக்களவு சிறப்புடைத்து, சொர்க்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான் எனப்படுவதென்று சொ

ல்லிச் சிறப்பிக்கப்பட்டது. அது பாயிரத்துள்ளும் உரைத்தாம்.
மற்று உலகத்துக் களவாயினவெல்லாங் கைகுறையவுங் கண்சூலவுங்
கழூவேற்றவும் பட்டுப், பழியும் பாவமுமாக்கி, நரகத்தொடக்கத் தீக்
கதிகளிலுய்க்கும். இது மேன்மக்களாற் புகழப்பட்டு ஞானவொழு
க்கத்தோடொத்த இயல்பிற்றாகலானும் பழிபாவமின்மையானும்
எனப்படுவதென்று விசேடிக்கப்பட்டது.

இனி "அந்தண ரருமறை மன்றலெட்டினுள்"என்பது: அந்த
ணரென்பார் பார்ப்பார்; அருமறையென்பது வேதம்;மன்றலென்பது
மணம்; எட்டென்பது அவற்றது தொகை கொடுத்துச்சொன்னவாறு.
அவை யாவையோவெனின்:—பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்
வம் காந்தர்வம் அசுரம் இராக்கதம் பைசாசம் எனவிவை ; என்னை ?
" அறநிலை யொப்பே பொருள்கோ டெய்வம் - யாழோர் கூட்ட மரும்
பொருள்வினையே - யிராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய - மறை
யோர் மன்றலெட்டிவை யவற்றுட் - டுறையமை நல்லியாழ்ப் புலமை
யோ ரியல்பிதன் - பொருண்மை யென்மனார் புலமை யோரே." என்
பதன் பொருளொன்றுணர்வது. பிரமம் என்பது, நாற்பத்தெட்டியாண்டு
பிரமசரியங் காத்தார்க்குப் பன்னீராட்டைப் பிராயத்தாளை அணிகல
னணிந்து கொடுப்பது. கொடாவிடின் ஓரிருதுக்காட்சி ஒருவனைச் சா
ராது கழிந்தவிடத்து ஒருபார்ப்பனக்கொலையோடு ஒக்குமென்பது ;
அதனை அறநிலையென்பது. பிரசாபத்தியம் என்பது, மைத்துன கோ
த்திரத்தான் மகள்வேண்டிச் சென்றால் மறாதுகொடுப்பது ; அதனை
ஒப்பென்பது. ஆரிடம் என்பது, ஆவும் ஆனேறும் பொற்கோட்
டுப் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற்கொடுப்பது ;
அதனைப் பொருள்கோளென உணர்வது. தெய்வம் என்பது, வேள்
வியாசிரியர்க்கு வேள்வித்தீமுன் வைத்துக் கொடுப்பது ; அதனைத்
தெய்வமென்று வழிபடப்பட்டது. காந்தர்வம் என்பது, இருவர் ஒத்
தார் தாமே கூடுங் கூட்டம்; அதனை யாழோர்கூட்டமென்றுணர்வது.
ஆசுரம் என்பது, கொல்லேறுகொண்டான் இவளையெய்தும், வில்லே
ற்றினான் இவளையெய்தும், திரிபின்றி எய்தான் இவளையெய்தும், மா
லைசூட்டப்பட்டான் இவளையெய்துமென இவ்வாறு சொல்லிக்கொடுப்
பது ; அது அரும்பொருள்வினைநிலை யென்பது. இராக்கதமென்பது

வுவள் தன்னுெனுந் தமரினும் பெருது வலிந்து கொள்வது. பைசாசம் என்பது மூத்தான்மாட்டுந் துயின்ருன்மாட்டுங் களித்தான்மாட்டுஞ் சார்வது ; அது பேய்நிலை யெனப்படும். இவ்வெட்டுமணமும் மன்றல் எட்டென்று சொல்லப்பட்டன எனவுணர்க.

இனிக் கார்தர்வ வழக்கம் என்பது கர்தருவரென்பார் என்றேச் செய்த நல்வினைப்பயத்தால் ஒருவர் கொடுப்பாரும் அடுப்பாருமின்றி இருவரும் ஒருபொழிலகத்து எதிர்ப்பட்டுப் புணர்வது; அது காக் தர்ப்பமணம். அதனை ஒப்பதனைக் களவென்று வேண்டும் இவ்வாசி ரியன். அஃதெனின், கந்தர்வழக்கம் போல்வது என்னது கந்தர்வ வழக்கமென்றமையான் அதனைக் களவென்று கொள்ளாமோவெனி ன், கொள்ளாம். நூற்கிடக்கை அவ்வியல்பிற்றன்றுகலாற் போல்வ தென்றே கொள்ளற்பாலது. போறலென்பது சிற்தொத்துச் சிறி தொவ்வாதொழிவது : என்னை ? குவளைப்பூப்போலுங்கண் என்று ல் நீலமாத்திரை யொக்கும்; மற்றெவ்வாப்புடை பெரிது. பவளம் போலும்வாய் என்றுற் செம்மைமாத்திரை யொக்கும் ; மற்றொவ்வாப் புடை பெரிது. இங்கும் ஏகதேசத்துப் புணர்தலும், கொடுப்பாரும் அடுப்பாருமின்றிப் புணர்தலும், ஒத்தகுலத்தினராதலும், ஒத்த அன் பினராதலுமென்னும் இத்துணையே ஒப்பிக்கப்பட்டது ; மற்றப்புடை யெல்லாம் ஒவ்வாது. அஃதேயெனின், சுந்தர்வவழக்கம் போல்வ தென வேண்டாவோ சூத்திரத்துள்ளெனின் ; வேண்டா. உவமத் தொகுத்தவாறு சொல்லுதும்:—பகப்போல்வானைப் பசுவென்றலும், பாவைபோல்வாளைப் பாவையென்றலும் என்பது. அஃதேயெனின், அவையெட்டும் அதனையொத்த இதுவுமென மணம் ஒன்பதாகற்பால வெனின் ; அதுவன்று. அவ்வெட்டும் உலகியலுள்ளன, இஃதன்ன தன்று; இல்லது, இனியது, நல்லது என்று புலவரால் காட்டப்பட்ட தோர் ஒழுக்கமாதலின் அதனை உலகவழக்கத்தினேடு இயைபானெ ன்பது. அஃதேயெனின், இதனை முதனூலென்று புகுந்தமையாற் கந்தர்வ வழக்கமென்றே மொழியற்பாற்று, என்மனுரென்று சொ ல்லற்பாற்றன்று ; அது வழிநூல் வாய்பாடாகலான் என்பது கடா. அதற்குவிடை: பிறநூலெல்லாம் ஆசிரியப்பகுதிப்படும், இது அவை யேபோல ஆசிரியப் பகுதிப்படுங் கொல்லோவெனிற் படாது. கந் தருவ வழக்கம்போல்வது எனவாதல் மூன்றுகாலத்துப் புலவர்க்கும்

ஒப்பமுடிந்தமையான் அவ்வகைசொன்னானென்பது. அஃதேயெனிற் றன்னையொத்த புலவரில்லையன்றே தான் தலைவனாகலான், எல்லாம் உணர்ந்தானாகலானெனின்; அஃதே கருத்து, அறிந்திலே; தன்னானே உரைக்கப்பட்டதெனினும், பிறவற்றையெல்லாந் திரியவுந் திரியாமையுங் கொண்டார், இதனைத் திரியாமை யேகொண்டார் எல்லாருமென்றற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது. தன்மதம் உணர்ந்தானையும் புலவனென்றான், அறிபொருளுக்கு வேறொரும் புலவராகலின்.

இனி " என்மனார் புலவர்" என்பது,'என்ப' என்னும் முற்றுச் சொற் குறைக்கும்வழிக் குறைக்குக என்பதனாற் பகரங்குறைத்து, விரிக்கும்வழி விரித்தல் என்பதனான் 'மன்''ஆர்' என்பன இரண்டிடைச் சொற் பெய்துவிரித்து, ' என்மனார்புலவர்' என்றாயிற்று. என்மனார் என்பது புலவர் என்னும் பெயர்கொண்டு முடிந்தது ; முற்றுச்சொல் எச்சப்பெயர்கொண்டு முடியுமாகலினென்பது. (௧)

௨. அதுவே, தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயி னொத்தல்.

என்-னின் ; மேற் கந்தருவ வழக்கத்தோடொக்கும் ஒழுக்கங் களவென்று வேண்டிற்றல்லது இன்ன இலக்கணத்ததென்றிலாதார் அதனை உணர்த்துதனுதலிற்று. இச்சூத்திரத்துட் கருதியபொருள் மேலதனோடியையும்.

௧௦ (இ-ள்) அதுவே=பண்டறிசுட்டு, மேற்சொல்லப்பட்ட கந்தருவவழக்கம்போலுங் களவு: தானே அவளே=தானேஅவள், அவளே தான்: என்பது என் சொல்லியவாறோவெனின், தான் அவள் என்னும் வேற்றுமையிலர், எ—று.

ம் வாசகம் வேறுபடச் சொல்லப்பட்டாராயினும் 'அன்பினானுங் குணத்தினானுங் கல்வியினானும் உருவினானுந் திருவினானுந் திரிவிலர் ஒருவரொருவர் என்றவாம். அஃதென்போலவோ வெனின் : உடநிளிசிலொத்தமுரி என்றாற்போலவெனின், அதுபொருந்தாது ; என்னைகாரணமெனின் ? கந்தருவ வழக்கத்தோடொக்குமெனவே வேற்றுமையின்மை முடிந்தது; அவர் வேற்றுமையிலராகலின். இன்னுமொருகால் வாசகம் வேறுபடுத்த அப்பொருளே

சொல்லப் புனருத்தமாம்; ஒருபொருளை வேறுபட்ட வாய்பாட்டாற் பலகாற் சொல்லுவது புனருத்தமாகலின். இனி ஒருவன் சொல்வது :— இவனும் பற்பன்னூறுயிரவர் கடர்வேலிளையரோடு திரிதரினன்றித் தமியனுதலிலன், பெரியனுதலால்; இவளும் பற்பன்னூறுயிரவர் ஆயமகளிர் புடைசூழத் திரிதரினன்றித் தமியளாதலிலள், பெரியளாதலால்; இங்ஙனமில்லாதான் இவனும் இளையரினீங்கித் தானேயாய் இவளும் ஆயத்தினீங்கித் தானேயாய் இங்ஙனம் புணர்வரென்ப. இவனை இளையரினீக்கியும் இவளை ஆயத்தினீக்கியும் பிரித்துக்கோடற்குத் தானே யவளே என்று சொல்லப்பட்டதென்னும். இவ்வுரையும் பொருந்தாது; என்னை காரணமெனின்? கந்தருவவழக்கத்தோடொக்குமெனவே, தமியராய்ப் புணர்தல் முடிந்தது; இன்னுமொருகால்அப்பொருளையே சொல்லப் புனருத்தமாமென்பது. மற்றென்னோ உரையெனின்; தானேயவளே என்பது, ஆண்பாலருள் இவனேடொத்தாருமில்லை, மிக்காருமில்லை, குறைபட்டாரல்லது; எக்காலத்தும் எவ்விடத்தும் ஞானத்தானும் ஊனத்தானும் உருவினானுந் திருவினானும் பொருவிலன்றானே என்பது. இவளும் அன்னளெனவே, இருவரும் பொருவிறந்தாரென்பதனைப் பயக்கும். நின்ற ஏகாரம் ஐந்தேகாரத்துள்ளும் என்ன ஏகாரமோவெனின், ஆண்குழுவின் இவனையே பெருமைக்கட் பிரித்தவாங்கினமையானும், பெண்குழுவின் இவளையே பெருமைக்கட் பிரித்தவாங்கினமையானும் பிரிநிலையேகாரமெனப்பட்டது. அஃதேயெனின், கந்தருவவழக்கத்தோடொக்குமெனவே எத்திறத்தானுங் குறைபாடின்மை முடியாதோவெனின், முடியாது; கந்தருவர்க்கும் ஞானக்குறைபாடுந் தருமக்குறைபாடும் ஆள்வினைக்குறைபாடும் உண்டு. இச்சொல்லப்பட்டன சிறிதேயென்றே ஒப்பித்தது. பொருவிறப்புச் சூத்திரத்தாற் சொல்லவேண்டுமென்பது.

தமியர் காண = தம்முணர்வினரன்றி எதிர்ப்பபெ: எ—று.

அஃதேயெனின், இவர் தம்முணர்வினர் அல்லாகின்றது காணுமுன்னுபவோ, கண்டபின்னுபவோ, காட்சியோடேனே தம்முணர்வினரல்லராபவோவெனின் : காணுமுன் தம்முணர்வினரல்லராபவேயெனிற், காட்சி காரணமன்றாயிற்றாக் தம்முணர்வினர்

அல்லாராதற்கு. அல்லதூஉங், காரணமின்றியாகலான் எப்பொழு
துந் தம்முணர்வினர் அல்லராகல் வேண்டும். கண்டபின் தம்முணர்
வினரல்லராபவேயெனிற், காட்சியது நீக்கத்துக்கண்ணுந் தம்மு
ணர்வினரல்லராயினாராகல் வேண்டும்; உண்டபின் வந்தான் சாத்
தன் என்றால் உண்டற்கருமக்கழிவின்கண் வந்ததுபோல. அல்ல
தூஉங், கண்டபின் தம்முணர்வினர் அல்லாராகவே கண்ட ஞான்றா
யத்துத் தம்முணர்வினராப. ஆகவே, கண்டுந் தம்முணர்வினராய்
நின்றார் பின்னை மயங்குதற்குக் காரணமென்னையோ என்பது. இனி
க் காட்சியுந் தம்முணர்வினரல்லராகலும் உடனிகழ்மையெனிற், கா
ட்சியென்னுங் காரணத்தாற் தம்முணர்வினரல்லராதற்றன்மை நிக
ழற்பாற்றன்று. ஒருகாலத்து ஓரிடத்து ஒருங்கு தோற்றின பொருள்
ஒன்றனை ஒன்றுமுடித்தன எனப்படாமை காண்டும், ஆவிற்கு
இருகோடுபோல என்பது. அதனால் மூன்றல்லது நான்காவது கால
மில்லை; இன்மையின், அவர் காட்சியானே தம்முணர்வினரென்பது
முடிக்கல்வேண்டும். எங்ஙனம் முடியுமாறெனின், காணுமுன்னே
தம்முணர்வினரல்லராகற் றன்மையுடையராதலினென்பது. என்
னை? ஏனாதிமோதிரஞ் செறித்த திருவுடையானொருவன் ஏனாதிமோதி
ரஞ் செறிக்கும் அத்திரு அவன்செறிக்கின்றபொழுதே உண்டாயிற்
றன்று அரசு வீற்றிருந்தது அத்திருவுடையானொருவன் அரசு வீற்
றிருக்கின்றபொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டமைந்துகிடந்
தது. அது பின்னையொருகாலத்து ஓரிடத்து ஒருகாரணந்தான் எய்து
விக்கும். அதுபோல, இன்னநாள் இன்னபக்கத்து இன்னபொழு
து இன்னவிடத்து இவள்காரணமாக இவன் தன்னுணர்விலனல்
லனும் என்பதூஉம், இவன் காரணமாக இவள் தன்னுணர்வின
ளல்லளாமென்பதூஉம் முன்னே முடிந்துகிடந்தது. அது பின்னுங்
கொணர்ந்தெய்துவிக்கும்; என்னை? ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்
டாது கழியாது என்பதாகலான். காட்சி துணைக்காரணம் அவ்வினை
பயத்தற்கு; வித்து முளைத்தற்கு நிலனும் நீரும் இருதலும் துணைக்
காரணமாயிற்றுப்போலவும், சோறுதலியல்பிற்றாகிய அரிசி சோறா
தற்கு அடுவானைத் தொடக்கமாகவுடைய காரணந் துணைக்காரண
மாயிற்றுப்போலவு மென்பது. அஃதேயெனின், காட்சி துணைக்கா
ரணம் பிறவெனின், காட்சியின்முன் னெய்தபோ பின்னெய்தபோ

.4 · வெ · பொழு · // · உரை

டனேவிளர்ந்ததோ ! உள்ளத்துத் தான் விளக்கின்றதெனின், முன்னைக் கடாவந்து எய்துமால். என்னையோவெனின், காட்சியோடுடனே விளரும்; என்னை ! இருட்டகத்து விளக்குக்கொண்டுபுக்கால் விளக்கு வாராதமுன்னும் இருள் நீங்காது; வந்தபின்னும் இருள் நீங்காது; விளக்குவருதலும் இருணீக்கமும் உடனே நிகழும். அது போலக், காட்சியும் ஞானவொழுக்கக் குணங்களது தன்மையழிவும் உடனே நிகழும். விளக்கினைக் காட்சியாகக்கொண்டு ஞானவொழுக்கங்களை இருளாகக்கொள்க.

இனிக் காமப்புணர்ச்சியென்பது தலைமகனுந் தலைமகளுந் தமியராய் ஒருபொழிலகத்து எதிர்ப்பட்டுத் தம்முணர்வினரன்றி வேட்கைமிகவினாற் புணர்வதென்பது. ஆயின் இவர் மேற்பொருவிறந்தார் தலைமகனுந் தலைமகளுமென்றமையான், அவனுங் கற்கந்தம் எறிபோத்துங் கடுங்கண்யானையுந் தறுகட்பன்றியுங் கருவரையும் இருநிலனும் பெருவிசும்புமனையார் ஆணிமொய்ம்பினர் அரிமான்றுப்பினர் பற்பலாருயிரவர் கூர்வேலினையர் தற்சூழச் செல்வனென்பது முடிந்தது. இவளும் உடன்பிறந்து உடன்வளர்ந்த நீர் உடனாடிச் சீர் உடன்பெருகி ஓல் உடனூட்டப் பால் உடனுண்டு பல் உடனெழுந்து சொல் உடன் கற்றுப் பழமையும் பயிற்சியும் பண்பும் நண்பும் விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையார் பற்பலாருயிரவர் கண்ணுமனமுங் கவரும் ஒண்ணுதன் மகளிர் தற்சூழத் தாரகை நடுவட் டண்மதிபோலச் செல்வாளென்பது முடிந்தது. முடியவே, தமியராய்ப் புணர்ந்தார் என்பதனோடு மாறுகொள்ளுமெனின், மாறுகொள்ளாது; என்னை ! அவன் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டுவிருப்பினாற் பிரியும். என்னைபிரியுமாறெனின், ஒருவர் ஒருவரின்முன்னைத் தழைவிழையத் தக்கன தொடுத்துமென்றுங், கன்னி தன்னைறுநாற்றத்தன செய்துமென்றும், போது மேதக்கன கொய்துமென்றும், மயிலொடு மாறாடுதுமென்றும், குயிலொடு மாறுகூவுதுமென்றும், அருவியாடி அஞ்சனை குடைதுமென்றும், வாசமலர்க்கொடியில் ஊசலாடுதுமென்றும் பரந்து, அப்பாலுள்ளார் இப்பாலுள்ளார்கொல்லோவென்றும், இப்பாலுள்ளார் அப்பாலுள்ளார் கொல்லோவென்றும் இவ்வகை நினைத்துப் பிரிபவென்பது.

இவ்வகை அவளைத் தமியராய்ப் பிரியவெனின், எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படுங் குலத்தனளல்லளாகலானும் பான்மை அவ்வகைத்தாகலானும் பிறவாறு நினையார் பிரிபவென்பது. ஆயின், இவ்வகைப்பட்ட ஆயத்திடை மேனாட் பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோவெனின், நிற்கும்; தான் பயின்ற இடந் தன் ஆயத்தினோடொக்கு மாகலானென்பது. யாங்ஙனம் நிற்குமோவெனின், சந்தனமுஞ் சண்பகமுந் தேமாவுந் தீம்பலவும் ஆசினியும் அசோகுங் கோங்கும் வேங்கையுங் குரவமும் விரிந்து, நாகமுந் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பரவை ஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்த பொரிப்புன்கும் புன்னாகமும் உருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாடத், தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண் ஓர் மாணிக்கச் செய்குன்றின்மேல் விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள்; கண்டு பெரியதோர் காதல் களிகூர்ந்து தன் செம்மலர்ச் சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்பு புடைப்ப, அம்மலரணிக் கொம்பர் நடை கற்பதென நடந்து சென்று, நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள்; கொய்தவிடத்து மரகதமணி விளிம்படுத்த மாணிக்கச் சுனைமருங்கினதோர் மாதவிவல்லி மண்டபத்துப் போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க் கழுக்குருக்கத்தி கொடிப்பிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடுதொடுத்து வந்திழிதரும் அருவி பொன்சொரிந்து மணிவரன்றி மாணிக்கத்தொடு வயிரமுந்தி அணிகிளரருவி ஆடகப் பாறைமேல் அதிர்குரன் முரசின்கணிரட்ட, வண்டுந் தேனும் யாழ்முரல, வரிக்குயில்கள் இசைபாடத், தண்டாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப் பாறை மணித்தலத்துமிசை நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவங் கொளவிரித்து முளையிளஞாயிற்று இளவெயில் எறிப்ப ஓர் இளமயில் ஆடுவது கண்டுநின்றாள். அப்பாற் றலைமகனும் பற்பன்னூறாயிரவர் கூர்வேலிளையாரொடு குளிர்மலைச்சாரல் வேட்டம் போய் விளையாடுகின்றான், ஆண்டெழுந்ததோர் கடமாவின்பின்னோடிக், காவலிளையவரைக் கையகன்று, நெடுமான்றேரொடு பாகனை நிலவுமணற் கானியாற்று நிற்கப் பணித்துத், தொடுகழல் அடியதிரச்

சுருளிருங்குஞ்சி பொன்ஞாணிற்பிணித்துக், கடிகமழ் நறுங்கண்ணி மேற்கொண்டு வண்டு மணமயர அஞ்சாந்தின் நறுநாற்றம் அகல்பொழிலிடைப் பரந்து நாற, அடுசிலை ஒருகணை ஏந்தி வடிவுகொண்ட காமன்போலச் சென்று அவள் நின்ற இரும்பொழில்புகும். அஃதியாங்ஙனமோவெனின், வடகடலிட்ட ஒர்நுகம் ஒருதுளை தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற்போலவும் வெங்கதிர்க்கனலியுந் தண்கதிர்மதியமுந் தங்கதி வழுவித் தலைப்பெய்தாற்போலவுந் தலைப்பெய்து ஒருவரொருவரைக் காண்டல் நிமித்தமாகத் தமியராவர்.

தமியராதலென்பது தம்முணர்வினரல்லராதல். தம்முணர்வினரல்லராதலென்பது என்னோவெனின், தலைமகற்கு அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி என்பன குணம். அறிவென்பது என்னோவெனின், "எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள் - மெய்ப்பொருள் காண்ப தறிவு." என்றாராகலின், எப்பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம்மெய்ம்மையை உணர்வது அறிவு. நிறையென்பது என்னோவெனின், காப்பன காத்துக் கடிவனகடிந்து ஒழுகும் ஒழுக்கம். ஓர்ப்பென்பது ஒருபொருளை ஆராய்ந்துணர்தலென்பது. கடைப்பிடியென்பது கொண்டபொருண் மறவாமை. இந்நான்மையுந் தலைமகற்கு வேட்கையான் மீதூரப்பட்டுப் புனலோடுவழிப் புற்சாய்ந்தாற்போலச் சாய்ந்துகிடப்பது.

இனித் தலைமகட்கு நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்பன குணம். அவற்றுள், நாணென்பது பெண்டிர்க்கு இயல்பாக உளதொருதன்மை. மடமென்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. அச்சமென்பது பெண்மையிற் றான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப்பென்பது பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை. இந்நான்மையும் புனலோடுவழிப் புற்சாய்ந்தாற்போல வேட்கையான் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடக்கும்.

வேட்கையென்பது என்னோவெனின், ஒருவரொருவரை இன்றியமையாமை. அவ்வின்றியமையாது நின்ற வேட்கை எல்லாவுணர்வினையும் நீக்கித் தானேயாய் நாள்வழிக் காகபோலவும் சீழி மிதவைபோலவும் பான்மைவழியோடி இருவரையும் புணர்விக்கும் என்பது. ஆகலாற் றமியராய்ப் புணர்தல் தலைமையோடு மாறுகொள்ளாதென்பது.

இது காமப்புணர்ச்சி என்பது. இதனை ஓராசிரியன் உள்ளத்தானே புணர்ந்தானென்னும்; என்னை ? மெய்யுறுபுணர்ச்சி பொருவிறந்தானென்பதனோடு மாறுகொள்ளும் ; யாங்ஙனம் மாறுகொள்ளுமெனின், ஏகதேசத்துப் பிறர்க்குரிய பொருளை வெளவினானைப் பெருமைசொல்லப்படாது. அதுபோல இவனுங் கொடுப்ப அடுப்ப எய்தற்பாலான் ஏகதேசத்து எதிர்ப்பட்டுச் சென்றெய்தி முயங்கினனாயின் ; என்னை? பிறர்க்குரிய பொருள் எளிதாகச் செய்யப்படாமையினும் பெரியனாய்ச் சென்றது. அங்ஙனமாகில் உலகத்துப் பன்மக்களெல்லாம் பெரியர் சீராத பொழுது பிறருடைமை கொள்ளாது சீர்த்த பொழுது வெளவுதலால்.

இனி இவனுங் குரவரது பணியாற் சென்று அவனை வழிபடற்பாலான் ஏகதேசத்துத் தலைப்பட்டமையாற் பெருமையிலன் ; என்னை ? தேர்ந்து காணாது உள்ளம் ஓடின வழியோடுதலான். உள்ளத்தான் வேட்கைப்படாத பொருளில்லை; அவ்வேட்கைப்பட்டவற்றுக்கணெல்லாம் அறத்தின் வழுவாமையும் பொருளின் வழுவாமையுந் தனக்குத் தகவும் ஆராயாது உள்ளம் ஓடினவழி ஓடுவித்தல் தக்கதின்றென்பதனால் அது மாறுகொள்ளுமென்பது.

மற்றென்னையோ உரைக்குமாறெனின், அவர் தம்முண் மெய்யுற்றுப் புணர்ந்திலர் ; இருவர்தங் காமமுமே தம்முட் புணர்ந்தன என்றிங்ஙனம் உள்ளங்களானின்று புணர்வது புணர்ச்சி; இதுபிறரொருவருணர நெடுங்காலம் புணர்தலாகாதெனக் கருதக்கம் பிரிவு ; அப்பிரிவின்கட் சொல்லுவது மெய்யுறுபுணர்ச்சிக்குச் சொல்லுவன. எல்லாஞ் சொல்லாமையுமாம். பாங்கற்கூட்டத்தின் கண்ணுந் தோழியிற்கூட்டத்தின்கண்ணுமெல்லாம் அதுவே. வரைந்தெய்திய ஞான்று மெய்யுறுபுணர்ச்சியுண்டாவதென்ப. அது பொருந்தாதென்று மெய்யுறுபுணர்ச்சி வேண்டுவார்சொல்லுவது ; மெய்யுறுபுணர்ச்சி தக்கின்றென்றாகாதே உள்ளப்புணர்ச்சி வேண்டியது ? அங்ஙனங் கருதிற் பிறர்க்குரிய பொருண்மேல் உள்ளத்தை ஓடவிடுதல் தக்கின்றென்று மீட்க அமையாதோவென்பது. அல்லதூஉம், உள்ளத்தான் வேட்கை செல்லினும் மெய்யுற்றாராயிற்று. அதன்கண் இருபுடைக்குறி யாகாதே ; ஆகவே, இவட்குக் கற்பழியும் பிறரொருவர் வழி

பாண்டிச் [illegible]

பட; இனி உள்ளஞ்சென்றபொழுதே அமைந்து இரண்டாவதில்லை யென்று கருதினானே யெனினும் மெய்யுறவே; குற்றமென்றோவெனின் பது. அல்லதூஉம் மெய்யும் மொழியுமென்பன உள்ளத்தின் வழி யவன்றே? அஃதிறந்தபின்னை இறவாது நின்றதென்னோ என்பது. அல்லதூஉம், பார்ப்பான் பாதகமாயிற்றென்று நினைக்குமாயிற் பி ராயச்சித்தியத்திற்கு உரியனும்; அதனாற் செய்கையும் நினைப்பொ க்கும் என்பது. அல்லதூஉம், மெய்யுறவதாகாதென்னுந் தெரிந்து ணர்ச்சியுண்டாயிற் தமியனென்பதனோடு மாறுகொள்ளுமென்பது.

அல்லதூஉங், கந்தருவர் உள்ளத்தாற் புணர்ந்தாராயின் இவ ரும் உள்ளத்தாற் புணர்பவென்பது; என்னை? கந்தருவ வழக்கந் தோடொக்கு மென்றமையினென்பது. அல்லதூஉந் தெரிந்துணர் வுண்டாமேயெனின் அன்பினான் நிறைந்தாரென்பது அமையாது. என்னை? நிறைந்திருந்ததோர் கொள்கலம் பிறிதொன்றற்கு இடங் கொடாததுபோலவென்பது. இவ்வுத்தமராகலான் உள்ளத்தானே புணரப் போகம் முடியுமெனின், பின்னையும் என்றுமென்றும் மெய்யு றவு வகை கூடாதாம் புத்திரலாபத்திற்கு மெய்யுறுபவேயெனிற், கருமப்பொருட்டன்றி வேட்கையில்லை என்பதனால் உள்ளப்புணர்ச்சி உளாயன்று, மெய்யுறுபுணர்ச்சி வேண்டுமென்பது.

இனி ஒருசாரார் உரைக்குமாறு: மெய்யுறுபுணர்ச்சி தக்க தும் இன்சொல்லுங் கூற்றுமின்றிப் பசுப்போலப் புணர்ந்தாரென்ப தாகாது, சொற்படுகோன் முறைமையான் நிகழ்ந்து புணர்தல் தக வுடைத்து. அவை யாவையோவெனின், காட்சி ஐயந் தெளிதல் தேறலென இவை.

அவற்றுட் காட்சியென்பது இருவருந் தம்முட் கண்ணுறு வது. அதற்குச் செய்யுள்:—

பூமருகண்ணிணைவண்டாப்புணர்மென்முலையரும்பாத்
தேமருசெவ்வாய்தளிராச்செருச்செந்நிலத்தைவென்ற
மாமருதானைஎங்கோன்வையையார்பொழில்வேர்கலந்த
காமருபூங்கொடிகண்டேகளித்தவெங்கண்ணிணையே. (க)

ஐயமென்பது கண்ணுற்றபின் ஐயப்படுவது. எங்ஙனமோ வெனின், வரையரமகள்கொல்லோ வானரமகள்கொல்லோ நீரர

கள்கொல்லோ இத்துணைமேதகவுடையாள்; அன்றி மக்களுள்ளாள் கொல்லோ என்று ஐயப்படுவது. அதற்குச் செய்யுள் :—

உரைபுரைதீந்தமிழ்வேந்தனுசிதன்றென்னாட்டொளிசேர்
விரையுறைபூம்பொழின்மேலுறைதெய்வங்கொலன்றிவிண்டோய்
வரையுறைதெய்வங்கொல்வானுறைதெய்வங்கொனீர்மணந்த
திரைபுரைதெய்வங்கொலோவந்தருமித்திருநுதலே. (௨)

என இங்ஙனம் ஐயப்படுவது. இவளும் இவனை ஐயப்படும். கடம்பமர் கடவுள்கொல்லோ இயக்கன்கொல்லோ அன்றி மக்களுள்ளான்கொல்லோவென்று இங்ஙனம் ஐயப்படும்.

இவ்வகை நினைந்தபின்னைத் தெளிவு வருமாறு : ஆடை மாசுண்டலானுங் கால் நிலந்தோய்தலானுங் கண் இமைத்தலானுங் கண்ணி வாடுதலானுஞ் சாந்து புலர்தலானுமென்று இங்ஙனந் தெரியும். தெரிந்தபின்னைத் துணியுமென்பது. அதற்குச் செய்யுள்;—

பாவடியானைப்பராங்குசன்பாழிப்பகைதணித்த
தூவடிவேன்மன்னன்கன்னித்துறைச்சுரும்பார்குவளைப்
பூவடிவாணெடுங்கண்ணுமிமைத்தனபூமிதன்மேற்
சேவடிதோய்வகண்டேன்றெய்வமல்லளிச்சேயிழையே. (௩)

இவளும் இவனை இவ்வாறே தெரிந்து மக்களுள்ளானென்பது தெரியும். தெரிந்தபின்னை இருவர்க்கும் வேட்கைமிகத் தம்மிற்கூடுவது. இவ்வாறுபுணரப் பெரிதும் வனப்புடைத்தாய்க் காட்டுமென்பது. இவ்வுரை பொருந்தாது. என்னை காரணமெனின், இது கைக்கிளையிலக்கணம். தெய்வங்கொல்லோ மகடூஉக்கொல்லோ என ஐயமுற்ற ஐயநிலையுந் தெய்வவிலக்கணந் தீண்டாவாகலின் ஐயந்தெரிந்து மகடூஉவாதல் துணிவுற உணர்ந்த அத்துணிவு நிலைமையுமெனக் கைக்கிளையிலக்கணமாகச் சொல்லப்பட்டமையின். ஈங்கத்திணையுள்ளதுரைப்பது திணைமயக்கமாகலின் மேலதேபொருள். காமப்புணர்ச்சியென்றமையிற் காமத்தின்வேறு புணர்ச்சியாகல்வேண்டும்பிற, வாளாற்கொண்ட கொடியென்றதுபோலவெனின்; அற்றன்று, பொன்னாற்செய்த மஞ்சிகை மண்ணாற்செய்த குடமென்பதுபோல வேறன்றி நிற்புழிக்கொள்க. இஃது இயற்கைப் புணர்ச்சியெனப்படும், புலவராற்கூறப்பட்ட இயல்பினாற் புணர்ந்தாராகலானும் ஏற்குருவ வழக்கத்தோ

# பாண்டிக்கோவை

டொத்த இயல்பினாற் புணர்ந்தாராகலானுமென்பது. இனித் தெய்வப்புணர்ச்சியெனவும்படும், இருவருந் தெய்வத்தன்மையாற் புணர்தலினென்பது. அல்லதூஉம், முயற்சியும் உளப்பாடுமின்றி ஒருவற்கொரு மங்கை கூடினவிடத்துத் தெய்வத்தினான் ஆயிற்றென்பது. அதுபோல இவர்க்கு முயற்சியும் உளப்பாடுமின்றிப் புணர்ந்தமையானுந் தெய்வப்புணர்ச்சியெனப்பட்டது. இதுவே முன்னுறு புணர்ச்சியெனவும்படும்; இவர் நலம் இவனானே முன்னுற எய்தப்பட்டமையானும் இவன் நலம் இவளானே முன்னுற எய்தப்பட்டமையானுமென்பது.

இனித் தெய்வப்புணர்ச்சி முன்னுறுபுணர்ச்சி இயற்கைப்புணர்ச்சியென அவற்றுளொன்று சொல்லாது காமப்புணர்ச்சியென்றே கூறிய காரணமென்னையெனின், இவற்றுளொன்றே சொல்லினுமொக்கும்; அல்லாதவையெல்லாம் அன்பினானே நிகழுமாதலிற் காமப்புணர்ச்சியென்றொன்பது பலகாரணத்தினுமுடையதொன்றை ஒரு காரணத்தினாற் சொல்லுவது சிறப்புடைமை நோக்கி; என்னை? நிலனும் நீருங் காலமும் வித்துமென இவற்றினது கூட்டத்தினுய முளையை நென்முளையென்ப நென்முளைக்கு நெற் சிறப்புடைக்காரணம், நிலனும் நீரும் முதலாகவுடையன பொதுக்காரணம், அவை பயற்றுமுளை முதலாயுடையனவற்றிற்குங் காரணமாகலான். அதுபோல விளங்குத் தெய்வமும் இயற்கையும் முன்னுறவும் பொதுக்காரணமுங், காமஞ் சிறப்புக்காரணமுமாகலாற் காமப்புணர்ச்சியெனப்பட்டது.

இனி இருவயினொத்தல் என்பது என்சொல்லியவாறோவெனின், புணராதமுன் நின்ற அன்பு புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நிற்குமென்றவாறு. ஆயின் உலகினோடொவ்வாது பிற உலகினிற் புணராத முன் நின்ற அன்பு புணர்ந்தபின்றைத் தவிர்தலானும் உண்ணாதமுன் நின்ற வேட்கை உண்டபின்றைத் தவிர்தலானுமென்பது. என்றாற்கு: அறியாது சொல்லுதி, இஃது உலகத்துள்ள பான்மை முன்னே கேட்டாயன்றே, இல்லதினியது நல்லதென்று புலவரால் நாட்டப்பட்டதென்பது. நூல் எடுத்துக் கோடற்கண்ணே சொல்லிப் போந்து இனியொருகாலும் உலகினோடொவ்வாதெனில் வேண்டி மேவென்பது. ஆயின் உலகினுள் அன்பன்றுகப் புணராதமுன் நின்

ற அன்பு புணர்ந்தபின்னும் அப்பெற்றியே நிற்குமெனிற் புணர்ச்சி யினுப பயமில்லையாம்பிற. உண்ணாத முன்னின்ற வேட்கை உண்ட பின்றையும் அப்பெற்றியே நிற்குமாயின் உண்டதனானாய பயமி ல்லை, அதுபோல என்றார்க்கு : அதுவன்று ; புணராதமுன்னின்ற வேட்கை புணர்ச்சியுட் குறைபடும், அக்குறைபாட்டைக் கூட்டத் தின்கட் தம்முட்பெற்ற செய்குணங்களாய அன்பு நிறைவிக்கும் ; பின் னும் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறைபடும், அதற்கிடையின் றியே குணத்தினாய அன்பு நிறைவிக்கும்; நிறைவித்தபின்னும் முன்னின்ற அன்பு கூட்டத்திற் குறையாது எஞ்ஞான்றும் ஒருபெற் றியேயாய் நிற்குமென்பது.

இனி அவ்வகை புணராதமுன்னும் புணர்ந்தபின்னும் ஒத்த அன்பினனாய்நின்ற தலைமகன் பிரியுமென்றமோ? பிரியானென்று மோ? பிரியுமென்றமேயெனின், அன்பிலனாயினானாம்; என்னை? பிரிவு அன்பிற்கு மறுதலையாகலான். இனிப் பிரியானேயெனினும், அன்பி லனாயினான். என்னை ? பிரியாதிருப்ப இவ்வொழுகலாறு பிறர்க்குப் புலனாமாக இவள் இறந்துபடும்,அவள் இறந்துபாட்டிற்குப் பிரியானா யினானாம். ஆகவே மூன்றுவது செய்யப்படுவது இல்லையாலோவெ னிற் பிரியுமென்பது. ஆயின் அன்பின்மை தங்காதோவெனிற் தங் காது. பிரிவும் அன்பினனே நிகழுமாறு சொல்லுதும்.

௧ தெய்வப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் இயற்கையன்பினானு ஞ் செயற்கையன்பினானுங் கடாவப்பட்டுத் தனது நயப்புணர்த்தும். இயற்கையன்பென்பது காரணமின்றித் தோன்றும் அன்பு. செயற் கையன்பென்பது அவடன் குணங்களாற் தோன்றிய அன்பு. அவ் விரண்டினானுங் கடாவப்பட்டு நின்று தலைமகன் சொல்வது நயப்பு.

2 3 நயப்பென்பது தலைமகன் வண்டிற்கு உரைப்பானாய்த் தலைமகள் கேட்பத் தன்னயப்புணர்த்தியது எங்ஙனமெனின், அவள்கையினைச் செங்காந்தளெனவுங் கண்ணினைக் கருங்குவளையெனவும் வாயினை ஆ ம்பலெனவுஞ்சென்று தமொறிக் குழன்மேலுங் கோதைமேலுஞ் சுழல்வாய், இவள் செவ்வாயது நறுநாற்றம் அறிதியன்றே! இனி நீர்ப் பூவெப்பூக் கோட்டுப்பூக் கொடிப்பூவென்று இப்படி வெவ்வேறுவகை ப்பட்ட பூவின்மேலுஞ் செல்வாய், ஆம்பற்பூவினது நாற்றம் அறிதிய

௦ கு பாண்டிக்கோவை

ன்றே! அறியாய், இவ்வகைப்பட்டாள் செவ்வாய்போல நாறுந் தகைமைய உளவே ஆம்பல் நறுமலர்? என்றுற் தேறப்படும் வண்டே உணாயாயென உணர்த்தினனென்பது. அதற்குச் செய்யுள் :—

வேறுமெனநின்றிகன்மலேந்தார்விழிஞத்துவின்போ
யேறுந்திறங்கண்டகோன்றென்பொதியிலிரும்பொழில்வாய்த்
தேறுந்தகையவண்டேசொல்லுமெல்லியல்செந்துவர்வாய்
நாறுந்தகைமையவேயணியாம்பனறுமலரோ. (௪)

என்றது வேறுமெனநின்ற இகன்மலேந்தார் விழியத்து வின்போயேறுந் திறங்கண்ட கோன் தென்பொதியில் இரும்பொழில்வாய் வண்டாதலாற் தேறுந் தகைமையயென்றவாறு. இதினுற் போந்த பொருள் :— வெல்லுவது கருதி விழிஞத்துக் கடற்கோடியுள் மலேந்த பலவேந்தரையும் படுவித்து இவர் என்பதைமொன நினையாது அவற்குத் தவத்தாலுந் தானத்தாலுமன்றிப் புகலாகாச் சுவர்க்கங் கொடுத்த பெருந்தன்மையானது நிலத்து வண்டாதலின் நீயும் பெருந்தன்மையை ஆகலிற் தெளியப்படுதி; அல்லதூஉம் பொதியிலென்பது எல்லாத் தேவர்களுக்கும் பொதுவாகிய இல்லென்றவாறு; அத்தேவர்களுடையவனம் இரும்பொழிலென்றவாறு; அப்பொழில்வாழ்வாய் நீயும் அத்தன்மையையன்றே ஆகலாலுந் தெளியப்படுதி. அன்றாய் நீ பொய்யுரையாய், இவள் வாய்போல நாறும் ஆம்பற்பூவுளவோ வென்றவாறு; என்றதனாற் தன் நயப்புணர்த்தினன். இனி மெல்லியலென்பது மென்மையைத் தனக்கு இயல்பாகவுடையா ளென்றவாறு. மென்மையென்பது பெண்டிர்க்கு மிகவியல்பு, அதனை தனக்குச் செய்துகோளன்றி இயல்பாக உடையாளென்றவாறு; எனவுந் தன் நயப்புணர்த்தினன். இனிச் செந்துவர்வா யென்பது செம்மையைத் தனக்கு மிகவுடையவாயென்றவாறு. செம்மையுடையாளென்பது உலகத்துத் தங்குணங்களை மறையாதொழுகுவாளை. இவள் வாயுந் தன்குணமாகிய வடிவும் மொழியும் நறுநாற்றமு மென்று இவ்வாற்றால் விளங்கிப் பொலிந்து தோன்றுவதென்றவாறு; என்றதனாலுந் தன் நயப்புணர்த்தினனும். இனி நாறுந் தகைமையவேயென்பது, ஐந்தேகாரத்துள்ளும் இவ்வேகாரம் வினாவின்கண் வந்த ஏகாரமெனக்கொள்க. "தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே. ஈற்றசை யிவ்வைந் தேகா ரம்மே" என்பவாகலின். அனி ஆம்பல்

நறுமலரொன்பது அழகிய ஆம்பல் நறுமலரொன்றவாறு. அணியாம்ப னறுமலரொன்றதனுற் போந்தபொருள் அழகியரான குணங்களும் பெரும்பான்மையும் அழகியவாகலால் அவ்வாம்பற் கண்ணும் மிக்கநாற்றமென்றற்குச் சொல்லப்பட்டது. அவ்வகை நறுநாற்றம் மிக வுடைய ஆம்பல் இவள்வாய்போல நாறுமென்றவாறு. மலரோவென்று நின்ற ஏகாரம் ஈற்றசையேகாரம்.

இனி இதனைச் சோதிக்குமாறு ;— செந்துவர்வாய் நாறுந்தகைமையவே என்றதல்லது போலவென்றதில்லையாலெனின், உவமந் தொக்குநின்றதென்றுகொள்க. என்னை? "வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே - வினையின் றொகையே பண்பின் றொகையே -யும்மைத் தொகையே அன்மொழித் தொகையென் - றவ்வா றென்ப தொகைமொழி நிலையே." என்றோதினமையின்.

ஆயின் உவமந் தொக்குக ; உவமிக்கும் முறைமையன்றி உவமித்தீர்; உலகத்துப் பெண்பால்கள் வாயது நறுநாற்றத்திற்கு உவமையாவது ஆம்பலென்றவாறு. என்னை? "ஆம்ப னாறுந் தேம்பொதி கிளவி" என்பவாகலின். இவ்வாறன்றி இவள்வாய் போல நாறும் ஆம்பலுளவேயென வாயை உவமையாக்கி ஆம்பலை உவமிக்கப்படும் பொருளாகச்சொல்லுதல் குற்றம்பிறவெனின் ; அறியாது சொல்லினாய், உலகத்து இவை உவமை இவை உவமிக்கப்படும்பொருளென்று நிலைபெற்றன உளவேயில்லை. உணர்க்குங் கவியது குறிப்பினுன் உவமையும் உவமிக்கப்படும் பொருளாம். உவமிக்கப்படும் பொருளே உவமையாகவும் அமையும்; என்னை? "பொருளது புணர்வே புணர்ப்போன் குறிப்பின் - மருளற வருஉ மரபிற் றென்ப." என்றோதினமையாற், "கண்போ னெய்தல் போரவிற் பூக்கும்" எனவும், "கண்ணென மலருங் குவளை" எனவும், "குவளை யுண்கண் ணிவளும் யானும்" எனவும் "செய்த துண்கண் பைதல் கூற" எனவும் இவ்வகையானுஞ் சொல்லுபவாகலின், இருவகையானும் உவமிக்க அமையுமென்பது.

இனி மருதநிலத்து ஆம்பலைக் குறிஞ்சிநிலத்து ஆம்பலாகச் சொல்லுதல் திணைவழுவாம் பிறவெனின், ஆகாது ; குறிஞ்சி நிலத்து

வண்டு குறிஞ்சிநிலத்தே திரிவனவல்ல, எல்லாநிலத்துஞ் சென்று எல்லாப்பூவும் ஊதுமாகலானும் அமையும். அல்லதூஉம், "எந் நில மருங்கிற் பூவும் புள்ளு - மந்நிலம் பொழுதொடு வாரா வாயி னும் - வந்த நிலத்தின் பயத்த வாகும்:" என்பதாகலானும் அமையும். இனிச் சுனைக்குவளையுஞ் சுனையாம்பலும் உண்மையானும் அமை யும். அது பெருங்குறிஞ்சியிற் கண்டுகொள்க.

இனித் தலைமகனென்னுஞ் சொல்லோடு மாறுகொள்ளும் பிற னொரு தலைமகனிலத்துப் புணர்ந்தானென்றமையினெனின், மாறு கொள்ளாது ; என்னை ! நின்ற ஒருவனாகிய பாண்டியனது பொதியி லிடமாகச் சொன்னமையான். என்னை ! அக்குலத்துட் டோன்று வார் தேவர்களே யாகலான், நம்மால் வேண்டப்பட்ட தலைமகன் தேவருண் மிக்கானெனப்பட்டான். மக்களுண் மிக்கானுமல்லனாக லின் இவணிலத்துப் புணர்ந்தானென்பது தலைமையொடு மாறுகொள் ளாதென்பது. அல்லதூஉம், "மழைவளந் தரூஉ மாவண் டித்தன் - பிண்டி நெல்லி னுறந்தை யாங்கட் - கழைநிலை பெறாஅக் காவிரி நீக் கம் - குழைமா ணொள்ளிழை நீவெய் யோளொடு - வேழ வெண்புணை தழீஇப் பூழியா னகையு - நாடி யானை பின்முக னமர்ந்தாஅங் - கேந் தெழி லாகத்துப் பூந்தார் குழைய - நெருந லாடினை புனலே" என் னும் "புகுவாய் வாரற் பலவரி யிறம்போத்து" என்னவுங் கிளவித் தலைமகளைப் பாட்டுடைத் தலைமகனிலத்துப் புனலாடினானென்றும் புணர்ந்தானென்றும் பிறசான்றோர் செய்யுளுள்ளுஞ் சொல்லப்பட்ட தாகலினானும் அமையுமென்பது. இப்பாட்டினாற் றன்கண் நின்ற அன்பு வெளிப்படுத்துத் தலைமகளைப் புகழ்ந்து நயப்புணர்த்திற்றாயிற் றுப் போந்தபொருள். இன்னுஞ் செய்யுள் :—

தாவுண்டைவண்டினங்காள்வம்மின்சொல்லுமின்றன்னிகில்லாக்
கோவுண்டைகோட்டாற்றழிவித்தகோன் கொங்கநாட்டசெங்கே
மாவுண்டைகாட்டியனாக்கிதன்வார்குழல்போற்கமழும் [னா
பூவுண்டைதாமுளவோநுங்கள்கானற்றொழிலிடத்தே. (௯)

இருங்கழல்வானவனாற்றுக்குடியிகல்சாய்த்தழியப்
பொருங்கழல்வீக்கியபூழியன்மாறன்றென்பூம்பொதியின்
மருங்குழலுங்கனிவண்டினங்காளுரையீர்மடந்தை
கருங்குழலுறமெல்போதுடைத்தோதங்கடிபொழிலே. (௰)

விண்டேயெதிர்ந்ததெவ்வேந்தர்படவிழிருத்துவென்ற
வொண்டேருசிதனெங்கோன்கொல்லிச்சாரலொளிமலர்த்தா
துண்டேயுழல்வாயறிதியன்றேயுளவேலுரையாய்
வண்டேமடந்தைகுழல்போறகமழுமதுமலரே. (எ)

பொருங்கழல்வானவர்க்காயன்றுபூலந்தைப்போர்மலைந்தா
ரொருங்கழலேறவென்றான்கொல்லிச்சாரலொண்போதுகடம்
மருங்குழல்வாய்நீயறிதிவண்டேசொல்லெனக்குமங்கை
கருங்குழல்போலுளவோவிரைநாறுகடிமலரே. (அ)

தேற்றமில்லாததெவ்வேந்தரைச்சேலூர்ச்செருவழித்துக்
கூற்றமவர்க்காயவன்கொல்லிச்சாரல்கொங்குண்டுழல்வாய்
மாற்றமுரைநீயெனக்குவண்டேமங்கைவார்குழல்போ
னாற்றமுடையவுளவோவறியுநறுமலரே. (௯)

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டன மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே."

இவையும் அப்பாற்படுத்துக்கொள்க.

அவ்வகைத் தன்னைப் புகழத் தலைமகள் ஆற்றாளாயினாள். என்னை? சிறியவருந் தம்முன்னின்று தம்மைப் புகழ்ந்தவிடத்து நாணி வருந்துபவாகலாற் றான் பெருமையும் பெருநாணும் உடையாள் தலைமகன் முன்னின்று புகழ ஆற்றாளாவது சொல்லவேண்டுமோ? அவ்வகை ஆற்றாளாயினாளது ஆற்றாமை தலைமகற்குப் புலனாயிற்று. புலனாக, அதனைக்கண்டு நீருடைநிலத்து நிவந்த நீண்மரம் வெப்பத்தாற் றெறப்படாததுபோல யானுளையேனா இவ்வேறுபாடு இவட்கு ஆகாதன்றே! இஃது எற்றினாயிற்றுக் கொல்லோவென நினைந்தான். நினைந்தறிந்தே என்னது காதன்மிகவினாற் பாராட்டப்போலுமென உணர்ந்தான். உணர்ந்து யான் தன்முன்னின்று தன்னைப் பாராட்டவும் இவ்வகைமெலிவுசென்ற பெருநாணுடையாள் புறத்து யாரா இவ்வொழுக்கத்தை உணர்வார் கொல்லோவென்று ஞான்றும் இவளிறந்துபடும்போலுமெனப் பெரிய

௫௦ — பாண்டிப் பேரவை

தோர் ஆற்றாத்தன்மையனாயினான். ஆற்றாத்தன்மையன் என்பது எவ்வுணர்வுமின்றி அவ்வாற்றாமை தானேயாவது. அவ்வகை ஆற்றானாய தலைமகனது ஆற்றாமைக்குக் கவன்று முன் காணிற்சென்றெய்திய ஆற்றாமைநீங்கித் தலைமகள் ஆற்றாளாயினாள். வேலைவேறுபடத் தேளோறுமாய்ந்தாற்போல அது தலைமகற்குப் புலனாயிற்று. புலனாக, இவள் எவ்விடத்துந் தன்றன்மையென்பது ஒன்றிலள், என்றன்மையளே; யான் ஆற்ற ஆற்றி யான் ஆற்றாதவிடத்துத் தானும் ஆற்றாளாமாகலான் யான் பிரிந்தவிடத்து என்குறிப்பன்றி இறந்துபடாள். அல்லதூஉம், யான் பிரியாதுவிடப் புறத்தார் உணர்வர். புறத்தாருணரவே இவள் ஆற்றாளாம். ஆகலான் யான் பிரியவே புறத்தார் உணரார். ஆகவே, இவள் ஆற்றுமெனக் கருதி இவள் கருங்குழற் கற்றை மருங்கு இருத்தி, அளகமும் நுதலுந் தகைபெற நீவி, ஆகமுந் தோளும் அணிபெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறித், தளிர்ப்ப முயங்கிப் பிரிவலென்று வலித்தான். வலித்துப் பிரிவச்சமென்பதொன்று சொல்லும்.

பிரிவச்சமென்பது, தான் பிரிய அஞ்சிற்றும் பிரிவச்சம்; அவளைப் பிரிய வஞ்சுவித்ததும் பிரிவச்சம்; ஆதலிற் பிரிவச்சமெனப்பட்டது. அது யாங்ஙனஞ் சொல்லுமோவெனின், நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேனென்னும். அதற்குச் செய்யுள்:—

மின்னிற்பொலிந்தசெவ்வேல்வலத்தான்விழியத்தெதிர்ந்த
மன்னிற்குவானங்கொடுத்தசெங்கோன்மன்னன்வஞ்சியன்னாய்
நின்னிற்பிரியேன்பிரியினுமாற்றேனெடும்பணைத்தோட்
பொன்னிற்பசந்தொளிவாடிடவென்னீபுலம்புவதே. (௪௦)

அணிநிறநீண்முடிவேந்தனையாற்றுக்குழியழியத்
துணிநிறவேல்வலங்காட்டியமீனவன்றொண்டியன்ன
பிணிநிறவார்குழற்பெய்வளைத்தோணின்னிறபிரியேன்
மணிநிறம்பொன்னிறமாயிடவென்னீவருந்துவதே. (௪௧)

பொன்னார்புனைகழற்பூழியன்பூலந்தைப்பூழிய
மின்னாயில்கொண்டவேந்தன்விசாரிதன்வெண்டிரைமேன்
முன்னாண்முதலறியாவண்ணனின்றபிரான்முகிழ்
யன்னாய்பிரியேன்பிரியினுமாற்றேனழுங்கற்கவே. (௪௨)

இவ்வகை கேட்டதலைமகள் எம்பெருமான் நின்னிற்பிரியேன் பிரியின் ஆற்றேனுவல் என்கின்றானாற், பிரிவென்பதும் ஒன்றுஉண்

டுபோலும், கேட்ட தகைமையால் அது தங்காதலனைக் கர்ணுதுங் கேளாதுங் கையினகன்று மெய்யினீங்குவதெனக் கலங்கிக், கார்மருங்கின் மின்னுப்போலவும் நீர்மருங்கிற் கொடிப்போலவுந் தளிரும் முறியுந் ததைந்து, குளிரும் நளிருங் கவினி எழாநின்றதோர் கவின் பெறு கொடிப்போலுங் காரிகை, கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவி போலக் காண ஒளிமழுங்கிக், கனல் முன்னிட்ட மெழுகுப் பாவை போல மனமுருகிப் பசந்து காட்டினாள். காட்டியும் ஆற்றினாள். யான் ஆற்ருவிடின் எம்பெருமானும் இறந்துபடுமென அங்ஙனம் ஆற்றினாள். அது நீர்மையைக் கண்டு இவள் எவ்விடத்துந் தன்றன்மையென்பது ஒன்று இலளே, என்றன்மையளே போலுமெனப் பெரியதோர் கழியுவகை மீதூர நின்று வன்புறையென்பதோர் சொற் சொல்லும். வன்புறையென்பது வறபுறுத்துவது. அஃதியாங்ஙனமோவெனின் அணித்து எம்மிடமென்பது. அதற்குச் செய்யுள் :—

பாவணையின்றமிழ்வேந்தன்பராங்குசன்பாழிவென்ற
வேலணைவெஞ்சிலையான்வஞ்சியன்னாயினையலெம்மூர்த்
தூவணமாடச்சுடர்தோய்நெடுங்கொடிதுன்னிநம்மூ
ராவணவீதியெல்லாநிழற்பாய்நின்றணவருமே. (௩௩)

திணிநிறத்திண்டோளரசுகத்தென்னறையாற்றுமின்னார்
துணிநிறவேல்கொண்டகோன்றெண்டியன்னாய்துயரலெம்மூர்
மணிநிறமாடத்துமாட்டியவான்சுடர்மாலைநம்மூ
ரணிநிறமாளிகைமேற்பகல்பாரித்தணவருமே. (௩௪)

ஒன்றக்கருதாவயவர்நறையாற்றுடனழிந்து
பொன்றப்படைதொட்டகோன்புனனாடனையாய்நமர்கள்
குன்றத்திடைப்புனங்காவலரிட்டகுரூஉச்சுடரெம்
மன்றத்திடையிருணீக்கும்படித்தெங்கள்வாழ்பதியே. (௩௫)

சேலங்குளர்வயற்சேவூரொளிர்நின்றசேரலனை
மாலங்கடைவித்தமன்னன்வரோதயன்வஞ்சியன்ன
வேலங்கமழ்குழலேழையெம்மூரொழின்மாடத்துச்சிச்
சூலந்தடக்குநம்மூர் மணிமாடத்துகிற்கொடியே. (௩௬)

3௦ என அங்ஙனங் கேட்ட தலைமகள் எம்பெருமான் அணித்தெம்மிடமென்கின்ருனல் அணியதற்கு அருமையில்லை என்கின்ருனும். அருமையில்லையென்றதனுற் போந்தபொருள் பலனாலுங் கேட்கவுங்

# (13) பாண்டிக் கோவை

காணவுமாமென்றவாறுபோலும்; பலகாலுங் கேட்பாருங் காண்பாரும் ஆற்றியுளராகாதே? அதனால் எம்பெருமான் என்னைக் காண்டற்குங் கேட்டற்கும் ஆற்றியுளனும் போலுமென்று ஆற்றுவாளாம். அங்ஙனம் ஆற்றுதலை அறிந்தபின்றைப் பிரிவானும். இனி இவளும் பெருநாணினள். யான் பிரியாதுவிட இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனும். ஆகவே இவள் ஒருதலையாக இறந்துபடுமென இவ்வகைப் பிரிவச்சமும் வன்[illegible]றையுஞ் சொல்லிப் பிரியுமாகலிற் பிரிவும் அன்பினனே நிகழ்ந்ததென்பது.

இவ்வாற்றாற் தலைமகளை ஆற்றிப்பிரிந்த தலைமகன் அவளைத் தமியளாக நீங்குமோவெனின், நீங்கான். அவள் தன்னைக் காணாமைத் தான் அவளைக் காண்பதோர் அண்மைக்கண் மழைக்கொண்டலுள் மின்னுப் புக்கொளித்தாற்போல ஒருதனிப் பொதும்பரிடை மறைந்துநிற்குமென்பது. அங்ஙனநிற்பத், தலைமகளுந் தன்குழற்கற்றைப் பொறையுங் கோதையுந் துயல்வரக், கொடியிடை நடுவு தளரப், பரவையல்குற் துகிலசையப், பைம்பொற்றோடு மின்னுப்படைப்ப, அரவவண்டறையுந்தாமரை அகவிதழ் புரையு மஞ்செஞ்சீறடிமேற் செம்பொற் சிலம்பரற்ற, அன்னம்போல மென்மெல ஒதுங்கிக், காமவல்லிக்கொடியுங் கற்பகக்கொழுந்தும் நடப்பதென நடந்துசென்று, அப்பனிவரைச் சாரலருகினது ஒரு மணியருவியருங்கு ஒழுறுத்த பளிங்கு விளிம்படுத்த நீலப் பைஞ்சுனை மருங்கினதோர் மரகதச் சிலாவட்டத்தயல் மாணிக்கச் சதுரப்பாறைமேற் றாதுதவிசு விளிம்படுத்த மாதவிப் பந்தர்ப் போதுவேய்ந்த பூகாறுகொழுநிழலிருந்தாள். இருந்தாளாகத், தாதுந் தளிரும் போதும் மேதக்கனவற்றாற் குறுங்கண்ணியும் நெடுங்கோதையும் விரவுத்தழையுஞ் சூட்டுச்சுக்கிகையும் மொட்டுவலயமும் பிறவுமாகப் புனைந்து, வண்டுந் தேனும் புடைமருட்ட வடியுறையென ஏந்திப் பிரிந்த ஆயம் பெயர்ந்தெய்திப், போற்றும் பல்லாண்டுங் கூறிநின்றார். நிற்ப, அவளுந் தாரகைநடுவட் டண்மதிபோல்வதோர் பொலிவினளாய்க் காட்டினள். காட்டினளைக் கண்டு, இவளை யான் எய்தினேனெனக் கருதினான். எய்தியதுண்டேற் கனவேபோலும்; கனவேயாயினும் இவள் எனக்கு எய்தற்கு அரியளாமென ஆற்றானாயினன். அதற்குச் செய்யுள் ;—

சினவேல்வலங்கொண்டுசெந்நிலத்தேற்றதெவ்வேந்தர்கள்போ
யினவேனரல்குன்றமேறவென்றோனிருந்தண்சிலம்பிற்
புனவேயனையமென்றோளிதன்னொடும்புணர்ந்ததெல்லாங்
கனவோநனவாய்விடினுமெய்தாதினிக்கண்ணுறவே. (௧௭)

இருநிலங்காரணமாகநறையாற்றிகன்மலைந்த
பொருநிலவேந்தரைப்பொன்னுலகாள்வித்தபூழியன்வேற்
பெருநிலங்காவலன்றென்புனனாடன்னபேணணங்கின்
திருநலஞ்சேர்ந்ததெல்லாங்கனவேயென்றுசிந்திப்பனே. (௧௮)

கையேர்சிலைமன்னரோடக்கடையற்றன்கண்சிவந்த
செய்யேரயில்கொண்டசேரியன்கொல்லிநெடும்பொழில்வாய்
மையேர்தடங்கண்மடந்தைமெல்லாகம்புணர்ந்ததெல்லாம்
பொய்யேயினிமெய்ம்மையாயினுமில்லைப்புணர்திறமே. (௧௯)

என இவ்வகையான் அவளது அருமைநினைந்து இவ்வொழுக்கங் கூடாதென்று கருதுவானாயினவனையும் யான் இவ்வகையாளைப்புணருமாறு என்னைகொல்லோ என்பானாயிற் கூட்டத்திற்கே முயல்வானும். அவ்வகை நினைந்து நீங்குவான் ஆயத்தோடுஞ் செல்லாநின்ற தலைமகளை நோக்கிச்சொல்லும். அதற்குச் செய்யுள் :—

தேயத்தவருயிராப்புலனன்றென்பர்செந்நிலத்தைக்
காயக்கனன்றெதிர்ந்தார்மருமத்துக்கடுங்கணைகள்
பாயச்சிலைதொட்டபஞ்சவன்வஞ்சிப்பைம்பூம்பொழில்வா
யாயத்திடையிதுவோதிரிகின்றதென்னாருயிரே. (௨௰)

இன்னுயிர்கண்டறிவாரில்லையென்பரிகன்மலைந்தார்
மன்னுயிர்வான்சென்றடையக்கடையலுள்வென்றவையன்
தன்னுயிர்போனின்றுதாங்குமெங்கோன்றொல்லைத்தாழ்பொழில்வா
யென்னுயிராயத்திடையிதுவோநின்றியங்குவதே. (௨௧)

என இவ்வாறுசொல்லி இவளைக் கைகூடாதென ஆற்றானான். அவ்வாற்றுத்தன்மை ஆற்றுவதொன்றைப் பற்றும். ஆற்றுவது யாதோவெனின் தானெய்திய ஆரணங்காகிய அவ்வுருவினைநினைந்து தானெய்தும் உபாயமாவது தன்காதற்றோழனை இது கொண்டுமுடிக்குங்கொல்லோ வென்பது. அதுபற்றுக்கோடாக ஆற்றியிருக்குமென்பது. (௮)

(18) பாண்டிக் கோவை

(உ [illegible] தல்)

(உ1) பாண்டிக் கோவை

## ௩-வது சூத்திரம்.

௩. ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் றன்வயிற்
பாங்க னோரிற் குறிதலைப் பெய்தலும்
பாங்கிலன் றமியோ ளிடந்தலைப் படலுமென்
றாங்க விரண்டே தலைப்பெயன் மரபே.

என்- னின், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் அதன்பி ன்னே தெருளுமெனாதறலை ; என்னை ? வழிபோகாநின்றானொருவன் பிழைத்துச் சென்றானுஞ் சாணகமாணும் மிதித்தவிடத்துக் காலைக் கழீஇப் பாதுகாத்துத் தன் இல்லம் புக்கதுபோல அவனும் ஞான வொழுக்கக் குணங்களின்வழியே செல்லாநின்றான் இழுக்கினுல் அவ் விழுக்கினை இழுக்காவதறிந்து அதன்கணின்று மீடன் மிக்கது; மீண் டுநிற்கிலானெனின் இவ்வாறொழுகுந் திறமுணர்த்துதனுதலிற்று. (இ-ள்) ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் = அவ்வாறு கூடிப்பிரிந்த தலைமகன் : தன்வயிற் பாங்கனோரிற் குறி தலைப்பெய்தலும் = தன்பா ங்கனாற் குறியிடத்துத் தலைப்பெய்தலும் : பாங்கிலன் தமியோள் இட ந் தலைப்படலும் = பாங்கனையின்றித் தனியாளை இடத்தெதிர்ப்படு தலும் : ஆங்க என்பது அசைச்சொல் : இரண்டென்பது தொகை: தலைப்பெயல் மரபே = தலைப் பெய்தற்கு இலக்கணம். எ - று.

அவ்வாறு புணர்ந்து நீங்கிய தலைமகன் பிற்றைஞான்று தன் பாங்கனாற் குறியிடத்துத் தலைப்பெய்தலும் பாங்கனையின்றியே தனி யாளை இடத்தெதிர்ப்படுதலுமென அவ்விரண்டில் ஒன்றே தலைப் பெய்தற்கு இலக்கணம் என்றவாறு. அவ்வாறு புணர்ந்த கிழவோன் என்பது தெய்வம் இடைநிற்பப் பான்மையால் உய்க்கப்பட்டு யாரு மில் ஒருசிறைத் தலைப்பெய்த தலைமகனென்றவாறு. எனவே அவ் வாறு புணரப்பட்டான் தலைமகனெனப்பட்டது ; கிழமையுடைமை யிற் கிழவனெனப்பட்டது. தலைமை யுடைமையிற் தலைமகனெனப் பட்டது. அவட்கும் அவ்வாறே கொள்க.

இனிப் பாங்கற்கூட்டமாமாறுசொல்லுதும். இயற்கைப்புணர் ச்சி புணர்ந்தாற்றுவித்துப் பிரிந்த தலைமகன் ஆங்குப் பட்டவார்த்தை பெல்லாம் நினைக்கும். நினைக்குமாறு யாதோவெனின், நின்னிற்பிரி வென் பிரிவிஞற்றேனெனச் சொல்லிப் பிரியப்பட்டான் தன்னைக்கட றுது என்னிலைமைநினைந்து ஆற்றுளாள் கொல்லோவெனவும், ஆற்றி

ளாகி நின்றாள் தனது வேறுபாட்டைப் புறத்தாரறியாமை மறைக்கும றறியாது வருந்துங்கொல்லோவெனவும் இவைமுதலாயின நினைந் தாற்றாளும். ஆற்றா நிலைமையானைப் பிற்றைஞான்று சிறுகாலே தலைப்படும் பாங்கன் தலைப்பட்டு அடியிற்கொண்டு முடிகாறும் நோக்குவான் புதையிருளிரியல்போகப் பொன்றாழருவி மணிநெடுங்கோட்டுதயமென்னு மணிவரையுச்சி உலகுதுயில் பெயர்த்துத் தோன்றிய வளரொளி இளஞாயிற்றின் வனப்பொழிந்த திருவொளி மழுங்கியது நோக்கி என்னைகொல்லோ எம்பெருமாற்கு இற்றை வேறுபாட்டு வாட்டமென்னும். அதற்குச் செய்யுள் :—

நீடியபூந்தண்கழனிநெல்வேலிநிகர்மலைந்தா
ரோடியவாறுகண்டொண்சுடர்வைவேலுறைசெறித்த
வாடியல்யானையரிகேசரிதெவ்வர்போலழுங்கி
வாடியகாரணமென்னைகொல்லோவுள்ளம்வள்ளலுக்கே. (௨௨)

வண்டுறைவார்பொழில்சூழ்நறையாற்றுமன்னோடைவேல்
கொண்டுறைநீக்கியதென்னவன்கூடற்கொழுந்தமிழி
னொண்டுறைமேலுள்ளமோடியதோவன்றியுற்றதுண்டே
தண்டுறைவாசிந்தைவாடிடவென்னிதளர்கின்றதே. (௨௩)

தெவ்வாயெதிர்நின்றசேரலர்கோனைச்செருக்கழித்துக்
கைவாணிதியமெல்லாமுடனேகடையற்கவர்ந்த
செய்வாயயினெடுமாறன்பகைபோனினைந்துபண்டை
யொவ்வாவுருவமொளியுமென்னோவள்ளலுள்ளியதே. (௨௪)

இவ்வகை பாங்கன் வினவானாயிற் தலைமகற்குற்றது கடைப்பிடியாது விட்டானும். இவ்வகை கடைப்பிடித்து வினவிய பாங்கற்கு நெருநல் இவ்வகையார் ஒருவளைக் கண்டேற்கு என்னுள்ளம் பள்ளத்துவழி வெள்ளம்போல ஓடி இவ்வகைத்தாயிற்றென்று சொல்லும். அதற்குச் செய்யுள் :—

அலையாரரவின்குருளையணங்கவரிவழிந்து
துளையார்நெடுங்கைக்களிறுநடுங்கித்துயர்வதுபோல்
வலையார்முலையெயிற்றார்மன்னன்மாறன்வண்கூடலன்ன
சிலையாரொருவரணங்கைந்தாம்பாலினைக்கின்றதே. (௨௫)

அலையார்கழன்மன்னராற்றுக்குடியழலேறச்செற்ற
சிலையாரயிற்படைக்கோற்றவன்கூடலன்னாரொருவர்.

௨அ பாண்டிக்கோவை

மூலையாய்முகிழ்த்துமென்றோளாய்ப்படர்ணைத்துமுகத்தனங்க
சிலையாய்க்குனிந்துகுழலாய்ச்சுழன்றதென்சிந்தனையே. (உசு)
பொருநெருந்தானைப்புல்லார்தம்மைப்பூலந்தைப்பூவழித்த
பருநெடுந்திண்டோட்பராங்குசன்கொல்லிப்பணிவரைவாய்த்
திருநெடும்பாவையனையவள்செந்தாமரைமுகத்துக்
கருநெடுங்கண்கண்டுமீண்டின்றுசென்றதென்காதன்மையே. (உஎ)

"சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை - கான யானை யணங்கி யாஅங்-கிளையள் முளைவா ளெயிற்றள் -வளையுடைக் கையளெம் மணங்கியோளே." "எதுவ சிறுஅ ரேமமுறு நண்ப - புலவு தோழ கேளா யத்தை - மாக்கட னடுவ ணெண்ணாட் பக்கத்துப் - பகுவெண் டிங்கட் டோன்றி யாங்குக் - கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்-புதுக்கோள் யானையிற் பிணித்தற்று வெம்மே."

இவ்வாறு சொல்லக்கேட்ட பாங்கன் கழறும். கழறுதலென்பது அன்புடையார்மாட்டுத் தீயனகண்டால் அவ்வன்பிற் றலைப்பிரியாத சொற்களால் நெருங்குவது. கழறுமாறு; குண்டுமுருகுண்டாற் குன்றி வழியடையாகாதவாறுபோலவும் யானை தொடுவுண்ணின் மூடுங்கலம் இல்லதுபோலவுங் கடல்வெதும்பின் வளாவுநீரில்லதுபோலவும் எம்பெருமான் நின் உள்ளம் அறிவு நிறை யோர்ப்புக் கடைப்பிடியின் வரைத்தன்றிக் கைமிக்கோடுமேயெனின் நின்னைத் தெருட்டற்பால நீர்மையார் உளரோ நீ பிறரைத் தெருட்டினல்லது ? அப்பெற்றியாய நீ இன்னதோரிடத்து இன்னதோருருவுகண்டு என்னுணர்வு அழியப்போந்தேனென்றல் தக்கின்றெனும். அதற்குச் செய்யுள் :—

ஆய்கின்றதிந்தமிழ்வேந்தனரிகேசரியணிவான்
றோய்கின்றமுத்தக்குடைமன்னன்கொல்லியஞ்சூழ்பொழில்வா
யெய்கின்றவாயத்திளையோரிளங்கொடிகண்டென்னுள்ளந்
தேய்கின்றதென்பதழகியதோன்றோசிலம்பனுக்கே. (உஅ)
தண்டேர்நறைநறுந்தார்மன்னராற்றுக்குடைதளரத்
திண்டேர்கடாய்ச்செற்றகொற்றவன்கன்னிச்செழும்பொழில்வா
வண்டேர்நறுங்கண்ணியாயங்கொர்மாதர்மதிமுகங்
கண்டேதளரினல்லாரினியாரிக்கடலிடத்தே. (உகூ)

இவ்வாறு பாங்கன் கழறத் தலைமகனெதிர்மறுத்துச் சொல்லுஞ் சொற்கள் கழற்றெதிர்மறையென்பது. அதற்குச் செய்யுள் :—

விண்டார்படவிழிஞக்கடற்கோடியுள்வேல்வலங்கைக்
கொண்டான்குடைமன்னன்கூடற்குடவரைக்கொம்பொடொக்கும்
வண்டார்குழன்மடமங்கைமதர்வைமென்றேக்கமென்போற்
கண்டாருளரோவுலாயார்பிறவின்னகட்டுரையே. (௩0)

மண்கொண்டுவாழவலித்துவந்தார்தம்மதனழிந்து
புண்கொண்டநீர்மூழ்கப்பூலந்தைவென்றான்புகாரனைய
பண்கொண்டசொல்லம்மடந்தைமுகத்துப்பைம்பூங்குவளைக்
கண்கண்டபின்னையுமையீருரைத்தவிக்கட்டுரையே. (௩க)

"அம்ம வாழி கேளிர்முன் னின்று - கண்டனி ராயிற் கழறலிர் மன்னோ - நுண்டாது பொதிந்த செங்காக் கொழுமுகை - முண்டகங் கெழீஇய மோட்டு மணலடை-கரைப்பெயத் தலைஇய பிணரரைத் தாழை-யெயிறுடை நெடுந்தோடு காப்பப் பலவுடன் - வயிறுடைப் போது வாலிதின் விரைஇப்-புலவுப்பொரு தழித்த பூநாறு பரப்பி-னிவர்திரை தந்த வீர்ங்கதிர் முத்தம்-கவர் நடைப் புரவி கால்வடுத் தபுக்கு - நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை - வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தற்-போது புறங்கொடுத்த வுண்கண் - மாதர் வாண்முக மதைஇய நோக்கே." "இடிக்குங் கேளிர் நுங்குறை யாக - நிறுக்கல் லாற்றினோ நன்றுமற் றில்லா - ஞாயிறு காயும் வெயில்பயின் மருங்கிற் - கையி லூமன் கண்ணிற் காக்கும் - வெண்ணெ யுணங்கல் போலப் - பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே."

இவ்வாறு தலைமகனதாற்றாமையிற் கழற்றெதிர் மறுத்து ரைப்பக் கேட்ட பாங்கன், தானே தகாதனவற்றைத் தகாதென்றுண ரற்பாலான், யான் எம்பெருமாற்குத் தக்கதோ இவ்வாறுண்மெலிவ தெனவுந் தெருண்டிலன்; தெருளாவிட்டது தான்காணப்பட்ட உரு வும் அத்தன்மைத்தேயாம், அன்றாயிற் றெருளுமன்றேயெனக் கவ ன்றான். அவற்றிற்குச் செய்யுள் :—

வன்றாட்களிறுகடாயன்றுவல்லத்துமன்னவியச்
சென்றான்றருக்குழல்கூட்டியசென்னிசெம்பொன்னுலூபோ
னின்றானிறையுமறிவுங்கலங்கிநிலைதளரு
மென்றாற்றெருட்டவல்லாரினியாரிவ்விருநிலத்தே. (௩௨)

இவ்வகை நிந்தித்து அவனை இடனன்றிக் கழறினன், என் பார்க்கு மம்பிற கழற்றெதிர் மறுத்துச்சொல்லாதொழிந்து, சொல்லுதுஇறந்து

# பண்டிக் கோவை

33. பாண்டிக்கோவை.

35. பாண்டிக் கோவை.

ரு-ம். கொற்லபு பணிவரைவாய

பாண்டிக் கோவை

பட்டானெனினுஞ் செய்யலாவதில்லை, பெரியதோரிழுக்கஞ் செய்தே னென ஆற்றாளாயினாள். ஆற்றாளாயினாடாற்றாமை ஆற்றுவதோ ன்றனைப் பற்றும்; யான் இறந்துபட்டவிடத்து இவளை இஃதெய்து விக்கலாகாது, யானுளேனாவதே பொருளென இறந்துபடாளாய் நின்று எவ்விடத்து எத்தன்மைத்து நின்றாற் காணப்பட்ட உரு வென்னும். அதற்குச் செய்யுள்:—

வல்லிச்சிறுமருங்குற்பெருந்தோண்மடவார்வடிக்கண்
புல்லிப்பிரிந்தறியாதமந்தாரத்தெங்கோன்புனனாட்
டல்லித்தடந்தாமரைமலரோவவன்றண்ணளியார்
கொல்லிக்குடவரையோவன்னைகண்டதக்கொம்பினையே. (௧௩)

கண்டார்மகிழுங்கடிகமழ்தாமரையோகடையல்
விண்டார்விழுநிதிக்குப்பையும்வேழக்குழாமும்வென்று
கொண்டான்மழைவளர்கொல்லிக்குடவரையோவுரைநின்
றொண்டாரகலமெலிவித்தமாதருறைவிடமே. (௧௪)

என்பது கேட்டுக் கோடையாற் றெறப்பட்டு வாடிநின்ற சந் தனமரம் மழைபெற்றுத் தளிர்த்தாற்போலப் பெரியதோர் கழியுவகை மீதூர அவளை எய்தினான்போல இன்னவிடத்து இத்தன்மைத்து என்றாற் காணப்பட்ட உருவென்னும். அதற்குச் செய்யுள்:—

அடிவண்ணந்தாமரையாடரவல்குலரத்தமங்கை, கொடிவண்ண நுண்ணிடைகொவ்வைசெவ்வாய்கொங்கைகோங்கரும்பின், படிவண் ணஞ்செங்கோற்பராங்குசன்கொல்லிப்பைம்பூம்பொழில்வாய், வடிவ ண்ணவேற்கண்ணினாளென்னைவாட்டியவாணுதற்கே. (௧௫)

திருமாமுகந்திங்கள்செங்கயலுண்கண்செம்பொற்சுணங்கேர்
வருமாமுலைமணிச்செப்பிணைவானவன்கானமுன்னக்
குருமாநெடுமதிற்கோட்டாற்றரண்கொண்டதென்னன்கன்னிப்
பெருமான்வரோதயன்கொல்லிபஞ்சாரவப்பெண்கொடிக்கே.

கடித்தடம்விண்டகமலமுகங்கமலத்தரும்பேர்
பொடித்தடங்காமுலைபூவக்கைதத்தெம்மன்னர்பூவழிய
விடித்தடங்காவருமேர்நியகோன்கொல்லியீர்ம்பொழில்வாய்
வடித்தடங்கண்மலரவென்னைவாட்டியவாணுதற்கே. (௧௬)

நிணங்கொள்புலாவுண ங்கனின் றுபுள்ளோப்பமலைக்கீடாகக்
கணங்கொள்வண்டார்த்துலாங்கன்னிநறுஞாழல்கையி லூன்றி
மணங்கமழ்பூங்கானன் மன்னிமற்றாருண்டோ
ரணங்குறையுமென்பதறியேனறிவேனலடையேன்மன்னே.

இவ்வாறுணர்த்தப்பட்ட பாங்கன் நீ இனையையாகல் என்னி னுவதுண்டேற் காண்பலென்று தலைமகனையாற்றுவித்து அவன்சொன்ன இடநோக்கிச் செல்வான். இது தலைமகனிலைமை.

இனித் தலைமகளது நிலைமை: பிற்றைஞான்று தன் ஆயவெள் ளத்தோடும் வந்து தான் விளையாடுமிடம் புகுதலுடையாள், நெருநலை நானால் நின்னிற்பிரியேன் பிரியின் ஆற்றேனென்று சொல்லினுன் ஆயத்துள்ளே வருவான்கொல்லோ வென்னும் பெருநாணினுனும் ஆற்றாமையான் இறந்துபட்டான் கொல்லோ வென்னுந் தன்னச்சத் தினுனும் மீதூரப்பட்டுத் தன்றன்மையளன்றித் தன்னுயவெள்ளம் புடைபெயருமாறு புடைபெயர்ந்து வருகின்றாள், நெருநலைநானாற் தலைமகனை வழிபட்ட இடமெதிர்ப்பட்டுத் தலைமகனைக் கண்டாளே போன்றாள். என்னை? இனியாரோடு தலைப்பெய்த இடங்கண்டா லும் அவ்வினியாரைக் கண்டாலேபோல்வது உலகத்துத்தன்மை. அவ்வாறு நிற்ப, ஆயங்களும் நெருநலைநானாற் பிரிந்தாற்போலத் தழைவிழையத்தக்கன தொடுத்துமென்றுங், கண்ணி தண்ணறு நாற் றத்தன செய்துமென்றும், போது மேதக்கனகொய்துமென்றும், இவ் வாறு விளையாட்டு விருப்பினுற் பிரியும். பிரியநின்றாள் எப்பெற்றி நின்றாளோவெனின், ஆயத்துள்ளே வருவான்கொல்லோ வென்னு நாண் நீங்கிற்று. என்னை? ஆயங்கள் நீங்கினமையான். இனி இறந் துபட்டான்கொல்லோவென்னும் அச்சத்தின்கண் மீதூரப்பட்டு நின் றாள். நின்ற நிலைமைக்கட் பாங்கன் சென்று அவள் தன்னைக்காணு மைத் தான் அவளைக்காண்பதோர் அண்மைக்கட் காணும். கண்டு, இவ்விடமே அவனுற் காணப்பட்ட இடமும் இவ்வுருவே அவனுற் காணப்பட்ட உருவுமெனத் துணியும். அதற்குச் செய்யுள் :—

கண்டார்தலர்கண்ணியன்னறன்னுள்ளாந்தளர்வுசெய்த
வண்டார்குழலையேயிவன்மானீர்மனற்றிமஞ்சை
யின்டாருடற்றுன்றமெறிவிழிகட்சுழுதறங்கக்
கண்டான்வெறிபிலிதுவேயவன்சொன்னகார்ப்புனமே. (௩௮)

[illegible]. பாண்டிக்கோவை.

39. பாண்டிக் கோவை

[illegible]

[illegible]

சின்மொழிந்துசெருவிடைத்தோற்றதெவ்வேந்தர்கள்போய்க்
கனவும்படிகடையற்செற்றவேந்தன்கருங்குழலார்
மனமும்வடிக்கண்ணுந்தங்குமந்தாரத்துமன்னன்கன்னிப்
புனமுமிதுவிதுவேயவன்றான்கண்டபூங்கொடியே. (௩௯

என நினைந்துநின்று இவ்வுருவினைக் கண்ட எம்பெருமான் ஆற்றுதற்குக் காரணமென்னை! பெரியார்க்கே யாகாதே! அரியன தாங்கற்று வல்லன் அவனாதலான் ஆற்றினான். பிறராயின் இறந்துபடும். இறந்துபடாது என்காறும் வந்த இருந்துணைப் பெருந்தக்காளை யான் பெரியதோர் இடனன்றிக் கழறினேனென நினைக்கும். அதற்குச் செய்யுள்:—

இருநெடுந்தோளண்ணலேபெரியான்வல்லத்தேற்றதெவ்வர்
வருநெடுந்தானையைவாட்டியகோன்கொல்லிமால்வரைவாய்த்
திருநெடும்பாவையனையவள்செந்தாமரைமுகத்த
கருநெடுங்கண்கண்டுமாற்றிவந்தாமென்னைக்கண்ணுற்றதே. (௪௦)

பெரியநிலைமையவரேபெரியர்பிறையெயிற்றுக்
கரியகளிறுந்திவந்தாரவியக்கடையல்வென்ற
வரியசிலைமன்னன்யான்றேர்வரோதயன்வஞ்சியன்னா
ளரியமலர்நெடுங்கண்கண்டுமாலண்ணலாற்றியதே. (௪௧)

மற்றிவ்வகையுஞ் சிந்திக்கும்.

துறைமேயவலம்புரிதோய்ந்துமணலுழுததோற்றமாய்வான்
பொறைமலிபூம்புன்னைப்பூவுதிர்நுண்டாதுபோர்க்குங்கான
னிறைமதிவாண்முகத்துநேர்கயற்கண்செய்த
வுறைமலியுய்யாநோயூர்சுணங்குமென்முலையேதீர்க்கும்போலும்.

"மணங்கமழ் குழலிவள் வடிக்கண் செய்த மம்மர் வெந்நோய் கணங்கணிவன முலையல்லது தீர்க்கலா" என இவ்வகைநினைந்து ஆற்றானும் இறந்துபடானாயினான், அவனையும் அஃதெய்துவிக்குந்திறமென்னை கொல்லோ வென்பதனான் ஆற்றியுளனாய தலைமகனைச் சென்றெய்தியான் கண்ட இடம் மேதக்கதேகாண். "நீர்வோ ரன்ன கொழுநிழற்று அய்-நிலவோ ரன்ன வெண்மணலொழுகி-வண்டுந் தேனும் வரிக்கடைப் பிரசமுங்-கொண்டு புணர நரம்பெடனமூரன்று- விழைவு விடுத்த விழுமியோரையும்- விழைவு தோற்றுவிக்கும்" டன்பிற்றென்றாய். அதற்குச் செய்யுள்:—

மின்னேரொளிமுத்தவெண்மணன்மேல்விளைநாறுபுன்னைப்
பொன்னேர்புதுமலர்த்தாய்ப்பொறிவண்டுமுரன்றுபுல்லா
மன்னேரழியமணற்றிவென்றான்கன்னிவார்துறைவாய்த்
தன்னேரிலாததகைத்தின்றியான்கண்டதாழ்பொழிலே. (௪௨)

களிமன்னுவண்டுளர்கைதைவளாய்க்கண்டல்விண்டுதண்டேன்
துளிமன்னுவெண்மணற்பாயினிதேசுடரேர்மருமா
னளிமன்னுசெங்கோலதிரியனாற்றுக்குடியுள்வென்ற
வொளிமன்னுமுத்தக்குடைமன்னன்கன்னியுயர்பொழிலே. (௪௩)

தேனுறைபூங்கண்ணிச்சேரலர்சேவூரழியச்செற்ற
வூனுறைவைவேலுசிதன்றன்வையையுயர்மணன்மேற்
கானுறைபுன்னைப்பொன்னேர்மலர்சிந்திச்சடிகமழ்ந்து
வானுறைதேவருமேவும்படித்தங்கொர்வார்பொழிலே. (௪௪)

என்றுசொல்லி, நீயாகாதே இவ்வகை மேதக்கன வெய்தற்பாலவெனத் தலைமகனும் அவ்விடம் நோக்கிச்செல்லும். சென்றவிடத்துத் தனியளாய்நின்ற தலைமகளை யெதிர்ப்படும். எதிர்ப்படவே, தலைமகள் காணும். காணவே, ஆற்றாமையான் இறந்துபட்டான்கொல்லோவென்னும் அச்சநீங்கும். நீங்கத், தன்றன்மையளாயினாள். தன்றன்மையென்பது நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்னு மிவற்றோடுகூடிநிற்பது. அத்தன்மையளாய் நிற்பத் தலைமகன் தலைமகளது குறிப்பன்றிச் சாரலாகாமையின் ஆற்றானாயினான். ஆற்றாமையாவது பிறிதெவ்வுணர்வு மின்றி அவ்வாற்றாமைதானேயாவது. அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப்பற்றும். ஆற்றுவது பிறிதின்மையின் ஒரு சொற்சொல்லும். என்சொல்லுமோவெனின், நின்னையான் இப்பொழிலுறை தெய்வமென ஐயுறுவல், அல்லவாயின் வாய் திறவாய். ஆவிசென்றாற் பெயர்ப்பதரிதன்றோ வென்று இவ்வகைபோல்வன சொல்லும். அதற்குச் செய்யுள் :—

மெலிவெயன்றுளைவெண்மாத்துவென்றான்கன்னிவீழ்துறைவாய்
தேவியென்றுநின்னையானினைக்கின்றதுசேயரிபாய் [ந்
காவிவென்றாயகண்ணாயல்லையேலொன்றுரைட்டேயா
யாவிசென்றாற்பெயர்ப்பாரினியாரிவ்வவிடத்தே. (௪௫)

௬௨. பாண்டிச் சேரவை

௬௩. பாண்டிக். (திருவெண்ணெய்நல்லூர்)

[illegible]
அன்பளிப்பு

[illegible]

திரையுறைவார்புனற்சேலூர்ச்செருமன்னர்சிரழித்த
வுரையுறைதீந்தமிழ்வேந்தனுசிதனொண்பூம்பொதியில்
வரையுறைதெய்வமென்றேற்கல்லையேயுன்றன்வாய்திறவாய்
விரையுறைகோதையுயிர்செல்லின்யார்பிறர்மீட்பவரே. (௪௬)

என்றான், தலைமகனேயெனின் அல்லன்; தலைமகனிடனாகப் பிறந்த ஆற்றாமையதுவுந் தலைமகனெனவேண்டும். அச்சொற்கேட்டலும் இறந்துபட்டானெனக் கருதிக் கவன்று நோக்கினாள்; நோக்கி உண்மை கண்டாள். கண்டாட்குக் கெடுத்துத் தேடு நன்கலம் எடுத்துக்கொண்டாற்போலப் பெரியதோர் நாணின்மைசெய்தேனென ஆற்றாளாயினாள். யான்முன்னிற்பவும் ஆற்றானாயினான் எம்பெருமான் எனதாற்றாமைகண்டவிடத்து இறந்துறவாமென ஆற்றாமைநீங்கும். நீங்க, நாண்வந்தடையும்; அடையவே, மறைவதுகாணாது மாதுபடு நோக்கி நன்மணிக் காந்தள்மெல்விரலாற் போதுபுனைநெடுங்கண் புதைத்தாள். புதைப்ப, இனிச்சார்வாற்றுமென நினைந்து நின்கரு நெடுங்கண்புதைத்தது இவர்குப் பெரியதோர் ஆற்றாமையைச்செய்யுமென்றாகாதே? அவற்றின்பரத்தனவோ சுரும்புடைக்கோதை நின் கரும்புடைத்தோளென்னும். அதற்குச் செய்யுள்:—

அரும்புடைத்தொங்கற்செங்கோலரிகேசரிகூடலன்ன
சுரும்புடைக்கோதைநல்லாயிவற்குத்துயர்செய்யுமென்றான்
பெரும்புடைக்கண்புதைத்தாய்புதைத்தாய்க்குநின்பேரொளிசேர்
கரும்புடைத்தோளுமன்றேவெனதுள்ளங்கலக்கினவே. (௪௭)

தேந்தண்பொழிலணிசேலூர்த்திருந்தார்திறலழித்த
வேந்தன்விசாரிதன்றெவ்வரைப்போன்மெலிவிக்குமென்றான்
பூந்தடங்கண்புதைத்தாய்புதைத்தாய்க்குன்பொருவில்செங்கேழ்
காந்தள்விரலுமன்றேவெம்மையுள்ளங்கலக்கினவே. (௪௮)

சொல்லிற் சொல்லெதிர் கொள்ள யாழநின் - திருமுக மிறைஞ்சி நாணுதி கதுமெனக் - காமங் கைமிகிற் றாங்குத லெளிதோ - கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப் - புலிவிளை யாடிய புலவுநாறு வேழத் - தின்றலை மருப்பேய்ப்பக் கடைமணி சிவந்த - கண்ணே கதுவ வல்ல நண்ணா - ராண்டலை மதில ராக முரசுகொண் - டோம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன் - பெரும்பெயர்க் கூடல் - கரும்புடைத் தோளு முடையவா லணங்கே."

என்பது சொல்லிக் குழலுங் கோதையுந் திருத்துவானாகச் சாரும். இது பாங்கற்கூட்டமாமாறு.

இனிப் பாங்கிலன் தமியோளிடந் தலைப்படுமாறு:—யான் இவளையெய்திற்று விதியானே; இன்னும் அவ்விதி கைதருமேற் காண்ப லெனப் பாங்கற்குச் சொல்லாதே தான் முன்னெதிர்ப்பட்ட இட நோக்கிச் செல்லும். அதற்குச் செய்யுள்:—

ஆமாறறிபவர்யாரேவிதியையந்திந்தமிழ்நர்
கோமான்குலமன்னன்கோனெடுமாறன்கொல்லிச்சிலம்பி
லேமாண்சிலைநுதலேழைமுன்னேயெதிர்ப்பட்டணைந்த
தூமாணிரும்பொழிலேயின்னும்யான்சென்றுதுன்னுவனே. (௪௯)

பெரும்பான்மையுமறிதற்கரிதாம்விதிபேணிகில்லாப்
பொரும்பாரரசரைப்பூலந்தைவாட்டியகோன்பொதியிற்
கரும்பார்மொழிமடமாதனைக்கண்ணுற்றமுன்னணைந்த
சுரும்பாரிரும்பொழிலேயின்னும்யான்சென்றுதுன்னுவனே. (௫௦)

என நெருநலைநாளால் அவளைக் கண்ணுற்ற பொழிலே புக்கான். புக்காற்கு, அப்பொழில் பெரியதோர் சார்வாயிற்றாக, ஆற்றாமை நீங்கினான்; என்னை? இனியாரோடு தலைப்பெய்த இடங்கண்டாலும் அவ்வினியாரைக்கண்டாலே போலும் என்னும். அதற்குச் செய்யுள் :—

துனிதானகலமண்காத்துத்தொடுபொறியாயகெண்டை
பனிதாழ்வடவரைமேல்வைத்தபஞ்சவன்பாழிவென்ற
குனிதாழ்சிலைமன்னன்கூடலன்னாளதுகூடலைப்போ
லினிதாயெனதுள்ளமெல்லாங்குளிர்வித்தநீர்ம்பொழிலே. (௫௧)

தேர்மன்னுதானைபரப்பித்தென்சேவூர்செருமலைந்த
போர்மன்னர்தம்மைப்புறங்கண்டநாணியபூங்கழற்கா
லார்மன்னுவேலரிகேசரியந்தண்புகாரனைய
வேர்மன்னுகோதையைப்போலினிதாயிற்றிவ்வீர்ம்பொழிலே (௫௨)

என்று முன் பாங்கற்கூட்டத்துச் சொன்னவாறே நின்ற தலைமகளை ஆங்குச்சொன்னவாறே சென்று தலைமகன் புணர்வது. இது பாங்கிலன் தமியோளிடந் தலைப்படுமாறு. பாங்கற்கூட்டம் நீங்கின்,

51, பாண்டிக் கோவை.

இடந்தலைப்பாடு நிகழாது; இடந்தலைப்பாடு நிகழின், பாங்கற்கூட்டம் நிகழாது ; என்னை ? அந்துணை எளியள் அல்லாளாகலான். அஃதே யெனின், பாங்கிலன் தமியோளிடத் தலைப்படலும் பாங்கனோரிற் குறிதலைப்பெய்தலுமென்று எழுந்தாற்றுச் சூத்திரம் ; என்னை ? இடந்தலைப்பாடு தெய்வப்புணர்ச்சியோடு ஒக்குமாகலான் : அஃதே, அங்ஙனஞ் சொன்னானேயெனினும் மொழிமாற்றிக்கொள்க வென்பது. அது பொருந்தாது; மொழிமாற்றுதல் என்பது செய்யுளிடந் தவாய் செய்யலாகாதவழிச் செல்வது. அவ்வாறு செய்யுஞ் சூத்திரம் இனிதாய்க்கிடப்ப மொழிமாற்றுச் சூத்திரமாகச் செய்யல்வேண்டுமோ என்றார்க்குப், பெரும்பான்மையும் பாங்கனானுமென்ப சிந்திக்குஞ் சிறுபான்மை விதியினானுமென்பது சிந்திக்குமாகலாற் சிந்தித்தவாற்றானே சூத்திரஞ்செய்யப்பட்டது ; மொழிமாற்றுச் சூத்திரம் அன்றென்பதூஉம் உள்ளதூஉம் உலகத்தோர் இடுக்கணுற்றால் விதியானே நீருமென்றிரார் முன்னே நிர்த்தற்குச் சுற்றத்தாரையும் நட்டாரையும் நினைப்பாராகலானும் அவ்வாறே சொல்லப்பட்டது. அஃதே யெனின், புறத்தியாராலும் உணர்ந்தாருளரொன்பது. உணர்ந்தலரான்று இவளிறந்துபடுமென்னுங் கருத்துடையான் பிறரைனான்றே சென்று பாங்கற்குணர்த்தற் பாலனேவெனின், குற்றங் குணமென்பது தெருளாதுணர்த்துமென்னும் ஒருவன். அது பொருந்தாது. அங்ஙனந் தெருளாதுணர்த்திற் பாங்கற்கே உணர்த்தக்கடவனோ வழிபோவார்க்கு உணர்ந்த அமையாதோவென்பது. மற்றென்னோவெனின், தான் உணர்ந்தானன்றே, இவ்வொழுக்கத்தினைத்தான் உணர்ந்ததனோடொக்குமன்றே இவன் உணர்ந்ததென்று அவனைத் தன்னின்வேறல்லவென்று கருதினமையானுமையும்.

இனிப் பாங்கனாற் குறிதலைப்பெய்தலும் என்றொருமைப்படச் சூத்திரஞ்செய்யாது பாங்கனோரினென்று பன்மைப்படக் கூறிய தெற்றிற்கு, அவனொருவனேயோவெனின் ; பாங்கன் பாரப்பானாகலிற் பன்மைவாசகத்தாற் சொன்னானென்பது. அல்லதூஉம், இருமுதுகுரவராலும் இவனை எம்போலக் கொண்டொழுகென்று தலைமகற்குக் காட்டிக்கொடுக்கப்பட்டான் பாங்கனென்பதூஉம், நீயும் எம்போலக் கொண்டொழுகுவாயென்று தலைமகனைப் பாங்கற்

ருக் காட்டிக்கொடுக்கப்பட்டா னென்பதூஉம் போதலைவேண்டி இவ்வாறு பன்மைப்படச்சொன்னானென்பது. அஃதேயெனின், இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபிற்றைஞான்று இவள்வேறுபாடு கண்டு தாய் இற்செறிக்கில் என் செய்யுமோவெனின்,பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களோடு பாங்கன் சென்று வரைந்தெய்துவிக்கும்.அங்ஙனங்கிடந்ததேவிதியென்னின்,அன்று,இவ்வாறாற்புணர்தன்முறைமையாக்கும் விதியெனிற் தாய்க்குப் புலனாகாமை கொள்ளுமென்பது. அஃதேயெனின், ஆயங் கழிக்கானலிடையேகொண்டு புகுதாது மற்றோர்கானலிடமேகொண்டு புக்கவிடத்துத் தலைமகன் குறிபிழைக்கும் பாங்கன்சென்ற செலவும் பிழைக்கும். இவையெல்லாமாம்பிறவெனின் அதுவன்று, அவ்வாறுபடினும் வரைந்துபுகும்; அதுவன்றிப் பிற்றைஞான்று இக்கூட்டம்நிகழ்விப்பான் நின்றவிதி பிறிதோர்கானலிடங்கொண்டுபுக உள்ளம் பிறப்பிக்குமோவென்பது. அஃதேயெனின்,இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்றுபாங்கன்தலைமகனைக்கண்டு எற்றினானாயிற்று நினக்கு இவ்வேறுபாடென்று வினவினவாறுபோல அன்றேயானும் பிற்றைஞான்றேயானுந் தலைமகளது வேறுபாடுகண்டு நினக்கு இஃதெற்றினானாயிற்றென்றுதோழிவினவாமைக்குக் காரணமென்னையோவெனின், தலைமகளது வேறுபாட்டை விதி தோழியின் புலனாகாமைகொள்ளுமென்பது. ஆயிற் தலைமகன் வேறுபாட்டையும் பாங்கற்குப் புலனாகாமைகொள்ளற் பாற்றது, அஃதன்றாதற்குக் காரணங்கூறற் பாற்றெனின், விதிக்குக் காரணங் கூறற்பாற்றன்றென்பது; காரணங்கூறினும் பாங்கற்குப் புலனாயதனானாய பயனுண்டு. அக்கூட்டம் பாங்கனறிந்து வினவ முடியும்; தோழி தலைமகண்மாட்டு வேறுபாடுகண்டறிந்து வினவப் பாங்கற்கூட்டம்முடியாது; தோழிதன்னானாவதும் இல்லை. இது காரணமென்பது. அஃதேயெனின், ஆங்கவிரண்டே தலைப்பெயலென அமையும், மரபென்றது எற்றிற்கோவெனின், தலைப்பெயற்கு இலக்கணமென்றவாறு. மரபெனினும் இலக்கணமெனினும் எல்லாம் ஒரு பொருட்பன் மொழியென்றவாறு. (௩)

௫. அவ்வியல் பல்லது கூட்டக் கூட
லெவ்விடத் தானுங் களவிற் கில்லை.

என் - னின், இந்நூலகத்துக் களவினது இலக்கணத்தையுங் கற்பினது இலக்கணத்தையுந் தொகுத்துணர்த்துதனுதலிற்று. சூத்திரக்கிடக்கை நான்குவகைப்படும், ஆற்றொழுக்குச் சிங்கநோக்குத் தவளைப்பாய்த்துப் பருந்துவீழ்க்காடென. அவற்றுள் ஆற்றொழுக்கென்னுஞ் சூத்திரக்கிடக்கை ஆற்றினீர் தொடர்பறாது ஒழுகுமாறு போலச் சூத்திரங்களுந் தம்முள் இயைபுபடக் கிடப்பது. சிங்கநோக்கென்பது சிங்கம்நோக்குமிடத்து முன்னையாரையும் பின்னையாரையும் நோக்குவதுபோல இறந்ததனோடும் எதிர்வதனோடும் இயைபுபடக்கிடப்பது. தவளைப்பாய்த்தென்பது தவளைபாய்கின்று இடைநிலங்கிடப்பப்பாய்வதுபோலச் சூத்திரம் இடைவிட்டுப்போய் இயைபுகொள்வது. பருந்தின் வீழ்க்காடென்பது பருந்துவீழ்கின்று நடுவேவிழுந்து தான் கருதினபொருள் கொண்டுபோம், அதுபோல இதுவுந்தான் கருதிமுடிக்கின்றபொருளை முடித்துப்போம் இயையின்றியே யென்பது. இஃது அவற்றுட் சிங்கநோக்கென்பது; என்னோகாரணமெனின், இறந்தபாங்கற்கூட்டத்தினையுநோக்கி வருகின்ற தோழியிற்கூட்டத்தினையுங் கற்பினையுமெல்லாம் நோக்கினமையினென்பது. (இ - ள்) அவ்வியல்பல்லது = மேற்சொல்லப்பட்ட இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த இயல்பல்லது: கூட்டக்கூடல் = ஒருவரிடைநின்று புணர்ப்பாருண்டாகப் புணர்தல்: எவ்விடத்தானுங் களவிற்கில்லை = எந்நேரத்துக்கண்ணுங் களவெனப்பட்ட ஒழுக்கத்திற்கில்லை. எ-று. எனவே, உலகினுள் ஒருவனோடொருத்தியிடைநிகழும் ஒழுக்கமன்று உலகினுட் கூட்டவும் நிகழ்ந்து கூட்டாமையும் நிகழ்தலுடைமையால்; இது புலவரால் நாட்டப்பட்ட ஒழுக்கமென்பதனை அறிவிக்கப்பட்டதென்பது. கூட்டக்கூடல் எவ்விடத்தானுங் களவிற்கில்லையெனவே கூட்டாமைக் கூடலே உரியதென்பதாம். தலைமகன் உலாப்போயின இடத்துப் பார்ப்பதுமாட்டுப் பிரிந்தானென்று கருதி ஒரு சிவப்புண்டாம். அச்சிவப்பு நீங்கி வாயில்கள் கூட்டவே கூடுமென்பது. அஃதேயெனின் இஃதன்றே பெருந்தொகைப்பாட்டினுட் கூர்முள் முள்ளி கூட்டாமைக்கூடித்தெனின் அதுவுங் கூட்டவே கூடிற்று. எவ்வாயிலாற்

கூடினானோவெனின், ஆற்றாமைவாயிலாற் கூடினான். கூடினவாறு அதனகத்துக் கண்டுகொள்க. அஃதேயெனின், களவினாற்கூட்டக் கூடலில்லையென்றதெற்றிற்கு, அதுவும் ஆற்றாமை கூட்டக்கூடுக வென்னுமோவெனின், அங்காற்றாமை கூட்டுமேயெனினும் வாயிலிலக்கணமின்று. இங்குவாயில் இலக்கணமுடைத்து; என்னை? வாயில்களும் அவனது பொறாமையை நீக்குவதன்றேசெய்வது. இதுவும் அவளது பொறாமையை நீக்கினமையின் அமையாதோவெனின், அமையாது; இங்கு வாயிலிலக்கணமுடைத்தாகலின் அமையுமென்பது.

அவ்வியல்பல்லது கூட்டக்கூடல் களவிற்கில்லையென அமையும். எவ்விடத்தானும் என்றதெற்றிற்கோவெனின் உணர்த்த உணர்தல் ஓரிடத்துண்டென்றற்குச் சொல்லினார். ஆருணர்த்த ஆருணர்பவோவெனின், தோழியுணர்த்தலை தலைமகளுணர்த்தத் தலைமகனுணருமென்பது. அஃதாமாறு பகற்குறிவந்தொழுகாநின்ற தலைமகள் புணர்ச்சியிறுதிக்கண் ஒருநாட் தலைமகளைக் கோலஞ்செய்தான். செய்ய, அவள் இறப்பநாணினாள்; நாணத், தலைமகன் கருதுவான், யான் செய்கின்றது இயற்கைக் கோலமல்லதுபோலும் என்றும் இவ் வேறுபடுகின்றதென உணர்ந்து அவளை ஆற்றுவித்தற்கு நின்றோழி கோலஞ் செய்யுமாறேசெய்தேனெனச் சொல்லும். சொல்ல, ஒக்கும் என்றோழியோ தலைப்பெய்தியுடையர் போலுமென உணர்வானாவது. அவ்வாறு உணர்ந்தான் பெருநாணினனாகலான் இறந்துபடானோவெனின், இறந்துபடான் இவளைத்தன்னின் வேறன்றிக் கருதுமாகலின்; கருதுமெனின், இவ்வொழுக்கந்தன்னை உணர்த்த அமையாதோவெனின் உணர்த்தான், யான் காவற்குற்றப்பட்டேனெனத் தோழிகலனுமாகலான். அதனாற்பயனென்னோவெனின், நெடுங்காலமொழுகக்கருதுவான் யான் பிரிந்தபோது இவளை ஆற்றுவித்துக்கொண்டிருக்குமென்பதனானும்; ஒருநாள் இதனையறியும், அறிந்தக்காற் கதுமென ஆற்றாளாங்கொல்லோவென்பதனானும், இவ்வாறுணர்த்த ஆற்றுதற்குக் காரணமாமென்பதனானும் உணர்த்தும். இதுபொருந்தாதென்ப ஒருசாரார், என்னை? பகற்குறிக்கண் இது நிகழ்ந்தனையும் நடவாது. இவ்வகைவந்த சான்றோர் செய்யுளும் இல்லை. இதனானே எவ்விடத்தானுமென்பது நன்றுமறுத்தற்குச் சொல்லப்பட்டது, மிகையன்றென்பது. கூட்டக்கூடல் களவிற்கில்லையென்றிராற் பாங்கற்கூட்டத் தோ

G. 6407

ழியிற் கூட்டமென்று பெரிட்ட தெற்றிற்கோவெனின், அவர் துணையாயினமையின் அவ்வாறு சொல்லப்பட்டது. துணையாயினுளைக் கூட்டினுளென்னுமோவெனின், என்னும்; கூடுமிருவரும் அக்கருத்தினரல்லவென்பது. (௪)

௫. புணர்ந்த பின்றை யாங்கன மொழுகாது
பணிந்த மொழியாற் றோழி தேஎத்
திரந்துகுறை யுறுதலுங் கிழவோன் மேற்றே.

என் -னின், டாங்களுறுதல் தமியாளை இடந்தெதிர்ப்பட்டாதல் புணர்ந்த தலைமகன் அதன்பின்னை தெருண்டுவனாதறலை; அல்லாவிடின், இவ்வாறொழுக என்று அவனொழுக்குக்திறமுணர்—ற்று. (இ-ள்) புணர்ந்தபின்றை=பாங்களுறுனுந் தமியாளை இடந்தெதிர்ப்பட்டாலும் புணர்ந்தபின்றை: ஆங்கனம் ஒழுகாது=பிற்றைஞான்றும் அப்பெற்றியே ஒழுகாது: பணிந்தமொழியான் = இழிந்தசொற்களான்: இழிந்தசொல்லென்பது வாய்பாட்டின்றுமை நோக்கிப் பணிந்தமொழி யெனப்பட்டது. பணிந்தமொழியன்றே இத்தலைமைக்கல்ல இக்கண்ணிதல்லவென்பது. இங்ஙனங் கையுறை பாராட்டிச்சென்றுவிற்றல் தனக்குத்தகாது இழிந்தார்க்கன்றே அஃதுரியதென்பது. தோழிதேஎத்து=தோழிமாட்டு: இரந்து குறையுறுதலும் கிழவோன்மேற்றே= இரத்தலுங் குறையுறுதலுஞ் செய்துநிற்றல் தலைமகற்குரித்து. எ-று. இரத்தலென்பது குறையுடையார் செய்யுஞ் செய்கைசெய்தொழுகுவது. குறையுறுதலென்பது இக்குறையின்றியமையாளென எப்படப் பகத்தொழுகுதல்; அஃதேயெனின், அவளால் இக்குறை முடியுமென்றிரக்குமோ முடியாதென்றிரக்குமோவெனின்; முடியுமென்றிரக்குமேயெனின் இவளை இகழ்ந்து மதித்தானும், தோழியென்டாள் ஏற்றேவல் மகள், அவளாலெய்தலாமென்று கருதினமையானென்பது. இகழ்ந்து மதிப்பவே, அருமையும் பெருமையுங்காவலுமுடையள், இவளை எத்திறத்தானுமெய்துவதரிதென்று கருதினுனென்பதனோடு மாறுகொளுமென்பது. இனி முடியாதென்றிரக்குமேயெனின், இரத்தலனேபயமின்று. ஒருவரால் ஒருகருமம் ஆகாமையறிந்தே அவருழைச்சென்று அக்கருமத்திற்கு முயல்வார் தெரியறியாதாரன்றேவென்பது. மற்றென்னேவெனின், முடியும்முடியாதென்று சே

னூக்கிக்கொண்டு இரப்பானல்லன், தனதாற்றலை மீதூரப்பட்டிரக்குமென்பது. அஃதேயெனின், இவளால் முடியும் முடியாதென்று கருதானாகலாற் பிறராலும் முடியும் முடியாதென்று கருதானாகல் வேண்டும் ஆகலாற் பிறரையுமிரக்க அமையாதோவெனின், அதுவன்று, இது முடியுமொன்று இவளாலே முடிவதாய்க் கிடந்ததாகலான் அவ்விதி இவளுழையே செல்லுமுளம் பிறப்பிக்குமென்பது. அதன்றே உலகத்தார்க்குப் பண்பின்வழியே ஊக்கமிகுமென்பது.

இதனை எப்பெற்றிகருதுமோ இவளெனின் ஐயப்படுகிற்கும். இவனொருகுறையுடையான்போலும், அக்குறையின்றி யமையான் அஃதென்மாட்டதென்று கருதுமேலாயின் இறப்பவும் பெருந்தன்மையனாகலின் இறப்பவுஞ் சிறியேனுழைவேண்டுங் கருமமலனன்றே. அதனால் என் கண்ணதெனவுமாகாது, ஆரறிவார் சிறியாராற் பெரியார்முடிக்குங் கருமங்களுமுள, அதனால் என்கண்ணதும் ஐயமேயாம். இனி எம்பெருமாட்டி கண்ணதுவென்று கருதுமேலாயின் இவளொருவராற் சுட்டவுஞ்சொல்லவும் படுந்தன்மையாளல்லளாகலான் அவள் கண்ணதெனவுமாகாது. ஆர்வோர்தாமும் அவளினைப் பெருந்தன்மைய ராகலான் அவள் கண்ணதெனவும் ஐயமேயாம். இனி இவ்வாயத்துள் ஒருவர் கண்ணதே கொல்லோவெனவும் ஐயமேயாம். பேராராய்ச்சியளாகலாற் கதுமெனத் துணியாளன்றே ஒன்றன் திறத்தின். இனி அருள்சாரணமாகக் கொல்லோ இத்தழையுங் கண்ணியுங் கொண்டு வருவதெனவுமாகாது ஆற்றாத வியல்பினனாய் வருமாதலானென்பதன் கண்ணும் ஐயமேயாம் என்பது. அதற்குச் செய்யுள் "முன்னுறவுணர்தல் குறையுறவுணர்தல்" என்னுஞ் சூத்திரத்துட் காட்டுதும். அஃதேயெனின், இவனை அவட்குச் சிறந்தமை அவளறியுமாறென்னை பிறர்சொல்லினுமில்லையாலோவெனின், அறிந்தாளன்றே இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபின்னர்த் தன்னை அவள் காணுமைத் தானவளைக் காண்பதோராணுமைக்கண் நின்றானாக மற்றையாரெல்லாந் தலைமகட்குச் செய்யும்வழிபாடும் இவன் விசேடத்தாற் செய்யும்வழிபாடும் எல்லார்க்குந் தலைமகளருளிச்செய்யும் அருளிச்செய்கையும் இவட்கு விசேடத்தாற் செய்யுமருளிச்செய்கையுங் கண்டமையான் இவளா மிவட்குச்சிறந்தாள் இதுவும் எனக்கோர் சார்பென் றுதிரையுணர்ந்தான்; உணர்ந்தமையான் அவளுழையே செல்லுமென்.

பது. அஃதேயெனின் இவளுழைச் செல்கின்றாயங்கள் ஐயுறாவோ வெனின், எங்ஙனம் ஐயுறும், தழையுங் கண்ணியுங் கோடற்பொருட்டாக வேறோரிடத்துத் தனியளாய் நின்ற நிலைமைக்கட் செல்லுமென்பது.

அஃதேயெனின், இரந்துறுதல் கிழவோன் மேற்றேயென்றது குறையுறுதலென்பது எற்றிற்கோவெனின், இரத்தலென்பது குறையுடையார் செய்யுஞ் செய்கை. அவள் இன்னளாம் ஐயளாய் நிற்பத் திறந்து செல்லுமோவெனின், செல்லான் விதியேகொண்டுசென்று தலைப்படுவிக்குமென்பது. அஃதேயெனின் குறையுறுதலென்பது இக்குறையின்றியமையாளென்பது படப் பசந்தொழுகுவது. அஃதேயெனின், இரந்து குறையுறுதலென அமையாதோ இரந்து குறையுறுதலுமென்றும்மைகொடுத்த தெற்றிற்கோவெனின், தெருண்டு வரைதல் சிறப்புடைத்து தெருளானாயினிவ்வாறொழுக வெனற்குச்சொல்லப்பட்டது.

இனி ஒருசாரார்சொல்லுவது, புணர்ந்தபின்றையென்பது இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபின்றை என்றவாறு.

அங்ஙனம் ஒழுகாதென்பது பாங்கனானுந் தமியாளை எதிர்ப்பட்டானும் புணராது தோழியை இரந்துபின்னிற்றற்கண்ணே முயலுமென்பாருமுளர். அதுபொருந்தாது, என்னைகாரணமெனின், தன்பாங்கன்றனக்குச் சிறந்ததுணை அவள்பாங்காய தோழி சிறக்குமாறுண்டோவென்பதனான். அப்பொழுதவனை நினையான் தன் பாங்கன்றனையே நினைக்குமென்பது. (௫)

௬. இரந்துகுறையுறாது கிழவியுந் தோழியு
மொருங்கு தலைப்பெய்த செவ்வி நோக்கிப்
பதியும் பெயரும் பிறவும் வினாஅய்ப்
புதுவோன் போலப் பொருந்துபு கிளந்து
மதியுடம் படுத்தற்கு முரிய னென்ப.

என்-னின், மதியுடம்படுக்கும் நிமித்தமென்பதனுணர்-த்து மேற்சூத்திரத்தோடு இயைபென்னையோவெனின், மேற்பணித்த மொழியிற் தோழியையிரந்து பின்னிற்குமெனப்பட்டது. அங்ஙன

மிரந்து பின்னின்றவிடத்து எத்திறத்துக்கொல்லோ இவனுடையரு றையென்றையப்பட்டு நிற்பதல்லது இதின்னதென்றுணராளன்றோ உணராமையால் என்குறை இன்னதென்றறிவித்திரந்து பின்னிற்ப னென்னுங் கருத்தினால் இது செய்யுமென்பதியைபு. (இ-ள்) இரந்து குறையுறாது=இரந்தவைத்துக் குறையுறவு தோன்றாமை: கிழவியுந் தோழியும்=கிழவியெனப்படுவாள் தலைமகள் தோழியெனப்படுவாள் செவிலித்தாய்மகள் என்னை? "தோழி தானே செவிலிமகளே." என்றாராகலின்; அவ்விருவரும்: ஒருங்கு=ஓரிடத்தாராதல்: தலை ப்பெய்தல்=கூடியிருத்தல்: செவ்விநோக்கி=அன்னதோர் பதநோ க்கிச்சென்று நிற்றல்: அங்ஙனநிற்பாற்கு ஒருசொற்படுகான்முறை மைவேண்டும்; பதியும் பெயரும் பிறவும் வினாய்=பதிவினாதலென் பது எவ்வூரென்பது, பெயர்வினாதலென்பது என்னபேரென்பது பிறவினாதலென்பது இங்கே சில மாப்போந்தனவுளவோ இலையர் போந்தாருளரோ யானைபோந்தனவுளவோ என்றித் தொடக்கத் தன வினாதல். அதற்குச் செய்யுள் :—

நிதியின்கிழவனிலமகள்கேள்வனெல்வேலியொன்றும்
கதியின்மலிந்துவெம்மாவுங்களிறுங்கவர்ந்துகொண்டான்
பொதியின்மணிவரைப்பூம்புனங்காக்கும்புனையிழையீர்
பதியின்பெயருநும்பேருமறியப்பகர்மின்களே. (ருஉ)

அறையார்கழன்மன்னராற்றுக்குடியமர்காய்ந்தழியக் [ன்
றையாரயில்கொண்டகோன்கொல்லிக்கார்ப்புனங்காக்கின்றவா
பிறையார்சிறுநுதற்பெண்ணாரமிழ்தன்னபெய்வளையீர்
ஓறையாதுரைமினெமக்குநும்பேரொடுவாழ்பதியே. (ருச)

கறையின்மலிந்தசெவ்வேல்வலத்தாற்றென்கடையல்வென்ற
வறையுங்கழலரிகேசரியந்தண்புகாரனைய
பிறையின்மலிந்ததிருநுதற்பேரமர்க்கண்மடவீர்
குறையும்பதியும்பெயருமறியவுரைமின்களே. (ருரு)

பிறவுமென்றதனால் இவையுஞ்சொல்லிச் சென்றுநிற்கும். அவற்றிற்குச் செய்யுள் :—

அருமாலுயவல்லகைமான்றேர்வரோதயன்மன்னனைத்த
இருமால்வனவஞ்சியன்னவஞ்சிறடிச்சேயிழையீர்
கருமால்வரையன்னதோற்றக்களங்கைவென்கோட்டுச்செங்கட
பெருமால்களிறுன்றுபோந்ததுண்டோநும்புனத்தயலே; (ருசு)

# 68. பாண்டிக் கோவை

சினமாண்கடற்படைச்சேரலன்றென்னறையாற்றழிந்து
மனமாண்பழியவைவேல்கொண்டகோன்வையைநாடனைய
கனமார்வனமுலைக்கையார்வரிவளைக்காரிகையீ
ரினமான்புகுந்தனவோவுரையீர்நும்மிரும்புனத்தே. (௫௭)

சிலைமாண்படைமன்னர்செங்களத்தோடச்செருவிளைத்த
கொலைமாணயின்மன்னன்றென்புனனாடன்னகோல்வளையீ
ரிலைமாண்பகழியினேவுண்டுதன்னினத்திற்பிரிந்தோர்
கலைமான்புகுந்ததுண்டோவுரையீர்நுங்கள்கார்ப்புனத்தே. (௫௮)

வெல்லுந்திறனினைந்தேற்றார்விழிஞத்துவிண்படரக் [றேன்
கொல்லின்மலிந்தசெவ்வேல்கொண்டகோன்கொல்லிச்சாரலின்
புல்லும்பொழிலிளவேங்கையின்கீழ்நின்றபூங்குழலீர்
செல்லுநெறியறியேனுரையீர்நுஞ்சிறுகுடிக்கே. (௫௯)

தன்னும்புனையுமழையுறமேறுதன்றானைமுன்னாற்
றுன்னுங்கொடிமிசையேந்தியகோன்கொல்லிச்சூழ்பொழில்வாய்
மின்னுங்கதிரொளிவாண்முகத்தீரெம்மிருவுளைத்தான்
மன்னுஞ்சுடர்மணிபேர்தருமோநுங்கள்வாயகத்தே. (௬௦)

கன்னுற்றெதிர்ந்ததெவ்வேந்தர்படைக்கடையற்கொடிமேல்
வின்னுற்றகோனுருமேந்தியவேந்தன்வியன்பொதியிற்
பன்னுற்றதேன்மொழிப்பாவைநல்லீரோர்பகழிமூழ்கப்
புண்ணுற்றமாவொன்றுபோந்ததுண்டோநும்புனத்தயலே. (௬௧)

முடியுடைவேந்தருமும்மதயானையுமொய்யமருட்
பொடியிடைவீழத்தென்பூலந்தைவென்றான்புகாரனைய
வடிவுடைவேலொடுங்கண்மடவீர்நுங்கள்வார்புனத்திற்
பிடியொடுபோந்ததுண்டோவுரையீரோர்பெருங்களிறே. (௬௨)

என்பன கொள்க.

புதுவோன்போல = எஞ்ஞான்றும் இந்நிலத்துச் சென்றறியாததும் அவளைக் கண்டறியாததும் போல: பொருந்துபு வளைந்து அந்நிலத்திற்கும் அவளை விழைதற்கும் பொருந்துவன வளைந்து: மதியுடம் படுத்தற்கும் உரியனென்ப = மதியென்பதறிவு அவ்வறிவினை யொருப்படுத்தற்குரியன். எ-று. யாரறிவோவெனிற் தோழியறி

வெனக்கொள்க. [redacted] ஒருப்படுக்குமெனவே முன் கவர்ந்து நின்றதென்பது [redacted]. எங்ஙனங் கவர்ந்து நின்றதோ வெனின் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த ஞான்றுட்கொண்டு கண ணிவந்து நுதல் வேறுபட்டுக் காட்டிற்று. இவட்கு இவ்வேறுபாடு தெய்வத்தினானாயிற்றுக் கொல்லோவெனவும், அவன் தற்கொண்டு தழையுங் கண்ணியுங்கொண்டு பின்னிலைமுனியாது இரந்து பின்னி ற்கின்றான், இவனுடையதுறை யார்மாட்டாது கொல்லோவெ [redacted]மெனக்கொள்க. அங்ஙனங் கவர்ந்ததோழி இவள் வேறுப [redacted]ன் காரணம்போலும், இவனிரந்து பின்னிற்கின்றதிவளகா [redacted]லு மெனத் தோழி ஒருங்கு கணிவேறாக வருத்துணரு மெ[redacted] அதற்குச் செய்யுள் :—

விளையாடியகண்ணிவேந்தன்விசாரிதன்கொல்லியின்மேலாய்
வளையாடியபுனங்காவலுமானின்வழிவரவு
திளையாடியகுழலாட்குமிவற்குநினைப்பினில்லை
புளையாடியங்கண்ணினானுள்ளத்துள்ளதுபோன்றுளதே. (௬௩)

பொருங்கண்ணிகுடிவந்தார்படப்பூலந்தைப்பொன்று[redacted]
விருங்கண்ணிவாகையணிந்தான்பொதியில்விரும்பொ[redacted]
மருங்கண்ணிவந்தநிலம்பல்றன்கணனுமிவ்வ
கருங்கண்ணுந்தம்மிற்கலந்ததுண்டாமிங்கெ[redacted]. (௬௪)

ஏன இத்தொடக்கத்தனவெனக் கொள்ளுமோதெனி ன், இரந்து குறையுறாது கிழவியுந்தோழியுந் தலைப்பெய்தசெவ்வி நோக்கி யென்றமையாதோ? ஒருங்கென வேண்டியதென்னை? கள வுகாலத்துத் தலைமகன்றேரோடும் ஒருங்கு செல்ல அமையுமென்ற தற்குவைத்தார்; என்னை? சான்றோர் செய்யுள் அங்ஙனம் வந்ததாக லின். அது வருமாறு:—

சேர்ந்தகள் காதலர் நேமி நெடுந்திண்டே
ரூர்ந்தவழி சிதைய வூர்ந்தாய்வாழி கடலோத
மூர்ந்த வழிசிதைய வூர்ந்தாய்மற் றெம்மோடு
தீர்ந்தார்போற் றீநிலையால் வாழி கடலோதம்.

3ஆ இத்தொடக்கத்தனவெனக்கொள்க. மதியுடம்படுத்த ற்கு உரியவென்ற உம்மை யாதோவெனின் வரைந்தெய்துதல் மிக த்தேயென்பது போதர நின்ற நூற்பா. (௩)

எ. முன்னுற வுணர்தல் குறையுற வுணர்த
லிருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
றம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி.

என்-னின், தோழியுணர்ச்சியைப் பெயரும் முறையுந்தொகையும் உணர்—ற்று. (இ-ள்.) முன்னுறவுணர்தல்=இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பிற்றைஞான்று அவள் கண்சிவப்பும் நுதல்வேறுபாடுங் கண்டு கரவு உள் நாடி உணர்வதாயிற்று. எங்ஙனம் உணருமோ வெனின், எம்பெருமாட்டிக்குப் பண்டைத்தன்மை இன்றுதலில் இவ்வேறுபாடு எற்றினன் ஆயிற்று, எனக்குச் சொல்லிலாயென்னும். என, நெருநல் நின்னின் நீங்கி மேதக்கதோர் சுனைகண்டு ஆடினேன்,/ நெடுங்காலமும் நின்றாடினேற்கு ஆயிற்று, ஆகாதே கண்சிவப்பு நுதல் வேறுபாடென்னும். அஃதேல், சுனையாடினார்க்கெல்லாம் இச்காரிகைநீர்மை பெறலாமேயெனின் யானும் ஆடிக்காண்கேனென்னும். அதற்குச் செய்யுள்:—

தேர்மன்னுவாட்படைசெந்நிலத்தோடச்செருவிளைத்த
போர்மன்னன்றென்னன்பொதியிற்புனமாமயில்புரையு
மோர்மன்னுகாரிகையெய்தலுண்டாமெனின்யானுநின்போ
னீர்மன்னுநீலநெடுஞ்சுனையாடுவனேரிழையே. (சுரு)

புண்டாமருநிறத்துற்றுத்தென்பூலந்தைப்போர்மலைந்த
வொண்டாரரசர்குழாமுடனேயொளிவானடையக்
கண்டான்பொதியின்மயிலன்னகாரிகையெய்தனின்போ
லுண்டாமெனிற்றையல்யானுஞ்சென்றாடுவனொண்சுனையே.(சுசு)

"பையுண் மாலைப் பழுமரம் படரிய - நொவ்வுப்பறை வாவ
ணுன்சிற கேய்க்கு-மடிசெவிக் குழவி தழீஇப் பையாந்-திடுருகவுண
மடப்பிடி யெவ்வங் கூர - வெந்திற லாளி வெரீஇச் சந்தின் - பொரி
யரை பிளிறக் குத்தி வான்கே-ழுருவ வேண்டுயக் கொண்டு கழியுங்-
கடுங்கண் யானை காலுற வொற்றலிற் - கோவா வாரம் வீழ்த்தெனக்
குளிர்கொண்டு - பேஎ நாறுந் தாழ்நீர்ப் பனிச்சுனை-கோனேஎ ரொல்வ
லை தளிர்ப்ப நின்போல் - யானு மாடிக் காண்கோ தோழி-வரைவயிறு
கிழித்த நிழறிகழ் நெடுவேற் - றிகழ்பூண் முருகன் றீம்புன லலைவாய்க்-3,
கமழ்பூம் புறவிற் கார்பெற்றுக் கலித்த-வொண்பொறி மஞ்ஞை போ
ல்வதோர் - கண்கவர் காரிகை பெறுதலுண் டெனினே."

எனக்கேட்டுத் தலைசாய்த்து நிலங்கிளையாநிற்பப் புணர்ச்சி உண்டென்று உணர்ந்து கொள்வாளாவது. அல்லதூஉம், அங்ஙனம் வேறுபாடு கண்டு ஐயுற்றுநின்றாள் அந்திவான்கட் செங்கோட்டு மதர் வைக் குழவித்திங்களைக் கண்டு தான் தொழுது நீயுந் தொழுதகா ணென்னும். அதற்குச் செய்யுள் :—

திருமாலகலஞ்செஞ்சாந்தணிந்தன்னசெவ்வானகட்டுக்
கருமாமலர்க்கண்ணிகைதொழத்தோன்றின்றுகாண்வந்தோன்றார்
செருமாலரசுகச்செந்நிலத்தட்டதென்றீந்தமிழ்நர்
பெருமான்றனதுகுலமுதலாயபிறைக்கொழுந்தே. (கூஎ)

முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்று யத்திசையே
பின்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண்—மன்னும்
பொருகளிமால் யானைப் புகழ்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியான் மிக்க பிறை.

எனக்கேட்டுத் தலைமகள் தொழாதுநிற்குங் கற்பழியுமென்பதனான்; அதுகண்டு புணர்ச்சியுண்மை அறிந்துகொள்ளுமென்பது. அஃதன்றி அவளை வளையணங்காகவுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

மண்டாணிறைந்தபெரும்புகழ்மாறன்மந்தாரமென்னுந்
தண்டாரவன்கொல்லித்தாழ்சுனையாடியதானகன்று
ளொண்டாமரைபோன்முகத்தவணின்னொடுருவமொக்கும்
வண்டார்குழலவள்வந்தாலியங்குவளையணங்கே. (கூஅ)

இங்ஙனமுஞ் சொல்லும்:—

ஆணைநிந்தானையையாற்றுக்குடிவென்றகோன்பொதியிற்
சேணெடுங்குன்றத்தருவிநின்சேவடிதோய்ந்ததில்லை
வாணெடுங்கண்ணுஞ்சிவப்பச்செவ்வாயும்விளர்ப்பவண்டார்
தாணெடும்போதவைசூட்டவற்றோவத்தடஞ்சுனையே. (கூகூ)

இவை நாண நாடின. இனி நடுங்க நாடின. நம்புனத்து உதிரம் அளைந்த கோட்டதோர் களிறுண்டென்னும். அதற்குச் செய்யுள்:—

கல்லாவயவர்களத்துரவியக்கணையுதைத்த
கொல்லியார்சிலைமன்னன்கோனெடுமாறன்றென்கூடலன்ன
வில்லார்நுவர்வாய்மடந்தைநம்மீர்ம்புனத்தின்றுகண்டேன்
புலவாக்குருதியளைந்தவெண்கோட்டுப்பொருகளிறே. (௯௦)

பொருதிவ்வுலகமெல்லாம்பொதுநீக்கிப்புகழ்படைத்தல்
கருதிவந்தாருயிர்வான்போயடையக்கடையல்வென்ற
பருதிநெடுவேற்பராங்குசன்கொல்லிப்பைம்பூம்புனத்துக்
குருதிவெண்கோட்டதுகண்டேன்மடந்தையொர்குஞ்சரமே. (எக)

பண்டிப் புனத்துப் பகலிட்டுத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற் - றண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணு
யுதிர முடைத்திதன் கோடு.

அதுசேட்டுப் பலகாலும் இவ்விடத்துவந்து இயங்குவான் எம்பெருமானாதலான் அவனைக் களிறு ஏதஞ் செய்ததுகொல்லோ வென்று நடுங்குவாளாம். அதுகண்டு கூட்டமுண்மை உணரும். இவ்வகை உணர்தல் பொருந்தாது, நாணவும் நடுங்கவும் நாடுதல் அகத்திணையிலக்கணமன்றென்க. என்னை? "நாணவு நடுங்கவு நாடாதோ ழி-காணுங் காலைத் தலைமக டேஎத்து." என்பதாகலான். அல்லதூஉம், இவள் பெருநாணினளாகலானும் பேர் அச்சத்தினளாகலானும் இறந்துபடுமாகலான் அவளேதத்திற்குக் கவலாளாயினளுமாம். அல்லதூஉம், அவளை அவமதித்துக் கருதினளுமாம். அவளது குறிப்பறியாது உரைத்தலான் ஆசாரம் அறியாளுமாமென்பது. இக்குற்றமெல்லாந்தங்கும். அவ்வகை உரைப்பார்க்கு மற்றென்னோ உரையெனின், முன்னுறவுணர்தலென்பது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தபின்னை அவளது வேறுபாடு கண்டு தெய்வத்தினானாயிற்றுக்கொல்லோ மற்றொருவாறாயிற்றுக்கொல்லோவென ஐயுற்று நிற்பது. அதற்குச் செய்யுள்:—

கந்தாரடுகளியானைக்கழனெடுமாறன்கன்னிக்
கொந்தாடிரும்பொழில்வாய்ப்பண்ணையாயத்துக்கோலமென்பூம்
பந்தாடலினிடைநொந்துகொல்பைங்கழல்வெண்மணன்மேல்
வந்தாடலினடிநொந்துகொல்வாணுதல்வாடியதே. (எஉ)

பொருந்தியபூந்தண்புனலுன்குடைந்துகொல்பொற்கயிற்றுத்
திருந்தியவூசல்சென்றாடிக்கொல்சேவூர்ச்செருவடர்த்த
பருந்திவர்செஞ்சுடர்வெள்வேற்பராங்குசன்பற்றலர்போல்
வருந்தியகாரணமென்னைகொல்லோமற்றிவ்வாணுதலே. (எ௩)

இனிக் குறையுறவுணர்தலென்பது, அவன் தழையுங் கண்ணியுங் கொண்டு பின்னிலைமுனியாது நிற்ப, ஒக்கும் இவன் இரந்து பின்

னின்றது இவள் காரணமாகப்போலுமென உணர்வது. அதுபொருந் தாது; என்னை? யாதானுமொருவர் தன்னுழை ஒரு குறையுடையராய்ச் சென்றவிடத்து இவள் கண்ணதென்று கருதுவாளாயின் அவனை அவ மதித்துக்கருதினாளாம், அவளது பெருமையோடு மாறுகொள்ளுமென் பது. மற்றென்னோ குறையுறவுணருமாறெனின், அவன் இரந்து பின் னிற்கின்றது எற்றிற்குக் கொல்லோவென உணர்வதாயிற்று. அதற்குச் செய்யுள்:—

மழையும்புரைவண்கைவானவன்மாறன்மைதோய்பொதியில்
வழையுங்கமழுமணிநெடுங்கோட்டுவண்சந்தனத்தின்
றழையும்விழைதருகண்ணியுமேந்தித்தண்பூம்புனத்தி
னுழையும்பிரியகில்லானறியேனிவனுள்ளியதே. (எச)

திண்பூமுகநெடுவேன்மன்னர்சேவூர்ப்படமுடிமேற்
றண்பூமலர்த்தும்பைசூடியதார்மன்னனேரியென்னும்
வண்பூஞ்சிலம்பன்வரைப்புனநீங்கான்வருஞ்சுரும்பா
ரொண்பூந்தழையுந்தருமறியேனிவனுள்ளியதே. (எரு)

இவையும் இரண்டும் ஐயுணர்வே, துணிவுணர்வல்ல.

இருவரும் உள்வழி அவன்வரவுணர்தல் = அவ்வையவுணர்வோ டின்றாள் இருவரும் உள்வழி அவன்வந்துநின்று பதியும் பெயரும பிறவும் வினவத் துணிந்துகொள்ளுமெனக்கொள்க. அதற்குச் செய் யுள்:—

செறிந்தார்கருங்கழற்றென்னவன்செந்நிலத்தைச்செருவின்
மறிந்தார்புறங்கண்டகோணியகோன்கொல்லிச்சாரல்வர்த
நெறிந்தாரகமழ்குஞ்சியாறேடிவளிடைநின்றதெல்லா
மறிந்தேன்பலநினைந்தென்னையொன்றேயிவராருயிரே. (எசு)

வண்ணமலர்த்தொங்கல்வானவன்மாறன்வைவேன்முகப்புங்
கண்ணுஞ்சிவப்பக்கடையல்வென்றான்கடறுடனைய
பண்ணும்புரைசொல்லிவட்குமிவற்கும்பலநினைந்திங்
கெண்ணுங்குறையென்னையொன்றேயிருவர்க்குமின்னுயிரே. (எஎ)

"ஏனல் காவ லிவளு மல்லள்-மான்வழி வருகுவ னிவனு மல் ல னரந்தங் கண்ணி யிவனொ டிவளிடைக் - கரந்த வுள்ளமொடு கருதி யது பிறிதே - நம்முன் னுணினர் போலத் தம்முள் - மதுமறைந் துன்

டோர் மகிழ்ச்சி போல - வுள்ளத் துள்ளே மகிழ்ப - சொல்லு மாடுப கண்ணி னானே."

இதனை மதியுடம்பாடென்றமையானும் முன்னையறிவு கவர்ந்து நின்றதென்பது பெற்றாம், துணிவுணர்வு பெற்றிலமென்பது. அஃதேயெனின், "அம்மூன் றென்ப தோழிக் குணர்ச்சி" என்று சொன்னமையாற் துணிவுணர்வே ஆகற்பாலவெனின், துணிவுணர்வும் உணர்வேயெனப்படும், ஐயவுணர்வும் உணர்வேயெனப்படும், உணர்வென்னும் பொதுமை நோக்கச்; சந்தனமுங் காஞ்சிரையு மரமெனப் பட்டதுபோல. இவ்வாறாகவே, தோழி ஆராய்ச்சியுடைமையும் ஆசாரமுடைமையும எதத்திற்குக் கவலுதலும் நன்கு மதித்தலும் வெளிப் படுமென்பது. அஃதேயெனின், அம்மூன் றுமென்ப தோழிக்குணர்ச் சியென்று மூன்றுமேயென்று துணிந்தானாகல் உம்மை கொடுத்துச் சொல்லவேண்டும். என்னை? "எனைத்தென வறிந்த சினைமுதற் கிளவி - வினைப்படு தொகையி னும்மை வேண்டும்" என்றாராகலின். அஃதேல், உம்மை ஈண்டுத் தொகுத்துக் கூறினார், அஃது அங்ஙனந் தொகுத்தற்கு இலக்கண முண்மையான. ஆயின் இருவருமுள்வழி அவன்வரவு என்றாகாதன்றே அவன் செலவு என்றதன்றி என்பது. என்னை? "தருசொல் வருசொ லாயிரு கிளவியுந் - தன்மை முன்னிலை யாயீ ரிடத்த - வேனைய விரண்டு மேனை யிடத்த." என்றாராகலின். அஃது அறியாது சொன்னாய், "செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்" என்னுஞ் சூத்திரத்துள் இலேசினான் முடியுமாகலின் அமையும். அதுவாகலினன்றே "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" என்று சான்றோர் சொல்லியதென்பது. (எ)

அ. ஆங்குணர்ந் தல்லது கிழவோ டேளத்துத்
தான்குறை யுறுத றோழிக் கில்லை.

என்-னின், இதுவுந் தோழிக்குரியதோர் இலக்கணமுணர்-ற்று. (இ-ள்) ஆங்கு உணர்ந்து அல்லது = அங்ஙனம் அறிந்தபின்னையல்லது: கிழவோள்தேஎத்து = தலைமகள்மாட்டு: தான் குறை உறுதல் தோழிக்கு இல்லை = தான் குறையுற்று முடிப்பலென்னுஞ்சொல் தோழிக்கில்லை.—எ-று. எனவே, கரவு உள் நாடி வேண்டுவாளையும் மறுக்கப்பட்டதாம். அஃதேயெனின், கு[illegible]றுதல் தோழிக்கென அமையாதோ, தானென்றது எற்றிற்கோவெனின், பின்னையுந் தானல்லள் குறைய

ப்புக்கூறுவாள் அவனது ஆற்றாமையைத் தன்கட் கொண்டு நின்ற மையால் அவனேயெனப்படும். (அ).

௬. முன்னுற வுணரினு மவன்குறை யுற்ற
பின்ன ரல்லது கிளவி தோன்றாது.

என்-னின், தலைமகன் முன்னின்று தோழி சொல்லாடும் இட முணர்-ற்று. (இ-ள்.) முன்னுறவு உணரினும் = மதியுடம்படுப்பக் கூட்டமுண்மை உணர்ந்தாளாயினும்: அவன் குறையுற்ற பின்னர் அல்லது = அவன் இரந்து பின்னின்றபின்னர் அல்லது: அவன் இரந்து பினனிற்குமாறு "குறையுறுங் கிழவனை உணர்ந்த தோழி" என்னுஞ் சூத்திரத்துட் சொல்லுதும். கிளவிதோன்றாது = முடியல் என்னுஞ் சொற் தோன்றாது.—எ-று. அஃதாமாறு மதியுடம்படுத்துத் தன்கருத் தறிவித்துப் பின்னைத் தழையுங்கண்ணியுங் கொண்டு பின்னிற்கும். நின்றானோடு முடிப்பக் கருதுவாள் தன்கண் நாணுக் கெடுந்துணையுங் குறியாடும். ஆட, அற்றைக்கன்றும் ஆற்றாமை அவர்க்குப் பெருகும். பெருகுவது கண்டு அற்றைக்கன்றும் இவட்கு நாணுச் சுருங்க இரண்டுந் துலாத்தலைப்பட்டு எடாநின்றன. நின்றுழி, அவனது ஆற்றாமையும் இதனினூங்குப் பெருகுமாறில்லையெனப் பெருக்கத்திற்கு வரம் பெய்தி நின்றது. இவளது நாணும் இதனின் நுணங்குமாறில்லை யென நுணுக்கத்திற்கு வரம்பெய்தி நின்றது. நின்ற நிலைமைக்கட் தலைமகன் ஒரு சொற் சொல்லும். என்சொல்லுமோவெனின், இன்றினூங்கு எல்லாம் இசைக்கும், நின்றான் முடியுமெனக் கருதிவந்து உழந்தேன், நின்றான் முடியாமை உணரப்பட்டது, பட்டமையால் இனி இளிவந்தன செய்தாயினும் முடிப்பல், இதனை இன்றியமையேனாகலானென்னும். இளிவந்தன செய்தலாவது, மடலூர்ந்தானும் வரைபாய்ந்தானும் என்றவாறு. அதற்குச் செய்யுள் :—

படலேறியமதின்மூன்றுடைப்பஞ்சவன்பாழிவென்ற
வடலேறயின்மன்னன்றெவ்வரைப்போன்மெலிந்தாடவர்கள்
கடலேறியகழிகாமம்பெருகிற்கரும்பனையின்
மடலேறுவர்மற்றுஞ்செய்யாதனசெய்வர்மாநிலத்தே. (எ௯)

பொருசெங்கேதானைப்புல்லார்தம்மைப்பூலந்தைப்போர்தொலைத்த
செருசெங்கேஞ்செஞ்சுடர்வேனெடுமாறன்றென்னுடையோ
பருசெங்கேகாமம்பெருகுவதாய்விடினுடைவர்கள்
கருசெங்கேம்பெண்ணைச்செங்கேழ்மடலூரக்கருதுவரே. (எ௧)

"மாவென மடலு மூர்ப பூவெனக் - குவிமுகி ழெருக்கங் கண்
'ணியுஞ் சூடுப - மறுகி னார்க்கவும் படுப - பிறிது மாகுப காமங்காழ்க்
கொளினே."

என்றான் தலைமகளோவெனின், அல்லன்; தலைமகனிடனாகப் பிறந்த ஆற்றாமை. அதுகேட்டு முன்குறைபாட்டின்கட் சென்று நின்ற நாண் உண்டன்றே அது கெடும்; கெட, அவனது ஆற்றாமைத்தன்மையைத் தன்கட் கொண்டு தலைமகளை ஆற்றுவிப்பதோர் சொற்சொல்லும். அஃதியாதோவெனின், அரியன தாங்கலன்றே பெரியாரது பெற்றிமை; நீயிர் இதன் திறத்தினராகன்மின், யானும் அதன் திறத்து என்னின் ஆவது உண்டேற் காண்பனென்னும். என, அவது ஆற்றாமைநீங்கும்; அது நீங்கத், தலைமகனது நிலைமை நோக்கி இவனிறந்துபடானென்பது உணர்ந்து இவை சொல்லும். அவை யாவையோவெனின், மடலேறுவன் என்றிரால், அஃது உமக்கு மடலேறுதல் இயையாதுசொல்லோ, என்னை? நீர் பொருளினர் ஆகலாலென்னும். அதற்குச் செய்யுள்:—

பலமன்னுபுள்ளினும்பார்ப்புஞ்சினையுமனையழிய
வுலமன்னுதோளண்ணலூரக்கொளாய்கொல்லொலிதிரைசூழ்
நிலமன்னனேரியன்மாறனெடுங்களத்தட்டதிங்கட்
குலமன்னன்கன்னிக்குலைவளர்பெண்ணைக்கொழுமடலே. (அ0)

"வெள்ளாங் குருகின் பிள்ளையும் பலவே - யவையினும் பல
வே சிறுகருங் காக்கை - யவையினு மவையினும் பலவே குவிமட -
லோங்கிரும் பெண்ணை மீமிசைத் தொடுத்த - தூங்கணங் குரீஇக் கூட்
டுள சினையே"

அன்றியும் மடலேறுவன் என்றிரால், அம்மடலேறப்படுவோர் உருவெழுதிக்கொண்டன்றே ஏறுவது. நுமக்கு உருவெழுதலாமோ வென்னும். அதற்குச் செய்யுள்:—

களிசேர்களிற்றுக்கழனெடுமாறன் கடையல்வென்ற
தெளிசேரொளிமுத்தவெண்குடைமன்னன்றென்னுடையான்
கிளிசேர்மொழியுங்கருங்குழலுற்றமுங்கேட்பினைய
வெளிதேதவெழுதவெழுதிப்பின்னூர்கவெழின்மடலே. (அக)

அல்லதூஉம், எழுதலுறின்று இங்ஙனமோ நீர் எழுதுவதென்றுசொல்லும். அதற்குச் செய்யுள்: —

விற்றானெழுதிப்புருவக்கொடியென்றிர்தாமரையின்
முற்றாமுகைநீரெழுதிமுலையென்றிர்மொய்யமருட்
செற்றார்படச்செந்நிலத்தைவென்றான்றென்னன்கூடலன்னாள்
சொற்றானெனக்கிளியோநீரெழுதத்துணிகின்றதே. (௮௨)

அது கேட்டுத் தலைமகன் பெயர்த்தும் ஆற்றானுமாக, இறந்து படல் ஆகாதென்று, நீர் இந்நீராகன்மின், நமக்கு இக்குறை முடித்துத் தருவன்; நம்மாற் கருதப்படுவாள் என்மாட்டுப் பெரிது அருளுடையளாயினாளென்னும். அதற்குச் செய்யுள்:—

ஓங்கும்பெரும்புகழ்ச்செங்கோலுசிதனுறுகலியை
நீங்கும்படிநின்றகோன்வையைவாய்நெடுநீரிடையான்
றாங்கும்புணையொடுதாங்குந்தண்பூம்புனல்வாயொழுகி
னாங்குவருமன்னதாலின்னநாளவளாரருளே. (௮௩)

காடார்கருவரையுங்கலிவானுங்கடையலன்று
கூடார்செலச்செற்றகோனெடுமாறன்றென்கூடலன்ன
வேடார்ழுவச்க்குழலாளெங்குநிற்பினுமென்னையன்றி
யாடாள்புனலுமெல்லூசலுமீதவளாரருளே. (௮௪)

"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளுங் - கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும் – புணைகை விட்டுப் புனலோ டொழுகி - னாண்டும் வருகுவள் போலு மாண்ட - மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச் - செவ்வெரி நுறழுங் கொழுங்கடை மழைக்கட் - டுளிதலைத் தலைஇய தளிரன் னோளே."

அது கேட்டுத் தலைமகன் இவள் இனி எனக்கு இக்குறை முடிக்குமென முன்னின்ற ஆற்றாமை நீங்கி ஆற்றுமென்பது. `என்னை? உலகத்து ஒருபொருள் முடியாதெனக் கவன்றுநின்றார் முடிப்பதோர் உபாயங் கண்டஞான்று அப்பொருள் எய்தினாரேபோல மகிழ்வாராதலின். இவனுந் தன்னுடைய குறை எய்தினான்போலப் பெயர்த்தான். இதனைக் கொண்டுநிலைகூற்றென்று சொல்லுவது. என்னை? தலைமகன் இறந்துபடுவானை அச்சொற் றாங்கிக்கொண்டு நின்றமையானென்பது. இது சொல்லி இவளை ஆற்றுவித்துத் தலைமகண் மாட்டுச் சென்று அக்குறை முடிக்கும் உபாயம் ஆராய்வாளாவது. (௧)

கO. உள்ளத் துணர்ச்சி தெள்ளிதிற் கரந்து
கிழவோ டேஎத்துக் குறையுறூஉ முளவே
குறிப்பறி வுறூஉங் காலை யான.

என்-னின், தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளைக் குறை நயப்பிக்குமாறு உணர்-ற்று. (இ-ள்.) உள்ளத்து உணர்ச்சி தெள்ளிதிற் கரந்து=தன் உள்ளத்துநின்ற உணர்ச்சியை நன்கு புலப்படாமை மறைத்து: கிழவோள் தேஎத்து=தலைமகண்மாட்டு: குறையுறூஉம் உளவே=குறைவேண்டலும் உள: குறிப்பு அறிவுறூஉங்காலை ஆன=தலைமகளது ஆற்றாமைக் குறிப்பினை அறிவுறுத்துமிடத்து.—எ-று. உள்ளத்துணர்ச்சியென்பது யாதோவெனின், கூட்டமுண்மை உணர்ந்த உணர்ச்சியென்றுமாம். அல்லதூஉம் அவரிக் குறை இன்றியமையாரென உணர்ந்த உணர்ச்சியென்றுமாம். யாங் குறையுற அவள் இதனை ஆற்றுங்கொல்லோவென உணர்ந்த உணர்ச்சியென்றுமாம். அல்லது என்னின்றைய கூட்டம் முடியாது விடின் இறந்துபடுமாகலான் இவளைக் குறைநயப்பித்துக்கொண்டு முடிக்கலாங்கொல்லோவென உணர்ந்த உணர்ச்சியென்றுமாம். தெள்ளிதிற் கரந்து கிழவோள்தேஎத்துக் குறையுறூஉம் உளவே என்பது இவள் கூட்டமுண்மை உணர்ந்து உணராதாள் போன்று குறையுற்று நின்றாளெனத் தலைமகட்குப் புலனாகாமை நன்கு மறைத்துக் குறையுறவும் உடையள் தலைமகண்மாட்டுக் குறைநயப்புக் கூறுமிடத்து என்றவாறு. உளவென்றது உளவென்ற பன்மைச்சொல் எற்றிற்கோவெனின், குறையுறவு பலவென்றற்கு. அவை யாவையோவெனின், மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தலும் வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தலுமென இவை. அவற்றுள் மெலிதாகச் சொல்லிக் குறைநயப்புக் கூறுமாறு, இங்கு வந்து ஒழுகாநின்றான் ஒருதோன்றல் உளன், அவன் என்னின்றையதொரு குறையுடையான்போலும், ஒருவரால் ஒருகுறையுறவுகொள்ளுந் தகைமையானும் அல்லன் ஒருவர்க்கு ஒரு குறைமுடிக்கின்றல்லது, அதனால் அவன் குறை இன்றியமையாமைநோக்கி யான் குறைமுடிப்பார் தன்மையேன் ஆயினேனாய் வைத்து ஒருபொய் பொய்த்தேன், பொய்ப்பெனினும் பொய்ப்பலென்று பொய்த்தேன், எனெனில் இப்பொழுதைக்குள்ளாய் அப்பொய்யினாற் பின்னுமோர் உபாயத்தான் முடித்துக்கொள்ளப் பொறுரோவென்று பொய்த்தேன். என்னை? உயிருடையதூா ஒரு பொருளில்லை என்பதனான் அவ்வாறு கருதி

ப்பொய்த்தேற்கு அவர் அதனை மெய்யென்று கருதிக்கொண்டு சென்றார். தாம் பொய்யறியாமையின், அன்னார் இன்று வருவர், வந்தால் இக்குறை முடியாமையிற் பொய்யென உணர்வாகாதோவென்னும். அதற்குச் செய்யுள்:—

பாமாண்டமிழுடைவேந்தன்பராங்குசன்கொல்லிப்பைம்பூந்
தேமாந்தழையொடுகண்ணியுங்கொண்டிச்செழும்புனத்து
ளேமாண்சிலையண்ணல்வந்துநின்றார்பண்டுபோலவின்று
பூமாண்குழலாயறியேனுரைப்பதொர்பொய்ம்மொழியே. (அரு)

அல்லதூஉம்,

கொடியார்நெடுமதிற்கோட்டாற்றரண்கொண்டகோன்பொதியிற்
கடியார்புனத்தயல்வைகலுங்காண்பல்கருத்துரையா
னடியார்கழலானலங்கலங்கண்ணியன்மண்ணளந்த
நெடியான்சிறுவன்கொல்லோவறியேனொர்நெடுந்தகையே. (அசு)

நண்ணியபோர்மன்னர்வான்புகநட்டாற்றமர்விளைத்த
மண்ணிவர்செங்கோல்வரோதயன்வையைநன்னாடனையாய்
கண்ணியன்றண்ணந்தழையன்கழலான்கடுஞ்சிலைய
னெண்ணியதியாதுகொல்லோவகலானிவ்விரும்புனத்தே. (அஎ)

பன்னியதீந்தமிழ்வேந்தன்பராங்குசன்பாழிவென்ற
மன்னியசீர்மன்னன்கொல்லிநம்வார்புனங்கட்டழித்துத்
துன்னியவந்தகளிறுதடிந்தசிலம்பன்றந்த
பொன்னியல்பூண்மங்கைவாடுபகோமற்றிப்பூந்தழையே. (அஅ)

அணிதருமேகலையன்னமன்னாயன்றகத்தியன்வா
யுணிதருதீந்தமிழ்கேட்டோனுசிதனொண்பூம்பொதியில்
வணிதருவார்புனங்கையகலான்வந்துமாவினவும்
வினிதருகண்ணியன்யாவன்கொல்லோவொர்விருந்தினனே. ()

பொரும்பாரரசணைப்பூலந்தைவாட்டியகோன்பொதியி
லரும்பார்தழையுங்கொண்டியான்சொன்னபொய்யைமெய்யென்றக
பெரும்பான்மையுமின்றுவாராவிடான்வரிற்பேரமர்க்கட் [லான்
கரும்பார்கருங்குழலாயறியேனினிச்சொல்லுவதே. (கூ0)

தெம்மாண்பழிந்துசெந்தீமூழ்கச்சேவூர்ச்செருவினன்று
வெம்மாப்பணிகொண்டவேந்தன்றென்னாடன்னமெல்லியலா
யம்மாந்தழையனலங்கலங்கண்ணியன்யாவன்கொல்லோ
கைம்மாவிறுய்வந்தகலானமதுகடிப்புனமே. (௬௧)

சிலையுடைவானவன்சேவூரழியச்செருவடாத்த
விலையிடைவேனெடுமாறன்கழலிறைஞ்சாதவர்போ
னிலைபடுசிந்தைவெந்நோயொடிந்நீள்புனங்கையகலான்
றலையிடைநேர்பவர்நேருமிடமிதுமொய்குழலே. (௬௨)

இலைசூழ்செங்காந்தளெரிவாய்முகையவிழ்த்தவீர்ந்தண்வாடை
கொலைவேனெடுங்கட்கொடிச்சிகதுப்புளருங்குன்றநாட
னுலைவுடைநோயொடுழக்குமாலந்தோ
முலையிடைநேர்பவர்நேருமிடமே.

என இவ்வகை கூறக் கேட்டு நின்னிற்பிரியேன் பிரியின் ஆற்றேனென்ற எம்பெருமான் வந்து இவளை இரந்து பின்னின்றமையான் இறந்துபட்டிலனென ஏமாப்பாளாவது. இனி வலிதாகச் சொல்லிக் குறை நயப்பிக்குமாறு. இங்குவந்து ஒழுகாநின்றான் ஒரு தோன்றல் உளன், அவன் என்னிறையதொரு குறையுடையான் போலும், ஒருவரான் ஒருகுறை கொள்ளுந் தன்மையனு மல்லன் தான் பிறர்க்குக் குறைமுடிப்பினல்லது, அதனால் இக்குறை இன்றியமையான், இன்றியமையாது நோக்கி இவன் உவப்பக் குறை முடிப்பனெனப் போந்து ஒழுகினேன்; ஒழுக, நெருநலை நாளா இக்கானலுள் வந்து என்னை எதிர்ப்பட்டுத் தன் துணைப்புறந் தருவதோர் அலவனைக்கண்டு இதுவாகாதே அறிவும் ஆண்மையுமாவதென அதனை நன்குமதித்து ஆற்றாய் என்னையும் நோக்கி அலவனையும் நோக்கி உணர்வினையென் கண்ணும் அவ்வலவன்கண்ணும் ஒழியப் போயினான்; எத்தன்மையினன்கொல்லோ இன்று வந்திலனென்னும். அதற்குச் செய்யுள்:—

பாடுஞ்சிறைவண்டறைபொழிற்பாழிபற்றாவாச
ராடுந்திறங்கண்டகோன்கன்னிக்கானலுறைதுணையோ
டாமெலவற்புகழ்ந்தென்னைநோக்கியறிவழிய
நீடுநினைத்துச்சென்றானென்னதாங்கொனெடுந்தகையே. (௬௩)

பொன்றாவிரிபுகழ்வானவன்பூலந்தைப்பூவழிய
வென்றான்வியன்கன்னியன்னத்தன்மென்பெடைமெய்யளிப்ப

நன்றுமிதன்செய்கையென்றென்னைநோக்கிநயந்தருகிச்
சென்றொருவர்பின்வந்தறியாரிச்செழும்புனத்தே. (௯௪)

புணர்துணையோடாடும்பொறியலவனோக்கி
யிணர்கைதைப்பூங்கானலென்னையுநோக்கி
யுணர்வொழியப்போனவொலிதிரைநீர்ச்சேர்ப்பன்
வணர்சுரியைம்பாலாய்வண்ணமுணரேனால்.

"ஒருநாள் வாரல னிருநாள் வாரலன் - பன்னாள் வந்து பணி மொழி பயிற்றியெ - ன்னன் னெஞ்ச நெகிழ்ந்த பின்றை - வரைமுதிர் தேனிற் போகி யோனே-யாசா கெந்தை யாண்டுளன் கொல்லோ - வேறுபுல நாட்டுப் பெய்த - வேறுடை மழையிற் கலுழுமெ னெஞ்சே.'

இதுகேட்டு இறந்துபடாதது எற்றிற்கோவெனின் இறந்துபடாளன்றே இவனுளனாயினும் இறந்துபடும்பிற யானிறந்துபடுமென்றதனன். (௯௦)

௧௧. தன்னுட் குறிப்பினை யருகுந் தோழிக்கு
முன்னுறு புணர்ச்சியி னருகலு முண்டே.

என்-னின்; அங்ஙனங் குறைநயப்புக் கூறப்பட்ட தலைமகள் இன்ன தன்மையளென்பதுணர்-ற்று. (இ-ள்) தன்னுட் குறிப்பினை = தோழி தன் உள்ளத்துக் குறிப்பினை: அருகுந் தோழிக்கு = சார்த்துந் தோழிக்கு: முன்னுறு புணர்ச்சி = இயற்கைப்புணர்ச்சி : அங்கு நின்னிற்பிரியேன் பிரியினாற்றேனென்றது உண்டன்றே. அதனின் அருகலும் உண்டு = தலைமகள் தனது தன்மையைச் சார்த்தலும் உடையள் எ-று.

மெலிதாகச் சொல்லிக் குறை நயப்புக் கூறின இடத்து எம் பெருமான் தனக்குத் தகாத இளிவுபட ஒழுகா நின்றானெனக் கவற்சி உண்டன்றே அது புலப்படாமை நிற்கும். வலிதாகச் சொல்லிக் குறை நயப்புக் கூறினவழி நெருநல் வாரானாயினன் என்றமையின் இறந்து பட்டானென ஆற்றாமை பெரிதாம், அங்குப் புலப்பட நிற்குமென்பது. இனி ஒருதிறத்தார் வேண்டுவது சொல் நிகழ்தலுமுண்டு சொல் நிகழாமையு முண்டென்பது. அஃதாமாறு மெலிதாகச் சொல்லிக் குறைநயப்புக் கூறியவழி முன் இறந்துபட்டான் கொல்லோ எனக் கருதி ஆற்றாமையோடு நின்றாள். உண்மைகேட்டு ஆற்றாமை நீங்

கும்; நீங்க, நாணு வந்தடையும்; அடையத், தோழி முன்னர்நிற்கலான் வேங்கைப்பூக் கொய்தும் மயிலாடுமாறு காண்டும் அருவியாடுதுமென ஒன்றன்மேலிட்டு நீக்கும். அதற்குச் செய்யுள்:—

கணிநிறவேங்கையுங்கொய்துங்கலாபம்பரப்பிநின்று
மணிநிறமாமயிலாடலுங்காண்டும்வல்லத்துவென்ற
துணிநிறவேன்மன்னன்றென்னர்பிரான்சுடர்தோய்பொதியி
னணிநிறமால்வரைத்தூநீரருவியுமாடுதுமே. (கரு)

விரைவளரவேங்கையுங்காந்தளுங்கொய்தும்வியலறைமே
னிரைவளர்மாமயிலாடலுங்காண்டுங்கார்மலிந்தார்
திரைவளர்பூம்புனற்சேலூர்படச்செற்றதென்னன்கொல்லி
வரைவளர்மாநீரருவியுமாடுதும்வாணுதலே. (கசு)

எனச் சொல் நிகழ்ந்தவாறு. வலிதாகச் சொல்லிக் குறை நயப்புக் கூறினவழி நெருநல் வாராஞயினான் ஆதலின் இறந்துபட்டானென ஆற்ருமை நிகழ்ந்து பெருமையாற் சொறபிறவாதெனக் கொள்க.

இனி ஒருசார் ஆசிரியர் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்ததற்கு இடையின்றியே இற்செறிக்கப்பட்ட தலைமகள் தோழிக்கு அறத்தொடுநிற்குமாறு உணர்த்துதனுதலிற்றென்ப. அவர்கூறும் பொருளாமாறு:—தன் உட்குறிப்பினை அருகுந் தோழிக்கு=தன்கண் வேறுபாட்டை அறியுந் தோழிக்கு: முன்னுறு புணர்ச்சியின் அருகலும் உண்டு=முன்னுறு புணர்ச்சி காரணமாகச் சார்தலும் உண்டு. எ-று. என்னை? "முற்படு புணர்ச்சியிற் கடிபடு கிழத்தி - மெய்ப்பாட்டலலம் புரியுந் தோழிக - கேதுவாக வெண்ணிய முறையாற் - கூறவும் பெறூஉங் குறிப்பொடு புணர்ந்தே - கற்புக்கடை காக்குங் கருத்தி னுனை." என்பதன் பொருளாற் தலைமகள் தோழிக்கு அறத்தொடு நின்றதென்ப. அஃது இங்குச் சொல்லவேண்டுவதில்லை. போக்கி, "அந்நா ளிடத்து மெய்ந்நா ணொரீஇ-யறத்தொடு நிற்ற றோழிக்கு முரித்தே." என்பதன் கட் சொல்லுதும். ஒருவர்க்கு ஒருசொற் சொன்னவிடத்து அச்சொல்லப்பட்டார் இந்நிலையராயினுரென்று சொல்லவேண்டுமன்றே? மேற் சூத்திரத்துட் தோழி தலைமகளைக் குறையுறுமென்றும், இச்சூத்திரத்துக் குறையுறப்பட்ட தலைமகள் இன்ன நிலைமையாயினுளென்பது சொல்லவேண்டுமென்பதனுன் மேலதே உரை. இவ்வகை குறைநயப்புக்

கூறப்பட்டாள் தலைமகள் தலைமகனைக் காண உறவினளாம். அக் குறிப்பு உணர்ந்த தோழி தலைமகள் நேர்ந்தாளென்பது அறியநிற்கும் என்பாரு முளர். அதற்குச் செய்யுள்:—

சிலைமிசைவைத்தபுயலுங்கயலுஞ்சென்றோங்குசெம்பொன்
மலைமிசைவைத்தபெருமான்வரோதயன்வஞ்சியன்னாண்
முலைமிசைவைத்துமென்றோண்மேற்கடாயமொய்பூங்குழல்சேர்
தலைமிசைவைத்துங்கொண்டாளண்ணனீதந்ததண்டழையே. (௩௭)

கழுதுகுருதிபடியக்கலிநீர்ச்சடையல்வென்ற
விழுதுபடுநெடுவேன்மன்னனீர்ம்புனற்கூடலன்னா
டொழுதுதலைமிசைவைத்துங்கொண்டாள்வண்டுந்தும்பியுந்தேன்
கொழுதுமலர்நறுந்தாரண்ணனீதந்தகொய்தழையே. (௩௮)

எனக்கொள்க. (௪௧)

௧௨. குறையுறுங் கிழவனை யுணர்ந்த தோழி
சிறையுறக் கிளந்து சேட்படை நிறுத்தலு
மென்னை மறைத்த லெவனா கியவெனா
முன்னுறு புணர்ச்சி முறைமுறை செப்பலு
மாயப் புணர்ச்சி யவனொடு நகாஅ
நீயே சென்று கூறென விடுத்தலு
மறியாள் போறலுங் குறியாள் கூறலும்
படைத்துமொழி கிளவியுங் குறிப்புவேறு கொளலு
மன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை
முன்னுறு புணர்ச்சிக் குரிய வென்ப.

என்-னின், தலைமகனைக் குறைநயப்பித்து அவளது கருத்துணர்ந்து தன்னினுங் கூட்டக்கூட்டலுறுந் தோழி தலைமகன் தெருண்டு வரைந்தெய்தல்வேண்டி இவையெல்லாங் கூறிச் சேட்படுத்து நிறுத்தப் பெறுமென்பதுணர்-ற்று. மதியுடம்படுத்துப் பின்னின்றானைத் தான் இதனை முடிக்கக் கருதுவாள் தன்கண் காணுங் கெடுந்தலையுங் குறியாடிக் கொண்டு ஒழுகுமாறுணர்த்துதல் நுதலிற்றெனவுமாம். (இ-ள்.) குறையுறுங் கிழவனை உணர்ந்த தோழி=குறையுறவின் றான் தலைமகனெனக் கடைப்பிடித்த தோழி: கடைப்பிடியாது செ

ன்ற காலமும் உளவாகலின், இனி அன்னதன்றென்றவாறு. அல்லதூஉங், கிழவனை உணர்ந்த தோழி குறையுறவின்றன் ஆற்றாமையை தலைமகனை உணர்ந்த தோழியென்றுமாம். அல்லதூஉம், இரத்தலுங் குறையுறுத்தலுஞ் செய்து ஆற்றானாகிச் செல்லாநின்ற தலைமகனைத் தன்னிறைச் சுட்ட முடியாதுவிடின் ஆற்றானாமென்பதனைத் திரிவின்றி உணர்ந்த தோழியென்றுமாம். சிறையுறக் கிளந்து சேட்பட நிறுத்தலும் = சிறையென்பது காப்பு, உறவென்பது மிக, கிளத்தலென்பது சொல்லுதல், சேணென்பது அகறல், படவென்பது நிகழ்வு, நிறுத்தலென்பது தழீஇக்கோடல்; காப்புமிகுதி சொல்லி அகற்றித் தழீஇக்கோடலும்: ஆற்றாத தன்மைக்கண் நிறுத்தலென்னுஞ் சொற் தழீஇக்கொள்ளுமென்பது. எனவே, தலைமகனை ஆற்றாமை செய்வனபோன்று வைத்து ஆற்றுவிப்பன சிலசொற் சொல்லுமென்பது போந்தது. இந்நிறுத்தலென்னுஞ்சொற் றழீஇக்கொள்ளுமென்பதன்று, நீக்கி நிறுத்தார் உய்த்துவிட்டார் போக்கிவிட்டார் என்பனபோல ஒருசொல் விழுக்காடுபட நின்றது என்பாருமுளர். அங்ஙனங் காப்பு மிகுதி சொல்லுமாறு; இவ்விடம் மிக்க காவலுடைத்து, நீயிர் வரற்பாலீரல்லீர் என்னும். அதற்குச் செய்யுள் :—

மண்ணிவர்செங்கோல்வரோதயன்வல்லத்துமாற்றலர்க்கு
விண்ணிவர்செல்வம்விளைவித்தவேந்தன்விண்டோய்பொதியிற்
கண்ணிவர்பூந்தண்சிலம்பிடைவாரன்மின்சாப்புடைத்தாற்
பண்ணிவர்வண்டறைசோலைவளாயவெம்பைம்புனமே. (௯௯)

புல்லாவயவர்நறையாற்றழியப்பொருதழித்த
வில்லான்விளங்குமுத்தக்குடைமன்னன்வியனிலத்தா
ரொல்லாமிறைஞ்சநின்றான்கொல்லிமல்லலஞ்சாரலிங்கு
நில்லாதியங்குமின்காப்புடைத்தையவிந்நீள்புனமே. (௪00)

பூவலர்தண்பொழிற்பூலந்தைப்புல்லாவரசழித்த
மாவலர்தானைவரோதயன்கொல்லிமணிவரைவா
யேவலர்இன்சிலையாரொமர்நீங்காதிருபொழுதுங்
காவலராய்நிற்பர்வாரன்மினிரிக்கடிப்புனத்தே. (௪0௧)

இவ்வாறு தோழிசொல்லத் தலைமகன் ஆற்றினவாறென்னையோவெனின் இச்சொல் ஆற்றுவித்தலுமாம். இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்கு உரைப்பாளாயது என்கட்கிடக்

பிரிவினுணராதே இத்துணை என்கட் பரிவுடையாள் எனக்கு இது முடியாமையில்லையென ஆற்றுவானும். இப்படி அருமையுடைத்தாகல் இவளின் ஆகாதென்று உணர்வானாயின் வரைந்தெய்துவானும். இவள் இவையெல்லாந் தலைமகனைச் சொல்லுதற்குக் காரணமென்னையெனின், தனது ஆற்றாமை யான் முடிக்கின்றதனை எளிதென உணரும், அது படாமை அரிதென உணர்வானாக என்றற்கு. இனி அச்சொல்லே ஆற்றுவித்தற்குக் காரணமென்னையெனின், இது முடியாதென உணரின் இறந்துபடுவான்கொல்லோவென்னும் அச்சம் என்பது. இதனை இச்சூத்திரத்திற்கு எங்குந் தந்துரைக்க.

என்னை மறைத்தல் எவனுகியமொழி = ஆற்றானாகின்ற தலைமகனை இஃதிறப்ப இவள் இறந்துபடுமெனநின்ற தோழி என்னை நீர் இவ்வகையிற் றிரிதற்குக் காரணமென்னையென்னும். என, ஒக்கும், எனது ஆற்றாமை இன்னதினாயதென்பதனை யறிகிலள், அறியாதாட்கு இன்னது என் குறையென்பேனாயின் இவண் மறுக்கவும்பெறும், இவளை இன்னும் பலகால் நெகிழ ஒழுகுவேன், இதனாற் றானே அறிந்து முடிக்கும் என்னும். இனி இவள் இன்னது என் குறை என்றானை நுமது குறையை என்னை மறைத்ததனால் நுமக்காவதென்னை என்னும். அதற்குச் செய்யுள் :—

மின்னைமறைத்தசெவ்வேல்வலத்தால்விழிஞத்திலொன்னார்
மன்னைமறைத்தவெங்கோன்வையைசூழ்பௌவநீர்ப்புலவந்
தன்னைமறைத்திளஞாழல்கமழுந்தண்பூந்துறைவா
வென்னைமறைத்திவ்விடத்தியலாதுகொலெண்ணியதே. (௧௦௨)

திண்டேர்வயமன்னர்சேலூரகத்துச்செருவழியக்
கண்டேகதிர்வேல்செறித்தவெங்கோன்கொல்லிக்கார்ப்புனத்து
வண்டோறுங்கண்ணிகொண்டேகுறையுறவந்ததனா
லுண்டேமுடிதலெனக்குமறைப்பினுமுள்ளகத்தே. (௧௦௩)

எனவே, மறையாது விட்டவிடத்து முடிவுண்டு என்றானென்பது.

மூன்று புணர்ச்சி முறை முறை செப்பலும் = மூன்று புணர்ச்சியென்பது இயற்கைப்புணர்ச்சி, அதன் முறையென்பது பாங்கற்கூட்டம், அதன் முறையென்பது தோழி தன்னினாயகூட்

டம்; அஃது என்னை மறையாதுவிட முடிப்பன் என்றாளாம். அதனை என்குறையறிந்திலள், அறிந்த ஞான்று முடித்துத்தருமென ஆற்றுவானும்.

மாயப் புணர்ச்சி அவளொடு நகாஅ நீயே சென்று கூறெனவிடுத்தலும் = அவன் இரந்து பின்னின்றவிடத்து மாயமான புணர்த்துச் சொல்லுகின்றது. இஃது உலகத்து நிகழ்வதொன்றன்றாலோவென்று அவளோடு நகாநின்றே, யாரறிவார் நிகழவும்பெறும் நிகழாமையும் பெறுமே எனினும், யாங் குற்றேவன் மகளிராகலாற் றுணிந்து சொல்லில்லேம் அவளது குறிப்பறியாது; நீயே சென்று நின் குறை சொல்லென்னும். அதற்குச் செய்யுள் :—

சேயேயெனநின்றதென்னவன்செந்நிலத்தேற்றதெவ்வர்
போயேவிசும்புபுகப்பெற்றகோனந்தண்பூம்பொதியில்
வேயேயனையமென்றோளிக்குநின்கண்மெலிவுறுநோய்
நீயேயுரையாய்விரையாரலங்கனெடுந்தகையே. (௧௦௪)

புரைத்தாரமர்செய்துபூலந்தைப்பட்டபுல்லாதமன்னர்
குரைத்தார்குருதிப்புனல்கண்டகோன்கொல்லிப்பாவையன்ன
நிரைத்தார்கருமென்குழலிக்குநீயேநெடுந்துறைவா
வுரைத்தாலழிவதுண்டோசென்றுநின்றுநினுண்மெலிவே. (௧௦௫)

என்னும், என்றவிடத்து ஆற்றானும்; என்னை? உலகத்தார் ஒருவரை ஒருவர் இக்குறை முடித்தல் வேண்டுமென்று இரந்தவிடத்து அஃது எமக்காகாது, நீரே சென்று முடித்துக்கொண்மினென்றால் எத்துணையும் இன்னாதன்றே, அதுபோல என்பது. அவ்வகை ஆற்றானாய் நின்றான். அஃது ஆற்றாமை ஆற்றுவதொன்றினைப் பற்றும். என்னை? நகாநின்றன்றே சொல்லியது. அந்த நகை ஒன்றுடைத்தென ஆற்றுவானுமென்பது. இனி,

அறியாள் போறலும் = தலைமகன் தழையுங் கண்ணியுங் கொண்டு பின்னின்றவிடத்தும் நும்மாற் சொல்லப்படுவாளை அறியேனென்னும். அதற்குச் செய்யுள் :—

பொறிகெழுகெண்டைவடவரைமேல்வைத்துப்பூமியெல்லா
நெறிகெழுசெங்கோனடாநெடுமாறனெல்வேலிவென்றான்
வெறிமெழ்பூங்கண்ணிக்கானல்விளையாட்டயர்கின்ற
செறிகுழலார்பலர்யார்கண்ணதோவண்ணல்சிந்தனையே. (௧௦௬)

தினையாவெதிர்நின்றதெம்மன்னர்சேலூர்ப்படச்சிறுகட்
டினையார்கருங்கைக்களிறுந்திறன்றெண்டிச்சூழ்துறைவாய்
வளையார்வனமுலையார்வண்டலாடும்வரிநெடுங்கண்
ணிணையார்பலருளர்யார்கண்ணதோவண்ணமின்னருளே. (கoஎ)

என்னும். இதுகேட்டு ஆற்றுளும். ஆற்றுளுயினுன் என் குறை இன்னூர்கண்ணதென்று அறிந்திலள், அறிந்த ஞான்று முடித்துத்தருமென ஆற்றுமென்பது.

குறியாள் கூறலும்=இத்தழை நல்ல, இக்கண்ணி நல்ல, இவை கொள்ளற்பாலவென்று கையுறை பாராட்டி நின்ற நிலைமைக்கண் அவற்றை ஏற்றுக்கொள்ளாது மற்றொன்று சொல்லி நீங்கும். அதற்குச் செய்யுள் :—

மன்னன்வரோதயன்வல்லத்தொன்னூர்கட்குவான்கொடுத்த
தென்னன்றிருமால்குமரியங்கானற்றிணைதொகுத்த
மின்னுஞ்சுடர்ப்பவளத்தருகேவிளைநாறுபுன்னைப்
பொன்னந்துகள்சிந்திவானவிற்போன்றதிப்பூந்துறையே. (கoஅ)

காரணிசோலைக்கடையலிடத்துக்கறுத்தெதிர்ந்தார்
தேரணிதானைசிதைவித்தகோன்கன்னித்தென்றுறைவாய்
நீரணிவெண்முத்திறையெடுமணன்மேலிழைத்த
வேரணிவண்டல்சிதைக்கின்றதாலிவ்வெறிகடலே. (கoகூ)

என்பது கேட்டு இவள் இக்குறை முடியாள் அவத்தமே வருகினேன், யான் சொல்லியது இருப்ப ஏதிலதொன்று சொல்லினமையினென்று ஆற்றுளுயினுன். அவ்வாற்றுமை ஆற்றுவதொன்றினைப் பற்றும், ஆற்றுவதாவதியாதோவெனின், இவள் பிறிதொன்றிற்குப் புடைகவன்று நின்ற நிலைக்கண் வந்தேன், அல்லாக்கால் மறுமாற்றந் தாராமை இல்லை, இவள் புடைகவலாது நின்ற நிலைமைக்கண் வருவனென அங்கசையால் ஆற்றுவாளும்.

படைத்து மொழி ளைவியும்=இவள் இத்தழை நல்ல, இக்கண்ணிநல்ல, இம்முத்து நல்ல, இவை கொள்ளற்பாலவென்று கையுறை பாராட்டி நின்றநிலைமைக்கண் இங்ஙனஞ் சொல்லும்; யாதோவெனின், இவ்விடம் என்னையாராலுந் தன்னையாராலும் பலராலும் புகுதாப்பயிலேதோரிடம், தம்மைக்கண்டால் ஏதஞ்செய்வர், கூற்றி

னுங் கடுஞ் சினத்தாராகலான்; நீர் உடையதோர் குறை உண்டேயெனின், அகன்று நின்று முடித்துக்கொள்ளாற் பாலீரென்னும். அதற்குச் செய்யுள்:—

பொன்னையர்வேங்கையம்பூந்தழையேந்திப்புரிந்திலங்கு
மின்னையர்பூணினைவாரற்சிலம்பவிழிருத்தொன்னார்
மன்னையர்வெய்தலைவேல்கொண்டவேந்தனம்மாந்தையன்னாள்
தன்னையர்பல்கால்வருவர்நண்ணன்மினித்தண்புனத்தே. (௧௧௦)

பூட்டியன்மாநெடுந்தேர்மன்னர்பூலந்தைப்பூவழிய
வோட்டியதிண்டேருசிதன்பொதியிலுயர்வரைவா
யீட்டியர்காயினர்வீணையர்வாளியரெப்பொழுதுங்
கோட்டியவில்லர்குறவர்கண்ணன்மினிக்கொய்புனத்தே. (௧௧௧)

இது படைத்துமொழிகிளவியாயினவாறு என்னையோவெனின், பெரியார்களிடமெனப்படுவன பெண்பால்கட்கு உரியவழி ஆண்பால்கள் புகுதலும் ஆண்பால்கட்கு உரியவழிப் பெண்பால்கள் புகுதலுஞ் செய்யப்படாதன. அவற்றைச் செய்யப்பட்டனவாக இல்லாது படைத்துமொழிந்தமையாற் படைத்துமொழிக்கிளவியெனக்கொள்க. அதுகேட்டு ஆற்றானும், என்னை? இவள் ஒருதிறத்தின் நீக்குதற்கு இவ்வாறு சொல்லுகின்றாளென ஆற்றானாயினன். அவ்வாற்றாமை ஆற்றுவதொன்றனைப்பற்றும்; என்பற்றுமோவெனின் இவ்வகை என்கண் ஏதத்திற்குக் கவல்வாளாய் யானெய்தாதுவிடின் உளதாம் ஏதத்திற்குக் கவலுமென ஆற்றுவானும்.

குறிப்புவேறு கொளலும்=தான் கூட்டம் வேண்டுங் குறிப்பினளாயினுஞ் சொல்லுங் கூற்றுங் குறிப்பும் இன்றி வேண்டாத குறிப்பினளாய்க் காட்டுவது: அது கண்டும் ஆற்றானும். என்னை? இவளால் இக்குறை முடியாது, யான் அவத்தமே வருந்துகின்றேனென. இதுகூறியது தானே ஆற்றுதற்குக் காரணம்; பிறிது ஒன்றிற்குப் புடைகவன்று நின்ற நிலைமைக்கண் வந்தேன், புடைகவற்றியில்லா நிலைமைக்கண் வந்தால் ஒரு மறுமாற்றஞ் சொல்லும் பிறவென ஆற்றிப்பெயரும். அஃதேயெனின், மேலனவும் எல்லாங் குறிப்புவேறு கொளலேயல்லவே? இதனையே குறிப்புவேறுகொளலெனச் சொல்லியது எற்றிற்கோவெனின், அவை எல்லாஞ் சொன்னிகழ்ச்சியுடைய, இது சொன்னிகழ்ச்சியின்றிக் கூட்டம் வேண்டாக் குறிப்பினளா

வது எனக்கொள்க. இனிப், பிறர் குறிப்பு வேறுகொளலும் என்பதனைச் சொல்லுமாறு ;—தன்குறிப்பினளன்றி நின்றாட்கு என்சொல்லிச் செல்கேன் என்னும். அதற்குச் செய்யுள் :—

ஆடியன்மாநெடுந்தேர்மன்னராற்றுக்குடியழியக்
கோடியதிண்சிலைக்கோனெடுமாறன்றென்கூடலன்னா
ணீடியவார்குழனீலமுஞ்சூடாணினைந்துநின்றா
டோடியல்பூந்தொங்கலாயறியேனின்சென்றுசொல்லுவதே. (௧௧௨)

நெறிநீவிருஞ்சழிநீலமுஞ்சூடாள்
பொறிமாண்வரியலவனாடலுமாடாள்
சிறுநுதல்வெயர்வரும்பச்சிந்தியாநின்றாட்
கெறிநீர்த்தண்சேர்ப்பயானென்சொல்லிச்செல்கோ.

என இவ்வாறு சொல்ல ஆற்றானாயினான் அச்சொல்லே பற்றுக்கோடாக ஆற்றுமென்பது. அவள் குறிப்பினளன்றி நின்றாளெனச் சொல்லினமையின் குறிப்பினளாய் நின்றபொழுது சொல்லுவாளாமென ஆற்றுவானாம்.

அன்ன பிறவுந் தலைப்பெயல் வேட்கை முன்னுறு புணர்ச்சிக்கு உரிய என்ப = அன்ன மற்றுமுள முன்னுறு புணர்ச்சியைப் போலத் தலைப்பெய்விப்பலென்னும் உள்ளத்தான் சொல்லுதற்கு உரிய கிளவிகளெனக் கொள்க. அங்ஙனம் எய்துவான் புகப்பெறுகுவது கண்டு சிலவோதிச் சிலபுறனடுத்தார் அஃது இலக்கணமாகலானென்பது. அன்ன பிறவும் என்றதனான் இங்ஙனமுஞ் சொல்லும். நீயிர் விருந்தினிராகலான் இவளது அருமையும் பெருமையும் அறியீரன்றே, அவள் தாமரைக்கொட்டையின் அல்லியே போலக் கிளைப்புறங் காப்பச் செல்வாள், இந்நிலத்துக்குமிக்காள் ஒருதலைமகள், எமக்குக் கண்கூடாகச் செல்வதோர் தெய்வமல்லளோ ? அவளைக் கண்ணிற் கண்டு கையிற் கூப்பித் தலையிற் பணிந்து வழிபட்டுச் செல்வதல்லது எம்போல்வார்களால் ஒரு குறைபுணர்த்துந் தன்மையளோ என்று சொல்லும். அதற்குச் செய்யுள்.—

புட்புலம்பும்புனற்பூலக்கைதப்போரிடைப்பூழியர்கோ
னுட்புலம்போடுசெயச்செற்றவேந்தனுறந்தையன்னான்

கட்புலனாய்ச்செல்லுந்தெய்வங்கண்டாய்கமழ்பூஞ்சிலம்பா
வட்கிலனாகியெவ்வாறுமொழிவனிம்மாற்றங்களே. (ககங)

"நெருநலு முன்னா ளெல்லியு மொருசிறைப்-புதலை யாக விற் கிழத்தி நாணி - நேரிறை வளைத்தோ ளின்றோழி செய்த - வா ருயிர் வருத்தங் களைமா யோவென - வெற்குறை யுறுதி ராயிற் சொ றகுறை - யெம்பதத் தெளிய வல்ல ளெமகோர் - கட்காண் கடவு ளல்லளோ பெரும - வாய்சோன் மிளகின் மலையங் கொழுங்கொடி- துஞ்சுபுலி வரிப் புறந்தைவரு - மஞ்சுசூழ் மணிவரை மன்னவன் மகளே."

இவ்வகையுஞ் சொல்லும்:—நீயிர் பெரியீர், யாஞ் சிறியேம், நும்மோடு எம்மிடைக கட்டுரை பொருந்தாதென்னும். அதற்குச் செய்யுள்: —

நடைமன்னுமென்றெம்மைமகிழாவாதுநன்மின்னாவளநாட்
டிடைமன்னுசெல்வாநமரொமாபாழியிகலழித்த
படைமன்னன்றென்குலமாமதிபோற்பணிமுத்திலங்குங்
குடைமன்னன்கோட்டியாகொல்லியஞ்சாரற்குறவர்களே. (ககச)

உற்றவரோநமக்கொண்புறநாட்டுறுசெல்வர்சொல்லின்
மற்றெமராய்விடினவ்வானவன்றானுடைமாணிழையச்
செற்றமர்சேவூர்ப்புறங்கண்டதிங்கட்டிருக்குலத்துக்
கொற்றவன்மாறன்குடகொல்லிவாழுங்குறவர்களே. (ககரு)

இழைவளர்பூணண்ணலீர்ம்புனத்துடனேநீயெமரோ
மழைவளர்மானக்களிறுந்திமாநீர்க்கடையல்வென்ற
தழைவளர்பூங்கண்ணிமன்றுடைவேந்தன்றண்ணம்பொதியிற்
குழைவளராரத்தருவியஞ்சாரற்குறவர்களே. (ககசு)

"இவளே, கான நண்ணிய காமர் சிறுகுடி - நீனிறப் பெருங்கடல் கலங்க வுள்புக்கு - மீனெறி பரதவர் மகளே நீயே - நெடுங்கொடி நுடங்கு நியம மூதூர்க் - கடுந்தேர்ச் செம்மல் காதன் மகனே - நண் ணிச் சுறாவறுத்த வுணங்கல் வேண்டி - யினப்பு ளோப்பு மெமக்குநல னெவனோ - புலவு நாறுதுஞ் செலநின் றீமோ - பெருநீர் விளையுளெ ஞ் சிறுநல் வாழ்க்கை - நும்மொடு புணர்வதோ வன்றே - யெம்ம னோரிற் செம்மலு முடைத்தே."

என ஆற்றாளாயினாள், ஆற்றாலாய் நீயிர் பெரியீர் யாஞ் சிறியே மென்பதொன்றே சொல்லியது. யாலும் அத்தன்மையேனாக எய்த லாமன்றே என்று ஆற்றுமென்பது. இனி இவ்வாறு சொல்லும். அதற்குச் செய்யுள்:—

நீடுநீர்க்கானநெருநலுமித்திலங்கொண்டையவந்தீர்
கோடுயர்வெண்மணற்கொற்கையெம்மூரிவற்றூர்க்குறைவிலம்யா
மாடுங்கழங்குமணிவிளக்குமம்மனையும்
பாடியவைப்பனவும்பந்தர்ப்படுவனவும்பனிநீர்முத்தம்.

முன்னைத்தஞ்சிற்றின்முழங்குகடலோதமூழ்கிப்பெயரா
வன்னைக்குரைப்பனறிவாய்கடலேயென்றலறிப்பேருந்
தன்மைமடவார்தணந்துகுத்தவெண்முத்தந்தலைசூழ்கானற்
புன்னையரும்பென்னப்போகாகாப்பேதுறக்கும்புகாரோவெம்மூர்.

இன்னும், அன்னபிறவும் என்றதனானே தழீஇக்கொள்ளப்படு வனவற்றிற்குச் செய்யுள்:—

வேழம்வினவுதிர்மென்பூந்தழையுங்கொணர்ந்துசிற்றி
ராழும்படையகருமத்திற்போறிரிணைந்தகலீர்
சோழன்சுடர்முடிவானவன்றென்னன்றன்னுதமன்னர்
தாழமழையுருமேர்ந்தியகோன்கொல்லித்தண்புனத்தே. (௧௧எ)

பாவுற்றநீந்தமிழ்வேந்தன்பராங்குசன்பாழிப்பற்றாக்
கோவுற்றவல்லல்கண்டான்கொல்லிச்சாரலெங்கொய்புனத்து
ளேவுற்றபுண்ணொடுமான்வந்ததோவென்னுமீர்ஞ்சிலம்பா
மாவுற்றபுண்ணிற்கிடுமருந்தேநின்கைவார்தழையே. (௧௧அ)

வேனகநீண்டகண்ணாளும்விரும்புஞ்சுரும்பரற்றத்
தேனகநீண்டவண்டார்கண்ணியாய்சிறிதுண்டுதெவ்வர்
வானகமேறவல்லத்துவென்றான்கொல்லிமால்வரைவாய்க்
கானகவாழ்நருங்கண்டறிவாரிக்கமழ்தழையே (௧௧௯)

துடியாரிடைவடிவேற்கண்மடந்தைநன்சொல்லறிந்தாற்
கடியார்கமழ்கண்ணியாய்கொள்வல்யான்களத்தூரில்வென்ற
வடியாரிலங்கிலைவேன்மன்னன்வானேறனிந்தவென்றிக்
கொடையான்மழைவளர்கொல்லியஞ்சாரலிக்கொய்தழையே. ()

அங்கேழ்மலர்நறுங்கண்ணியினையருளித்தரினு
மெங்கேழவருக்கிசையவனபோலாவிருஞ்சிறைவாய்
வெங்கேழயினலங்கொண்டவன்விண்டோய்பொதியிலின்வாய்ச்
செங்கேழ்மலரத்தளிரிளம்பிண்டியின்றீந்தழையே. (கஉக)

வேரித்தடந்தொங்கலண்ணல்விருந்தாயிருந்தமையாற்
பூரித்தமென்முலையேழைபுனையிற்பொல்லாதுகொல்லாம்
பாரித்தவேந்தர்பறந்தலைக்கோடிப்படப்பரிமா
வாரித்தகோமான்மணிநீர்மலயத்துமாந்தழையே. (கஉஉ)

ஏமாண்சிலைநுதலேழையுமேற்குமின்றேனகலாப்
பூமாண்கமழ்கண்ணியாய்நின்றதொன்றுண்டுபூழியர்கோன்
பாமாண்டமிழன்பராங்குசன்கொலலிப்பனிவரைவாய்த்
தேமாண்பொழிலினகத்தன்றியில்லையித்தேந்தழையே. (கஉங)

கைந்நிலத்துச்சிலையாற்கணைசிந்திக்கறுத்தெதிர்ந்தார்
செந்நிலத்துப்படச்சீறியகோன்செழுந்தண்பொதியி
லிந்நிலத்திம்மலைமேலவொவ்வாவிருந்தண்சிலம்பா
வெந்நிலத்தெம்மலைமேலவிச்சந்தனத்தீந்தழையே. (கஉச)

இவையெல்லாம் ஏற்கச் சொல்லிக்கொள்க. அஃதேயெனின், இவற்கு முடிக்கக் கருதுவாள் இவ்வாற்றான் இவனை வருத்துவதெற்றிற்கோவெனின், தன்கண் நாணுக் கெடாத்துணையுங் குறியாடி நாணினது நீக்கத்துக்கட் கொண்டுநிலைகூறுவானென்பது. அஃதேயெனின், முன்னுறுபுணர்ச்சிபோலத் தலைப்பெய்விப்பலென்னும் வேட்கை அவட்குரிய என்றமையான் முன்னுறுபுணர்ச்சியை உணர்ந்தாளோவெனின் உணர்ந்தாள்; அந்நீர்க்கு வரம்பெய்தப்புணர்ப்பாள் என்னை நினைப்பினள் அந்நினைப்பினை ஆசிரியன் தான் முன்னுறுபுணர்ச்சியா ஒப்பித்தானென்பது. (கஉ)

கரு. குறையுறு புணர்ச்சி தோழி தேஎத்துக்
கிழவிக் கில்லை தலைப்பெய லான.

என் - னின், தலைமகளது இலக்கணம் உணர்-ற்று. (இ-ள்) குறையுறு புணர்ச்சி=குறையுறவினாற் புணரும் புணர்ச்சி: தோழி தேஎத்து=தோழிமாட்டு: கிழவிக்கு இல்லை=தலைமகட்கு இல்லை: தலைப்பெயல் ஆன=தலைப்பெய்தற்கு இலக்கணம்.—எ-று. தோழிபக்கம்

நின்றகுறையுறவினாய கூட்டந் தலைமகட்கில்லை என்றவாறு. அஃதியாங்ஙனமோவெனின், இங்குவந்து ஒழுகாநின்றான் ஒரு தோன்றல் உளன், அவன் என்னினாயதோர் குறையுடையான்போலும், அக்குறை இன்றியமையான், அக்குறை முடித்தருளாயாயின் என்னைக் குற்றேவல் இழத்தியென அதற்கஞ்சிக் குறைநேர்ந்து தலைமகளை எற்றுக்கொண்டு கூடுங் கூட்டமில்லை, வழக்கினுட்போல என்பது. "அவ்வியல் பல்லது கூட்டக் கூட - லெவ்விடத் தானுங் களவிற் கில்லை" என அமையாதோவெனின், அது சொல்லிப் போந்து "உள்ளத் துணர்ச்சி தெள்ளிதிற் கரந்து - கிளவோ டேஎத்துக் குறையுறாஅ முளவே - குறிப்பறி வுறாஅங் காலை யான" என்றது சொல்லவே இவ்வகைத் தோழியாற் குறையுறப் புணரும் புணர்ச்சி உண்டுகொல்லோவென்று ஐயமாமென்று மேலதனையே வலியுறுத்தற்குச் சூத்திரம் வேண்டிற்றென்பது.

இனி ஒருசாரார் சொல்லுமாறு, குறையுறுபுணர்ச்சி தோழி தேஎத்துக் கிழவிக்கில்லையென அமையாதோ, தலைப்பெயலான என்றது எற்றிற்கோவெனின், தோழி கூட்டந்தான் தலை இடை கடையென மூன்றுவகைப்பட்டது. அவற்றுட் தலைக்கண்ணே அறியநில்லாது இடையாந்தரத்தும் இறுதிக்கண்ணும் எல்லாம் இவள் கூட்டவே கூடுகின்றேன் என்பதனை அறிந்தே கூடும். இங்ஙனமல்லாவிடத்து "அருள்புரி நெஞ்சமோ டெஃகு துணையாக - வந்தான் கொடியனுமல்லன் றந்த - நீதவ றுடையையு மல்லை நின்வயி - னானு வரும்படர் செய்த - யானே தோழி தவறுடை யேனே." என்னுமாறு உண்டோவென்பது. மற்றும் இப்பெற்றியவெல்லாங் கொள்க. (௧௩)

௧௪. தோழிக் குரியவை கோடாய் தேஎத்து
மாறுகோ ளில்லா மொழியுமா ருளவே.

என்-னின், போய் அறத்தோடு நிலையுணர்த்துவார் அவ்வறத்தொடு நிலைக்கும் முறைமையுணர்—ற்று. (இ-ள்) தோழிக்கு உரியவை=தோழி சொல்லுதற்கு உரிய :கோடாய்தேஎத்து=செவிலித்தாய்மாட்டு : மாறுகோள் இல்லா மொழியுமார் உளவே=மாறுகொள்ளாமைச்சொல்லுஞ் சொற்களும் உண்டு. எ-று. எற்றினானே மாறுகொள்ளாமையோவெனின், தாயறிவினானே மாறுகொள்ளாமையுந் தலைமகள் பெருமையோடு மாறுகொள்ளாமையுந் தலைமகன்கற்பினானே மாறு

கொள்ளாமையுந் தோழிதனது காவலோடு மாறுகொள்ளாமையும் கா ணினோடு மாறுகொள்ளாமையும் உலகினோடு மாறுகொள்ளாமையு மெனக்கொள்க. என்னைத்துக்கண்ணோவெனின், "காப்புக்கைமிக்குக் காமம்பெருகினும்" என்னுஞ்சூத்திரத்துட் சொல்லப்படும் நான்கு இடத்தும் வேறுபாடுண்டாம். அஃது எப்பொழுதுண்டாயிற்று அப்பொழுதே தோழிக்குப் புலனாம்; என்னை? தான் அவள் என்னும் வேற்றுமையிலளாகலான். அவ்வாறாயினவிடத்துத் தோழி எனக்குப் புலனாயினவாறேபோல யாய்க்கும் புலனாமாயின னான்று வாளா ஒழியாள் அறிவாரை வினவும்; வினவின இடத்து வினப்பட்டார் தெய்வத்தினான் ஆயிற்றென்ப. என்னை? பிறிதொன்று சுட்டி உணருந் தன்மைத்தன்று இக்குலமாகலானும் அதுவே சொல்லுதற்பயத்தது தங் கருமமாகலானும் அறியாதேயுஞ் சொல்லுப. சொல்ல, இவள் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும்; செய்விக்கத் தலைமகட்குக் கற்பழியும், என்னை? தன் தலைமகனையன்றிப் பிறிதோர் தெய்வம் வணங்கார் பத்தினியாராகலின். தெய்வத்தை வணங்கக் கற்பழியுமென்று தலைமகள் ஆற்றாளாம். அல்லதூஉம் ஒழுக்கக்குறைபாட்டின் நீங்கி ஓங்கிவாராநின்ற தொல்குலம் மணிக்கலங் கதுவாய்ப்பட்டது போல யான் தோன்றி இவ்வகை அணங்காட்டு அறியாது அணங்காட்டு எடுத்துக் கொள்ளப்பட்டதெனவும், யாம் உற்றது கிரப்பப் பாட்டினும் வேலன்றனது வெறியாட்டு வலத்தினானும் எம்பெருமானை வெறிக் களத்துக் கொண்டுவருங்கொல்லோ என்னும் பேரச்சத்தினானும், எம் பெருமானை அவ்வெறிக்களத்துக் கொண்டுவருகல்லாது என்கண் நின்ற வேறுபாட்டைப் புறத்தார்க்குப் புலனாகாமை மறைப்பதுகொல்லோ எனவும், அங்ஙனம் மறைக்க அதனைக் கேட்டு எம்பெருமான் என்னினாகிய வேறுபாடு பிறிதொன்றினானும் நீங்கும்போலுமென்று உட்கொள்ளுமெனவுந் தலைமகள் ஆற்றாளாமென்று தோழி ஆற்றாளாம். ஆற்றாளாயினாளது ஆற்றாமை ஆற்றுவதொன்றனைப்பற்றும்; என்னையெனின், ஆற்றுவது பிறிதின்மையின் யாய் அறிவாரை வினவுமிடத்து என்னைவினவி யான் அறியேனென்றதன்புறத்தாம் பிறரை வினவுவது; அங்ஙனம் என்னை வினவினவிடத்து இன்னதுசொல்லுவேனென்று கட்டமில் நாட்டவகையாற் சிந்தித்துக்கொண்டிருந்தாள்; இருந்த நிலைமைக்கட் தாய் பிற்றைஞான்று சிறுகாலை படிமக்கலத்தோடும் புக்காள், மகளை அடியிற்கொண்டு முடிகாறும் நோக்கி, அன்னாய் என்மகள் பண்டையளல்லள், ஆகையால் இவ்வேறுபாடு

எற்றினாயிற்று, நின்னால் அறியப்படுவதுண்டோவென்னும்; என்ற விடத்து இவள் அன்றுகொண்டு என்னால் அறியப்படுவதுஞ் சிறிது உண்டு, அது யாதெனின், எம்மைக் கூழைக்கற்றைக் குழவிப்பிராயத்து மாழைகலந்த வேழைநீர்மையாரொடு சிட்டோலஞ்செய்து விளையாடிவம்மினென்று போக்கினாய், போக்கினவழி யாம்போய் ஒரு வெண்மணல் பரந்த தண்மலர்ப் பொழிலிடை விளையாடாநின்றேமாக ஒருதோன்றல் ஒருகுவளைக்குவளைப் பூக்கொண்டு அவ்வழியே போந்தான்; போதர, நின்மகள் அவனை நோக்கிப் பூவை என் பாவைக்கு அணியத் தம்மினென்றாள், அவனும் பிறிதொன்று சிந்தியாது கொடுத்து நீங்கினான்; இஃது அறியாக்காலத்து நிகழ்ந்ததென்னும். அதற்குச் செய்யுள்:—

கந்தார்களிறுகடாய்ச்செந்நிலத்தைக்கறுத்தெதிர்ந்து
வந்தாரவியவைவேல்கொண்டகோன்கன்னிவார்துறைவாய்ப்
பந்தார்விரலிதன்பாவைக்குவேண்டப்பைம்போதொருவர்
தந்தார்தரவவைகொண்டணிந்தாளித்தடங்கண்ணியே. (கஉரு)

திண்போரரசரைச்சேவூரழிவித்ததென்னனன்னீர்
மண்போயழிக்குஞ்செங்கோன்மன்னன்வையைநன்றுடையாள்
கண்போல்குவளையம்போதங்கொர்காளையைக்கண்டிரப்பத்
தண்போதவன்கொடுத்தானணிந்தாளித்தடங்கண்ணியே. (கஉசு)

இஃது அறிவது அறியாக்காலத்து நிகழ்ந்ததனை அறிவதறிந்து, கொண்டாற்குரியார் கொடுத்தாரெனவும் உற்றார்க்குரியார் பொற்றொடி மகளிரென்பதும் நினைந்து, அவனை வழிபடாது பிறிதொன்று ஆவதாயின், இக்குலத்துக்கு வடுவாங்கொல்லோ எனக்கருதினமையான் நின்மகள் வேறுபட்டதென்னும். எனவே, தாயறிவினொடு மாறுகொள்ளாதாயிற்று, விளையாடிவம்மினென்றமையின். இனிப் பெருமையொடு மாறுகொள்ளாதாயிற்று, அக்காலம் நற்செய்கை செய்ததனை இக்காலத்து நினைந்தமையின். இனிக் கற்பினொடு மாறுகொள்ளாதாயிற்று, இவ்வாறன்றிப் பிறிதொன்று ஆயின இடத்துக் குடிக்கு வழுவாமெனக் கருதினமையின். இனித் தனது காவலொடு மாறுகொள்ளாதாயிற்று, இருவரும் இருந்த நிலைமைக்கண் நிகழ்ந்ததென்றமையின். இனி நாணினொடு மாறுகொள்ளாதாயிற்று, அறிவதறியாக்காலத்து நிகழ்ந்ததென்றமையின். இனி உலகினொடு மாறுகொள்ளாதாயிற்று, உற்றார்க்குரியார் பொற்றொடிமகளிரென்றமையின். இதுமாறுகோள் இல்லா

மொழியின் நிகழ்ந்தவாறு. இது பூத்தரு புணர்ச்சி. இனிக் களிறு தருபுணர்ச்சிக்குச் செய்யுள்:—

உறுகற்புடைமையினுள்ளுமிப்பேதையுசிதனென்னார்
மறுகத்திறலுருமேந்தியகோன்கொல்லிமால்வரைவாய்த்
துறுகற்புனமுஞ்சிதைத்தெங்கடம்மையுந்துன்னவந்த
சிறுகட்களிறுகடிந்திடர்தீர்த்தசிலம்பனையே. (கஉஎ)

கனஞ்சேர்குழலமங்கையுள்ளுமிப்போதுங்கடையலொன்றார்
மனஞ்சேர்துயர்கண்டவானவன்மாறன்மைதோய்பொதியிற்
புனஞ்சேர்தினையுங்கவர்ந்தெம்மைப்போகாவகைபுகுந்த
சினஞ்சேர்களிறுகடிந்திடர்தீர்த்தசிலம்பனையே. (கஉஅ)

இவ்வகையும் அவ்வாறேசொல்லிக் கூட்டுக. இனிப் புனல் தரு புணர்ச்சி. அதற்குச் செய்யுள்:—

ஓங்கியவெண்குடைப்பைங்கழற்செங்கோலுசிதன்வையை
வீங்கியதண்புனலாடிவிளையாட்டயர்பொழுதிற்
றேங்கியதெண்டிரைவாங்கவொழுகுநின்சேயிழையா
ணீங்கியபோதருள்செய்தனன்வந்தோர்நெடுந்தகையே. (கஉகூ)

சின்னாண்மறந்திலம்யாழுந்தென்சேவூர்ச்செருமலைந்த
மன்னாள்செலச்செற்றவானவன்மாறன்வையைத்துறைவாய்ப்
பொன்னார்புனலெம்மைவாங்கும்பொழுதங்கோர்பூங்கணைவே
ளன்னானொருவனன்றெமக்குச்செய்தவாரருளே. (கரு௦)

இவையும் அவ்வாறே உரைத்துக் கொள்க.

காமர்கடும்புனல்கலந்தெம்மோடாடுவா
டாமரைக்கண்புதைத்தஞ்சித்தளர்ந்ததனோடொழுகலா
னீணாகநறும்பைந்தார்தயக்கப்பாய்ந்தருளிஞற்
பூணாகமுறத்தழீஇப்போதந்தானகலகலம்
வருமுலைபுணர்ந்தானென்பதனானென்றோழி
யருமழைதரல்வேண்டிற்றருகிற்கும்பெருமையளே.

என இதுவும் புனல் தருபுணர்ச்சி. இனி உம்மையான் மாறு கோளில்லாக் குறிப்பும் உளவெனக் கொள்க. அக்குறிப் புநிகழுமாறு; இவனை வினவாதே அறிவாளை வினவின் அஃதறிவார் தெய்வத்தினுன்

ஆயிற்றென்பது. என்றக்காற் தெய்வத்திற்கு வழிபாடுசெய்விப்பான் வேலனைக் கூவி வெறியாட்டெடுத்துக்கொண்டு வெறியாடுமிடத்து வேலற்குச் சொல்லுவாளாய்ச் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

வண்டாரிரும்பொழில்வல்லத்துத்தென்னற்குமாறெதிர்ந்த
விண்டாருடலின்மறியறுத்தூற்றிவெறியயர்ந்து
தண்டார்முருகற்றருகின்றவேலதண்பூஞ்சிலம்ப
ஞெண்டாரகலமுமுண்ணுங்கொலோநின்றுறுபலியே. (கஙக)

"முருகயர்ந்து வந்த முதுவாய் வேல- சினவ லோம்புமதி வினவுத லுடையவென் - பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு - சிறுமறி கொன்றிவ ளறுநுத னீவி - வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய - விண் டோய் மாமலைச் சிலம்ப - ஞெண்டா ரகலமு முண்ணுமோ பலியே."

என்பனவற்றால் என்சொல்லப்பட்டதாம்? சிலம்பன் தண்டா ரகலமும் பலியுண்ணுமேற் தக்கது நின்றுற் செய்யப்படுகின்றதென்ற வாறு. அதுகேட்டுத் தாய் என்சொல்லியவாறோ என்னும், அவள் குறிப்பறிதற்கு. என்ற விடத்து, மேற்சொல்லியவாறே அறத்தொடுநிற்பா ளாம். இனித்தெய்வம் ஏறியதுகண்டு அருகுநின்றார்க்கு உரைப்பா ளாய் உரைக்கும். அதற்குச் செய்யுள்:—

வாரணங்குங்கழல்வானவன்மாறன்வண்கூடலன்ன
வேரணங்கும்மிளமென்முலையாட்கிருந்தண்சிலம்பன்
றாரணங்காதலறிந்தும்வெறியின்கட்டாழ்ந்தமையா
லாரணங்காயினுமாகவிச்செவ்வேளறிவிலனே. (கஙஉ)

பொன்னணங்கீர்ம்புனற்பூலந்தையொன்னார்புலாலளைந்த
மின்னணங்கீரிலைவேற்றென்னன்கோன்வியனாட்டவர்முன்
றன்னணங்கன்மையறிந்தும்வெறியின்கட்டாழ்ந்தமையான்
மன்னணங்காயினுமாகவிச்செவ்வேண்மதியிலனே. (கஙக)

"கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த - பறியாக் குவளை மலரொ டு காந்தட் - குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப் - பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மக - ளருவி யின்னியத் தாடு நாடன் - மார்புதர வந்த படா மலி யருநோய் - நின்னணங் கன்மை யறிந்து மண்ணூந்து- கார்நறுங் க டம்பின் கண்ணி சூடி - வேலன் வேண்ட வெறிமனை வந்தோய் - கட வு ளாயினு மாக - மடவை மன்ற வாழிய முருகே."

என இவ்வாறு சொல்லக்கேட்ட தாய் என்சொல்லியவாறோவெ ன்னும், அவள் குறிப்பறிதற்கு. என்றவிடத்து, மேற்சொல்லியவா றே அறத்தொடுநிற்பாளாம். (கச)

கரு. முற்ப டப்புண ராதசொல் லின்மையிற் கற்பெனப் படுவது களவின் வழித்தே.

என்-னின், கற்பிலக்கணமாமாறுணர்-ற்று. (இ-ள்.) முற்ப டப் புணராத சொல் இன்மையின் = மொழிமாற்றுச்சூத்திரம், அத னைப் புணராது முற்படச் சொல் இன்மையினென்று மொழிமாற்றிக் கொள்க: கற்பு எனப்படுவது களவின் வழித்தே = கற்பென்பதற் குச் சிறப்புடையது களவின்வழித்து.—எ-று. என்னை? புணராது முன்சொல் இன்மையிற் கற்பென்று சிறப்பிக்கப்பட்ட ஒழுக்கங் கள வென்னும் ஒழுக்கத்தின்வழித்தென்றவாறு. களவின்கட் புணராது முன்சொல் இலையெனவே புணராதமுன் சொல் நிகழுமென்பானை மறுத்தாராம். இனிப் புணராத முன் சொல் இல்லையெனவே புணர் ச்சியுள்ளும புணர்ச்சிப் பின்னும் சொல் உளவெனப்பட்டதாம். ஆயினும் புணர்ச்சியுட் புலனல்ல அவர்க்குத் துப்பரியனல்லதெ ன்பது. இனிப் புணர்ச்சியிற் பின்சொற்கள் புலனும்; அவை யாவை யோவெனின், நயப்புணர்த்தினவும் பிரிவச்சமும் வன்பொறையும் எனக்கொள்க. அப்பெறற்பட்ட களவொழுக்கின்வழி நிகழ்ந்து பின்னைத் தமரால் பெற்றெய்துதல் கற்பெனக்கொள்க; எனவே, இவ்வாற்றானும் உலகக் களவன்று என்பதுபெற்றாம், உலகக்களவு புணராதமுன்னுஞ் சொன்னிகழ்ச்சியுடைமையின். கற்புக் களவின் வழித்தென்றது எனப்படுவதென்றது எற்றிற்கோவெனின், கள வின்வழி நிகழாதேயும் உண்டு உலகக்கற்பு, அஃது இத்துணைச் சிறப்பின்றென்றற்குச் சொல்லப்பட்டது. எனவே, இச்சூத்திரப் பொருள் களவினையுங் கற்பினையுந் தழீஇயிற்றென்பது. (கரு)

கசா. களவினுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே வரைவிடை வைத்த காலை யான.

என் - னின், களவுக்காலத்துச் சென்று ஒழுகாநின்ற தலைமகற்கு இடையிடும் இடையீடு இவை யென்பதுணர்-த்து. (இ-ள்) களவினுட் தவிர்ச்சி = களவுக்காலத்துத் தலைமகன் புண

ராது இடையீடும் இடையீடு : தலைமகளையெய்தாத நாளெனினும் ஒக்கும்; காப்பு மிகின் உரித்தே = காப்பு மிக்கவழியும் உரித்து: வரைவிடை வைத்த காலை ஆன = வரைவிடைக்காலத்தானும் உரித்து. எ-று. களவினுட் தவிர்ச்சி காப்பு மிக்கவழியும் உரித்து வரைவிடைவைத்த காலத்துக்கண்ணும் உரித்தென்றவாறு. காப்பென்றது தாய்துஞ்சாமை, நாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, காவலர்கடுகுதல், நிலவுவெளிப்படுதல், கூகைகுழறல், கோழிகுரற்காட்டல் எனவிவை. மிகுதலென்பது பெருகுதல்; அஃது ஒன்று பன்னாளும் வருதலும், பல மயங்கி வருதலும், முறையாற் றோன்றி வருதலுமென இத்திறத்தான் ஆமென்பது. அவற்றுட் தாய்துஞ்சாமையென்பது இரவுக்குறிவந்து ஒழுகாநின்றகாலத்து ஒருநாட் தாய்கண்படாளாகி மகளை அறிவும் ஆசாரமும் கற்பித்தற்பொருட்டாக இருக்கும்; இருந்தகாலத்து இதுவும் இடையீடாமென்பது. நாய்துஞ்சாமையென்பது வழியறிஞமலி பட்டதற்கு எப்பொழுதுங் குரைத்தக்கால் அதுவுமாகாதென்றவாறு. என்னைகொல்லோ இவ்விடத்துப் பலகாற் குரையாநின்றதென ஆராய்ச்சிவரும், அதனால் இடையீடாமென்பது. ஊர்துஞ்சாமை என்பது ஊர்கொண்ட பெருவிழாநாளாய்க் கண்படையில்லையாமாக அதுவும் இடையீடாமென்பது. அவை மதுரை ஆவணியவிட்டமே உறையூர்ப் பங்குனியுத்திரமே கருவூர் உள்ளிவிழாவேயென இவைபோல்வன. பிறவும் எல்லாம் அப்பெற்றியானபொழுதும் இடையீடாமென்பது. காவலர்கடுகுதலென்பது காவலரென்பார் காப்பாளர். ஊர்காத்தல் இடங்காத்தல். என்னை? இவற்றைக் கடிதுகாத்துமென்று காவலாளர் ஏமஞ்சூழ்ந்து விளக்கினொடு திரிதருவாரன்றே அப்பெற்றியானபொழுதும் இடையீடாமென்பது. நிலவுவெளிப்படுதலென்பது நிலாப் பகல்போலும் பெற்றித்தாய் ஞாயிறுபட்டவாறே எழுந்து ஞாயிறெழுந்துணையும் விளக்கின ஞான்றும் இடையீடாமென்பது, பிறவுமன்ன. இவற்றுக்கெல்லாங் "காமமிக்க கழிபடர்கிளவி" என்னுஞ் சூத்திரத்துட் செய்யுட் காட்டுதும். வரைவிடைவைத்த காலையான என்பதே சூத்திரமாகிற், காப்புமிகினும் வரைவிடைவைத்தகாலையுங் களவினுள் இடையீடாமென்பது பொருந்தாது வரைவிடை காப்பு மிகினும் இடையீடாமென்பதன்றியெனின், அஃதே வரைவிடை வைத்த காலையானுமென்னும் உம்மை ஈறு திரிந்து வரைவிடை வைத்த காலையானவென நின்றது. உம்மையிடைச்செல்லாகலின் ஈறு

திரியும்; என்னை? "உம்மீறு திரிதலும் பிறிதவ ணிலையலு-மின்னவை யெல்லா முரிய வென்ப." என்பது இலக்கணமாகலான் என்பது. (கக)

கஎ. அல்லகுறிப் படுதலு மவ்வயி னுரித்தே
யவன்வர வறியுங் குறிப்பி னான.

என்-னின், இதுவுங் களவின் இடையீடாமாறுணர்-ற்று. (இ-ள்.) அல்ல குறிப்படுதலும்=குறியில்லததனைக் குறியாகக் கருதலும் : குறியாமாறு போக்கிச்சொல்லுதும். அவ்வயின் உரித்தே=இதுவுங் களவினுள் இடையீடாதற்கு உரித்து: அவன் வரவு அறியுங் குறிப்பின் ஆன= அவன்வரவினை அறியுங் குறிப்பு அவனானன்றிப் பிறிதொன்றின் நிகழ்ந்தவிடத்து.—எ-று. அஃதாமாறு; தலைமகன் இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற காலத்து ஒருநாட் தலைமகன் செல்லாமே அவனாற் செய்யப்படுங் குறிப்புக்கள்தாமே வெளிப்பட்டன. அவை புன்னைக்காய் நீரிலிடுதலும், புள்ளெழுப்புதலுமென இவை. அவை வேறுபடிநிகழுமாறு;—புன்னைக்காய் மூக்கு வீழ்ந்தும் விழும், வளி எறியவும் விழும், புட்டுளக்கவும் விழும்; புள் எழுப்புமிடத்து வெருவியும் எழும், வேற்றுப்புள்வரவும் எழும். இவைகண்டு இவனின் ஆயினவெனக் கருதிக் கொண்டு போந்து அவ்விடம் புகுந்து அவனின்மை உணர்ந்து போந்து மனையகம் புகுந்த பின்னை அவன் வந்து அக்குறிசெய்யும்; செய்தக்கால் இரண்டாவதுகொண்டு போகல் ஆகாதன்றே, என்னை? சிறிது முன்னாகப் போனானன்றே, வக்கைப்புடைபெயராமைப் போகின்றுவொன்று உற்றார்மன் நின்று வாய்தலானென்பது. அகத்தினின்று நின்னின் ஆகாதன கண்டு வந்து நின்றுபோந்தேம் என்பதனை அவனுக்கு உணர்த்தும் திங்கள் மேலீட்டானும் அன்னத்தின் மேலீட்டானுமென்பது. அதற்குச் செய்யுள் :—

அலைறவாயதிர்கழல்வேந்துகலாத்துக்குடியழித்த
கறைவாயிலங்கிலைவேன்மன்னன்கன்னியங்கானலின்வா
யுறைவாயணிவளாயாயென்கொலோவிவ்விரவினெல்லாந்
துறைவாயிளம்புன்னைமேலன்னமொன்றுந்துயின்றிலவே. (கஉச)

பூவின்றவேன்மன்னன்பூலந்தைவான்புகப்பூட்டழித்த
வேனின்றவெஞ்சிலைவேந்தனிராணுந்தகனறியும்

பானின்றவின்றமிழன்னநல்லாய்நம்பைங்கானலின்வாய்த்
தூநின்றமென்சிறையன்னமின்றொன்றுந்துயின்றிலவே (௧௩

பின்னிருங் கூந்தலென் றோழி நடையொக்கு
மன்ன னனையாதி வாழி கடலோதம்.

அரவணை மென்றோ ளனுங்கத் துறந்து
காவல மென்றோணாக் கண்ட தில்லையே
யிரவெலா நின்றுயா லீர்ங்கதிர்த் திங்காள்.

இவற்றுள் யாதானும் ஒன்றன்மேல் வைத்துச் சொல்வது. இரவெலாம் என்பாலாராய் நின்று துயிலாராயினார் போலும். என்னை? தாந் துயிலாது நின்றாரன்றே, துயிலாதன அறிவார், இவற்றின் துயிலெழ வினையேனது குறியென வந்து பெயர்ந்தார் போலுமென ஆற்றானாய்ப் பெயரும். பெயர்வான் இறந்துபடானாயிற்று எற்றிற்கோவெனின், இறந்துபடானன்றே யான் இறந்துபடின் இவளும் இறந்துபடுமெனக் கருதியென்பது. அவ்வகைப் பெயர்வான் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

ஒளியார்திருநுதலாளையெளியளென்றுள்ளிவந்து
விளியாவருந்துயர்செய்தமையால்விழிஞத்துவென்ற
களியார்களிற்றுக்கழனெடுமாறன்கடிமுனைமேற்
றெளியாவயவரிற்றேய்வாயளியவென்சிந்தனையே. (௧௩௬)

"குலைகடற் றிரையது பறைதபு நாரை - திண்டேர்ப் பொறைய னொண்டி முன்றுறை - யயிரை யாரிரைக் கணவந் தாங்குச் - சேய ளரியோட் படாதி - நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே."

எனக்கண்டுகொள்க. (௧௭)

௧௮. குறியெனப் படுவ திரவினும் பகலினு
மறியக் கிளந்த விடமென மொழிப.

என்-னின், குறியாமாறுணர்-ற்று. (இ-ள்.) குறியெனப்படுவது = குறியென்று சொல்லப்படுவது: இரவினும் பகலினும் என்றாராயினும் மொழிமாற்றிப் பகலின்கண்ணும் இரவின்கண்ணுமெனக் கொள்க, பகற்குறி நிகழ்ந்தபின்னை இரவுக்குறி நிகழ்ற்பாலதாகலான். அவ்வொழுக்கம் நிகழ்ந்த முறைமை நோக்கி மொழிமாற்றிச் சூத்திரம் உரைக்

கப்படும். அஃதேயெனின், குறியெனப்படுவது பகலினும் இரவினு மெனா அமையாதோவென்பது கடா; அதற்கு விடை, அவ்வொழுக் கம் மறைத்தலைத் தனக்கு அணிகலமாக உடைத்தாகலான் இரவுக்குறி பொருந்தியதனைப் பகற்குறி பொருந்திற்று என்பதனை உணர்த்து தற்பொருட்டுச் சூத்திரத்துள் இரவினும் பகலினுமெனா இரவுக்குறி முன்வைக்கப்பட்டது. அறியக் கிளந்த இடமெனா மொழிப=உணா ரச்சொல்லப்பட்ட இடமென்ப ஆசிரியர்—.எ-று. யார்க்கு யாரோ சொல்லுபவெனிற், தோழி தலைமகற்குச் சொல்லியது. அஃதாமாறு தலைமகன் தோழியை இரந்து குறையுற்றுப் பின்னின்ற இடத்து ஆற்றுவன சிலசொற் சொல்லி ஆற்றுவித்துக் குறைநயப்பித்து அவ் வாறு நின்றதோழியைப் பின்னுந் தலைமகன் எதிர்ப்படும்; எதிர்ப்பட் டானை இன்ன இடத்து வா என்று குறிப்பினான் உணர்த்தும். அதற்குச் செய்யுள்:—

மருள்போல்சிறைவண்டுபாடநிலவன்னவார்மணன்மே
லிருள்போல்கொழுநிழற்பாயறிந்தார்கட்கின்றீர்ந்தமிழின்
பொருள்போலினிதாய்ப்புகழ்மன்னன்மாறன்பொதியிலின்கோ
னருள்போற்குளிர்ந்தன்னமூர்துன்னுதீர்த்தெங்களாடிடமே. (கஉஎ)

காவியந்தண்டுறைசூழ்ந்துகடையற்கறுத்தவர்மேற்
றூவியம்பெய்தவன்றென்றிவண்டார்புன்னைத்துமலர்க
டாவியவெண்மணற்றுய நிந்தார்கட்குத்தண்டமிழி
ஞவியும்போலவினிதாயுளதெங்களாடிடமே. (கஉஅ)

அதுகேட்டு இவ்விடத்துக்கண் வர என்றான், என்பதனை உ ணர்ந்து அவ்விடத்துச் செல்லும். செல்லத், தலைமகன்வரவு உணர்ந்து, தோழி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசென்று, யான் செங்காந்த ட்பூக் கொண்டுவருவேன், அவ்விடத்துத் தெய்வமுடைத்து, நின்னுல் வரப்படாது, நீ அவ்வளவும் இப்பொழிலகத்தே நில்லென்று கிறீஇ நீங்கும். அதற்குச் செய்யுள் :—

அஞ்சிறைவண்டறைகாந்தளம்போதுசென்றியான்றருவேன்
பஞ்சுறைதோல்குலாய்வரற்பாற்றன்றுபாழியொன்னார்
நெஞ்சுறையாச்செற்றவேன்மன்னனேரிநெடுவரைவாய்
மஞ்சுறைசோலைவளாய்த்தெய்வமேவும்வரையகமே. (கஉகூ)

நீவிளைகோதையிங்கேநினின்றல்வரற்பாலதன்று
தீவிரிகாந்தள்சென்றியான்றருவேன்றெய்வமங்குடைத்தாற்
பூவிரிவார்பொழிற்பூலந்தைவானவன்பூவழித்த
மாவிரிதானையெங்கோன்கொல்லிசூழ்ந்தவரையகமே. (கசா)

“செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த - செங்கோ லம்பின் செங்கோட் டியானைக் - கழறொடி சேய குன்றங் -குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.”

இவ்வாறு சொல்லி நீங்கும். நீங்கத், தலைமகள் அப்பொழிலகத்து நிற்கும்; நின்றாளைத் தலைமகன் எதிர்ப்பட்டுப் புணரும். புணர்ச்சியிறுதிக்கட் டோழி வந்து நின்கைபோலக் கார்தண் மலர்ந்தன கொண்டுவந்தேன், எம்பெருமாட்டி, நீட்டித்தாளென்று சிறியருளாது போந்தருளென்று அவளைக் கொண்டுபோய் ஆயவெள்ளத்தோடுங் கூட்டும். இது பகற்குறியாமாறு. இவ்வகைப் பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும்பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலான் ஆற்றாளாய் நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து கடலிற் காணுங், கானலிற் காணும், புள்ளிற் காணும், நெஞ்சிற் காணும், வறிதே குழவி அழுதாற்போலும் ஒருசொற் சொல்லும், அவ்வகைசொல்லும் அதற்குச் செய்யுள் :—

பொருமாமணிமுடிமன்னரைப்பூலந்தைப்பூவழித்த
குருமாமணிவண்ணன்கோனெடுமாறன்குமரிமுன்னீ
ரருமாமணிதிகழ்கானலின்வாய்வந்தகன்றகொண்கன்
றிருமாமணிநெடுந்தேரொடுசென்றதென்சிந்தனையே. (கசக)

தலைமகள் அவ்வாறு சொல்லின அவ்விடத்துத் தலைமகன் கேட்பின் வரைந்துபுகுவானும். தோழி கேட்பிற் தலைமகனை வரையுடாவுவாளாம். யாருங் கேட்பார் இல்லையாயிற் தலைமகள் சொல்லி ஆற்றுவாளாம். மூடியிருந்து வேவதோர் கொள்கலம் மூடி திறந்தவிடத்து ஆவி எழுந்து முன் நின்ற வெப்பம் நீங்கினாற்போல அச்சொற் சொல்ல ஆற்றாமை பண்டையிற் சிறிதளவு படுதலாம். இனிப் பகற்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும்பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலாற் தலைமகள் ஆற்றாளாயின இடத்துத் தோழி அவள் ஆற்றாமைக்குப் பரிந்து உடனுயிருந்த புள்ளு நோக்கி இலை

கண்டு ஆற்றிச் செல்வாட்கு இவையும் நீங்கின, இனி எங்ஙனம் ஆற்றுங்கொல்லோவெனத் தலைமகற்குச் சிறைப்புறத்தானாகச் சொல்லும். அதற்குச் செய்யுள்.—

அன்னம்புணையுநடையாள்புலம்பெய்தவத்தமென்னும்
பொன்னஞ்சிலம்புகதிரோன்மறைதலும்போயினவாற்
றென்னன்றிருமால்கழனெடுமாறன்றிருந்துசெங்கோன்
மன்னன்குமரிக்கருங்கழிமேய்ந்தவண்டானங்களே. (கசஉ)

பொருங்கழன்மாறன்புல்லாமன்னர்பூலந்தைப்பூங்குருதி
மருங்கழிநீர்மூழ்சக்கண்டவெங்கோன்றொண்டிக்கானல்வண்டார்
கருங்கழிமேய்ந்தசெங்கால்வெள்ளையன்னங்கதிரொடுந்தம்
பெருங்கழிகாதன்மைநீங்கியிவணிற்பிரிந்தனவே. (கசங)

மேயினதம்படையோடுமெம்மெல்லியலாளைவெந்தீப்
பாயினமாலைக்குக்காட்டிக்கொடுத்துப்பரந்துமண்மே
லாயினசீரிகேசரிக்கன்றளநாட்டுடைதம்
போயினதெவ்வரிற்போயினகானலிற்புள்ளினமே. (கசச)

இவ்வகை சொல்லக்கேட்ட தலைமகன் யான் வந்தொழுகாநின்ற இவ்வொழுகலாறுதான் அவட்கு ஆற்றாமைக்குக்காரணமாயிற்றுப்போலுமென அவ்வாறு வந்தொழுகாது வரைந்துபுகுவானும். இவ்வகை எல்லாம் பகற்குறியுள்ளேஅடங்குமெனக் கொள்க.

இனி இரவுக்குறியாமாறு.

பகற்குறிவந்து ஒழுகாநின்ற தலைமகன் இன்று தெருளும் நாளைத் தெருளுமெனத் தெருளானாய் நெடுங்காலமும் வந்தொழுக இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாயினவிடத்து இவள் இறந்துபடும், இவள் இறந்துபட இவனும் இறந்துபடுவனென ஆற்றாளாய் வரைவுகடாவுதற்குச் செறிப்பறிவுறுக்கின்று முன்னுடைத்தாக அறிவுறாஉம். என்னை? கதுமெனத் தமர் இற் செறித்தவிடத்து எமர் எம்மை இற்செறித்தாரென்ற ஞான்று ஆற்றாளாகவும் பெறும்; அதனான் முற்படவே செறிப்பறிவுறாஉம்; என்னை? ஆற்றாளெனிற் சொல்லுவது தெளியச் சொன்னேன், அத்தெருட்டுதற் பொருட்டென்பது. இனித் தோழி வரைவுகடாவுகின்ற குறிப்பினான் வரைவுகடாவுதலும் வெளிப்படையான் வரைவுகடாயுதலுமென இருதிறத்தன. அவற்றுட் குறிப்பி

ருன் வரைவுகடாவுமாறு. யாய் எம்மை உறுப்பிற் குறிக்கொண்டு நோக்கினுளென்னும். எனவே, தலைமகன், இவர் இற் புறத்துப்போய் விளையாடும் பதத்தரலர், இவளை இற்செறிக்க வேண்டுமென்று போ லும் அவ்வாறு நோக்கியதெனத் தெருண்டு வரைந்தெய்துவானும். யாய் உறுப்பிற் குறிக்கொண்டு நோக்கினுளென்னும் அதற்குச் செ ய்யுள்:—

நீர்வண்ணன்வெண்டிரைமேனின்றவேந்தனெல்வேலியொன்னார்
போர்வண்ணம்வாட்டியபூழியன்பூந்தண்குருந்தொசித்த
கார்வண்ணம்போல்வண்ணன்காவிரிநாடன்னகாரிகையா
ளோர்வண்ணநோக்கிப்பினென்னையுநொக்கினளெம்மனையே. (கசரு)

அல்லது இவ்வாற்றானுஞ் செறிப்பறிவுறூஉம். அதற்குச் செ ய்யுள்:—

செயன்மன்னுமாவதுசொல்லாய்கிலம்பசென்பாழிவென்ற
கயன்மன்னுவேல்பொறிக்காவலன்மாறன்கடிமுனைமே
லயன்மன்னர்போற்கொய்துமாள்கின்றதாலணிவானுரிஞ்சும்
புயன்மன்னுகோட்டமணிவரைச்சாரலெம்பூம்புனமே. (கசசு)

என்னேரழிபாவகையென்னைவெற்பவிருந்திறைவாய்
மன்னேரழியவென்றான்முனைபோற்கொய்துமாள்கின்றதான்
மின்னேர்திகழுமழைகால்கிழியவியலறைவாய்ப்
பொன்னேர்திகழுமணிவரைச்சாரறபுனத்தினையே. (கசஎ)

இனி இவ்விடத்து வரப்பெறாய் என்பதுபடத் தலைமகற்குத் தோழி முன்னின்று சொல்லவும்பெறும். இனி முன்னிலைப்புறமொ ழியாகத் தலைமகன் வரவு உணர்ந்து வேங்கைக்கு உரைப்பாளாய்த் தலைமகன்கேட்ப இவ்வாறு சொல்லியுஞ் செறிப்பறிவுறுத்தும். அதற் குச் செய்யுள்:—

திரையார்குருதிப்புனன்மூழ்கச்செந்நிலத்தன்றுவென்ற
வுரையார்பெரும்புகழ்ச்செங்கோலுசிதனொண்பூம்பொதியில்
வரையார்தினைப்புனங்கால்கொய்யநன்னுள்வரைந்துநின்ற
விரையார்மலரிளவேங்காய்நினக்குவிடையில்லையே. (கசஅ)

வாளுடையான்முடிமேல்வளையேற்றியும்வஞ்சியர்தங்
கோளுடையாப்படைகோட்டாற்றழியத்துங்கொண்டவென்றி

தானுடையான்றென்னன்சத்துருதரந்தரன்பொன்வரைமேன்
மீனுடையான்கொல்லிவேங்காய்நினக்குவிடையில்லையே. (கசக)

இவ்வகையுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

நன்றுசெய்தாமல்லநன்னுதலாய்நறையாற்றுவெம்போர்
நின்றுசெய்தாருந்திவந்தெகெங்கைக்களிற்றுடலார்
குன்றுசெய்தான்கொல்லிவேங்கையைமெல்லரும்பாகக்கொய்த
லன்றுசெய்தாமெனினிற்பதன்றோநம்மகன்புனமே. (சரு)

இங்ஙனமுஞ் சொல்லும். அதற்குச்செய்யுள்:—

உலம்புனைதோண்மன்னரோடவல்லத்தட்டவருரிமை
கலம்புனைகோதையரல்லல்கண்டான்கொல்லிச்சாரனண்ணி
வலம்புனைவில்லோடிருவிப்புனங்கண்டுவாடிநின்றார்
சிலம்பனைநையற்கவென்னுங்கொல்வேங்கைச்செழும்பொழிலே. ()

இவ்வாறுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

பொருங்கண்ணிசூடிவந்தார்படப்பூலந்தைப்பொன்முடிமே
லிருங்கண்ணிவாகையணிந்தவெங்கோன்கொல்லியீர்ஞ்சிலம்பிற்
கருங்கண்ணிகாக்கின்றபைம்புனங்காலசெய்யநாளுநைத்த
பெருங்கண்ணியானாப்பொன்வேங்கையென்றோவின்னும்பேசுவதே.

இங்ஙனமுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

பைந்நின்றவாடரவேரல்குலாள்செல்லநாட்பணித்த
விந்நின்றவேங்கைகுறையாதிளஞ்சந்தனங்குறைத்தார்
மெய்ந்நின்றசெங்கோல்விசயசரிதன்விண்டோய்பொதியின்
மைந்நின்றசாரல்வரையகவாணர்மடவியரோ. (கருரு)

இவ்வகை செறிப்பறிவுறுக்கப்பட்ட தலைமகன் தெருளானு
யினன் இன்னநாள்வரைவல் அத்துணையும் இவளை ஆற்றிக்கொண்டிரு
நினக்கு அடைக்கலமெனக் கைப்பற்றும்; கைப்பற்ற, அதனைத்
தோழி கூறுவாகக் கருதினாள். உலகத்துக் கூறுவார் பார்ப்பானை
யும் பசுவையும் பெண்டிரையுந் தொட்டே கூறுப ஆகலாற் கூறற்
றொன்பதனை நினைந்து நீவரைவலென்றதால் அமையாதோ? கூற
வேண்டுமோ? பொய்த்தும் வாய்த்தும் உடையாரன்றே கூறுவார்?

மெய்யல்லது சொல்லாதாற்குச் சூளுறவேண்டுமோ? நின்கண்ணும் பொய்யுண்டாகின், மெய்யென்பது இவ்வுலகத்து நிலைபெறும்வழி இல்லையாகாதே என்னும். அதற்குச் செய்யுள்:—

நெய்யொன்றுவேனெடுமாறன்றென்னுடன்னரேரிழையிம்
மையொன்றுவாட்கண்மடந்தைதிறத்திட்டறந்திரிந்து
பொய்யொன்றுநின்கண்ணிகழுமென்றாற்பின்னைப்பூஞ்சிலம்பா
மெய்யொன்றுமின்றியொழியுங்கொல்லோவிவ்வியலிடத்தே.(நுச)

மைப்பாலிரும்புனற்சேவூரொதிர்நின்றசேரலர்கோன்
வரைப்பாலடையச்செற்றான்வையையன்னநுடிறத்துவண்டார்
விரைப்பானறுங்கண்ணியாய்பொய்மைநீசொல்லின்மெய்மையென்ப
துரைப்பார்பிறரினியாவர்கொல்லோவிவ்வுலகினுள்ளே. (சநுரு)

"வெள்ளி விழுதொடி மென்கரும் புலக்கை - வள்ளி நுண்ணிடை வயின்வயி னுடங்க - மீன்சினை யன்ன வெண்மணற் குவைஇக் - காஞ்சி நீழற் றமர்வளம் பாடி - யூர்க்கோ மகளிர் குறுவழி யிறந்த - வாரலருந்திய சிறுசிரன் மருதின் - றாழ்சினை யுறங்குந் தண்டுறை யூர - விழையா வுள்ளம் விழையு மாயினும் - கேட்டவை தோட்டி யாக வேட்டாங் - கறனும் பொருளும் வழாஅமை நாடித் - தற்றக வுடைமை நோக்கி மற்றதன் - பின்னா வன்றே முன்னியது முடித்த - லனைய பெரியோ ரொழுக்க மதனா - லரிய பெரியோர்த் தெரியுங் காலை - நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன - பொய்யொடு மிடைதலை தோன்றின் - மெய்யாண் டுளவோவிவ் வுலகத் தானே."

என யான் தனக்கு அவளை அடைக்கலமென்று கைப்பற்றி அதனைச் சூளுறவாகக் கருதித் திரிய உணர்ந்தாளாகலான் நீட்டிக்கல் ஆகாதெனப் பிறிதொன்று வரைவொடு புகுவாளும். இனித் தெருளானாயின் இரவுக்குறிவாரா வரைவலென்னும். அதுகேட்ட தோழி இரவுக்குறியது ஏதங்காட்டி மறுக்கும். யாங்ஙனம் மறுக்குமோ வெனின் அரவும் உருமும் புலியும் எண்கும் வெண்கோட்டியானையு மென்று இவற்றது ஏதம் உடைத்து; எற்றிழிவுடைத்தாய அருவரையிடத்து ஒருவேல் துணையாக நீர் ஆரிருள் நடுநாள்வரவு ஆற்று நீர்மையரோ வென்னும். என்பது கேட்ட தலைமகன் ஆற்றுவானாயின், வரைக்தெய்துவானும். ஆற்றானாயின் இறந்துபடுமெனக் கருதி, இறந்துபாட்டு அச்சத்தினான் இரவுக்குறி நேரும். நேர்ந்தாள் தலைமகற்கு நின்னூட்டார் என்னபூவினர் என்னசாந்தினர் என்னமரத்தின்கீழ்

விளையாடுப என்னும். அது கேட்டுத் தலைமகன் முன்னெல்லாம் எனக்கு மறுத்தாளன்றே, மறுத்தாள் இதுசொல்லிற்று ஒருகாரணம் நோக்கியென உணர்ந்து, தானும், நின்னுட்டார் என்னபூவினர் என்னசாந்தினர் என்னமரத்தின்கீழ் விளையாடுப என்னும். என்றக்காற் றாழியுங் காந்தளும் வேங்கையுஞ் சூடுதும், சந்தனஞ் சாந்து பூசுதும், வேங்கைமரத்தின்கீழ் விளையாடுதுமென்னும். அதற்குச் செய்யுள்:—

வந்தணங்காமன்னர்தேயமுன்னுண்மழையேவயர்த்த
கந்தணங்காமதயானைக்கழன்மன்னன்கார்ப்பொதியிற்
சந்தனஞ்சார்துதண்காந்தளம்பூத்தழல்போல்விரியுங்
கொந்தணங்கிரம்பிண்டியாம்விளையாடுங்குளிர்பொழிலே. (கருக)

காந்தளம்போதெங்கருங்குழற்போதுசடையலொன்னார்
தாந்தளர்ந்தோடவைவேல்கொண்டவேந்தன்றண்ணம்பொதியிற்
சாந்தமெஞ்சாந்தம்விளையாடிடமுந்தளையவிழும்
பூந்தளம்பிண்டியெரிபோல்விரியும்பொழிலகமே. (கருஎ)

குறிஞ்சி நிலமாகையான் இவ்வகை சொல்லும். அல்லாத நிலத்திற்கும் அவற்றிற்குத் தக்கவாறே சொல்லும். இவ்வகை சொல்ல ஒக்கும் இவை செய்து வந்து நினைமினென்றது போலுமென உணர்ந்து பிற்றைஞான்று அப்பூச்சூடிச் சாந்துபூசி அம்மரத்தின்கீழ் விளையாடற்குறிசெய்து நிற்கும். நின்றவிடத்து அவனது வரவு உணர்ந்து தோழி சொல்லும். அதற்குச் செய்யுள்:—

அணிநிறமாப்பகர்ந்திவந்தார்வல்லத்தன்றவியத்
துணிநிறவேல்கொண்டகோன்கொல்லிச்சாரலிற்சூழ்பொழில்வாய்
மணிநிறமாமயிலென்னைகொல்பொன்னேர்மலர்தைதந்த
கணிநிறவேங்கையின்மேற்றுயிலாதுகலங்கினவே. (கருஅ)

கயில்கொண்டவார்கழற்போர்மன்னரோடக்கடையறக்கண்சேந்
தயில்கொண்டகோனரிகேசரிகொல்லியருவரைவாய்ப்
பயில்வண்டுந்தேனும்பண்போலமுரலும்பைம்பூம்பொழில்வாய்த்
துயில்கொண்டிலதுணையோடுமென்செய்தனதோகைகளே. (கருக)

இவ்வாறு தலைமகனது வரவு உணர்ந்து குவளை மலர்ந்தனவற் காண்பாம், பரந்த முல்லை அரும்பினவேற் காண்பாமெனச் சொலித் தலைமகனைக் கொண்டுபோதரும். அதற்குச் செய்யுள்:—

ஆழிக்கடல்வையங்காக்கின்றகோனரிகேசரிதன்
பாழிப்பகைசெற்றபஞ்சவன்வஞ்சிப்பைம்பூம்புறவிற்

பூழிப்புறமஞ்ஞையன்னகல்லாய்கொள்கம்போதுநியேற்
றூழிக்குவளைநின்கண்போல்விரியுந்தடமலரே. (௧௬௦)

விளைக்கின்றபல்புகழ்வேந்தன்விசாரிதன்விண்டெதிர்ந்து
இளைக்கின்றவேந்தரைச்சேவூரழித்தவன்றீந்தமிழ்போல்
வளைக்கொன்றுகைமங்கையாய்சென்றுகோடுநின்வாயுள்வந்து
முளைக்கின்றமுள்ளெயிற்றேர்கொண்டரும்பினமுல்லைகளே. (௧௬௧)

எனத் தலைமகளைக் கொண்டுபோந்து குறியிடம்புகுந்து பகற்கு
றியின்கண் நீங்கினவாறே நீங்கித் தனியளாய் நின்ற தலைமகளை யெ
திர்ப்பட்டுப் புணரும். புணர்ச்சி யிறுதிக்கட் டோழி தலைமகளைக்கொ
ண்டுபோதும். இஃது இரவுக்குறியாமாறு.

குறி இரவினும்பகலினும் என்றது எனப்படுவதென்றது எற்
றிற்கோவெனின் குறியென்றற்குச் சிறப்புடையதென்றவாறு. வண்
டுந் தும்பியும் வரிக்கடைப் பிரசமுங் கொண்டுபுணர நரம்பெனமுரன்
று ஐந்துவகையிலானுங் கொள்ளப்படுந் தப்புரவினைத் தன்னகத்துடை
த்தாய்ப் பலவகைப்பட்ட மரங்களானும் பொலிவுடைத்தாய்ப் புறத்
தார் அகத்தாரைக்காண்பரிதாய் அகத்தார் புறத்தாரைக்காண்பதெளி
தாய் விழைவுவிடுத்த விழுமியோரையும் விழைவுதோற்றுவிக்கும் பண்
பிற்றென்பதற்குச் சொல்லப்பட்டதென்பது. அஃதேயெனின், அறிய
க்கிளக்கப்பட்ட இடமென்றது கிளந்த இடமென்றது எற்றிற்கோவெ
னின், வினைச்சொற்கள் நான்குவிகற்பம் உடைய; யாவை அவ்விகற்
பமெனின், கருத்தன் ஏதுக்கருத்தன் கருவிக்கருத்தன் கருமக்கருத்
தன் என இவை; அவற்றுள் கருத்தனென்பது தச்சன் எடுத்த மா
டம், கொல்லன் செய்த வாள்; ஏதுக்கருத்தனென்பது ஏவினானைக்
கருத்தாவாகச்செய்வது, அரசர் தொட்டகுளம், அரசர் எடுத்த தேவ
குலம் என இத்தொடக்கத்தன; இனிக்கருவிக்கருத்தனென்பது வா
ள் எறியும், சுரிகை குற்றும், இம்மிடா நாற்குறுணி அரிசிச்சோறு
அடும் என இத்தொடக்கத்தன; இனிக் கருமக்கருத்தனென்பது தி
ண்ணை மெழுகிற்று, கலங் கழுவிற்று, மரங் குறைத்தது என்று சொல
லுவது. அறியக் கிளந்த இடமென்னும் அச்சொற் கருமக்கருத்தனு
ய்நின்றதென்பது. அஃதேயெனின், இவ்வகை கருமக்கருத்தனுகச்
சொல்லுதற்கு இலக்கண முண்டோவெனின், உண்டு. "செயப்படு
பொருளைச் செய்தது போலத் - தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன்
மரபே" என்பது. அஃதெனின், குறியெனப்படுவ தென்றுகாதே கு

திரஞ்செயற்பாலது ; என்னை ? இரவுக்குறி பகற்குறியென்று இரண்டு சொல்லுகின்றமையின். அஃதன்று. இடமென்னும் ஒருமை நோக்காற் குறியெனப்படுவதென்றார் என்பது. (க௯)

க௯. இரவுக் குறியே யில்வரை யிகவாது.

என் - னின், மேற்சூத்திரத்துட் குறி இரண்டென்றார் அவற்றுள் இரவுக்குறி நிகழுமிடம் உணர்-ற்று. (இ-ள்.) இரவுக்குறி= இரவின்கட்குறியிடம்: இல்வரை இகவாது=இல்லிடத்தைவிட்டு நீங்காது.எ-று. எனவே, புறத்தன்று என்றவாறும். "இரவுக் குறியே யில்வரை யிகவா - துணர வுணர்த்த வுணரி னுணை." என்றார் பிறருமெனக்கொள்க. இரவின்கட்குறி இல்வரை இகவாதெனப் பகற்குறி இல்வரை இகக்குமென்பதுசொல்லினார். இராப்புட்கள் உண்ணு என்றாற் பகற்புள் உண்ணுமென்பது முடிந்தது. இனி இராக்குறியென்று ஆகற்பாலது இரவுக்குறியென்றுயிற்றுச் செய்யுளாகலான், என்னை? "குறியத னிறுதிச் சினைகெட வுகர-மறிய வருதல் செய்யுளு ளுரித்தே." என்றாராகலின்.

உ௦. பகற்குறி தானே யிகப்பினும் வரையார்.

..என் - னின், பகற்குறியிடம் உணர் - ற்று. (இ-ள்) பகற்குறி தானே = பகற்குறியிடந்தான் : இகப்பினும் வரையார் = இகந்துபடினுங் குற்றங்கூறார்.—எ-று. இகத்தலென்பது ஒன்றின் இறத்தலென்றவாறு. இகத்தலெனினும் இறத்தலெனினும் ஒக்கும்; ஒன்றினிறத்தலென்பது பலவாதலென்றவாறு. ஒருஞான்று வேங்கைப் பொதும்பின் உள்ளாம், ஒருஞான்று கோங்கம் பொதும்பின் உள்ளாம், குறிஞ்சி நிலமாயின். .ஒருஞான்று புன்னையங்கானல் உள்ளாம், ஒருஞான்று கைதையங்கானல் உள்ளாம், நெய்தனிலமாயின். இவ்வகை ஐந்நிலத்திற்கும் ஒக்குமாறு அறிந்து உரைக்க. "பகற்குறிப் புணர்வுகள் பலவா கும்மே." என்றாராகலின். இகப்பினும் வரையாரென்ற உம்மையாற் பகற்குறியும் ஒன்றாகலே வலியுடைத்து. என்னையெனின், தங்குறைமுடித்தற் பொருட்டு ஒருபொழிலகத்தே கொண்டு சென்று விளையாடும் ஆயங்களுந் தன்வழிய ஆகலானென்பது இனி யார் அறிவார் பண்டுபோலாது இப்பருவம் ஒருகானலகத்தே கொண்டு புகுகின்றாளென்று கருதுவார்க்கு, அறிந்து பலபொழிலினுள்ளும் புகுதலிற் பலபொழிலாகவும் பெறும். (உ௦)

உக. இரவுமனை யிகந்த குறியிடத் தல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை.

என்-னின், இரவுக்குறி வருக்கப்பட்ட இடம் வேறுபாடுடையதுகண்டு அவ்வேறுபாடுணர்-ற்று. மேல் இரவுக்குறி இல்வகை இவ்வாறெதென இல்வரையகத்தன்றெனிற் சாரான். அவற்றுள்ளும் இரவுக்குறியாதல் சென்றது. சென்றதனை நீக்கியவாறு. (இ-ள்) இரவுமனையிகந்த = இரவின்கண் மனையகத்து நீங்க: குறியிடத்து அல்லது = குறிக்கப்பட்டவிடத்தல்லது: கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை = தலைமகற் சேர்தல் தலைமகட்கு இல்லை. எ-று. எனவே, இல் வரைப்பு அகத்தேயாக வேண்டுமென்பதூஉம் மனையகத்தாகற்க என்பதூஉம் உணரப்பட்டது. அட்டில், கொட்டசாரம், பண்டசாலை, கட்டகாரம் பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளியென இவற்றுள் நீங்கிச் செய்குன்றும் இளமரக்காவும் பூம்பந்தரும் விளையாடிடமும் அவற்றைச்சார்ந்தனவற்றுள்ளும் பிறவற்றுள்ளுமாக என்றவாறு. எனவே பகற்குறியிடம் போல வேறுபட்டதாகற்க இரவிற்குறியிடமென்றவாறு. அஃதேயெனின், மனையகத்தாக அழியதன்றோவெனின்: குரவர்கள் உறையும் இடமாதலிற் தெய்வத்தானமென்று கருதப்படும். அல்லதூஉம் புகவும் போகவும் அருமையுடைமையானும் ஆகாதென்பது. என்றூற்குச் செய்யுள் "வால மனையகத்துச் சார்ந்தான்றலைமகன்" எனப்படவந்தன வெனின், அவை அகமல்லாத அகப்புறத்தே அடங்குமென்பது. இரவுக்குறியொன்றெய்தும். அதுவே "மனையோர் கிளவி கேட்கு மிடத்தச்-செலவுவர வில்லாத தொழிலிற்றுறி - மனையிறந் தெல்லையின் மாண்புடைத் தாகு - மகப்புற மாயின் மறுதலைப் படுமே." என்றார் பிறருமெனக்கொள்க. (உ௧)

உ௨. அம்பலு மலருங் களவு.

என் - னின், களவொழுக்கின் இது நெடுங்காலச் செலவின்கண் இவர்க்கு நிகழும் உள்ளநிகழ்ச்சி இன்னதென்றுணர் - ற்ற. (இ - ள்) அம்பலும் அலருங் களவு = அவ்விரண்டும் நிகழ்ந்தனவென்பது தாம் அறியினல்லது யாவரும் அறிவாரில்லை இன்மையின் அவை களவு.—எ-று. களவென்பது செய்தாரே அறிந்து மற்றொருவர் அறியாராகலான் என்பது. அம்பலென்பது முகிழ் முகிழ்த்தல், அலரென்பது சொல் நிகழ்தல்; அம்பலென்பது சொல் நிகழ்தல், அலரென்பது இல் அறிதல்; அம்பலென்பது-இல் அறிதல், அலரென்பது அயல்அறிதல்; அம்பலென்பது அயலறிதல், அலரென்பது சேரி அறிதல்;

அம்பலென்பது சேரிஅறிதல், அலரென்பது ஊர் அறிதல்; அம்ப லென்பது ஊர் அறிதல், அலரென்பது நாடு அறிதல்; அம்பலென்பது நாடு அறிதல், அலரென்பதுதேசம் அறிதல்: அதுபொருந்தாது, என்னை? அம்பலெனப்பட்டதே அலரும் அலரெனப்பட்டதே அம்பலு மாயின. இந்த அம்பற்கு இலக்கணம் இந்த அலருக்குஇலக்கணமெ ன்று விசேடங் காட்டிற்றிலர்: இவை இரண்டாற் தம்முள் வேற்று மைபெறவேண்டுமாதலால் என்பது. மற்றென்னோவெனின், அம்ப லென்பது சொல் நிகழாதே முகிழ் முகிழத்துச் சொல்வதாயிற்று; இன்னதின்கண்ணதென்பது அயலறியலாகாதென்பது. அலரென் பது இன்னானோடு இன்னாளிடை இதுபோலும் பட்டதென விளங் கச் சொல்லி நிற்பது. அம்பலென்பது பெரும்போதாய்ச் சிறிது நிற்க அலருமென நிற்பது. அலரென்பது அப் பெரும்போது தாதும் அல்லியும் வெளிப்பட மலர்ந்தாற்போல நிற்கும் நிலைமையென வேற் றுமை சொல்லப்பட்டதாம். தாம் நெடுங்காலம் இவ்வொழுக்கத்தை ஒழுகினாராதலான் வேறுநின்று தங் கருமம் உசாவுவாரை உணர்ந்து இத்தன்மைத்து இவர் ஆராய்வது இதுபோலுமென்று கருதும். தம்ம னத்து ஒருகோட்டமுடையர் அப்பெற்றியே கருதுவது உலகத்துத் தன்மை. இவ்வொழுக்கம்பிறர்க்குப் புலனாகாதன்றே தெய்வத்தினால் ஆயதாதலான். அம்பலும் அலரும் எவ்விடத்தும் நிகழுமோவெனின் காப்புக் கைமிக்கவிடத்து நிகழுமென்பது. களவினது நெடுங்காலத் துக்கண் இவ்வொழுக்கம் வெளிப்படுங்கொல்லோ என்னும் அயிர்ப் பினான் நிகழுமென்பது. அங்ஙனம் அயிர்ப்பினாற் களவொழுக்கம் ஒழி ந்துநின்ற நிலைமை கற்பென்று கொள்ளுவேனாயின் வரைந்து புகுந் தின்மையிற் கற்பென்னலுமாகாது, களவினகத்தென்று கொள்ளு வேனாயின் ஒழுக்கம் நிகழாநின்றமையிற் களவென்னலுமாகாது, என்னைகொல்லோ இதனை ஒருபால் சார்த்துமாறென்று ஐயப்பட்டு நின்ற மாணாக்கற்கு அம்பலும் அலருமென்று நின்ற நிலைமையைக் களவின்பாலே கொள்க வென்பது. இது பொருந்தாது; என்னை, "தந்தை தாயே தன்னைய ரென்றுங் - கன்னவ ரறியப் பண்பா கும்மே." என்றமையின்; அவரறியாதமுன் எல்லாங் களவென்பது போ துமென்பது. (உஉ)

## உ௩. வெளிப்பட்ட பின்றையு முரிய கிளவி.

என்-னின், அம்பலும் அலருமாயிற்றென்று உள்ளத்து வெ ளிப்பட்டபின்றை நிகழ்ப்பாலது உணர்-ற்று. (இ-ள்.) வெளிப்பட்ட

பின்றையும் உரிய கிளவி என்றாரெனினும் பட்டபின்றைக் கிளவியும் உரியவென மொழிமாற்றிக்கொள்க. கிளவி, மகட்கூறுதல்; அதுவும் உரித்தென, மற்றுமொன்றுண்டு கூற்றமால். அஃதியாதோவெனின், அவன் உடன்போக்கும் உரித்தென்றவாறு. அஃதாமாறு சொல்லுதும். இது பலராலும் அறியப்பட்டதென்னுங் கருத்தால் நிகழ்கின்று. தலைமகட்குந் தோழிக்கும் உடனே நிகழும். இருவரும் யாமேயுணர்ந்தேமெனக் கருதுதலாற கதுமென இந்நிலைமைக்கண் வரினும் வாராமைகொள்வேனென்னுங்கருத்தினாற் பண்டு அவன் வந்து பயின்றவிடத்தே தோழி செல்லும். செல்லத், தோழியை எதிர்ப்பட்ட தலைமகனை வலங்கொண்டு சார்ந்து முன்புநின்று நின்றாற் தலையளிக்கப்பட்ட தலையளி அலராயிற்று, பலரானும் அறியப்பட்டென்னும். அதற்குச் செய்யுள்:—

பலராலெதிர்நின்றுபாழிப்பட்டார்தங்கள்பைந்நிணம்வாய்
புலராவகம்புடைவேன்மன்னன்வேம்பொடுபோந்தணிந்த
மலரார்மணிமுடிமான்றேர்வரோதயன்வஞ்சியன்னாட்
கலராய்விளைகின்றதாலண்ணலீசெய்தவாரருளே. (ககஉ)

பொருடானென நின்றமானதன் பூலந்தைத்தோற்றப்புல்லா
ரிருடானடைகுன்றமேறவென்றோன்கன்னியீாம்பொழில்வாய்
மருடானெனவண்பொடுந்தண்டாரண்ணல்வந்துசெய்த
வருடானலராய்விளைகின்றதான்மற்றிவ்வாயிழைகட்கே. (ககங)

"அறிந்தோ ரறிவில ரென்றலர் சிறந்த — வின்னுயிர் கழியினு நனியின் னாத — புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த — பின்னரோதியன் றோழிக் கன்றோ — பமணி யானைப் பசும்பூட் சோழர் — கொடிநுடங்கு மறுகி னூர்க்காட் டகட் — கள்ளுடைத் தடவிற் புள்ளொலித் தோவாத் — தேர்வழங்கு தெருவி னன்ன — கவ்வை யாகின்ற தையநின் னருளே."

இது சொல்லிப் பின்னும் நீ இது புகுதருந்துணையும் இவ்வாறு ஒழுகுவாயாயினும் அறனறியாமையான், அறிதியென்னின் இது புகுதாமை வரைந்தெய்துவாய் மன்றோ, அல்லதூஉம் பிறரும் வரைந்தெய்துதற்கு முலைவிலையோடு புகுந்து பொன்னணியான் கின்றாரும் உளரெனப் படைத்துமொழிந்து சொல்லும். அதற்குச் செய்யுள்:—

நீரணிவேலிசெழுங்களத்தொன்னார்நிணமலிந்த [யான்
போரணிவேன்மன்னன்கன்னியன்றுடன்லைப்பொன்னணி

காரணிவார்முரசார்ப்பப்பிறருங்கருதிவந்தார்
வாரணிபூங்கழலண்ணலென்றுஇவலிக்கின்றதே. (க௬௪)

வேலைத்துளைத்தகண்ணேமைழதிறத்தின்றுவிண்ணுரிஞ்சுஞ்
சோலைச்சிலம்பதுணிவொன்றறிந்துசுடருமுத்த
மாலைக்குடைமன்னன்வானெடுமாறன் வஞ்சூடலின்வாய்க்
காலைத்திருமனைமுற்றத்தியம்புங்கடிமுரசே. (க௬௫)

போரமலிதெவ்வரைப்பூலந்தைவென்றான்புகாரனைய
வார்மலிகொங்கைமடந்தையைவேறோர்மணங்கருதிக்
கார்மலிவார்முரசார்ப்பப்பிறருங்கருதிவந்தா
ரோர்மலிதாரண்ணலென்றோவிதன்றிறத்தெண்ணுவதே. (க௬௬)

வேயுமபுரையுமென்றோளிதிறத்தின்றையெல்லையுள்விண்
டோயுஞ்சிலம்பதுணிவொன்றறிந்துதொன்னூற்புலவ
ராயுந்தமிழ்நிகேசரிகூடலசனகர்வா
யேயுந்திருமனைமுற்றத்தியம்புமெறிமுரசே. (க௬௭)

இங்ஙனமுஞ் சொல்லும்:—

குன்றாத்தயானைச்செங்கோனெடுமாறன்றென்கூடலன்ன
மென்றோத்தணிகுழலேமைழதிறத்துவிளைவறிந்தே
யின்றாத்ததொன்றுதுணிநீசிலம்பவன்றாயினெம்மூர்
மன்றத்துநின்றுமுழங்குங்கொளுனைமணமுரசே. (க௬அ)

நலம்புரிதெய்வமன்றுய்செய்வதென்னறையாற்றுவென்ற
வலம்புரிதோண்மன்னன்றென்புனநாட்டொருவற்கியைத்து
குலம்புரிகோதையைக்காப்பணிந்தார்கொடிமாடமுன்றில்
வலம்புரியோடுமுழங்குங்கொளுனைமணமுரசே. (க௬௯)

இங்ஙனஞ் சொல்லப்பட்ட தலைமகன் என்றாற் செய்யப்பட்டது என்றோவென்னும். எனத், தோழி என்னை வினவற்பாலையல்லை நீ இதற்குத் தக்கவாறறிந்து செயற்பாலையென்னும் என்பது. "நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்-பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே." என்பதாகலான்; நீ ஒருபொருளை விகற்பத்து அறியுந்துணை, யான் அறியுமாறில்லை பிற; அல்லதூஉம், யாங் குற்றேவன்மகளிர், நீராயின் அவ்வாறொழுகுவதல்லது இதுகொண்டு இது செய்மினென்றற்குத் தக்கேமல்லேம் என்னும். அதற்குச் செய்யுள்:—

என்னாலிதுசெய்கென்றென்சொல்லலாமிகற்பாழிவென்ற
மின்னாரயிற்படைச்செங்கோல்விசாரிதன்வீங்கொலிநீர்த்
தென்னாடெனினுங்கொள்ளார்விலையத்தமர்சீர்செய்வண்டு
மூன்றாண்மலரொன்றனையுங்கண்ணேழைமுகிழ்முலைக்கே. (௪௭௦)

இது கேட்ட தலைமகன் உடனேபோவது துணிந்தேனெனி னும். நிழலும் நீரும் இல்லாத அழல்வெங்கானம் ஆற்றகில்லாள் கொல் லோ வென்னும், என்ன, என்னவெங்கானமெனினும் எம்பெருமாட்டி நம்மோடுவரப் பெரிது இனியவாமென்னும். அதற்குச் செய்யுள்:—

மால்புனையானைமணிமுடிமாறன்மண்பாய்நிழற்றும்
பால்புரைவெண்குடைத்தென்னன்பறந்தலைக்கோடிவென்ற
வேல்புரைவெம்மையங்கானமெனினுமவ்வேந்தன்செய்ய
கோல்புரைதண்மையவாநம்மொடேகினக்கொம்பினுக்கே. (௪௭௧)

கழலணிபோர்மன்னர்காணீர்ச்சடையற்படக்கடந்த
கழலணிவேன்மன்னன்சத்துருதுரந்தன்றன்முனைபோன்
றழலணிவெம்மையவாயினுக்கானமவன்குடையி
னிழலணிதன்மையவாநம்மொடேகினென்னேரிழைக்கே. (௪௭௨)

அதுகேட்டு, ஆயின் உடன்போக்குவலித்தேன், நீ இதனை அவட்குச் சொல்லவேண்டுமென, நன்றென்று எம்பெருமான் அரு ளிச்செய்தது எம்பெருமாட்டிக்கு உணர்த்துவலென்று தலைமகனை வலங்கொண்டு போந்து, தலைமகளுழைச்சென்று அவள்குறிப்பறி ந்து, எம்பெருமாட்டி, நம்பெருமான் நம்மைத் தம்மோடு உடன் கொண்டு செல்லக் கருதுகின்றார், நின்குறிப்பென்னை என்னும், என்றவிடத்து, உடம்படுதலும் உடம்படாதொழிதலுமென்ன இர ண்டல்லதில்லை; சென்று வழிபடுமேயெனின், நாணிலளாயினாளாம். உடன்படாளாயிற் கற்பிலாளாயினாளாம்; இரண்டினுள்ளும் எத் திறத்தாளாயினாளோவெனின் நாணுங் கற்பென்னும் இரண்டல்ல வே அவள்கண்ணுள்ள, அவற்றுள் நாணிற் கற்பு வலியுடைத்து; என்னை வலியுடையவாறெனின், "உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ் - செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" என்பதாகலான், நாண் அழியினுங் கற்பு அழியாமை நினைக்கும். நினைத்து உடன்போ க்கு நேர்ந்து தலைசாய்த்து நிலங்கிளையாநிற்கு நிலைமை இது சொல்லு வதே போன்றது. அதற்குச் செய்யுள்:—

ஏனுமிகலுமழிந்துதெவ்வேந்தரெல்லாமிறைஞ்சிக்
கீரனுங்கழனெடுமாறன்செங்கோனின்றுகாக்குமண்மேற்
சேனுமகலாதுடனென்னொடாடித்திரிந்துவந்த
நாணுமழியத்தருகற்புமேம்படநைகின்றதே. (களஙு)

"அளிதோ தானே நாணே நம்மொடு - நனிநீடுழந்தன்று மன்னே யினியே - வான்பூங் கரும்பி னோங்கு மணற்சிறை - தீம்புன னெரிதர வீந்துக் காங்குத் - தாங்கு மளவை தாங்கிக் - காம நெரிதரக் கைநில் லாதே."

இன்னும் இதுசொல்லுவது போன்றது அந்நிலைமை.

"சிலரும் பலருங் கடைக்க ணோக்கி - மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி - மறுகிற் பெண்டிர் அம்ப றூற்றச் - சிறுகோல் வலந்த ளன்னை யலைப்ப - வலந்தனன் வாழி தோழி கானற் - புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற் - கடுமான் றேரொடு கதழ்பரி கடைஇ - நடுநாள் வரூஉ மியறேர்க் கொண்கனொடு - செலவயர்ந் திசினால் யானே - அலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே."

இங்ஙனம் இவள் உடன்படும். உடன்பட்டது உணர்ந்து வைத்துத் தாயுழைச்சொல்லும். தாயும் மகளது வேறுபாடுகண்டு உற்றதறியாது நற்றிறம்படர்ந்து செல்கின்ற காலமன்றே ஆதலாற் கண்டவாறே அன்னாய் என்மகட்கு இவ்வேறுபாடு எற்றினானாயிற்று எனக்குச் சொல்லாயென்னும். என்ன, என்னால்அறியப்பட்டதுஞ் சிறிதுண்டென்று அறத்தொடுநிற்குமாறு "தோழிக்கு உரியவை கோடாய் தேஎத்து" என்று மேற்சொல்லிப்போந்தாம், அவ்வகை அறத்தொடுநிற்கும். நிற்கச், செவிலித்தாய் இன்புற்ற மனத்தளாய் என் மகள் பெரிது அறிவு உடையளேகாணென்று அவ்வாறு நற்றாய்க்கு அறத்தொடுநிற்கும். நற்றாயும் இன்புற்ற மனத்தாளாய்த் தந்தைக்குந் தன்னையன்மார்க்கும் அறத்தொடுநிற்கும். நிற்க, அவரும் அவளது அறிவும் ஆசாரமுங் கேட்டு இன்புற்ற மனத்தராய்ச் சொன்மறுத்துத் தலையிறைஞ்சி நிற்பர். இங்ஙனஞ் சென்று மாட்சிப்பட்டுக் காட்டுமேயெனின், பெரிதும் மாட்சிப்பட்டுக் காட்டிற்று. காட்ட, இவள் நீரில் ஆற்றிடைபோய் வருந்துங் குறை யென்னையென்று தலைமகனைச் செலவழுங்குவிக்கும். அவ்வகையாற் சொல்லும் அதற்குச் செய்யுள்:—

பாயப்புரவிகடாய்வந்துபாழிப்பகைமலைந்தார்
தேயச்சிலைதொட்டதென்னவன்றேந்தண்பொதியிலின்வாய்
வேயொத்ததோளிநம்மோடுவேர்வுவிரும்பவுந்தன்
ஆயத்தவரைநினைந்துகண்ணீர்கொண்டலமந்தவே. (௧௭௪)

“விளம்பழங் கமழுங் கமஞ்சூற் குழிசிப் - பாசந் தின்ற தேய்கான் மத்த - நெய்தெரி யியக்கம் வெளின்முதன் முழங்கும் - வைகுபுலர் விடியன் மெய்கரந்து தன்கா-லரியமை சிலம்பு கழீஇப் பன்மாண் - வரிப்புனைப் பந்தொடு வைஇய செல்வோ - ளிவைகாண் டோறு நோவர் மாதோ - வளியரோ வளியவென் னாயத் தோரென - நம்மொடு வரவுதா னயரவுந் - தன்வரைத் தன்றியுங் கலுழ்ந்தன கண்ணே.”

இது கேட்ட தலைமகன் செலவழுங்கும். அழுங்க, நாளை வரைந்துபுகுத நினக்கு வரைவு மாட்சிப்படுமென்று தலைமகனைத் தவிர்த்துப் பெயர்ந்து, தலைமகளுழை வந்து, நிழலும் நீரும் உடையவாய்க் கானந் தண்ணியவாகற் சேறுமென்று உடன்போக்கு அழுங்குவித்தவிடத்துத், தலைமகனும் அந்நாள் வரைவொடு வந்து புகுவானும். இது வெளிப்பட்டபின்றைக்கிளவியும் உரியவாயினவாறு.

இனி உம்மையால் உடன்போக்கும் உரித்தாமாறு. அவ்வாறு அறத்தொடுநிலை மாட்சிமைப்பட்டதில்லையாயின் இரவுக்குறிக்கட் தலைப்பெய்விக்குமாறுபோலத் தலைமகனை முற்படுத்து உடன்போக்க மாட்சிப்படும். படுத்து ஓம்படை சொல்லும். அதற்குச் செய்யுள்:—

கொங்கைதளரினுங்கூந்தனரைப்பினுமேந்தன்மற்றிவ்
வங்கையடைக்கலமென்றேகருதியருளக்கண்டாய்
கங்கைமணாளன்கலிமதனன்கடிமாமணத்திம்
மங்கையமரட்டகோன்வையைநாடன்னமாதனையே. (௧௭௫)

மென்முலைவீழினுங்கூந்தனரைப்பினும்வின்னுரிஞ்சு
கன்மலைசா...விகழல்கண்டாய்சேறையாற்றில்வென்ற
வின்மலிதானைநெடுந்தேர்விசாரிதன்வேந்தர்பெம்மான்
பொன்மலிவேனெடுங்கண்ணிணைப்பேதைக்கொடியினையே. (௧௭௬)

“அன்னுந் தேர்நிய வனமுலை தளரினும் - பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த - நன்னெடுங் கூந்த னரையொடு முடிப்பினு

நீத்த லோம்புமதி பூக்கே மூர - வின்கடுங் கள்ளி னிழையணி நெடுந்தேர்,- கொற்கைச் சோழர் கொங்கர்ப் படீஇயர் - வெண்கோட் டியானைப் போஒர் கிழவோன் - பழையன வேல்வாய்த் தன்னநின் - பிழையா நன்மொழி தேறிய விவட்கே."

"பெருநன் றாற்றிய பேணுரு முளரோ - வொருநன் றுடையளாயினும் புரிமா - றுடி புலவிநீர் வளிமதி யிலைகவர் - பாடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல் - மென்னடை மரையா துஞ்சு - நன்மலை நாட நின்னல திலளே."

"நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ - நெய்தன் மாமலர்ப் பெய்தபோல - வூதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப - தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட் - டன்னா வென்னுங் குழவி போல - வின்னா செய்யினு மினிதுதலை யளிப்பினு - நின்வரைப் பினளென் றோழி தன்னுறு விழுமங் களைஞரோ விலளே."

"இவளே நின்னல திலளே யாயுங் - குவளை யுண்கணிவளல திலளே - யானு மாயிடை யேனே - மாமலை நாட மறவாதீமே."

இவ்வகை ஒம்படுத்துத் தான் தவிருமென்றவாறு. தான் தவிரவதோ செயற்பாலது போகாளோவெனிற், தனது வருத்தத்திற்குக் கவன்று போகாதாளல்லள், இதனைப் பண்பாக உரைத்தற்பொருட்டுத் தவிருமென்பது. செவிலித்தாய்க்கு உரைத்தாளன்றே, அவள் அதனைப் பண்பாக உரையாளோவெனின், இவள் சொல்லியது தெளியுமாறு செவிலித்தாய் சொல்லியது தெளியாளென்றவாறு; என்னை? எப்பொழுதுங் கைவிடாத மரபினளாகலான் என்பது. இனித் தலைமகளைத் தலைமகன் ஆற்றுவித்துக் கொண்டு சென்றதற்குச் செய்யுள்:-

பண்டாளனைசொல்லாய்பையவேகுபறந்தலைவாய்
விண்டார்படச்செற்றகோன்வையைசூழ்வியனூட்டகம்போல்
வண்டார்பொழிலுமணியறல்யாறுமருங்கணைந்து
கண்டார்மகிழுந்தகைமையதியாஞ்செல்லுங்கானகமே. (௧௭௭)

சிறியபைங்கட்களிறூர்ந்துதென்பாழியிற்செற்றெதிர்ந்தார்
மறியவைவேல்கொண்டதென்னவன்வையைநன்னாட்டகம்போன்
முறியபைம்போதுகண்மேல்வண்டுபாடிமருகுயிர்க்கு
நறியபைங்கானமையாதுநடக்கவென்னன்னுதலே. (௧௭அ)

"அழிவிலர் முயலு மார்வ மாக்கள் - வழிபடு தெய்வங் கட் கண் டாஅங் - கலமரல் வருத்தந் தீர யாழநின் - னலமென் பணைத் தோ ளெய்தின மாகலிற் - பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொ ண்முறி - சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி - நிழல்கா ண்டோறு நெடிது வைகி - மணல்காண் டோறும் வண்ட றைஇ - வ ருந்தா தேகுமதி வாலெயிற் றோயே - மாநனை கொழுதி மகிழ் குயி லாலு - நறுந்தண் பொழில கானங் - குறும்ப லூரயாஞ் செல்லு மாறே."

எனத் தலைமகளைத் தன் ஆயத்தோடுஞ் செல்வான்போலக் கொண்டு செல்லும். அவ்வகைப் போவாரை இடைச்சுரத்துக் கண்டா ர் சொல்லியதற்குச் செய்யுள்:—

அலைமன் னுபைங்கழற்செங்கோலரிகேசரியளியா
ரிலைமன் னுமாலைமுத்தக்குடையானிகல்வேந்தனைப்போன்
மலைமன் னும்வெய்யோன்மறைந்தனன்மாதரும்வாடினைாள்
நிலைமன் னுதோளன்னைல்சேர்ந்தனைசெல்வேஞ்சிறுகுடிக்கே. (சஎக)

நின்றாங்கெதிர்ந்தார்குருதியுள்ளாழநெடுங்களத்து
வென்றான்விசாரிதன்கூடலன்னாளுமிகமெலிந்தாள்
குன்றார்சுடரோன்மறைந்தனன்கூர்வேல்விடலைதங்கிச்
சென்றாலழிவதுண்டோவணித்தாலெஞ்சிறுகுடியே. (சஎஅ)

"எம்மூ ரல்ல தூர்நணி யில்லை - வெம்முரட் செல்வனுங் கதிரு மிழந்தனன் - சேர்ந்தனை சென்மோ பூந்தார் மார்ப - விளையள் மெல்லியள் மடந்தை - யரிய சேய பெருங்க லாறே."

இன்னும் இடைச்சுரத்துக் கண்டார் இவ்வாறுஞ் சொல்லுப:

நீயுமிவளுமின்றேசென்றுசேர்திர்நெல்வேலியொன்னார்
தேயும்படிசெற்றதென்னவன்றென்புனனாட்டிளையர்
வாயுமுகமுமலர்ந்தகமலமணித்தடத்துப்
பாயுங்கயலவர்கண்போற்பிறழும்பழனங்களே. (சஎக)

பிற்றைஞான்று மகளது போக்கு உணர்ந்து செவிலி மயங்கிப் பெரியதோர் கவலையளாய் நெருநலை இவை செய்தது இது கருதி போலும் என்னும். அதற்குச் செய்யுள்:—

ஒண்முத்தவார்கழற்கைதந்தென்னாருவறுமுலையின்
கண்முத்தங்கொண்டுமுயங்கிற்றெல்லாங்கருவேங்கழைபோய்
விண்முத்தநீள்சுரஞ்செல்லியவோவிழிஞத்துவென்ற
தண்முத்தவெண்குடையான்றமிழ்நாடன்னதாழ்குழலே. (௧௮உ)

"பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனெ னென்றன - ளினியறிந் தேனது துனியா குதலே - கழனெடி யாய மழைதவழ் பொதியின் - வேங்கையுஞ் சாந்தனு நாறி - யாம்பன் மலரினுந் தான் றண் ணியளே."

என்று பின்னுங்கவன்று ஆற்றாளாய் இவ்வகைப்பட்ட கானம் இவ்வகைப்பட்டாள் எவ்வகை செல்லுங்கொல்லோ என்னும். அதற்குச் செய்யுள்:—

வேடகஞ்சேர்ந்தவெங்கானம்விடலைபின்மெல்லடிமேற்
பாடகந்தாங்கிநடந்ததெவ்வாறுகொல்பாழிவென்ற
கோடகநீழ்குடிக்கோனெடுமாறன்றென்கூடலின்வா
யாடகமாடங்கடந்தறியாதவென்னாரணங்கே. (௧௮௩)

இவ்வகை மெல்லியவாகிய அடி இவ்வகை வெய்யவாகிய கானம் எவ்வகைச் சென்றனள்கொல்லோ என்னும். அதற்குச் செய்யுள்:—

களிமுத்தவெண்மணன்மேலும்பனிப்பனகண்பன்பின்போய்
முளியும்றகானமிறந்தனபோலுநிறந்திகழு
மொளிமுத்தவெண்குடைச்செங்கோலுசிதனுறந்தையன்ன
தெளிமுத்தவாண்முறுவற்சிறியாடன்சிலம்படியே. (௧௮௪)

இனிச் செவிலி பின்சென்றாள் சுரத்திடைக் குரவினொடு புலம்பிச் சொல்லியதற்குச் செய்யுள்:—

மழைகெழுகார்வண்கைவானவன்மாறன்வண்கூடலன்ன
விழைகெழுகொங்கையென்பேதையொரோதிலனெடியைத்திக்
கழைகெழுகுன்றங்கடப்பவுநீகண்டுநின்றனையே
தழைகெழுபாவைபலவும்வளர்க்கின்றதண்குரவே. (௧௮௫)

நினைப்பரும்புண்ணியஞ்செய்தாய்குரவேநெடுங்களத்து
வினைப்பொலிமால்களிறுந்திவென்றான்வியனாட்டகத்தோர்

மனைப்பொலிபாவைபயந்தேன் வருந்தவுநீகடத்து
ளனைப்பலபாவைபயந்துமெய்தாயொரிருந்தயரோ. (கஅசு)

வில்லவன் றானைகறையாற்றழிந்துவிண்ணேறவெல்ல
வல்லவன்மாறனெங்கோன் முனைபோல்சுரம்வானுதலாள்
சொல்லவன்பின்சென்றவாறென்றபோழ்தெனக்குச்சொல்லுமே
பல்லவமாக்கித்தன்பாவைவளர்க்கின்றபைங்குரவே. (கஅஎ)

சுரத்திடைச் செல்லுந் தலைமகனையுந் தலைமகளையுங் கண்டு எதிர்வருகின்றார் யார்கொல் இவ்வாறு போந்தாரெனச் சொல்லியதற்குச் செய்யுள்:—

வல்லான்விறலடிமேலனபொற்கழல்வெண்முத்தன்ன
பல்லாளிணையடிமேலனபாடகம்பஞ்சவர்க்கு
நல்லார்கழனிநெடுங்களத்தன்று நிகர்மலைந்த
புல்லாதவரெனயார்கொல்லருஞ்சுரம்போர்தவரே. (கஅஅ)

"வில்லோன் காலன கழலே தொடியோள் - மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர் - யார்கொ லளியர் தாமே யாரியர் - கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி - வாகை வெண்ணெற் றொலிக்கும் வேய்பயில் பழுவ முன்னி யோரே."

இனிச் செவிலி எதிர்வருகின்ற பார்ப்பானைக் கண்டு வினவியதற்குச் செய்யுள்:—

நிழலார்குடையொடுதண்ணீர்க்கரகநெறிப்படக்கொண்
டழலாருஞ்சுரத்தூடுவருகின்றவர்தணிர்காள்
கழலானொருவன்பின்செய்கோற்கலிமதனல்பகைபோற்
குழலாளொருத்திசென்றாளோவுகாமினிகுன்றிடத்தே (கஅகூ)

குடையார்நிழலுறிசேர்கரகந்தொடுகுன்றிடத்து
நடையான்மெலிந்துவருகின்றவந்தணிர்ஞாலமெல்லா
முடையானொளிவேலுசிதன்றெள்கூடலொண்டண்டமிழ்போ
லிடையாள்விடலைபின்சென்றனளோவிவ்விருஞ்சுரத்தே. (ககூ0)

சுரத்திடைச் செல்லாநின்ற தலைமகள் நின்ற சூழலுந் தலைமகள் எய்த வேழமுங் கண்டு செவிலி சொல்லியதற்குச் செய்யுள்:—

செறிகழல்வேந்தனைச்சேலூர்மர்வென்றதென்னன்செய்ய
நெறிசெழுகோனெடுமாறன் முனைபோனெடுஞ்சுரத்து

வெறிகமழ்கோதையிங்கேநின்றதிஃதாம்விடலைதன்னைப்
பொறிகெழுதிண்சிலைவாளியினெய்தபொருகளிறே: (௧௯௧)

கொடுவிற்படைமன்னர்கோட்டாற்றழியக்கணையுதைத்த
நெடுவிற்றடக்கையெங்கோனெடுமாறன்றென்னேரிமுன்னா
லிடுவிற்புருவத்தவணின்றகுழலி தாவுதுவாங்
கடுவிற்றெறுகணையாலண்ணலெய்தகதக்களிறே. (௧௯௨)

பின்சென்ற செவிலித்தாய் எதிர்வருவாரைக் கண்டு வினவ, அவ்வினவப்பட்டார் தலைமகனையுந் தலைமகளையும் இன்னதோரிடஞ் சேர்வர்களென்னும் அதற்குச் செய்யுள்:—

ஆலையுஞ்சீறுங்களிற்றரிகேசரிதெவ்வரைப்போற்
காளையுங்காரிகையுங்கடஞ்சென்றின்றுகாணபர்வெங்கேழ்
வாளையுஞ்செங்கணவராலுமடலிளந்தெங்குகுத்த
பாளையுந்தேறல்பருகிக்களிக்கும்பழனங்களே. (௧௯௩)

நகுவாயனபலபெய்துள்ளநட்டாற்றநவரைபோன்
றுகுவாய்மதகளிறுந்தியென்றான்மனம்போன்றுயர்ந்த
தீதாகுவாயனசுனைசேர்குன்றநீங்கலுந்தன்னவர்போய்ப்
பகுவாயனபலவாளைகள்பாயும்பழனங்களே. (௧௯௪)

இடைச்சுரத்துப் புலம்புஞ் செவிலியை எதிர்வருவார் கண்டு தெருட்டியதற்குச் செய்யுள்:—

கடவரைகாதலனோடுசென்றகயலனடுங்கட்
படவரவல்குலும்பாவைக்கிரங்கன்மின்பண்டுசென்னடை
வடவரைமேல்வைத்தவானவன்மாறன்மலயமென்னுந்
தடவரைதானேயணிந்தறியாததண்சந்தனமே. (௧௯௫)

வெந்நீருஞ்சுரங்காளைபின்சென்றநம்மெல்லியன்மாட்
டிந்நீர்மையீசிரங்கன்மினறையாற்றிகலரசர்
தந்நீரழிவித்தசத்துருதுரந்தரன்றண்குமரி
முந்நீர்பயந்தாலணிவார்பிறரென்பமுத்தங்களே. (௧௯௬)

நெருங்கடல்வேலனெடுமாறனெடுங்களத்தன்றுவென்றான்
பெருங்கடல்ஞாலத்துட்பெண்பிறந்தாரும்பெற்றார்க்குதவா
ரிருங்கடல்போற்றுயரெய்தன்மினின்றனைவென்றமுந்நீர்க்
கருங்கடல்வெண்சங்கணிந்தறியாதண்கதிர்முத்தமே. (௧௯௭)

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ - லுறித்தாழ்ந்த க
ரகமு முனைசான்ற முக்கோலு - நெறிப்படச் சுவலசைஇ வேறோரா
நெஞ்சத்துக் - குறிப்பேவல் செயன்மாலைக் கொளநடை யந்தணிர்
வெவ்விடைச்செலன்மாலை யொழுக்கத்தி ரிவ்விடை - யென்மக ளொ
ருத்தியும் பிறன்மக னொருவனுந் - தம்முளே புணர்ந்த தாமறி புண
ர்ச்சிய - ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும; காணே மல்லேம் க
ண்டனங் கடத்திடை - யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவரற் றாயீர் போறிர்; பலவுறு நறுஞ்சாந்தம் படுப்ப
வர்க் கல்லதை - மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே; யேழ்புண ரின்னிசை
முரல்பவர்க் கல்லதை - யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்
செய்யுஞ் - சூழுங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே; சீர்கெழு
வெண்முத்த மணிபவர்க் கல்லதை - நீருளே பிறப்பினு நீர்க்கவைதா
மென்செய்யுந் - தேருங்கா லும்மக ளுமக்குமாங் கனையளே; என
வாங்கு, இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின் - சிறந்தானை வழிப
டீஇச் சென்றன - ளறந்தலைப் பிரியா வாறுமற் றதுவே."

செவிலி சுரத்திடைச் செல்லாது மனையகத்திருந்து சொல்லு மென்பாரும் உளர்; அது பொருந்துமாறு அறிந்து கொள்க. அல்ல தூஉம், அங்ஙனம் புணர்ந்துடன்போய்ச் சிலநாட் கழிந்தபின்னை, அற த்தொடு நிலையி னஃதறிந் திருந்த - சிறப்புடை மரபிற் றெய்வ மன்ன - விருபெருங் குரவரொடு பொருவி லாற்றற் - றன்னையர் தம்மைச் சால் புடை மரபின் - மன்னிய சிறப்பின் மதியோர் தேற்றப் - பண்பா தல் விதியுளி; தெருண்டபின், மீண்டு வந்து வியனகர் விரும்ப - மாண்ட கு சிறப்பின் வரைந்தெய்துமெனை, அவ்வகை மறுத்து வராநின்றார் த்திடை முன்னுறச் செல்வாரை என்னையத்தார்க்கு எனது வரவினை சொல்லுவீரென்னும் அதற்குச் செய்யுள்:—

செம்மைத்தனிக்கோற்றிறன்மன்னன்சேவூர்ச்செருமலைந்தார்
தம்மைப்புறங்கண்டசத்துருதுரந்தரன்றன்முனைபோல்
வெம்மைச்சுரம்வருகின்றனளென்றுவிரைந்துசெல்வீ
ரம்மைத்தடங்கணென்னைத்தவருக்கறிமின்களே. (கரு அ)

கோடினீண்மதிற்கோட்டாற்றரண்விட்டெக்குன்றகஞ்சேர்
காடரில்வேந்தர்செலச்செற்றமன்னன்கைவேலின்வெய்ய
வேடரில்வெஞ்சுரமீண்டனளென்றுவிரைந்துசெல்வீர்
சேடரிவாட்கணென்னைத்தவருக்குரைமின்களே. (கரு௯)

"கவிழ்மயி ரெருத்திற் செந்நா வேற்றைக் - குருவைப் பன்றி கொள்ளாது கழியுஞ் - சுரநனி வாரா நின்றன ளென்பது - முன்னுறச் செல்வீ ருளைமி - னின்னகை முறுவலென் னுயத் தோர்க்கே."

அல்லதூஉம், மகள் வருகின்றாளெனக் கேட்ட தாய் நம் நெடு நகர்க்கே வருமோ தன் கடிமனைக்கே கொண்டுபோமோவென அவன் குறிப்பறிதற்கு வேலனை வினவும். அதற்குச் செய்யுள்:—

அங்கண்மலர்த்தாரரிகேசரிதென்னர்கோனயில்போல்
வெங்கணெடுஞ்சுரமீண்டவிடலையெடலருஞ்சீர்
நங்கண்மனைக்கேவரநல்குமோசொல்லுவேலநல்கு
தங்கண்மனைக்கேசெலவுய்க்குமோமற்றென்றையலையே. (உ00)

உருமினைநீள்கொடிமேற்கொண்டசெங்கோலுசிதனெங்கோன்
செருமுனைபோல்சுரமீண்டவிடலையெந்நீதிச்செல்லத்
திருமனைக்கேவரநல்குங்கொலன்றாய்விடிற்றனது
பெருமனைக்கேயுய்க்குமோவுளையாய்மற்றென்பேதையையே.

"அருஞ்சுர மிறந்தவென் பெருந்தோட் குறுமக - டிருந்து வேல் விடலையொடு வருமெனத் தாயே - புனைமா ணிஞ்சி பூவ லூட்டி - மனைமண லடுத்து மாலை நாற்றி - யுவந்தினி தயரு மென்ப யானு - மான்பிணை நோக்கின் மடநல் லாளை - யீன்ற நட்பிற் கருளா னாயி னு - மின்னகை முறுவ லேழையைப் பன்னாட் - கூந்தல் வாரிநு சுப்பிவர்ந் தோம்பிய - நலம்புனை யுதவியோ வுடையேன் மன்னே - யலிந்தறி கற்பின ளன்றுமற் றில்ல - வறுவை தோயு மொருபெ ருங் குடுமிச் - சிறுபை ஞாற்றிய பலிநலை கருங்கோ - லாகுவதறி யு முதுவாய் வேல - கூறுக மாதோ கழங்கின் றிட்ப - மாறாது வரு பனி கலுழுங் கங்கு - லாறுத துயல்வருங் கண்ணினிது படிய-வெம் முனை முந்துறத் தருமோ - தம்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே."

இங்ஙனம் புகுந்து பெயர்ந்த பின்றைத் தலைமகன் தன்னகத் தே வதுவைக் கலியாணஞ் செய்வான் எடுத்துக்கொண்டானென்பது கேட்ட நற்றாய் ஒழிந்த கலியாணஞ் செய்யினும் நம்மகத்தே வதுவை க் கலியாணஞ் செய்ய நேருங்கொல்லோ காலையைப் பயந்தாளென் னும். அதற்குச் செய்யுள்:—

அவ்விடத்தென்று தெருளாளாயிற் பிற்றைஞான்று உணருமென் பது. ஆயின் இவனுகாதே தெருளற்பாலான் பெருஞான்றதானுக லான், இவளாகாதே தெருளாதுவிடற்பாலாள் அவன்றுணைப் பேரறி வின்மையானெனின், அதுவன்று. அவன்கணின்ற தமியனுதற் த ன்மையைவிலக்குவது இல்லையின்மையான் அப்பெற்றிடப்பட்டது இவள்மாட்டு இதனைவிலக்குவதுண்டன்றே, இவனது இளிவரவிற்கும் வருத்தத்திற்குங் கவன்ற கவற்சியென்பது. அதனுன் இவன்தெருளா மைக்கும் இவள் தெருடற்குங் காரணம் இதுவென்பது. (௩௩)

௩௪. கற்பினுட் பிறவே கடிவரை வின்றே.

என் - னின்; இங்கு நின்றுங் கற்பினது இலக்கணம் உணர் த்துதனுதலி யெடுத்துக்கொள்ளப்பட்டது. (இ - ள்.) கற்பினுட் து றவே = கற்பினகத்து நீங்கும் நீக்கம், துறவு எனினும் நீக்கம் எனி னும் அகற்றி எனினும் ஒக்கும்; கடிவரைவு இன்றே = கடிந்துவரை யப்படாது ஆசிரியர்களால் எ - று. அஃதேயெனின், கற்பினுட்பி றவே கடிதலின்றே யெனவும் வரைதலின்றேயெனவுஞ் சொல்லாது கற்பினுட்பிறவே கடிவரைவின்றே என்றது எற்றிற்கோவெனின் ஆ சிரியர்களால் விலக்கவும் படாது இத்துணைக் காலமென்று வரையறு க்கவும்படாது என்றவாறு. எனவே, களவினகத்துப் பிரிவு ஒருகாலல் லது இல்லை யென்றவாறு. களவினகத்துப் பகற்குறிநிலைமைக்கண ணும் இரவுக்குறிநிலைமைக்கண்ணும் வந்து பிரியுமாகலான் அதுவும் பலகாலும் நிகழ்தலுடைத்துப் பிற எனின், அவையெல்லாம் ஆசிரிய ராற் பிரிவென்று வேண்டப்படா, ஒரு கருமநோக்கிப் பெயர்ந்தன அ ன்மையின். அல்லதூஉம் அவையேயானும் வரையறை உடைத் தாகலானென்பது. (௩௪)

௩௫. ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தற் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்க வாறே யவ்வயிற் பிரிவே.

என் - னின்; மேற் கற்புக்காலத்துப் பிரிவு பலவென்றார், அ வையிற்றைப் பெயரும் முறையுந் தொகையும் உணர் - ற்று. (இ-ள். ஓதல் = கல்விக் காரணத்துப் பிரியும் பிரிவு: காவல் = நாடுகாத்தற்குப் பிரியும் பிரிவு: பகைதணிவினை = இருவர் அரசர் தம்மிற் பொருட

என்றவிடத்து அவரைச் சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு: வேந்த ற்குற்றுழி=வேந்தரென்பார் அரசர், அரசர்க்குற்றுழிப் பிரியும் பிரிவு: பொருட்பிணி=பொருட்குப் பிரியும் பிரிவு: பரத்தை=புறப்பெண்டீர் மாட்டுப் பிரியும் பிரிவு: புறம், அஃறிணைச்சொல்: என்று, எண்ணுத ற்குரியதோர் வாய்பாடு; ஆங்கு, அசைச்சொல்; ஆறு, அவற்றதுதொ கை; அவ்வயின்=அக்கற்பினிடத்து: பிரிவு=நீக்கம் எ-று. ஏ யென் பது ஈற்றசையேகாரம்; பெயர், சொல்லப்பட்ட பெயர்; முறை, கிடந் தமுறை; தொகை, ஆறு எனக்கொள்க. ஓதற்குப்பிரிவு முன்வை க்கப்பட்டது தலையான பிரிவாகலானும் உயர்ந்தோர்க்கு உரித்தாகலா னுமென்பது. பரத்தையிற் பிரிவு பின்வைக்கப்பட்டது காமம் பின் வைத்தெண்ணப்படுமாகலானென்பது. அஃதேயெனின், இவர் பொ ருவிறந்தவரென்பதனோடு மாறுகொண்டது இச்சூத்திரம், என்னையோ வெனின், தலைமகளை எய்தியிருந்தே இவன் ஓதுவான் பிரிவானெ னின், முன் ஞானமிலனும்; இலனாகவே, ஞானத்தின் வழியது ஒழு க்கமாகலானும் ஒழுக்கத்தின் வழித்துத் தலைக்குலமாகலானும் இவை யெல்லாங் குறைபட்டானுமென்பது. இனிக்காவலென்பது இவன் நாட்டைப் பிறர்புகுந்து அலைப்பதுங் கொள்வதுஞ் செய்ய அவனை நீங் குதற்கு நீங்குமேயெனின் இவனது பொருவிறப்பு என்னையோவென் பது. இனிப் பகைதணிவினையென்பது சந்து செய்வித்தற்குப் பிரி யுமேயெனின், தூதுவனாயினானும்; தூதுவரென்பார் பிறர்க்குப் பணி செய்து வாழ்வார், அவரது பொருவிறப்பு என்னையோவென்பது. இனி வேந்தற்குற்றுழிப் பிரியுமேயெனின், கருமஞ் செய்வானும்; கரும ஞ்செய்வதென்பது இறப்பவும் இளிவந்ததோரொழுக்கம். பிறர் குறி ப்பன்றித் தன் குறிப்பு இல்லையெனப்படும் ஆகலின் அவரது பொரு விறப்புண்டாயது என்னையோவென்பது. இனிப் பொருள்வயிற் பிரி யுமேயெனின், முன்னர்ப் பொருளிலன் ஆயினானும், ஆகவே எள்ளு நர்ப்பணித்தலும் இரந்தோர்க்கீதலும் என்னும் இவையெல்லாம் பொ ருட்குறைபாடுடையார்க்கு நிகழாமையின் இக்குறைபாடெல்லாம் உ டையனும்; அவையுடையானது பொருவிறப்பு என்னையோவென்ப து. இனிப் பரத்தைமாட்டுப் பிரியுமேயெனின் அவன் கண்டார்கட் டாழ்வானும் ஆகலாற் தலைமகள்மாட்டுக் கிடந்த அன்பிலன் ஆயினா னும். அல்லதூஉங் கண்டுழியெல்லாம் உள்ளத்தைச் செலீஇ மனத் தின்வழியோடுமாகலான் நிறையிலன் ஆயினானும்; நிறையிலானது பொருவிறப்பு என்னையோவென்பது. இவையெல்லாஞ் சொல்லப் பெ.

பிரிய, நீயாற்றுயாவதோ தகாது என்ற தோழிக்கு, யான் பிரிய ஆற் றேனுகினேனல்லேன், அவர் சென்ற கானத்துத் தன்மையை நோக்கி அவர்க்குக் கவன்று நினைந்து ஆற்றேனுயினேனை எதிலர் அதனைத் திரிய உணர்ந்தாரென ஊர்மேல் வைத்துச் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

மின்றுணையவிளங்கொளிவேலொடுவெண்டிரைமே
னின்றுனிலமன்னனேரியன்மாறனிகன்றுளைபோற்
கொன்றுறலைச்சுஞ்சுரமன்பர்சீங்கலுங்கோல்வளைகள்
சென்றுலதுபிறிதாகவிவ்வூரவர்சிந்திப்பரே. (உ0௪)

இப்பிரிவின்கண்ணே ஆற்றளாய் வேறுபட்ட தலைமகளை இவ் வாறன்றி ஆற்றுவிக்கலாகாதெனக் கருதித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழியும். அதற்குச் செய்யுள்.—

"தொல்கவின் றொலைந்து தோணலஞ் சாய - நல்கா நீத்தன ராயினு நல்குவர் - நாடினர் வாழி தோழி குட்டுவ - னகப்பா வழிய நூறிச் செம்பியன் - பகற்றீ வேட்ட ஞாட்பினு மிகப்பெரி - தலமொ டூச் சென்றன ராயினு மலர்கவிந்து - மாமட லவிழ்ந்த காந்தளஞ் சா ரலின் - ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத் - துஞ்சாத் துயரத் தஞ்சுபிடிப் பூச - னெடுவரை விடரகத் தியம்பும் - கடுமான் புல்லிய காடிறந் தோரே."

அல்லதூஉம், நெட்டிடை கழிந்து பொருள்வயிற் பிரிந்தவி டத்துத் தலைமகளது ஆற்றமை கண்டு தோழி தலைமகனை இயற்பழிக் கும்; எங்ஙனம் இயற்பழிக்குமோவெனின், இவளை இங்ஙனம் ஆற்றளா கப்பிரிந்த அவரினுங் கொடிய இவளது ஆற்றமை கண்டும் அதற்கு நல்லது புரியாது தன்னாணின்மையாற் பகலே புகுந்து இளைதேர் கின்ற நாணுப் பறவைகளென்னும். அதற்குச் செய்யுள்:—

இகலேபுரிந்தெதிர்நின்றதெவ்வேந்தரிருஞ்சிறைவான்
புகலேபுரியவென்றுன் கன்னியன்றென்புலம்புறுநோய்
மிகலேபுரிகின்றது கண்டுமின்றிவ்வியன்கழிவாய்ப்
பகலேபுரிந்திளைதேர்கின்றநாணுப்பறவைகளே. (உ0௫)

என்பது கேட்ட தலைமகள் என் ஆற்றமைகண்டன்றே இவர் இவ்வகை சொல்லுவாளாயதெனத் தனது ஆற்றமை நீங்குவாளா

வ,து பயன். இனி ஒருவழித் தணந்தவிடத்துத் தலைமகள் வேறுபட இவ்வகைப்பட்ட நிலத்தில் தலைமகன் நம்மைத் துறவான் எற்றிற்கு ஆற்றாயாகின்றாயெனத் தோழி சொல்லியதற்குச் செய்யுள்:—

அடுமலைபோல்களியானையரிசேசரியுலகின்
வடுமலையாதசெங்கோன்மன்னன்வஞ்சியன்னாய்மகிழ்ந்து
படுமலைபோல்வண்டுபாடிச்செங்காந்தட்பைந்தேன்பருகு .
நெடுமலைநாடனைநீங்குமென்றோநீநினைக்கின்றதே. (உ0சு)

குழலிசையவண்டினங்கள்கோழிலையசெங்காந்தட்குலைமேற்பாய
வழலெரியின்மூழ்கினவாலந்தோவளியவென்றயல்வாழ்மந்தி
கலுழ்வனபோனெஞ்சசைந்துகல்லருவிதூஉ
நிழல்வரைநன்னாடனீப்பானோவல்லன். (உ0எ)

உசுஎ. வெளிப்படை தானே விரிக்குங் காலைத்
தந்தை தாயே தன்னைய ரென்றாங்
கன்னவ ரறியப் பண்பா கும்மே.

என்-னின்; மேல் வெளிப்படையே சொல்லிப்போந்தார், அவ்வெளிப்படை இவையென்பது உணர்-ற்று. (இ-ள்) வெளிப்படை தானே = களவு வெளிப்படைதானே: விரிக்குங் காலை = விரித்து உணர்த்துமிடத்து: தந்தை தாயே தன்னையர் என்றாங்கு அன்னவர் அறியப் பண்பு ஆகும்மே = தந்தை தாயே தன்னையர் என்றவர் அறியப் பண்பாகும் எ-று. பண்பெனினும் இலக்கணமெனினும் இயல்பெனினும் ஒக்கும். வெளிப்படையென்பது அறத்தொடுநிலை யென்றவாறு. வெளிப்படையெனினும் அறத்தொடுநிலையெனினும் ஒக்கும்; என இவ்விரண்டும் ஒருபொருண்மேற் கிடந்தவாயினுங் கருத்து வேறுபாடுடையவாம். யாவரும் அறியப்படாத களவு தந்தையுந் தாயுந் தன்னையரும் அறிய நிகழ்ந்தமையிற் களவு வெளிப்படையெனப்பட்டது. இனித் தலைமகள் அறன் அழியாமை நிற்றலின் அறத்தொடுநிலையெனவும்பட்டது. (உசு)

உஎ. அவருட், டாயறி வுறுதலி னேனோரு மறிப.

என்-னின்; இவர்தாம் அறியுமிடத்துத் தாய் சொல்லவன்றித் தாமாக அறிவிலரென்பது உணர்-ற்று. (இ-ள்.) அவருள் = சொல்லப்பட்ட மூவருள்ளும்: தாய் அறிவுறுதலின் ஏனோரும் அறிப = தாய்

அறிவுறுக்கப்பட்டுத் தந்தைக்குந் தன்னையன்மாருக்கும் அறத்தொடு நிற்குமென்பது. செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நிற்குமென்பது. இது பெற்றவாறென்னையெனின், உரையிற்கோடலென்னுந் தந்திரவுத்தியாற் பெறுமென்பது. (உஎ)

உஅ. தந்தை தன்னைய ராயிரு வீற்று
முன்ன மல்லது கூற்றவ ணில்லை.

என்-னின்; தந்தைக்குந் தன்னையன்மார்க்கும் நற்றாய் அறத்தொடு நிற்குமாறு உணர்-ற்று. (இ-ள்.) தந்தை தன்னையர் ஆ இரு வீற்று = தந்தையென்றுந் தன்னையன்மாரென்றுஞ் சொல்லப்பட்ட விரண்டுகூற்றார்க்கும்: முன்னம் அல்லது கூற்று அவண் இல்லை = அவர்க்கு முன்னத்தாலல்லது செவ்வனஞ் சொல்லப் பெறாள். எ-று. நற்றாய் தந்தைக்குந் தன்னையன்மார்க்கும் அறத்தொடு நிற்குமிடத்து, இன்னதொன்றுண்டால், அம்மெதன்றோவெனிற், குலத்தானுஞ் செல்வத்தானும் மிக்கான் ஒருவன், உலகத்தாரெல்லாம் ஒரு குறைவேண்டப்படுந்தன்மையான், ஒருவர்பால் ஒரு குறைவேண்டுஞ் சிறுமையனல்லன், இத்தன்மையானவன் நம்மை வழிபட்டு வாழலுறும், அவனை யாங்கிழமை கொள்ள அழிவதுண்டோ என்னும். என்பது கேட்டு அவர் என் கருதுவரோவெனின் இவள் கருதிச் சொல்லுகின்ற குறிப்பாவது இதுபோலுந், தன்மகள் இறந்திறொதேயென உணாவாராவது. அவனேற மிகைவாய்பாட்டான் முன்னத்தானன்றியும் முன்னம்போலுஞ் சொல்லானுஞ் சிறுபான்மை சொல்லுமென்பது அதுவருமாறு, தலைமகன் பார்ப்பாரைமுன்னிட்டு அருங்கலங்களோடு வரைவுவேண்டி விட்டவிடத்துத் தந்தையுந் தன்னையன்மாரும் வரைவுமறுத்தார், மறுப்பார் சூழ்தலும் அருகுதலுமுடைமையான். நூறியாண்டைக் கற்றவரோடு எண்ணிச் செய்யப்படுமாகலாற் சூழப்படும். இனிக் கண்டீரோ தம்மகளை வேண்டுவாரைப் பார்த்திருந்தாராகாதே, தாம் இந்நூற்றிடைக் கரும நூற்றவரோ, இவர்களிடை மகட்பெறுவார் யாரெனவும் பெறுதற்கு அருமையுடைத்தெனவுங் கருத அருகுப. இனிக் கண்டீரோ தம்மகளை வேண்டுவார் உரைப்பனவும் பொய்போலும், வேண்டுதற்கு இடையின்றிப் பெற்றாராய இவ்வகை விரைந்து கொடுத்தாரென்னும் புறவுரை நோக்கியும் அருகுப. அல்லதூஉம், இறப்பச் சிறியாருந் தம்மின் மிக்கார் மகள் வேண்டிச் சென்றவிடத்தும் அருகுப. இனி உலகியலானும் அருகுப அல்லது உலகியல்பல்லாவழி இவர் அருகுவதற்குச் சொல்லவேண்டி

மோ என்பது. எனத் தலைமகன் வரைவுமறுக்கப்பட்டானென்பதனை உணர்ந்த தலைமகள் ஆற்றாளாகத் தோழி யாய்க்கு அறத்தொடுநிற்கும், செவிலி நற்றாய்க்கு அறத்தொடுநிற்கும், அவர் தந்தைக்குந் தன்னையன்மார்க்கும் அறத்தொடுநிற்கும், முன்னம் போலுஞ் சொல்லினென்றவாறு. அவ்வாறு சொல்லியதற்குச் செய்யுள்:—

சான்றோர்வரவும்விடுத்தவர்தந்ததகவுமது
வான்றோய்குடிமையுநோக்கினல்லாற்பொருளோகருதிற்
றேன்றோய்கமழ்கண்ணிச்செம்பியன்மாறன்செங்கோன்மனந்த
மீன்றோய்கடலிடந்தானும்விலையன்றிம்மெல்லியற்கே. (உ0எ)

நடையாலிதுவென்றுநேரினல்லானறையாற்றுவென்ற [ஞ்
படையான்பணிமுத்தவெண்குடைவேந்தன்பைங்கொன்றைதங்கு
சடையான்முடிமிசைத்தண்கதிர்த்திங்கடன்றொல்குலம
வுடையானுசிதனுலகும்விலையன்றெம்மொண்ணுதற்கே. (உ0அ)

"சான்றோர் வருந்திய வருத்தமு நமது-வான்றோய் வன்ன குடிமையு நோக்கித்-திருமணி வானறங் குன்றங் கொண்டிவள்-வருமுலை யாகம் வழங்கினோ னன்றே-யஃதான், றடைபொருள் கருதுவிராயிற் குடையொடு - கழுமலந் தந்த நற்றேர்ச் செம்பியன்-பங்குனி விழவின் வஞ்சியொடு - உள்ளி விழவி னுறந்தையஞ் சிறிதே."

என இவ்வாறு நற்றாய் சொல்லக் கேட்டுக் கொடாதவிடின் இக்குலத்துக்கு வடுவுண்டு போலுமென உணர்வாராவது. அதனாற் பொருள் அறத்தொடுநிலை மாட்சிப்பட்டது. (உஅ)

உகூ. காப்புக் கைமிக்குக் காமம் பெருகினு
நொதுமலர் வரையும் பருவ மாயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினு
மவனூ றஞ்சுங் கால மாயினு
மந்நா லிடத்து மெய்ந்நா ணொரீஇ
யறத்தொடு நிற்ற றோழிக் குரித்தே.

என்-னின்; மேற்சூத்திரத்துள் அறத்தொடு நிலைநிற்கும் இலக்கணம் உணர்த்திப் போந்தார், இனி அறத்தொடு நிற்கும் இடங்கூறுவான் எடுத்துக்கொண்டார், அஃது உணர்-ற்று. மேற்சூத்திரத்தொடு இயைபென்னையோவெனின், மேல் அறத்தொடுநிலையதிகாரம் வாரா

நின்றதாகலானென்பது. (இ-ள்.) காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்=காவல் கைமிக்குப்பாட்டின் வேட்கை பெருகினும்: நொதுமலர் வரையும் பருவம் ஆயினும்=அயலார் வரைந்து புகுதுங் காலமாயினும்: வரைவு எதிர் கொள்ளாது தமர் அவண் மறுப்பினும்=வரைவேற்றுக்கொள்ளாது தமர் அவ்விடத்து மறுப்பினும்: அவன் ஊறு அஞ்சுங் காலம் ஆயினும்=அவற்கு நிகழும் ஏதம் அஞ்சின இடத்தும்: அந்நாலிடத்தும் மெய் நாண் ஒரீஇ=அந்நாலிடத்தும் மெய்யினின்ற நாணு நீங்கி: அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே=அறத்தொடு நிற்கும் நிலைமைதோழிக்கும் உரித்து. எ-று

காப்புக் கைமிக்குக் காமம் பெருகினுமென்பது:—காப்பு என்பது இரண்டு வகைப்படும், நிறைகாவல் சிறைகாவலெனு; அவற்றுள், நிறைகாவல் என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகலென்றவாறு, “சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர் - நிறைகாக்குங் காப்பே தலை.” என்பதாகலான். இனிச் சிறைகாவல் என்பது தாய் துஞ்சாமை நாய்துஞ்சாமை ஊர்துஞ்சாமை காவலர்கடுகுதல் நிலவு வெளிப்படுதல் கூகைகுழறல் கோழிகுரற்காட்டலென இவை. அவற்றுள், ஈண்டுச் சிறைகாவல் கொள்ளப்படும். அச்சிறைகாவலது மிகவின்கண் இடையீடாம். இடையீடாயினவிடத்துத் தலைமகட்குப் பெரியதோர் வேறுபாடு உண்டாம்; உண்டாயினவிடத்துத் தோழிக்குப் புலனும்; புலனாயினவிடத்து, எனச்குப் புலனாயினவாறே யாய்க்குப் புலனும், புலனாயினவிடத்து அறிவாரை வினவும், வினவினவிடத்து அறிவார் தெய்வத்தினான் ஆயிற்றென்ப ; அது சொல்லுதற் பயத்தது தங்கருமம் ஆகலானும் பிறிதொன்று சுட்டி உணருந் தன்மைத்தன்று இக்குலமாகலானும் தெய்வத்தினான் ஆயிற்றென்ப; என்றவிடத்து, இவளை முன்னிறீஇத் தெய்வத்திற்கு வழிபாடு செய்விக்கும் ; செய்தவிடத்துக் கற்பழியும், இவட்குக் கற்பழிவு வந்ததன்றே, இவட்கு ஆற்றாமை தணியாதன்றே தெய்வத்தினான் ஆயிற்று என்றமையின், பெயர்த்தும் அதுகண்டு யாய்க்கு ஆற்றாமை பெருகுமன்றே, எனத் தலைமகளது கற்பழிவிக்குத் தாய் ஆற்றாமைக்குந் தோழி ஆற்றாளாம். ஆற்றாமையாவது பிறிதெவ்வுணர்வுமின்றி ஆற்றாமை தானேயாவது. ஆற்றாமை ஆற்றுவதொன்றினைப் பற்றும். ஆற்றுவது பிறிதின்மையின் அறியாரை வினவுமிடத்து என்னை வினவும், யான் அறியேனென்றதன் புறத்தாம் பிறரை வினவுவது, என்னை வினவினவிடத்து இது சொல்லுவனென்று கூட்டமில் காட்டவும்

யார் சிந்தித்துக்கொண்டிருக்கும். இருந்தநிலைமைக்கட் டாய் படிமக் கலத்தோடும் புகும். புக்கு, மகளை அடியிற்கொண்டு முடியளவும் நோக்கி, அன்னுய் என்மகட்கு இவ்வேறுபாடு எற்றினன் ஆயிற் றென்னும். என்றவிடத்து, என்னால் அறியப்படுவதுஞ் சிறிதுண்டெ ன்று மேற்சொல்லியவாறே மாறுகோள் இல்லாத வகையான் அறத் தொடு நிற்கும், அங்ஙனம் அவள் நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும், அவள் அத்தொடக்கத்தார்க்கெல்லாம் அறத்தொடுநிற்கும் என்பது;

நொதுமலர் வரையும் பருவம் ஆயினுமென்பது :—நொதும லரென்பார் ஏதிலர், அவர்தாம் வரைவொடுவந்தாரென்பது கேட்டவிட த்துத் தலைமகள் ஆற்றாளாம் ; ஆற்றாளாயினவிடத்து, மேற்சொல்லி யவாறே தோழி செவிலித்தாய்க்கு அறத்தொடு நிற்கும்.

வரைவெதிர்கொள்ளாது தமர் அவண் மறுப்பினுமென்பது:— தலைமகன் பார்ப்பார் சான்றோரை முன்னிட்டு அருங்கலங்களோடும் வரைவதற்குப் புகுவர் ; புக்கவிடத்து, ஒருகாலைக்கு மறுப்பர். பிறபோ காக்குமரியையுடையார்போலக் கதுமென நேர்ந்திடாரன்றே? பரி யஞ் சிறிதென்றானும் இளையளாலோவென்றானும் நாளும் புள்ளுந் திருத்தி வாரீரோவென்றானும் அங்ஙனந் தமர் மறுத்தாரென்பதனைத் தலைமகள் கேட்டஞான்றும் ஆற்றாளாம். என்னை ? நம்பெருமான் ஒ ருவர்க்கு ஒருகுறை முடிப்பினல்லது ஒருவரை ஒருகுறைவேண்டுந்தன் மையனல்லன். அல்லாதான் இக்குறைவேண்டியது என்கட் கிடந் த அருளானன்றே? இவர்க்கு இவ்விளிவரவாக்கினேன் பாவியேனென் றும் எம்பெருமாற்கு மறுத்தார் இனிமற்றொருவாறுகாதேயென்றுந் தலைமகள் வேறுபடும். வேறுபாடு தோழிக்குப் புலனாயினவிடத்து மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற்குமென்பது.

அவன் ஊறு அஞ்சுங் காலமாயினுமென்பது :— தலைமகன் இரவுக்குறி ஒழுகாநின்ற நிலைமைக்கண் எம்பெருமான் வரும்வழி எ ண்கும் வெண்கோட்டியானையும் அரவும் உருமும் புலியும் வரையரமக ளிரும் உடைத்து, மற்றுந் தெய்வங்கள் வெளவும் வண்ணத்தன, ஏதம் நிகழ்வதுகொல்லோவென வேறுபடும். அவ்வேறுபாடு தோழிக்குப் புலனும். புலனாயினவிடத்து மேற்சொல்லியவாறே அறத்தொடு நிற் கும் என்பது.

அந்நாளிடத்து என்பது அச்சொல்லப்பட்ட நான்கிடத்தும்; மெய் நாண் ஒரீஇ என்பது மெய்க்கணின்ற நாண் நீங்கி; நாண்

உண்டாயினவிடத்துத் தாய்முன்னின்று சொல்லாளென்பது. அறத்தொடு நிற்றல் தோழிக்கும் உரித்தே என்பது. அறமென்பது தக்கது, தக்கதெனச் சொல்லிநிற்றல் தோழிக்கு முரித்தென்றவாறு. அல்லதூஉம், பெண்டிர்க்கு அறமென்பது கற்பு, கற்பின்றலை நிற்றலென்பதூஉமாம்.

தோழிக்கும் உரித்து என்ற உம்மையாற் றலைமகட்கும் அறத்தொடுநிலை உரித்தென்பது. அஃதாமாறு, இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தானும் பாங்கற்கூட்டங் கூடியானுந் தெருண்டுவரைந்தெய்துதலுற்றுத் தமரை விடும். விட்டவிடத்து அவர் மறுப்ப, அஃது இலக்கணமாகலான். அங்ஙனம் மறுத்தவிடத்துத் தலைமகள் வேறுபடும். எம்பெருமான் மறுக்கப்பட்டமையான் மற்றொருவாறுங்கொல்லோவெனக் கலங்கி வேறுபடும். வேறுபாடு எய்தின பொழுதே தோழிக்குப் புலனாம். புலனாயினவிடத்து, எம்பெருமாட்டி, நினக்கு இவ்வேறுபாடு எற்றினானாயிற்றென்னும். என்றவிடத்து இஃதெனக்குப் பட்டது இன்னவிடத்து ஒருஞான்று நீயும் ஆயமுந் தழையுங் கண்ணியுங் கோடற்கு என்னிற்சிறிது நீங்கினாயாக, ஈங்கு நின்றேன், ஒருமணிச்சுனை கண்டேன், கண்ட அச்சுனைதான் ஆம்பலே குவளையே நெய்தலே தாமரையே என்றிப்பூக்களால் மயங்கிம் மேதக்கது, கண்டு வேட்கையான் ஆடுவான் இழிந்தேன், இழுக்கிக் குட்டம் புக்கேன், புக்குத் தோழி -பாவென, நீ அங்ஙனம் கேளாயாயினையாக, ஒருதோன்றல் தோன்றி வந்து எனது துயர்நீக்குதற்காகத் தன்கைநீட்டினான்; நீட்ட, யானும் நலக்கத்தான் நின்கையெனப் பற்றினேன், பற்ற வாங்கிக் கரைமேல் நிறீஇ நீங்கினான்; நீ அன்று கவலுதியெனச் சொல்லேனாயினேன், நீ எவ்வெல்லைக்கண்ணுங் கைவிடாதாய்க்கு அந்நாள் கைவிடலாயாயிற்று விதியாகாதே? இனிப் பிறிதொன்றாவதுகொல்லோவெனக் கலங்கி வேறுபட்டேனென்று தோழிக்குத் தலைமகள் அறத்தொடுநிற்கும். பின்னைத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கும் மேற்சொன்னவாற்றானென்பது. அங்ஙனமாயிற் றோழிகாவலொடு மாறுகொள்ளாதோவெனின்; கொள்ளாது, தோழிக்கு அறத்தொடு நிற்குமாகலானென்பது. காவலொடுமாறுகொள்ளினுஞ் சாவற்குற்றப்பட்டேனென்று தோழியை இறந்துபடாமற் காக்கும் விதியென்பது. அஃதேயெனின், நிகழ்ந்த ஒழுக்கம் மறைத்துக் களைந்து படைத்து மொழிந்தமையாற் பொய்யுரைத்தவாறும் பிறவெனிற், பொய்யுரைக்கப்பட்டதாகாது; என்னை? பழியும் பாவமும் அதனால் வாராமையின்; என்னை

'பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த - நன்மை பயக்கு மெனின்.'" என்றாராகலின், குற்றமின்றென்பது. அறத்தொடு நிற்குமிடங் களைப் பேரும் எண்ணுஞ் சொல்லின மாத்திரமே இச்சூத்திரத்துப் பொருள். அறத்தொடுநிற்கும் இலக்கணமும் அவற்றிற்குச் செய்யுளும் மேலே காட்டிப் போந்தாம். (உ௯)

௧0. காம மிக்க கழிபடர் கிளவியுங்
காப்புச்சிறை மிக்க கையறு கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியு
மிரவினும் பகலினு நீவரு கென்றலுங்
கிழவோன் றன்னை வார லென்றலுந்
தன்னுட் கையா றெய்திடு கிளவியு
மன்ன மரபிற் பிறவுந் தொகைஇத்
தன்னை யழிந்த கிளவி யெல்லாம்
வரைதல் வேட்கைப் பொருள வென்ப.

என்-னின்; வரைவுகடாவும் இலக்கணமெல்லாந் தொகுத்து உணர்-ற்று. மேலதனோடு இயைபு என்னையோவெனின், மேலுங் களவு நீக்கிக் கற்பாவது ஓரிலக்கண முணர்த்தினார், இவ்வரைவும் அன்னதாகலான் அதன்பின்னே வைக்கப்பட்டது. (இ-ள்.) காமம் மிக்க கழிபடர் கிளவியும்=காமமென்பது வேட்கை, மிகுதலென்பதுபெருகுதல், கழியென்பது சிறத்தல், படர் என்பது நினைத்தல், கிளவியென்பது சொல் ; வேட்கைமிக்குச் சிறப்பச் சிந்தித்துச் சொல்லுஞ் சொல்லும் : காப்புச் சிறைமிக்க கையறு கிளவியும்=காப்புமிகவினாற் கையற்றுச்சொல்லுஞ் சொற்களும்: ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவியும்=அவன்வரும் வழியது ஏதஞ் சிந்தித்து ஆற்றாளாய்ச் சொல்லுஞ் சொற்களும்: இரவினும் பகலினும் நீவருக என்றலும்=இரவின்கண்ணும் பகலின்கண்ணும் நீயிர் வந்து ஒழுகுமெனச் சொல்லுஞ் சொற்களும் : கிழவோன்றன்னை வாரல் என்றலும்=தலைவனை இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வரவேண்டாமென்று சொல்லுஞ் சொற்களும் : தன்னுட் கையாறு எய்திடு கிளவியும்=தன்னுட் கையாற்றினை எதிலது ஒன்றின்மேலிட்டுச் சொல்லுஞ் சொற்களும் : அன்ன மரபிற் பிறவுந் தொகைஇ=அன்ன இலக்கணத்த பிறவுந்தொகுத்து: தன்னை அழிந்த கிளவியெல்லாம்=தன்னாற்றாமையாற் சொல்லுஞ்

சொல்லெல்லாம் : வரைதல் வேட்கைப் பொருள என்ப=வரைதல் வேட்டுச் சொல்லுஞ் சொல். எ - று.

காமமிக்க கழிபடர் கிளவியாமாறு :— பகற்குறியானும் இரவுக்குறியானுந் தலைமகன் ஒழுகாநின்ற நிலைமைக்கண் ஒருநாள் ஒருகாற் கண்டு தரிக்குந் தன்மைத்தன்றாம்; என்னை? காணும்பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலான்; அவ்வகை வேட்கையளாய் நின்று புன்னைக்கானும் அன்னத்திற்கானுங் கடலிற்கானுங் கழிக்கானும் அவ்வகை பிறவற்றிற்கானுந் தன்கட்டுறுகுறை தணிப்பனவாக சிந்தித்துச் சொல்லுவதாயிற்று. அதற்குச் செய்யுள்:—

தாதலர்நீண்முடித்தார்மன்னன்மாறன்றண்ணங்குமரிப்
போதலர்கானற்புணர்குறிவாய்த்தாள்புலம்பினைய
வேதிலர்நோய்செய்வதோநின்பெருமையெனநெருங்கிக்
காதலர்தம்மைக்கழறினென்னானங்கருங்கடலே. (உ0க)

ஒண்டேவிநாராய்நின்சேவலுநீயுமாய்
வண்டேதுபூங்கானல்வைகலுஞ்சேறிரோற்
பெண்டேதுவக்தேமெனவுரைத்தெங்காதலரைக்
கண்டீர்கழறியக்காற்கானல்கடிபவோ.

இவ்வகை கட்லுக்கும் நாரைக்குஞ் சொல்லின எனக்கொள்க. இதனைத் தலைமகன் கேளாவருமேயெனின், இங்ஙனம் வந்தொழுக இவள் ஆற்றாளாமென்று ஒருவகையான் முற்பட்டுப் பிற்றைஞான்று வரைவொடு புகுவானும். அது தோழி கேட்குமேயெனிற் தலைமகள் முன்னின்று வரைவுகடாவுவாளாம். யாருங் கேட்பாரில்லையெனின் ஆற்றுதலைப்பயக்கும்; என்னை? மூடி வேவாநின்றதோர் பொருளை மூய்திறந்தவிடத்து அகத்துநின்ற வெப்பங் குறைபடும். அதுபோல, இவட்கும் அயர்வுயிர்ப்பாம் அச்சொற்கள் புறப்படுத்தலானென்பது. இம்மூன்றினுள் ஒன்றுகாமையில்லையென்பது. தலைமகன் கேட்பின் இன்னது ஒன்றும், தோழிகேட்பின் இன்னது ஒன்றும், யாருங்கேட்பாரில்லையாயின் இன்னது ஒன்றும் என்று ஒருபயன் சிந்தித்துச சொல்லுமோவெனிற், சொல்லாள்; குழவி அழுதாற்போல வேட்கை மிகுதியாற் சொல்லினவிடத்துப் பயன் நிகழும். குழவி அழுகின்றது எனக்குப் பால்தம்மின் நீராட்டுமின் என்றழாது துக்கம்வந்ததாக அழும். அறிவார் பயம் எய்துவிப்பரென்பது.

காப்புச் சிறைமிக்க கையறு கிளவியுமென்பது, காப்புச்சிறைமிகவினாற் கையற்றுச் சொல்லுஞ்சொல். காப்புத்தாம் இருவகைய, நிறைகாவலுஞ் சிறைகாவலுமென; அவற்றுள், நிறைகாவல் என்பது நிறையின் வேறுபாடு புறத்தார்க்குப் புலனாகாமை காப்பாட்கு ஆகாது மறையின் வேட்கை பெருகக் காணலுறவினான் ஆற்றாளாய்ச் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

மின்கண்படாவடிவேனெடுமாறன் விண்டார்முனைமேன்
மன்கண்படாதமயங்கிருணாள்வந்தநீர்த்துறைவற்
கென்கண்படாதநிலைமைசொல்லாதிளஞ்சேவறழீஇத்
தன்கண்படாநின்றவன்னத்ததேயாற்றகவின்மையே. (௨௧0)

புன்கண்கூர்மாலைபுலம்புமென்கண்ணேபோற்
றுன்பமுளவாய்த்துயிலப்பெறுதியா
லின்களவாய்நெய்தானீயெய்துங்கனவினுள்
வன்கணார்க்கானல்வரக்கண்டறிதியோ.

எனவுங்கொள்க.

சிறைகாவலென்பது, யாய்துஞ்சாமை நாய்துஞ்சாமை ஊர்துஞ்சாமை காவலர்கடுகுதல் நிலவுவெளிப்படுதல் கூகைகுழறல் கோழிகுரற்காட்டல் என்றிவை. அவற்றுள், யாய்துஞ்சாமைக்குச் செய்யுள்:-

ஆயுந்தமிழ்மன்னன்செங்கோலரிகேசரிமுனைபோற்
றேயுநினைவொடுதுஞ்சாண்மடந்தையிச்சேயிழையா
டாயுந்துயிலலுறாளின்னநாட்டணித்தாநெடுந்தேர்க்
காயுங்கதிரோன்மலைபோய்மறைந்தகனையிருளே. (௨௧௧

நாய்துஞ்சாமைக்குச் செய்யுள் :—

வாருந்துடைபங்கழற்செங்கோல்வரோதயன்வஞ்சியன்னாள்
சேருந்திறமென்னைதேர்ந்தண்சிலம்பனத்திங்கள்கல்சேர்ந்
தாருந்துயின்றிடங்காவலரோடென்னையுள்ளுறுத்தேதல்
லாருந்துயிலினுந்துஞ்சாஞமலியனையாயிருளே. (௨௧௨)

இனி ஊர்துஞ்சாமைக்குச் செய்யுள் :—

மாவுங்களிறுமணிநெடுந்தேரும்வல்லத்துப்புல்லாக்
கோவுந்துமியவைவேல்கொண்டகோனந்தண்கூடலன்னாய்
பூவும்புகையும்விரையுங்கமழ்ந்துபொன்னுலக
மேவும்விழவொடுதுஞ்சாதிரவிவ்வியனகரே. (௨௧௩)

'க் காவலர் கடுகுதற்குச் செய்யுள்:—

அடிக்கண்ணதிருங்கழலரிகேசரிதெவ்வனுங்கக்
கொடிக்கண்ணிடியுருமேந்தியதென்னவன்கூடலன்னாய்
வடிக்கண்ணிரண்டும்வளர்நகர்காக்கும்வைவேலிளைஞர்
துடிக்கண்ணிரண்டுங்குறுந்தலையொன்றுந்துயின்றிலவே. (உகச)

இனி நிலவுவெளிப்படுதற்குச் செய்யுள்:—

சென்றுசெருமலைந்தார்கள்செந்நீழ்சச்செந்நிலத்து
வென்றுகளங்கொண்றகோன்றமிழ்நாடன்னமெல்லியலா
யின்றிவ்விரவினிருள்சென்றிடங்கொண்டதெங்குக்கொல்லோ
நின்றுவிசும்பிற்பகல்போல்விரியுநிலாமதியே. (உகரு)

இனிச் சிறைகாவல் எல்லாம் வந்தசெய்யுள்:—

"இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர் - விழவின் றாயினு ந் துஞ்சா தாகு - மல்ல லாவண மறுகுடன் மடியின்-வல்லுரைக் கடு ஞ்சொ லன்னை துஞ்சாள் - பிணிகொ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவ - ரிலங்குவே லிளைஞர் துஞ்சின் வையெயிற்று - வலஞ்சுரித் தோகை ஞாளி மகுளு - மரவவாய் ஞமலி குரையாது மடியிற் - பகலுரு வுறழ நிலவுகான்று விசும்பி - னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே-திங்கள் கல்சேர்பு கனையிருண் மடியி - னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை - கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும் - வளைகட் சேவல் வாளாது மடியின் - மனைச்செறி கோழி மாண்குர லியம்பு - மெல்லா மடிந்த காலை யொருநா - ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரோ - யதனு, லரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந் - தாதி போகிய பாய்பரி நன்மா - நொச்சி வேலித் தித்த னுறந்தைக் - கன்முதிர் புறங்கா டன்ன - பன்முட் டின்றாற் றோழி நங் களவே."

இனி ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவியும் என்பது, தலைமகன் இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற நிலைமைக்கண், ஆறென்பது வழி, பார்த்துறுதல் என்பது பரிவுறுதல், அச்சமென்பது குறிப்பின்றியே வருவதோர் நடுக்கம், கிளவியென்பது சொல், அஃதாமாறு எம்பெருமான் வரும்வழி இறப்பவும் இன்னாத நீருடைத்துக் கல்லுடைத்து ஏற்றுடைத்து இழிவுடைத்தெனக்கவறல்; இஃதாம் ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவியென்ப ஒருதிறத்தார்; அவரறியார், இது ஆறுபார்த்துற்றவச்சக்கிளவியே? இனி அச்சக்கிளவியென்பது கள்ளருடைத்து புலியு

டைத்து எண்கு வெண்கோட்டியானையுடைத்து பாந்தளுடைத்தெனக் கவலுங் கவற்சியால் ஒருசொற் சொல்லுவது. அவற்றுள் ஆறுபார்த்துற்றதற்குச் செய்யுள்:—

உருடங்குமாநெடுந்திண்டேருசிதனுலகளிக்கு
மருடங்குசெங்கோலடன்மன்னன்கொல்லியருவரைவாய்
மருடங்குவண்டறைசோலைப்பொதும்பின்வழங்கற்கின்று
விருடங்குநீணெறியெம்பொருட்டால்வந்தியங்கன்மின்னே. (௨௧௬)

இதுகேட்ட தலைமகன் வரைவானும். இனி அச்சக்கிளவிற்குச் செய்யுள்:—

பண்குடைச்சொல்லிவள்காரணமாப்பணிமுத்திலங்கும்
வெண்குடைவேந்தன்விசாரிதன்மேற்கரையேற்றெதிர்ந்தார்
புண்குடைவேன்மன்னன்றென்னன்பொதியிற்புனவரைவா
யெண்குடைநீள்வரைநீயரையெல்லிலியங்கன்மின்னே. (௨௧௭)

அன்பெதிர்ந்தாலும்வருதல்பொல்லாதையவாரமருண்
முன்பெதிர்ந்தார்படச்சேனைவென்றான்முகிறோய்பொதியிற்
பொன்பிதிர்ந்தாலன்னமின்மினிசூழ்புற்றின்முற்றிடசோற்
றின்பிதிர்வாங்கியெண்கேறுநிலைத்துண்ணுமீண்டிருளே. (௨௧௮)

இன்னும் அவற்றிற்குச் செய்யுள்:—

கையமைவேல்விளக்காகக்கலையிருணீரவி
லையமைதோய்வெற்பவாரணறையாற்றமர்கடந்திவ்
வையமெல்லாங்கொண்டமன்னவன்மாறன் மைதோய்பொதியிற்
றெய்வமெல்லாமருவிப்பிரியாதசிறுநெறியே. (௨௧௯)

தோள்வாய்மணிநிறமங்கைக்குவாட்டவுந்துன்னுதற்கே
காள்வாய்வருதிவிண்டோய்சிலம்பாநறையாற்றுநண்ணார்
வாள்வாய்புகச்செற்றவானவன்மாறன்வண்பூம்பொதியிற்
கோள்வாயினஞ்சிங்கஞ்சிங்காதிரிதருங்குன்றகமே. (௨௨0)

கார்தன்விரலன்னமென்விரலேழைதன்காரணமாப்
பூர்தண்சிலம்பவிரவின்வருதல்பொல்லாதுகொலாம்
வேந்தன்விசாரிதன்விண்டோய்குமிப்பொதியிலென்றுந்
தேந்தண்சிலம்பினரிமாதிரிதருந்நெறியே. (௨௨௧)

அழுதுபுலம்பியுமையுமிவள்பொருட்டாகவைய
தொழுதுங்குறையின்றுவேண்வெல்வாறன்னோர்கிணமு
மிழுதுமிடைந்தசெவ்வேனெமொறனெங்கோன்முனைபோற்
கழுதுந்துணிந்துவழங்கல்செல்லாதகனையிருளே. (உஉஉ)

பொய்தலைவைத்தவருளொடுபூங்குழலாள்பொருட்டா
மைதலைவைத்தவண்பூங்குன்றநாடவரவொழிநீ
மெய்தலைவைத்தவைவேனெடுமாறனெங்கோன்பொதியிற்
கைதலைவைத்துக்கழுதுகண்சோருங்கனையிருளே. (உஉஙூ)

இவை தோழிக்குரியன. இனித்தலைமகட்குரியன வருமாறு:

பணிகொண்டவாழாதெதிர்ந்துபறந்தலைக்கோடிப்பட்டார்
துணிகொண்டுபேய்துள்ளவேல்கொண்டகோன்சுடர்தோய்பொதியி
னணிகொண்டதாரண்ணல்வாராய்விடர்நின்றரவுமிழ்ந்த
மணிகொண்டுகானவர்வேழங்கடியுமயங்கிருளே. (உஉச)

இவ்வகை சொன்னவிடத்துத் தலைமகன் கேட்டானாயின் வரைவானும். தோழி கேட்டாளாயின் வரைவுகடாவுவாளாம். யாருங் கேட்பாரில்லையாயிற் றானே சொல்லி ஆற்றுவாளாம். இஃது இரவுக்குறிக்கண்ணதே.

இனி, இரவினும் பகலினும் நீவருகென்றலுமென்பது, பகற்குறியானும் இரவுக்குறியானும் வந்தொழுகாநின்ற தலைமகனை இரவும் பகலும்வரவேண்டுமென்று சொல்லுதல். அதற்குச் செய்யுள் :—

உரவுங்கடல்குழலகுடைவேந்தனுசிதனென்னோர்
பரவுங்கழன்மன்னன்கன்னியங்கானற்பகலிடநீ
வரவுமகிழ்ந்திலளென்றையல்வெய்யோன்மலைமறைந்த
விரவும்வரவென்னவூனமதாகினதின்னருட்கே. (உஉரு)

இதுகேட்டு இவ்வகை யான் வந்தொழுகப் பொறாதபோலும் இவ்வகை சொல்வாளாயினுளென வரைந்துபுகுவானும் என்பது. இனி ஒருசாரார் இரவினு பகலினும் நீவருக என்றதனை இரவுவருவானைப் பகல்வருகென்றலும், பகல்வருவானை இரவுவருகென்றலும் என்பவா றென்பது. அவற்றிற்குச் செய்யுள் வேறுகாட்டுதும்.

அவற்றுள், இரவுவருவானைப் பகல்வருகென்றற்குச் செய்யுள்:-

அடிமேலகலிடமெல்லாம்வணக்கியமரர்தங்கோன்
முடிமேல்வளையுடைத்தோனெடுமாறன்முன்னுயர்த்த
கொடிமேலுருமதிரகூரிருள்வாரன்மினீர்மகிழும்
படிமேற்பகலவர்வநதால்விரும்புமெம்பல்வளையே. (உஉ௬)

என்பதுகேட்டு யாம் இருள்வந்தொழுகப் பொருளாய்ப் ப கல்வம்மின் என்றதெனக் கருதி வரைந்து புகுவானும்.

இனிப் பகல்வருவானை இரவுவருகவென்றற்குச் செய்யுள்;—

அஞ்சாதெதிர்மலைந்தாரமர்நாட்டடனேமடிய
நஞ்சாரிலங்கிலைவேல்கொண்டதென்னனன்றுடையனைய
பஞ்சாரகலல்குலாட்குப்பகனீவரிற்பழியா
மஞ்சார்சிலம்பவரவென்னவூனமயங்கிருளே. (உஉ௭)

என இதுசொல்லவும் பகல்வருவானை இரவுவருகென்றது இவ் வொழுக்கம் பொருமையினென வரைந்து புகுவானும்.

இனி, கிழவோன்றன்னை வாரலென்றலும் என்பது, தலைமகனை இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வாரலென்று சொல்லும்.. அதற் குச் செய்யுள்:—

ஓதங்கடைந்தமுதாக்கியமரர்க்குணக்கொடுத்துப்
பூதம்பணிகொண்டபூழியன்மாறன்பொதியிலின்வா
யேதம்பழியினொடெய்துதலானிரவும்பகலு
மாதங்கடைந்தமென்றோக்கிதிறத்தையவாரன்மின்னே. (உஉ௮)

"குறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅற் - றேங்கம ழிணர வேங்கை சூடித் - தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடு விரைஇ - மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத் - தியன்முரு கொப்பினை வயநாய் பிற்படப் - பகல்வரிற் கௌவை யஞ்சுது மிகல்கொள - விரும்பி டிகன்றொடு விரைஇக் கயவாய்ப் - பெருங்கை யானை கோட்பிழைத் தொரீஇய - வடிபுலி வழங்கு மாரிரு ணடுநாட் - டனியை வருத லதனினு மஞ்சுது - மென்று குவள்கொ ளுனே பண்டைப் - புணர்குறி செய்த புலர்குர லேனற் - கிளிகடி பாடலு மொழிந்தன - ளளிய டாளோநின் னளியல திலளே."

ஒன்றுமறுப்பின் ஒன்றின்கண்ணே நிற்கும்கொல்லோ வென் று இரண்டிரண்டு மறுத்து வரைவின்கண்ணே படுப்பித்தவாறெனக் கொள்க

தன்னுட் கையாறு எய்திடு கிளவியும் என்பது, தன்னுட் கையாற்றினை எதிர்ப்பாடொன்றின்மேலிட்டுச் சொல்லுதலும். அதற்குச் செய்யுள்:—

தன்போற்சிலைத்தருமேந்தியகோன்கன்னித்தாழ்துறைவாய்ப்
பொன்போன்மலர்ப்புன்னைக்கானலுநோக்கிப்புலம்புகொண்ட
வென்போலிரவினெல்லாந்துயிலாதுநின் மருங்குநியா
லன்போடொருவற்கறிவழிந்தாயோவலைகடலே. (உஉக)

பொன்றுணிதுமிகநன்னிறங்கொண்டுபுணர்ந்தகன்று
சென்றுநாளைமேனாகினக்குச்சொல்லாய்செந்நிலத்தைவெம்போர்
வென்றுன்வியனிலவேந்தன்விசாரிதன்வெல்கழல்சேர்ந்
தொன்றார்மூனைபோற்கலங்கித்துஞ்சாயாலொலிகடலே. (உஙo)

பறைவாயொலியோதம்பந்தருசுளுந்
துறைசேர்சிறுகுடியதுஞ்சவுந்துஞ்சாய்
நிறையின்மருண்மாலையெம்போலநீத்த
துறைவனுடையையோநீவாழிவீனை.

என்போல் இரவினெல்லாந் துயிலாய் நீயும் நின்சாதலர்மாட்டு என்போல் அறிவழிந்தாயோ வென்னும்; என்றது தலைமகன் கேட்டு ன்வரைவானும். தோழிகேட்பின் வரைவுகடாவுவாளாம். யாருங்கேட்பாரில்லையாயிற் தானே சொல்லி ஆறுவாளாம்.

2o அன்ன மரபிற் பிறவுந் தொகைஇத் தன்னை அழிந்த கிளவி எல்லாம் என்பது, தனது ஆற்றாமையாற் சொல்லுஞ் சொல்லெல்லமென்றவாறு. வரைதல் வேட்கைப் பொருள என்ப என்பது, வரைதல் வேட்பும் வரைதல் வேட்டுச் சொல்லுஞ் சொற்களுமென்றவாறு. வரைதல்வேட்பச் சொல்லுந் தலைமகள் சொல்லுஞ் சொல்லெல்லா தலைமகனை. இனித் தோழி சொல்லுஞ் சொற்களெல்லாம் வரைதல் வேட்டுச் சொல்லுஞ் சொற்களென்றவாறு. அன்னமரபிற் பிறவுமென்றதனாற் பகற்குறிக்கண்ணும் இரவுக்குறிக்கண்ணும் வந்தொழுகுந் தலைமகற்குத் தலைமகளுந் தோழியும் ஆற்றாத்தன்மையராய் வரைவுபடப்பச் சொல்லுஞ் சொல்லெல்லாங் கொள்க. அக்கிளவி பல; அவற்றுட் சிலவருமாறு:—

நெய்ந்நின்றவேனெடுமாறனெங்கோனந்தணேரியென்னு
மைந்நின்றகுன்றச்சிறுகுடிநீளாயவந்துநின்றாற்

கைகூப்பிவணையுறைதெய்வமென்றுகண்டோர்
மெய்ந்நின்றுணர்பவெனினுய்யுமோமற்றிம்மெல்லியலே. (௨௫௧)

என்பது இரவுக்குறியிடத்து வந்துநின்றாற் கண்டார் உம்மை முருகவேளென்று கருதாது மெய்ம்மை உணர்பவாயின் இவள் பெருநாணினளாகலின் இறந்துபடுமே என்னும். அது கேட்டுத் தலைமகன் பெரியதோர் இழுக்குடைத்தாக ஒழுகினேனென்று ஒருவகையான் முற்பட்டுப் பிற்றைஞான்று வரைவானும். இன்னும் அன்னமரபிற் பிறவுமென்றதனாற் செய்யுள்:—

அன்றுய்ம்நெருநனிகழ்ந்ததுகேளயல்வேந்திறைஞ்சும்
பொன்னார்கழனெடுமாறன்குமரியம்பூம்பொழில்வாய்
மின்னார்மணிநெடுந்தேர்கங்குல்வந்தொன்றுமீண்டதுண்டா
லென்றுமுகஞ்சிவந்தென்னையுநோக்கினளெம்மனையே. (௨௫௨)

என்பது இரவுக்குறியின்கட் தலைமகன் சிறைப்புறத்தானாவதறிந்து தலைமகட்குப் படைத்துமொழியா[illegible] தோழிசொல்லியது. எங்ஙனமோவெனின், நெருநல் என்னை நீர் [illegible]யாடுங் காலைகத்து ஒருதே[illegible]வந்து போயிற்றென முனிந்து என்னை முகநோக்கிப் போயினள் அன்னை இன்னது கருதியென்பது அறியேனென்னும். ஒக்கும்,யான்வந்து ஒழுகுகின்ற இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாயிற்றுப்போலுமெனப் பிற்றைஞான்றே வரைந்துபுகுவானும். இன்னும் அன்னமரபிற் பிறவுமென்றதனாற் செய்யுள்:—

பண்ணிவர்சொல்லிகண்டாய்தென்னன்பாழிப்பகைதணித்தம்
மண்ணிவர்சீர்மன்னன்வானவன்மாறன்மலயமென்னும்
விண்ணிவர்குன்றத்தருவிசென்றாடியோர்வேங்கையின்கீழ்க்
கண்ணிவர்காதற்பிடியொடுநின்றகருங்களிறே. (௨௫௩)

பகற்குறிவந்து ஒழுகுந் தலைமகட்குத் தோழி படைத்துமொழிந்து வரைவுகடாயது. அவ்வகைத்தாற் களிற்றொடு ஒருபிடி வேங்கையின்கீழ் நின்றபடி கண்டதுபோல நம்பெருமான் நமக்கு வழிபட முடியுங்கொல்லோவென்றாளென்பது. இன்னும் அன்னமரபிற் பிறவுமென்றதற்குச் செய்யுள்:—

தொடுத்தான்மலரும்பைங்கோதைக்குத்துதாய்த்துறைவனுக்கு
வடுத்தான்படாவணஞ்சொல்லுங்கொல்லானோர்க்கமிழ்தியற்றிக்

கொடுத்தான்குலமன்னன்கோட்டாற்றழித்துத்தென்னாடுதென்பாற்
படுத்தான்பராங்குசன்கன்னியங்கானற்பறவைகளே. (௨௬௪)

இதுவும் அப்பொருட்கு ஒப்பச்சொல்லிக்கொள்க. அஃதேயெ
னின், இச்சூத்திரத்துட் சொல்லப்பட்டனவெல்லாந் தலைமகட்குரி
யனவுந் தோழிக்குரியனவுந் தோழிக்குந் தலைமகட்கும் உரியனவுமென
மூன்றுவகைப்படும். காமமிக்ககழிபடர்கிளவியுங் காப்புச்சிறைமிக்
கையறுகிளவியுந் தலைவிக்கு உரிய; இரவினும்பகலினுநீவருக
என்றலுங் கிழவோன்றன்னைவாரலென்றலுந் தோழிக்கே உரிய. ஆறு
பார்த்துற்றஅச்சக்கிளவியுந் தன்னுட்கையாறெய்திடுகிளவியும் இரு
வர்க்கும் உரிய. உரிமையாற் றம்மையழிந்த கிளவியெல்லாமெ
ன்று பன்மையாற் சொல்லாது ஒருமையாற் சொல்லியது எற்றிற்கோ
வெனின், தோழி தலைமகளென இருவரையும் வேறுபடுத்திக் கரு
தாது ஒருவராகக் கருதற்பொருட்டாக ஒருமையாற் புணர்த்தாரெ
ன்பது. (௫௰)

௫௧. ஆற்றின் னாமையு மூறு மச்சமுந்
தன்னை யழிதலுங் கிழவோற் கில்லை.

என்-னின், களவுக்காலத்துத் தலைமகனிலக்கணமுணர் - ற்று.
மேற்சூத்திரத்தோடு இயைபென்னையோவெனின்; மேற்சூத்திரத்
து ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவியென்றார், தலைமகன்கண்ணும் ஆறு
பார்த்துறவுண்டென்று கருதுவராயிற் கருதற்க என்றற்குச் சொல்ல
ப்பட்டது. (இ-ள்.) ஆற்றினாமையுமென்பது, ஆறெனினும் வழி
யெனினும் ஒருபொருட்கிளவி, வரும் வழி ஏற்றுடைத்து இழிவுடைத்
துக் கல்லுடைத்து முள்ளுடைத்தென்றல்: ஊறென்பது, இடையூறு.
புலியாலும் யானையாலுஞ் சூரமகளிராலும் எண்காலும் இடையூறு
டைத்தென்றல்: அச்சமென்பது, அஞ்சப்படுவன கண்டவிடத்து ம
கட்குறிப்பின்றியே அஞ்சுவது; அச்சமும் இவன்கண் இல்லையென்
றவாறு: தன்னையழிதலுமென்பது, தன்கண் ஒருதுன்பம் வந்தவிட
த்து எனக்காகாதோரொழுக்கம் எடுத்துக்கொண்டேனெனத் தன்னை
நெஞ்சினுள் கோதுமிலனென்றவாறு: கிழவோற்கு இல்லையென்
பது, இளையன தலைமகற்கு இல்லையென்றவாறு. அஃதேயெனின், அவ
ற்கு அவையுளவாய்வைத்து நினையாமையான் இல்லையோ இல்லையால்
ல்லையோவெனின், உளவேயெனின் நினையாருயினும் வந்துசேரும்.

உலகத்து உயிர்ச்சாதிகளெல்லாந் தஞ்சாக்காடு நினைத்துச் செல்கின்ற வுளவோ இல்லையன்றே ? இல்லையெனினும் அவைவந்தே நிகழ்ந்துவிடும். அதுபோல இவன் நினையானாயினும் உளவாயின் நிகழவேண்டும்; இனி இலனேயெனின் இல்லதனை வேண்டவேதில்லை ; என்னை? ஆகாயப்பூ இல்லையென வேண்டா, அதுபோலவென்பது. என்றற்கு இல்லததனையே இல்லையென்றான், இவன் உலகத்துத்தலைமகனல்லன், புலவரால் நாட்டப்பட்ட தலைமகனென்பதனை யாப்புறுத்தற்கு. உலகத்துத் தலைமகனாயின் இவையெல்லாம் இல்லாமையில்லையென்பது. கிழவோற்கில்லையெனவே கிழத்திக்குந் தோழிக்கும் அவையுளவென்பது பெற்றாம். அவர் ஆறு இன்றென்றும் இடையூறுகள் உளவென்றும் இவற்றிற்கு அஞ்சுதலும் நம்பெருமான் தனக்குத் தகாத இளிவரவொழுக்கம் ஒழுகுதற்குக் காரணமாயினோமாகாதேயென்று தம்மையழிதலும் உடையரொன்றவாறு. வயிரமுடையான் ஒருவன் வயிரம் மூளுமென்று அஞ்சான், அதுபோல இவரும் அஞ்சாது விடற்பாலார் பிற, அவற்கவையின்மையானெனின், அதுவன்று. பெண்மையென்பது ஒருபொருளைப் பட்டாங்கு அறியாமையாகலான், அவர்க்கு அவையில்லையெனினும் உளவாகக் கருதுபவென்பது. அஃதெனின், மேல் இவனைப் பொருவிறந்தானென்று போதரப்பட்டதன்றே? பட்டஎமபான் அச்சமுந் தன்னையழிதலுமில்லையெனக் கொள்ளளோ? மனத்தான் வரும் நோயெல்லாம் உணர்வின்மையான் வருமாகலானென்பது கடா ; அதற்கு விடை, இவன் ஞானத்தையும் ஒழுக்கத்தையும் பிறிது இழுக்கினமையாற் சிற்றறிவினார் தன்மையுண்மையான் உளகொல்லோவென்று கருதின் அவையில்லையென்பது போதரச்சொல்லப்பட்டது. (கக)

௩உ. களவினுட் டவிர்ச்சி வரைவி னீட்டந்
திங்க ளிரண்டி னகமென மொழிப.

என்-னின்; களவினுட் தங்கி ஒழுகும் ஒழுக்கம் இத்துணைக் கமல்லது இல்லையென்று வரையறுத்துணர்-ற்று. (இ-ள்.). களவினுட் டவிர்ச்சி=களவினுட் தங்குதல்: வரைவின் நீட்டம்=வரைந்தெதுக்துணை நீட்டிக்குங்காலம்: திங்கள் இரண்டின் அகமென மொழிப=இரண்டு திங்களகமெனக் கொள்க. எ-று. இவ்வாற்றானும் இதுவு உலகத்து இயல்பன்றென்பது பெற்றாம். உலகத்தொழுக்கிற்குக் காலவரையறை இல்லையென்பது. இயற்கைப்புணர்ச்சி

புணர்ந்த பிராயமும் இப்பிராயமும் ஈங்கே உரைக்கப்பட்டதாம். பதினோராண்டும் பத்துத்திங்களும் புக்க தலைமகளோடும் பதினையாண்டும் பத்துத்திங்களும் புக்க தலைமகனைப்போலும் புணரவேண்டிய தென்பது பெற்றாம். இவளும் இருதிங்கட்களவொழுக்கத்தே ஒழுகப் பன்னீராட்டைப் பிராயத்தாளாம், அது மக்கட்பேற்றுக்குக் காலங் களவொழுக்கத்திற்குப் பொருந்தாதெனவிலக்கப்பட்டதாம் ஆசிரியர்களாலெனன்பது. இவனும் இவ்விருதிங்கட் களவொழுக்கொழுகப் பதினாறாட்டைப் பிராயத்தானும், அஃது ஆண்மை நிலைபெறுங் காலமாகலாற் களவொழுக்கத்திற்கு விலக்கப்பட்டதாம். அஃதேயெனின் இருதிங்களென்றது அகமென்றதெற்றிற்கோவெனின், இருதிங்களுள் ஐந்தானும் ஆறானும் நாள் உளவாகக் களவொழுக்கு ஒழிந்து நின்று வரைந்து புகுவதனோடும் மறுப்பதனோடும் அத்துணை நாளும் புக்கு நிறைந்துநின்றபின்னை அதுபடின் மிகுவான்புகுமென்பது. அஃதேயெனின், இவர்க்கு மூப்புப் பிணி சாக்காடில்லையென்று மேற் சொல்லியதனோடு மாறுகொண்டு காட்டிற்றாம், அதுபட உரைத்தமை யினெனன்பது. எங்ஙனமோவெனின், இருதிங்கட்புக்க இவளும் இருதிங்கட்புகப் பன்னீராட்டைப் பிராயத்தாளேயாயக்காற் பின்னைப் பதின்மூவாட்டைப் பிராயத்தாளாய் இவ்வகை நூற்றிருபது புக்குத் தலைமடியவேண்டுமென்பது, இவற்கும் அம்முறையே கொள்[illegible]வென்பது, மூப்புப் பிணி உள்வழிச் சாக்காடுண்மையானென்பது. [illegible]தற்கு விடை எங்ஙனமோவெனின், இருதிங்கட்புக்க இவளும் [illegible]னீராட்டைப் பிராயத்தாளேயாய் இவனும் பதினாறாட்டைப் பிராயத்[illegible]னாகச் சொல்வதல்லது, மற்றையன நிகழாது; உடனே ஒத்தது[illegible] மாத்திரையேயொத்து மற்றைவிகற்பமெல்லாம் ஒவ்வாதெனக்கொ[illegible]ாக. ஒத்தொவ்வாதாயன்றே சொல்கின்றதென்பது. அஃதேயெ[illegible]னின், "அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும் பொன்னேர் மேனி[illegible] மணியிற் றாழ்ந்த - நன்னெடுங் கூந்தனரையெ முடிப்பினும்" என[illegible] இல்லைமன், அஃதெ[illegible]லக்கியம்வருவன உளவாலோவெனின், திங்கள் இரண்டென்ப[illegible]திவிடினுமென்றவாறு. இனி ஒருதிறத்[illegible] திங்களென இரண்டு; [illegible]னைச் சொல்லுமாறு:—மதித்திங்கள் பிறை பின்னிருளாம், மதித்[illegible]வற்றுட், பிறைத்திங்கள் முன்னொளியா[illegible] வையிரண்டுஞ் சந்தித்த[illegible]ள் முன்னிருளாய்ப் பின்னொளியாம்; பொருந்தாது; என்னோ[illegible]ாற இருட்காலத்தாக என்றவாறு. [illegible] [illegible]மெனின், இரவுக்குறிக்கே சொல்ல

மையான். அல்லதூஉங் காலவரையறையன்றி எஞ்ஞான்றும் இருட்டி ங்கட்கண்ணே இவ்வொழுக்கம் வேண்டப்பட்டதாமென்பது. இனி ஒருசாரார் திங்களிரண்டினகமென்பதனை ஒருதிங்களை இரண்டுகூறிட்ட ஒருகூறென்று பதினைந்துநாளாகச் சொல்லும். அதுவும் பொருந் தாமை அறிந்துகொள்க. (௩௨)

## ௩௩. களவினுட் டவிர்ச்சி கிழவோற் கில்லை.

என் - னின்; களவுக்காலத்துத் தலைமகன் இலக்கணமுணர்த்துற்று. (இ ள்.) களவினுள் தவிர்ச்சி கிழவோற்கு இல்லை=களவுக் காலத்துத் தலைமகன் காரணமாக இடையிடும் இடையீடில்லை எ-று. தலைமகற்கில்லையெனவே அருத்தாபத்தியால் தலைமகள் காரணமாக உண்டென்பது பெற்றும். இன்னுங் களவினுட் தவிர்ச்சி கிழவோற்கில்லையென்பதனானே கற்பினுட் தலைமகள் காரணமாக இடையிடும் இடையீடில்லையென்பது பெற்றும். என்னை? இவன் ஒருஞான்று ஒருகால் அக்குறியிடத்துவந்து பெயருந் தலைமகளைச் சார்ந்த இடையூறுகள் எய்தாவுமென்பது. இனி ஆண்மைமிக்க தலைமகன் பிரிவு வேண்டுவதல்லது தலைமகள் வேண்டாள் கற்பினகத்தென்றவாறு. இது சொல்லவேண்டாம்; என்னோகாரணமெனின், "களவினுட் டவிர்ச்சி காப்புமிகி னுரித்தே - வரைவிடை வைத்தகாலை யான." எனவும், "அல்லகுறிப் படுதலு மவ்வயி னுரித்தே - யவன்வர வறியுங் குறிப்பி னான." எனவும் இவ்வகையான் இடையீடு தலைமகளைச் சார்ந்துழி இடையீடு வந்தனவாகலாற் பெறப்பட்டதென்பது. இனி ஓதல் காவல் பகைதணிவினை எனவிவை தலைமகனியல்பாகலாற் கற்பினுட் தலைமகன் இடையீடாகலும் பெறப்பட்டது, இங்கு உரைக்கல்வேண்டாவென்பது. அவ்வகை இலேசினாற் பெறப்படும் அதனையே மாணுக்கன் இனிதுணரவேண்டி எடுத்தோதினானென்பது. அல்லது ஒருதிறத்தார் களவினகத்துத் தலைமகளுழைத்தங்கிப் பிற்றைஞான்றுபோதல் தலைமகற்கு இல்லையென்றவாறென்ப. அது பொருந்தாது. வந்து பெயர்தலல்லது நீட்டிக்கில் இடையீடாம், ஆகது உணரப்படுதலானென்பது. மற்றென்னோவெனின், களவினுட் தவிர்தலென்பது தமியனாந்தன்மையொழிதலென்றவாறு. கோ தவிர்ந்து வெப்புத் தவிர்ந்ததென்பது ஒழிந்ததென்பார். இனிக் கிழவோற்கில்லையென்பது தலைமகற்கில்லை என்றவாறு. எனவே, அவ்விருங்கள்களவுந் தெருளாதே வந்தொழுகுந் தலைமகன், தலைமகளாயின்

அவ்விடத்தென்று தெருளாளாயிற் பிற்றைஞான்று உணருமென்பது. ஆயின் இவனுகாதே தெருளற்பாலான் பெருஞானத்தானுகலான், இவளாகாதே தெருளாதுவிடற்பாலாள் அவன்றுணைப் பேறின்மையானெனின், அதுவன்று. அவன்கணின்ற தமியனுதற் தன்மையைவிலக்குவது இல்லையின்மையான் அப்பெற்றிடப்பட்டது. இவள்மாட்டு இதனைவிலக்குவதுண்டன்றே, இவனது இளிவரவிற்கும் வருத்தத்திற்குங் கவன்ற கவற்சியென்பது. அதனுன் இவன்தெருளாமைக்கும் இவள் தெருடற்குங் காரணம் இதுவென்பது. (௩௩)

௩௪. கற்பினுட் டுறவே கடிவரை வின்றே.

என் - னின்; இங்கு நின்றுங் கற்பினது இலக்கணம் உணர்த்துதனுதலி யெடுத்துக்கொள்ளப்பட்டது. (இ - ள்.) கற்பினுட் துறவே=கற்பினகத்து நீங்கும் நீக்கம், துறவு எனினும் நீக்கம் எனினும் அகற்றி எனினும் ஒக்கும்; கடிவரைவு இன்றே=கடிந்துவரையப்படாது ஆசிரியர்களால் எ - று. அஃதேயெனின், கற்பினுட்டுறவே கடிதலின்றே யெனவும் வரைதலின்றேயெனவுஞ் சொல்லாது கற்பினுட்டுறவே கடிவரைவின்றே என்றது எற்றிற்கோவெனின் ஆசிரியர்களால் விலக்கவும் படாது இத்துணைக் காலமென்று வரையறுக்கவும்படாது என்றவாறு. எனவே, களவினகத்துப் பிரிவு ஒருகாலமல்லது இல்லை யென்றவாறு. களவினகத்துப் பகற்குறிநிலைமைக்கண்ணும் இரவுக்குறிநிலைமைக்கண்ணும் வந்து பிரியுமாகலான் அதுவும் பலகாலும் நிகழ்தலுடைத்துப் பிற எனின், அவையெல்லாம் ஆசிரியராற் பிரிவென்று வேண்டப்படா, ஒரு கருமநோக்கிப் பெயர்ந்தன அன்மையின். அல்லதூஉம் அவையேயானும் வரையறை உடைத்தாகலானென்பது. (௩௪)

௩௫. ஓதல் காவல் பகைதணி வினையே
வேந்தற் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்க வாறே யவ்வயிற் பிரிவே.

என் - னின்; மேற் கற்புக்காலத்துப் பிரிவு பலவென்றார், வையிற்றைப் பெயரும் முறையுந் தொகையும் உணர் - ற்று. (இ-ள். ஓதல்=கல்விக் காரணத்துப் பிரியும் பிரிவு: காவல்=நாடுகாத்தற்கு பிரியும் பிரிவு: பகைதணிவினை=இருவர் அரசர் தம்மிற் பொரு

என்றவிடத்து அவனைச் சந்து செய்வித்தற்குப் பிரியும் பிரிவு: வேந்தற்குற்றுழி=வேந்தரென்பார் அரசர், அரசர்க்குற்றுழிப் பிரியும் பிரிவு: பொருட்பிணி=பொருட்குப் பிரியும் பிரிவு: பரத்தை=புறப்பெண்டிர் மாட்டுப் பிரியும் பிரிவு : புறம், அஃதாரியச்சொல் : என்று, எண்ணுதற்குரியதோர் வாய்பாடு; ஆங்கு, அசைச்சொல் ; ஆறு, அவற்றதுதொகை; அவ்வயின் = கற்பினிடத்து : பிரிவு = நீக்கம் எ - று. ஏ யென்பது ஈற்றசையேகாரம் ; பெயர், சொல்லப்பட்ட பெயர் ; முறை, கிடந்தமுறை ; தொகை, ஆறு எனக்கொள்க. ஓதற்குப்பிரிவு முன்வைக்கப்பட்டது தலையான பிரிவாகலானும் உயர்ந்தோர்க்கு உரித்தாகலானுமென்பது. பரத்தையிற் பிரிவு பின்வைக்கப்பட்டது காமம் பின்வைத்தெண்ணப்படுமாகலானென்பது. அஃதேயெனின், இவர் பொருவிறந்தவரென்பதனோடு மாறுகொண்டது இச்சூத்திரம், என்னையோவெனின், தலைமகளை எய்தியிருந்தே இவன் ஓதுவான் பிரிவானெனின், முன் ஞானமிலனும் ; இலனுகவே, ஞானத்தின் வழியது ஒழுக்கமாகலானும் ஒழுக்கத்தின் வழித்துத் தலைக்குலமாகலானும் இவையெல்லாங் குறைபட்டானுமென்பது. இனிக்காவலென்பது இவன் நாட்டைப் பிறர்புகுந்து அலைப்பதுங் கொள்வதுஞ் செய்ய அவரை நீங்குதற்கு நீங்குமேயெனின் இவனது பொருவிறப்பு என்னையோவென்பது. இனிப் பகைதணிவினையென்பது சந்து செய்வித்தற்குப் பிரியுமேயெனின், தூதுவனுயினனும்; தூதுவரென்பார் பிறர்க்குப் பணிசெய்து வாழ்வார், அவரது பொருவிறப்பு என்னையோவென்பது. இனி வேந்தற்குற்றுழிப் பிரியுமேயெனின், கருமஞ் செய்வானும்; கருமஞ்செய்வதென்பது இறப்பவும் இளிவந்ததோரொழுக்கம். பிறர் குறிப்பன்றித் தன் குறிப்பு இல்லையெனப்படும் ஆகலின் அவரது பொருவிறப்புண்டாயது என்னையோவென்பது. இனிப் பொருள்வயிற் பிரியுமேயெனின், முன்னர்ப் பொருளிலன் ஆயினனும், ஆகவே எள்ளுநர்ப்பணித்தலும் இரந்தோர்க்கீதலும் என்னும் இவையெல்லாம் பொருட்குறைபாடுடையார்க்கு நிகழாமையின் இக்குறைபாடுயெல்லாம் உடையனும்; அவையுடையானது பொருவிறப்பு என்னையோவென்பது. இனிப் பரத்தைமாட்டுப் பிரியுமேயெனின் அவன் கண்டார்கட்டாழ்வானும் ஆகலாற் தலைமகள்மாட்டுக் கிடந்த அன்பிலன் ஆயினனும். அல்லதூஉங் கண்டுழியெல்லாம் உள்ளத்தைச் செலீஇ மனத்தின்வழியோடுமாகலான் நிறையிலன் ஆயினனும்; நிறையிலானது பொருவிறப்பு என்னையோவென்பது. இவையெல்லாஞ் சொல்லப் பெ.

ரிது மாறுகொண்டு காட்டிற்று. மாறுகொள்ளாது. மாறுகொள்ளா வாறு என்னையோவெனின்; ஓதற்குப் பிரியுமென்பது கற்பான் பிரியுமென்பதன்று, பண்டே குரவர்களாற் கற்பிக்கப்பட்டுக் கற்றான் அறம்பொருளின்பம் வீடுபேறுகளை முதலிய நூல்களெல்லாம் பரதேசங்களினும் அவை வல்லர் உளரேற் காண்பலென்றும் வல்லார்கள் உள்வழித் தன் ஞானம் மேற்படுத்து அவர்கள் ஞானங் கீழ்ப்படுத்தற்குப் பிரியுமெனக்கொள்க. இனி நாடுகாத்தற்குப் பிரியுமென்பது நலிவார் உளராக நலிவுகாத்தற்குப் பிரியுமென்பதன்று, நாட்டகத்து நின்றும் நகரகத்தும் தமக்கு உற்றது உரைக்கல்லாத மூத்தார்களும் பெண்டீர்களும் இருக்கைமுடவருங் கூனருங் குருடரும் பிணியுடையாரும் இத்தொடக்கத்தார்தம் முறைக்கருமங் கேட்டுத் திருத்து தற்பொருட்டாகவுங் காட்டகத்துவாழும் உயிர்ச்சாதிகள் ஒன்றனையொன்று நலிவன உளவாயினவிடத்துத் தீதென்று அவற்றை முறைசெய்தற்கும், கொடிவலைப்பட்டுக் கிடந்தனவற்றைத் துறைநீக்குதற்பொருட்டாகவும் வளன் இல்வழி வளந்தோற்றுவித்தற்பொருட்டாகவும், தேவகுலமே சாலையே அம்பலமே என்று இத்தொடக்கத்தனவற்றை ஆராய்தற்கும், அழிகுடியோம்புதற்கும் பிரியுமென்பது.. அல்லதூஉம் பிறந்த உயிர் தாயைக்கண்டு இன்புறுவதுபோலத் தன்றற் காக்கப்படும் உயிர்வாழ்சாதிகள் தன்னைக்கண்டு இன்புறுதவிற் தான் அவர்கட்குத் தன் உருபு காட்டுதற்கும்,மாற்றரசர் ஒற்றுவந்தவிடத்து அவர்முன்னர்த் தனது ஊக்கங்காட்டுதற்பொருட்டாகவும் பிரியும். அதனானே மாற்றரசர் திறைகொடுப்பாரென்பது. இனிப் பகைதணிவினையென்பது தூதுவர்போலச் சந்து செய்வித்தற்குப் பிரியுமென்பதன்று, இருவர் அரசர் நாளைப்பொருதும் இன்று பொருதுமென்று இருந்த நிலைமைக்கண் தான் அவர்க்கு அரசனாகலின் இம்மக்களும் இவ்விலங்குகளுமெல்லாம்பட இவ்விரண்டு குலத்திற்கும் வதம் நிகழும், அதனால் இப்போரொழிப்பனென்று இருவரையும் இரந்து சந்துசெய்வித்தலுமொன்று. அல்லதூஉம் தேவரும் அசுரரும் அமர்செய்தகாலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல்யானெனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித்ததுபோல் இருவரின் மிக்குச்செய்தீரை ஒறுப்பலென்று சந்துசெய்வித்தலு மொன்று. இருவரையும் ஒறுக்குந்துணை ஆற்றலுடையனாகலானென்பது. அஃதேயென்னின் தன்னகத்து இருந்தவிட அமையாதோ அன்னவாற்றலனாகலான் தான் செல்

லவேண்டுமோவெனின், செல்லவேண்டும்; என்னை காரணமெனின், காதலனைப் பிரிந்து ஒருகருமம் முடிப்ப அதனின் மிக்க ஆள்வினையில்லையென்பது, ஆதலாற் பிரிந்தே சந்து செய்விக்குமென்பது. இனி வேந்தற்குற்றுழியென்பது அவற்குச் சேவகனாய்ப் பிரியுமென்பதன்று, தனக்கு நட்டான் ஓரரசன் சென்ற விடத்து அவர்க்கு ஆபத்தம் அறுத்தல இனிதேன்று நீக்குதற்குப் பிரியுமென்பது. இனிப் பொருட்பிணியென்பது பொருளிலனாய்ப் பிரியுமென்பதன்று, தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பல்வேறுவகைப்பட்ட பொருள்களெல்லாங் கிடந்தது மன், அதுகொடு துய்ப்பது ஆண்மைத்தன்மை அன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள்கொண்டு வழங்கிவாழ்தற்குப் பிரியுமென்பது; அல்லதூஉந் தேவர்காரியமும் பிதிர்கள் காரியமுந் தனது தாளாற்றலாற் படைத்த பொருளாற் செய்தனவல்லது பயன் படாது; என்னை? "தாயப்பொருளாற் செய்தது தேவரும் பிதிரருமின்புறார்" ஆதலான் அவர்களை இன்புறத்தற்குப் பிரியுமென்ப. இனிப்பரத்தையென்பது. பொதுப்பெண்டிர்மாட்டுப் பிரிவு. இவள்கண் அன்பிலனாய்க் கண்டார்கட் தாழ்ந்து நிறையிலானாய்ப் பெயர்ந்தானல்லன்; என்னை? தலைமகளை நீங்கி ஆடல்பாடல் காண்பல் கேட்பலெனப் பிரியும், பிரிந்தால் அவற்றின்கட் சென்ற உணர்ச்சி அவண்மாட்டு நின்ற உணர்வினை மறைப்பிக்கும்; என்னை? இரண்டுணர்வு உடனில்லாமையின்; அவ்வகை மறைப்ப இவர்கண்ணதே உள்ளமாமென்பது; என்னை? தாம் இயல்பாகவேயும் பிறரான் நயக்கப்படும் வனப்புடையார் ஆடற் கையாலும் பாடற் குரலாலும் நயப்பித்துக்கொள்வமென்று எடுத்துக்கொண்டார் அவர்கண் நயப்புச் சொல்லவேண்டுமோ வென்பது. அவற்றது பொருள் அறியாது கடாவினாய், இஃது அவற்றிற்குப் பொருளெனக் கொள்கவென்பது. இப்பிரிவுகளை வேறு உரிமைகூறுமிடத்து அவற்றிற்குச் செய்யுள் காட்டுதும். (௩௪)

௩௫. அவற்றுள், ஓதலுங் காவலு முயர்ந்தோர்க் குரிய.

என் – னின்; மேற்சொல்லப்பட்ட பிரிவினை நிறுத்தமுறையானே முன்பிரண்டும் இன்னார்க்குரியவென்பதுணர் - ற்று. (இ - ள்) அவற்றுள் = மேற்சொல்லப்பட்ட ஆறினுள்ளும்: ஓதலுங்காவலும் = ஓதற்குப் பிரியும் பிரிவுடன் நாடுகாத்தற்குப் பிரியும் பிரிவும்: உயர்ந்தோர்க்கு உரிய = உயர்ந்தோரென்பார் பார்ப்பாரும் அரசரும், இவ்விருவர்க்கும் உரிய. எ - று. ஓதற்குப்பிரியும் பார்ப்பார், நாடுகாத்தற்குப் பிரி

யும் அரசனென நிரனிறையாகக் கொள்க. அதுபொருந்தாது, என்னை? ஓதலுங் காத்தலும் அந்தணர் அரசரென்னும் இருவர்க்கு முரியவெனினும் நிரனிறையாவது என்றூர்க்கு, அவ்வாறு சொல்லிற்றில ராயினும் ஒருவகையான் நோக்க ஒக்குமென்பது. என்னை? உயர்ந்தோர்க்கு உரியவெனவே பார்ப்பாரும் அரசருமேயாகலானென்பது. என்றூர்க்கு, உயர்ந்தோர்க்கு உரியவென்றதனுற் பார்ப்பார்க்கே கொள்ளாமோவெனிற் கொள்ளாம், காவல் பார்ப்பார்தொழிலன்று ஆகலான், இருவர்க்கும் உரியவென்பது பெறுதும். அல்லதூஉம், உரையிற்கோடலென்பது தந்திரவுத்தியாகலானும் இருவர்க்கும் உரியவென்பது பெறுதும். ஓதற்குப் பிரியுந் தலைமகன் தோழியாற் தலைவிக்குப் பிரிவுணர்த்துவிக்கும். அதற்குச் செய்யுள் :—

மைதானிலாததங்கல்விமிகுத்துவருவதெண்ணிப்
பொய்தானிலாதசொல்லார்செல்வர்போலும்புல்லாதமரோ
செய்தார்படச்செந்நிலத்தைக்கணைமழைதிண்சிலையாற்
பெய்தான்விசாரிதன்றென்புனனுடன்னபெண்கொடியே. (உகரு)

காவற்குப் பிரிந்த தலைமகன் தோழியாற் தலைமகட்குப் பிரிவுணர்த்துவிக்கும். அதற்குச் செய்யுள் :—

தேக்கியதெண்டிரைமுந்நீரிருநிலந்தீதகலக்
காக்கியசெல்வதுகாதலித்தார்நமர்காய்ந்தெதிரோ
யாக்கியவேந்தர்யமனுடையத்தனஞ்சுடர்வா
ணேக்கியகோனந்தண்கூடலனையநுடங்கிடையே. (உகசு)

நஎ. வேந்துவினை யியற்கை பார்ப்பார்க்கு முரித்தே.

என் - னின்; பார்ப்பாருக்குப் பிரிவென்றேதப்பட்டது கல்வி விளக்குதற்குப் பிரியும் பிரிவன்றே, அதுவல்லாமலும் ஒருபிரிவுஉண்டென்பது உணர் - ற்று. (இ - ள்) வேந்தென்பது அரசு, வினையென்பது செய்கை, இயற்கையென்பது தன்மை, பார்ப்பார்க்கும் உரித்தேயென்பது, பார்ப்பாருக்குங் கிழமையுடைத்து எ - று. என்றதனுற் போந்த பொருள், வேந்தர் செய்வித்தற்கு உரிய சந்து பார்ப்பாருக்கும் உரித்தென்றவாறு. வேந்தர்க்குச் சந்து செய்வித்தலும் உரித்தென்று சொல்லிப் போந்தாராயினன்றே வேந்துவினையியற்கை பார்ப்பார்க்கும் உரித்தேயென்பது மேற்சொல்லினும், என்னை? காவல் பகைதணிவினையென இரண்டினையும் ஒருங்கு வைத்து அவ்விரண்டினையும் அரசர்க்குரியவென்றமையின் அப்பொருட்டென்பது;

என்னை அரசர்க்கு உரித்தாமாறெனின், இருவர் அரசர் வேறுபட்டு மாறுகொண்டிருந்தவிடத்து அவர்களைச் சந்துசெய்வியாது விடின் அவர்களைச் சார்ந்து வாழ்வாரும் அவர்கள் நாடும் பெரிதுங் கெடுமன்றே? அதனை நீக்கும் பெருமையுடையான் அதனை நீக்காது படின் அப்பழி பாவமும் பழியுமாகலான் அரசர்க்கு உரித்து, அவ்வகை யவர்க்கு உரித்தாகிய சந்து பார்ப்பார்க்கும் உரித்து; என்னை! அவரும் பெருமையுடையராகலான். அதற்குச் செய்யுள்:—

தாக்கியபோர்வயவேந்தரிருவர்க்குஞ்சந்திடைமின்
றூக்கியசெல்வதுகாதலித்தார்நமராரமருள்
வீக்கியவார்கழல்வேந்தர்தம்மானம்வெண்மாத்துடனே
நீக்கியகோனெடுநீர்வையைநாடன்னநேரிழையே. (உ௩எ)

௩௮. அரச ரல்லா வேனை யோர்க்கும்
புரைவ தென்ப வோரிடத் தான.

என் - னின்; சந்துசெய்வித்தற்குப் பிரியும் பிரிவு அரசர்க்கன்றி வாணிசர்க்கும் வேளாளர்க்கும் உரித்தென்பது உணர் - ற்று. (இ-ள்) அரசர் அல்லா ஏனையோர்க்கும் = அரசனையொழிந்த ஏனையோரென்பார் ஒழிந்த வாணிகரையும் வேளாளரையும், அவர்க்கும்: புரைவதென்ப ஓரிடத்து ஆன = பொருந்துமென்ப அவர் இல்வழி எ - று. அரசரில்லாதவழி வாணிகரும் வேளாளரும் வேறுபட்டு மாறுகொண்ட இருவரையுஞ் சந்துசெய்வித்தற்குப் பிரியப்பெறுவாரென்பது. பொருளானும் ஆள்வினையானும் அரசரோடொப்பர் வாணிகரும் வேளாளருமென்னும் வேற்றுமையல்ல தென்பது சொல்லப்படும். அங்ஙனமேயெனின், மேற்சூத்திரம் வேண்டா அரசரல்லாவேனையோர்க்குமெனவே பார்ப்பாரும் அடங்குமாகலானென்பது, என்றார்க்கு அது அன்று; அரசரல்லா ஏனையோரென்பது அரசர்க்குப்பின் வாணிகரையும் வேளாளரையுந் தழுவுதற்குச் சொன்னானென்பது. அல்லாக்கால் வேந்து வினையியற்கை பார்ப்பார்க்கும் உரித்தென்றானென்பது. இவ்விருவர்க்குஞ் செய்யுள் மேற்காட்டிற்றெனக்கொள்க. (௩௮)

௩௯. வேந்தற் குற்றுழிப் பொருட்பிணிப் பிரிவென்
றாங்க விரண்டு மிழிந்தோர்க் குரிய.

என் - னின்; வாணிகர்க்கும் வேளாளர்க்கும் உரியதோர்பிரிவுணர் - ற்று. (இ-ள்) வேந்தற்குற்றுழி = அரசற்குற்றுழி: பொருட்

பிணிப்பிரிவு = பொருள்வேட்கையிற் பிரியும் பிரிவு: என்றென்பது எ ண்ணுதற்குரியதோர் வாய்பாடு, ஆங்கஎன்பது அசைச்சொல், இரண் டென்பது தொகை, உம்மை முற்றும்மை: இழிந்தோர்க்குரிய = வா ணிகர்க்கும் வேளாளர்க்குங் கிழமையுடைய எ - று. இழிபுபடச் செ ல்லினரால் இழிந்தாரொன்பது பொருவிறப்பினேடு மாறுகொள்ளுமெ ன்பது. கொள்ளாது; என்னை? இந்நூல் உலகினேடொத்தும் ஒ வாதும் நடக்கின்றதாகலானும் உலகுநோக்கிச் சாதிவகையால் இழி தாரெனப்பட்டது. ஒழிந்தவைவற்றிற் பொருவிறப்பு இவர்க்குமொக் மென்பது. அவற்றுள், வேந்தற்குற்றுழிப் பிரியுந் தலைமகன் தோழி யாற் தலைமகட்குப் பிரிவுணர்த்துவித்துப் பிரியும். அதற்குச்செய்யுள்:—

வாரார்முரசின்வலிசேர்மணிமுடி மன்னவற்காய்ச்
சேரார்முனைமிசைச்செல்லலுற்றார்நமர்செந்நிலத்தை
யோராதெதிர்ந்தாருடன்மீதுலாவியுருள்சிவந்த
தேரான்றிருவருளான்புனலூடன்னசேயிழையே. (உகஅ

கன்னவிரேர்ண்மன்னன்நெம்முனைமேற்கலவானைவெல்வான்
வின்னவிரேரளன்பர்செல்வர்விசையசரிதனென்னுந்
தென்னவன்சேரார்படநறையாற்றுச்செருவடர்த்த
மன்னவன்கூடல்வண்டீந்தமிழன்னமடமொழியே. (உகூ

தலைமகன் வேந்தற்குற்றுழிப் பிரிந்த விடத்துத் தலைமகள் வேறுபட்டு ஆற்றாளாயினளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலென் பதுபடத் தலைமகள் சொல்லியதற்குச் செய்யுள்:—

படலைப்பணிமலர்த்தாரவர்வைகியபாசறைமேற்
றொடலைக்கமழ்நறுங்கோதையன்றாய்சென்றுதேர்ன்றுங்கொலா
மடலைப்புரிந்தசெவ்வேலரிகேசரிதென்குமரி
கடலைப்பருகிப்பிருவிசும்பேறியகார்முகிலே. (உசo

அதுகேட்ட தோழி இவள் பிரிவாற்றாமையானன்று வேறு பட்டது; அவர் குறித்துப் பிரிந்த கார்வரப், பிரிந்த பாசறைக்கட் தோ ன்றியக்காற், தாம் எடுத்துக்கொண்டவினைமுடியாது மீள்வர்கொ லோவெனப்போலும், இவளாற்றாளாயது; யான் பிழைக்க வுணர்ந்தே னென ஆற்றுவாளாவது. அதற்குச் செய்யுள்:—

வாமானெடுந்தேர்வயமன்னன்வாண்முனையார்க்கும்வண்டார்
தேமாகறுங்குழலாய்சென்றுதோன்றுங்கொல்சேரலர்தங்

சோமான்கடற்படைகோட்டாற்றழியக்கணையுதைத்த
வேமாண்சிலையவன்கன்னிநன்னீர்கொண்டவீர்முகிலே. (உசக)

இதுவும் அது.

வேந்தற்குற்றுழிப் பிரிந்த தலைமகன் தான் குறித்த பருவவர
ின்கண் வினைமுற்றி மீள்தலுறுவான் தேர்ப்பாகற்குச் சொல்லியது
குச் செய்யுள்:—

மெனபார்ப்பொடுங்கவலஞ்சிறைகோலியிடஞ்சிறையா
லன்பாற்பெடைபுல்லியன்னநடுங்குமரும்பனிநா
ளென்பாற்றயரொடென்றுங்கொலிருஞ்சிறையேற்றமன்னர்
தென்பாற்செலச்செற்றகோன்வையைநாடன்னசேயிழையே. ()

அன்புடைமாதர்கண்டாற்றுங்கொலாற்றுக்குடியடங்கா
மன்புடைவாடவென்றான்றமிழ்நாட்டுவலஞ்சிறைக்கீ
ழின்புடையேரிளம்பார்ப்புத்துயிற்றியிடஞ்சிறையான்
மென்பெடைபுல்லிக்குருகுநரல்கின்றவீழ்பனியே. (உசங) *

• இது கேட்ட தேர்ப்பாகன் விரைந்து போவானுவது பயன். ,
)ன்னும் வேந்தற்குற்றுழிப் பிரிந்து வினைமுற்றிய தலைமகன் இவ்
ாறு சொல்லும். அதற்குச் செய்யுள்:—

கடியாரிரும்பொழில்வாயன்றுவாட்டியின்றுங்கலவாப்
படியார்படைமாமதிலதன்மேல்வந்துபாரித்ததால்
வடியாரயினெடுமாறனெங்கோன்கொல்லிவண்டிமிர்பூங்
கொடியாரிடைமடமான்பிணைநோக்கிகுழைமுகமே. (உசச)

தங்கயல்வெள்ளொலியோலையதாய்த்தடமாமதின்மேற்
பொங்கயவேந்தரொரிமூழ்கத்தோன்றின்றுபோதுகண்மேற்
பைங்கயல்பாய்புனற்பாழிப்பற்றுரைப்பணித்ததென்னன்
செங்கயலோடுசிலகொண்டுவந்ததிருமுகமே. (உசரு)

இவையும் அப்பொருள.

இதுகேட்ட தேர்ப்பாகன் விரைந்து கடாவுவானுவது பயன்.
)ங்ஙனம் வினைமுற்றிய பின்னான்றி முற்றுவிடத்துஞ் சொல்லு
மாவெனிற் சொல்லான்; என்னை ? "கிழவி நிலையே வினையிடத் து
ாயார் - வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்." என்பதாகலா
ர. வினைமுற்றிய பின்னையே சொல்லுமென்பது. வேந்தர்க்குற்று

ழிச் சென்று வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியதற்
ச் செய்யுள் :—

வென்றேகளித்தசெவ்வேலெனுமொறன்விண்டார்முனைமேற்
சென்றேவினைமுற்றிமீண்டனங்காருஞ்சிறிதிருண்ட
தின்றேபுகும்வண்ணமேக்குதிண்டேரிளவஞ்சியென்ன
நின்றேவயங்கிநுடங்கிடையேழைநெடுநகர்க்கே. (௨௪௬

"உலகுட னிழற்றிய தொலையா வெண்குடைக் - கடல்போ ரானைக் கலிமா வழுதி - வென்றமரு முழந்த வியன்பெரும் பாசறைச் - சென்றுவினை முடித்தன மாயி னின்றே - கார்பெயற் கெதிரிய கான் டகு புறவிற் - கணங்கொள் வண்டி னஞ்சிறைத் தொழுதி - மணங் கொண் முல்லை மாலை யார்ப்ப - வுதுக்காண், வந்தன்று வாழி பொழு தேவல் விரைந்து - செல்க பாகநின் னல்வினை நெடுந்தேர் - வெண ணெல் லரிநர் மடிவாய்த் தண்ணுமைப் - பன்மலர்ப் பொய்கைப் படு புள் ளோப்புந் - காய்நெற் படப்பை வாணன் சிறுகுடித் - தண்டலை கமழுங் கூந்த - லொண்டொடி மடந்தை தோளிணை பெறவே.
இன்னும் பிறவுஞ் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

பட்டாரகலல்குலேழையுங்காணுங்கொல்பாழிவெம்போ
ரட்டானரிகேசரியையமாயிரமியானைமுன்னு
ளிட்டான்மருகன்றென்னாட்டினமேகங்கண்டீர்ம்புறவிற்
கட்டார்கமழ்கண்ணிபோன்மலர்கின்றனகார்ப்பிடவே. (௨௪௭

புரிந்தமெல்லோதியைவாட்டுங்கொல்வல்லத்துப்போரொதிர்ந்தா
ரிரிந்தவகைகண்டவாண்மன்னன்றென்னாட்டிருஞ்சுருள்போய்
விரிந்தபதவங்கள்மேய்ந்துதம்மென்பிணைகையகலா
திரிந்ததிண்கோட்டகலைமாவுகளுஞ்செழும்புறவே. (௨௪௮

ஆழித்திருமாலதிசயற்காற்றுக்குடியுடைந்தார்
சூழிக்களிற்றிற்றுணைகதிண்டேர்துயர்தோன்றின்றுகாண்
கோழிக்குமியஞ்சேவறன்பேடையைக்கால்குடையாப்
பூழித்தலையினையார்வித்துத்தானிற்கும்பூம்புறவே. (௨௪௯

கைம்மாப்பிறவுஞ்சுவடுதொடர்ந்துகனல்விழிக்கு
மெய்ம்மாமதக்களிவேழங்கள்பின்வரமுன்னுகதேர்
நெய்ம்மாணயிலெனுமொறனிறைபுனற்கூடலன்ன
மைம்மாண்குழலாள்பரமன்றுவாணிடைவார்புயலே. (௨௫௦

முன்றானுறத்தாவடிமுள்ளூறீஇமுடுகொதுதிண்டே
ரொன்றாவிழைத்தவற்றோடிற்றைநாளுமிழைக்குங்கொல்லா
மொன்றாவயவர்தென்பாழிப்படவொளிவேல்வலத்தால்
வென்றான்விசாரிதன்றென்புனனாடன்னமெல்லியலே. (௨௫௧)

இவையெல்லாஞ் சொல்லத் தேர்ப்பாகன் கடிது கடாவுவானாவது.

கடிக்கண்ணிவேந்தனையாற்றுக்குடிக்கன்னிவாகைகொண்டே
முடிக்கண்ணிமேல்வைத்தமும்மதில்வேந்தன்முசிறியன்ன
வடிக்கண்ணிவாடவளமணிமாளிகைச்சூளிகைமேற்
கொடிக்கண்ணிதாம்வண்ணநண்ணிவந்தார்த்தனகொண்டல்களே.

இதுவும் மேலவற்றோடு ஒக்கும்.

முகில் நோக்கிச் சொல்லுவானாகத் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

பண்டோர்சிறைவண்டறைபொழிற்பாழிப்பற்றாவரசர்
புண்டோய்குருதிபடியச்செற்றான்புனனாடனையாள்
கண்டோரழிந்துகலங்குமவடன்கடிநகர்க்கென்
றிண்டேர்செலவன்றிமுன்செல்லல்வாழிசெழுமுகிலே. (௨௫௩)

இதுகேட்ட தேர்ப்பாகன் விரைந்துகடாவுவானாவது. வேந்தற்குற்றுழிப் பிரிந்து வினைமுற்றிப் புகுந்த தலைமகனது வரவு தோழி தலைமகட்குச் சொல்லும். அதற்குச் செய்யுள்:—

கொற்றாங்கையின்மன்னன்கோனெடுமாறன்றென்கூடலன்ன
முற்றாவிளமுலைமாதேபொலிகநம்முன்கடைவாய்ச்
செற்றார்பணிதிறைகொண்டநம்மன்பர்செழுமணித்தேர்ப்
பொற்றார்ப்புரவிகளாலித்துவந்துபுகுந்தனவே, (௨௫௪)

ஆருமணியிளம்போந்தையும்வேம்புமலர்ந்துதண்டேன்
வாருங்கமழ்கண்ணிவானவன்மாறன்றன்மாந்தையன்னாய்
காருங்கலந்துமுழங்கிமின்வீசின்றுகாதலர்தந்
தேருஞ்சிலம்பிப்புகுந்ததுநங்கள்செழுநகர்க்கே. (௨௫௫)

இனித் தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி வினைமுற்றி மீள்பவர் சொல்லிய பருவந் தூதாகி வந்ததென்று. அதற்குச் செய்யுள்:—

முன்றான்முகிழ்முலையாரமுயங்கிமுறுவலுண்டு
சென்றார்வரவிற்குத்தூதாயெழுந்தசெழும்புலிப்பை
வென்றானழியநறையாற்றகத்துவென்றான்முடிமே
னின்றான்மணிகண்டம்போலிருடாங்கியநீண்முகிலே. (௨௫௬)

இத்தலைமகன் வினைமுற்றிப் புகுந்து தலைமகளுடன் இருந்து தோழிக்குச் சொல்லியதற்குச் செய்யுள்:—

மடையார்குவளைநெடுங்கண்பனிமல்கவந்துவஞ்சி
யிடையாளுடனாயினிதுகழிகின்றிலங்குமுத்தக்
குடையான்குலமன்னன்கோனெடுமாறன்குளந்தைவென்ற
படையான்பகைமுனைபோற்சென்றுநீடியபாசறையே. (௨௫௭)

இனிப் பொருட்குப் பிரிந்த தலைமகன் தோழியாற் தலைமகட்குப் பிரிவு உணர்த்தும். அதற்குச் செய்யுள்:—

இல்லாரிருமையுநல்லவெய்தாவொன்றிருநிதிக்குக்
கல்லார்சுரஞ்செல்வதேநினைந்தார்நமர்காய்ந்தெதிரே
புல்லாரவியநெல்வேலிப்பொருகணைமாரிபெய்த
வில்லான்விசாரிதன்றென்புனனாடன்னமெல்லியலே. (௨௫௮)

அதுகேட்ட தலைமகள் ஆற்றாத்தன்மையளாய்த் தோழிக்குச் சொல்லியதற்குச் செய்யுள்:—

ஊனங்கடந்தவொருகுடைவேந்தனுசிதனென்னார்
மானங்கடந்துவல்லத்தமரோட்டியகோன்படிமே
லீனங்கடந்தசெங்கோன்மன்னன்றெம்முனைபோலெரிமேய்
கானங்கடந்துசென்றேபொருடேர்வதுகாதலரோ. (௨௫௯)

தோழி தலைமகணிலைமை தலைமகற்குச் சொல்லியதற்குச் செய்யுள்:—

விளைதங்குநீண்முடிவேந்தன்விசாரிதன்வெம்முனைபோல்
வளைதங்குகானமர்செல்லுவரொன்றலும்வாணுதலா
ணிளைதங்குசங்கங்கழலக்கண்ணித்திலஞ்சிந்தநில்லா
வளைதங்குமேகலைமெல்லடிமேல்வீழ்ந்தரற்றினவே. (௨௬௦)

மன்னேந்தியபுகழ்வாணெடுமாறன்றன்மாந்தையன்ன
மின்னேந்தியவிடையாய்நமர்செல்வர்வெங்கானமென்னப்
பொன்னேந்திளமுலைபூந்தடங்கண்முத்தந்தந்தனபோ
யென்னேந்தியபுகழீரினிச்செய்யுமிரும்பொருளே. (௨௬௧)

இதுவும் மேலதனோடு ஒக்கும்.

இனித் தோழி தலைமகனை நீ பிரிந்தவிடத்து இவ்வகை நெடியவாகிய கங்குல்களைத் தமியளாய் எவ்வகை நீந்தி ஆற்றுமென்னும். அதற்குச் செய்யுள்:—

வருநெடுங்கங்குலெவ்வாறினிநீந்தும்வல்லத்துவென்ற
செருநெடுந்தானையெங்கோன்றெவ்வர்போலச்சென்றத்தமென்னும்
பெருநெடுங்குன்றம்வலைந்துலகெல்லாம்வளாய்க்குணபாற்
றிருநெடுங்குன்றங்கடந்தாம்வருவதுசெஞ்சுடரோ. (௨௬௨)

படந்தாழ்பணைமுகயானைப்பராங்குசன் பாழிவென்ற
விடந்தாவயின்மன்னன்வெங்களம்போலவிரிந்தவந்தி
கடந்தாவிடையிருள்போய்க்கடையாமநல்லூழிமெல்லக்
கடந்தாலதிற்பின்னையன்றேவருவதுகாய்கதிரோ. (௨௬௩)

இதுவும் அது. தோழி தலைமகற்குப் பிரிவுநோக்கு நன்றுசெய்தாய் அவாசெல்லுங் கானம் இவ்வகைப்பட்டதென்னும். அதற்குச் செய்யுள்:—

தேனக்கதாரவர்காண்பர்செல்லாரவர்செல்லவொட்டி
ஈனக்குழன்மங்கைநன்றுசெய்தாய்வென்றுவாய்கனிந்த
மானக்கதிர்வேல்வரோதயன்சொல்லிவளையணைந்த
கானத்திடைப்பிடிகையகலாதகருங்களிறே. (௨௬௪)

இனித் தோழி தலைமகட்குப் பொருண் முடித்து வந்தான் எம்பெருமானென்னும். அதற்குச் செய்யுள்:—

இருண்மன்னுமேகமுங்கார்செய்தெழுந்தனவெள்வளையாய்
மருண்மன்னுவண்டறைதாரவர்தாமுமிம்மாநிலத்தார்க்
கருண்மன்னுசெங்கோலரிகேசரியந்தண்கூடலன்ன
பொருண்மன்னுமெய்திப்புகுந்தனர்வந்துநம்பொன்னகர்க்கே.

மற்றும் இவ்விடத்துப் பிரிவிடை மெலிந்து ஆற்றாளாகிய தலைமகளைப் பருவம்வந்ததென்று வற்புறுப்ப வன்புறையெதிரழிந்து சொல்லியதற்குச் செய்யுள்:—

தகரக்குழலாய்தகவிலவேசங்கமங்கைவென்ற
சிகரக்களிற்றுச்செங்கோனெடுமாறன்றென்கூடலின்வாய்
மகரக்கொடியவன்றன்னிளவேனின்மலர்விலைக்குப்
பகரக்கொணர்ந்தில்லந்தோறுந்திரியுமிப்பல்வளையே. (௨௬௬)

"அழுதுபடு விழுப்புண் வழுபுவாய் புலரா – வெவ்வ நெஞ்சத் தெஃகெறிந் தாங்குப் - பிரிவில புலம்பி நுவலுங் குயிலினுந் - தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே - யதனினுங் கொடியா டானே மகணி ன்-றுய்த்தலை யிதழ பைங்குருக் கத்தி - பித்திகை கொள்ளு மலர்கொ ள்ளி ரோவெண - வண்டுசூழ் வட்டிய டிரிதருந்-தண்டலை யுழவர் த னிமட மகளே."

இவ்விடத்துச் செய்யுள் பலவும் வந்தனவெல்லாங்கொள்க.௩௯

௪0. காதற் பரத்தை யெல்லார்க்கு முரித்தே.

என் - னின்; மேல் எல்லாப் பிரிவுகளையுஞ் சிறப்புவகை யான் உணர்த்தினர், இனிப் பரத்தையிற்பிரிவு எல்லார்க்கும் உரித்தெ ன்பது உணர் - ற்று. (இ - ள்.) காதற்பரத்தை எல்லார்க்கும் உரித் தே=பரத்தையிற் பிரிவு எல்லாவருணத்தார்க்கும் உரித்து. எ - று தம் மைக் கண்டு காதலித்தாரென்பது அறிவன்றே, அவர்தாம் பேரறிவின ராகலான்; அன்னார் தாம் பின்னைத் தலையழியாது விடுவது அருளன்று; அதனால் எல்லார்க்கும் உரித்தெனக்கொள்க. இவ்வுரை பொருந்தா து. என்னை காரணமெனின், மிக்காரைக் கண்டால் இழிந்தாரும் உ யர்ந்தாரும் மற்றுமெல்லாருங் காதலிப்ப, அவர்மாட்டெல்லாம் பிரிய வேண்டும். பிரியவே எல்லாக்குற்றமுந் தங்கித் தலைமையோடு மாறு கொள்ளும். அல்லதூஉம், அன்பினற் பிரியார் அருளினற் பிரிவரென் பதூஉஞ் சொல்லப்பட்டதாம். அதனற் காதற்பரத்தைமாட்டுப் பி ரிவு அமையாதெனக்கொள்க. இனி ஒருதிறத்தார் காதலைச் செய்யும் பரத்தை காதற்பரத்தையென்ப. என்னை காரணமெனின், வைகலு ம் பாலை துய்த்துச் செல்வான் ஒருமகன் இடையிடை புளிங்கறியும் உண்டக்காலாம் பாலின் விசேடம் அறிவானுவது. அதுபோலத் தலை மகள் குணங்களைத் துய்த்துச் செல்லாநின்றான் இடையிடையே சி றுகுணத்தாராகிய பரத்தையர்மாட்டுப் பிரிந்துவரத் தலைமகள்மாட் டுக் காதல் மிகும். அல்லாவிட்டால் இவள் குணம் ஒருவழியதென் பது அறியலாகாது. என்னை? இன்னாததொன்று உண்மையான் இனியதன் இன்பம் அறியப்படுமென்றவாறு. இவ்வுரையும் பொரு ந்தாதென்ப. என்னைகாரணமெனின், அவர் ஓதியொடு சார்த்திக் கொண்டன்றே இவள் குணங்களைப் பெரிய என்றறிப வெனின், அவர்மாட்டுப் பிரியாத காலத்து இவள் குணங்களை மிக்கனகொல்லோ மிக்கிலகொல்லோவென ஐயத்தனாய் நின்றானுதல் வேண்டும். இங்

னுமாகிற் றானவனென்னும் வேற்றுமையிலர் என்பதனோடு மாறு கொள்ளும். என்னை? தங்குணங்களை ஐயப்படுவார் இன்மையா னென்பது. மற்றென்னோ உரையெனின், தலைமகனாற் காதலிக்கப்ப ட்ட பரத்தையெனக்கொள்க. அஃதேயெனின் இவன் கண்டாரை யெல்லாங் காமுறுமாகானோ எனின், ஆகான்; ஆகாதவாறு சொல்லுது ம். தலைமகனாற் றலைநின்று ஒழுகப்படுவன தர்மார்த்தகாமமென்பன. அம்மூன்றினையும் ஒருபகலை மூன்றுகூறிட்டு முதற்கட் பத்துநாழிகை யும் அறத்தொடு பட்டுச் செல்லும்; இடையன பத்துநாழிகையும் அ ருத்தத்தொடுபட்டுச் செல்லும்; கடையன பத்துநாழிகையுங் காமத் தொடுபட்டுச் செல்லும்; ஆகலாற் றலைமகன் நாழிகை அளந்துகொண்டு அறத்தொடு படுவான், தலைமகளும் வேண்டவே தானும் வேண்டப் பார்ந்து அத்தாணிபுகுந்து அறங்கேட்பதும் அறத்தொடுபட்டுச் செல் வதுஞ் செய்யும்; நாழிகையளந்து இடையன பத்துநாழிகையும் இ றையும் முறையுங் கேட்டு அருத்தத்தினோடுபட்டு வாழ்வானும். அவ றது நீக்கத்துக் கடையன பத்து நாழிகையுட் டலைமகளுழைப் போ ரும். போதரப் போதரவு பார்த்திருந்த பரத்தையர் குழலூதி யாழெ ழீஇத் தண்ணுமையியக்கி முழவியம்பித் தலைமகனை இங்குக் கூத்துண் டென்பது அறிவிப்ப. என்னை? "குழலெழீஇ யாழெழீஇத் தண்ணுமை பின்ன - முழவியம்புபாமங் திரிகை" என்று கூத்தநூலுடையாருஞ் சொன்னாரென்பது. அவை அறிவிக்கப்பட்ட தலைமகன் இதனையொ கால் நோக்கிப் போதுமென்று செல்லும்; சென்றக்கால் அவர்தங் ட் தாழ்விப்பரென்பது. அஃதேயெனின், இப்பரத்தையனாத் த மகன் தலைமகளை எய்தியபின் உடையனாதல் முன்னுடையனாத இரண்டல்லது இல்லை. அவற்றுள் எய்தி இருந்துடையனாயி னெனின் தலைமகள் குணமேயுமன்றிப் பிறவும் இன்பஞ்செய்வன ளவாகக் கருதினானும். ஆகவே, "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு - மொண்டொடி கண்ணே யுள." என்பதனோடு மாறு காள்ளுமென்பது. இனித் தலைமகளை எய்தாமுன் உடையனா னேயெனின் முன்னும் இவன் கற்ற காலமின்றிக் காமத்தி கண்ணே கெழுமுகின்றானும்; ஆகவே நெறியின் வளர்ந்தான் ல்லனுமென்பது. மற்றென்னோ உரையெனின் தலைமகளை எ தாதமுன்னே பரத்தையனை உடையனென்பது. என்னை? சொ லப்பட்ட குற்றம் எய்தாதோவெனின், எய்தாது. குரவர்கள் வனறியாமே இவனுரிமை இதுவெனவும் இவன் யானையுங்

குதிரையும் இவ்வெனவும் மற்றுமெல்லாம் இவர்க்கென்று வகுத்துவைத்துத் தாம் வழங்கத் துய்ப்பவென்பது. அவ்வகையே குரவர்களான் இவனுரிமையென்றே வளர்க்கப்பட்டாராகலாற் றலைமகளை எய்துவதன்முன் உளனென்பது. இவன் முன்னே தன்னுரிமையாவது அறிந்தவாறென்னையெனின் தலைமகன் தலைமகளை நீங்கித் தருமமும் அருத்தமும் உள்பட்டுத் தலைமகண்மாட்டுப் போதருமிடத்து அவர் முன்சொன்னவாறே குழலும் யாழுந் தண்ணுமையும் முழவும் இயம்ப இயம்பினவிடத்து இஃதென்னையென்னும்; என்றக்கால் அது நின்னுரிமையன்றோ வென்ப; என்றார்க்கு அஃது என்னுரிமையாயினவாறு என்னையென்னும்; என்றவிடத்து நின்குரவர்களாலே நினக்குரிமையாக வகுக்கப்பட்டாரென்பது சொல்லுப. ஆயின் நாங் குரவரது பணி மாறுகொள்ளலாகாதென்பதனாற் காண்டற்குச் சென்றானை அவர்தங்கண் நயப்பிப்பவென்பது. இது பரத்தையிற்பிரிவு நிகழுமாறு. அஃதேயெனின் மற்றைப்பிரிவெல்லாம் வேண்டுக, ஆள்வினைமிகுதி உடைமையான். இப்பிரிவு எற்றிற்கோவெனின் பரத்தையிற்பிரிந்தான் தலைமகனென்றால் ஊடலே புலவியே துனியே என்றிவை நிகழும். நிகழ்ந்தால் அவைநீக்கிக் கூடினவிடத்துப் பெரியதோர் இன்பமாம். அவ்வின்பத்தன்மையை வெளிப்படுப்பன அவையெனக்கொள்க. மென்சுவைமேலே நடந்தானோர் ஆசிரியர்களான் இப்பிரிவு வேண்டினானென்பது. அஃதேயெனின் காதற்பரத்தை எல்லார்க்கும் உரியளென்றாகாதே குத்திரஞ்செய்தற்பாலதென்ன் உரித்தென்று அஃறிணைவாய்பாட்டாற் சொல்லியது எற்றிற்கேவெனின் பிரிவதிகாரம் வாராநின்றமையாற் பிரிவும் உரித்தென்று சொல்லப்பட்டது. பரத்தையர்மாட்டுப் பிரியும் பிரிவின்கட் செய்யுள்

மைவாரிரும்பொழில்வல்லத்துத்தெவ்வர்க்குவான்கொடுத்த
செய்வாயயின்மன்னன்றென்புனலூடன்னநேரிழையா
யிவ்வாய்வருவர்நங்காதலரொன்னவுற்றேற்கெதிரே
செவ்வாய்துடிப்பக்கருங்கண்சிவந்தனள்சேயிழையே. (உசஎ

பரத்தையிற் பிரிந்த தலைமகன் பெயர்த்துந் தோழியை வாயில் வேண்டத் தோழி வாயில்மறுத்தாளென்பது. என்சொல்லி வாயின் மறுத்தாளோவெனின், எம்பெருமான் நிலைமையின்னதென்று சொலலுற்றேன், எனது குறிப்பறிந்த நிலைமையளாயினாள், இதற்குத் தக்கதறிந்து செய்மினென்று வாயின் மறுத்தாளென்பது. இனிப் ப

·தையிற்பிரிந்த தலைமகற்கு வாயிலாய்ப் புக்கான் பாணன் தலைமகளா
ல் வாயின் மறுக்கப்பட்டு முன்னின்று நீங்கும். அதற்குச் செய்யுள் :—

சென்றேபொழிகவயலணியூரனுந்தின்னத்தந்த
கன்றேயமையுங்கல்வேண்டாபல்லாண்டுகெறுத்தவனை
வென்றேவிழிஞங்கொண்டான்வியன்ஞாலமிகவகலி
தன்றேயடியேனடிவலங்கொள்ளவருளுகவே. (உகூஅ)

மற்றும் வாயில்பெறாது பரத்தையிற் பிரிந்த தலைமகன் மகனை
வாயிலாகக் கொண்டு புக்கானைக் கண்டு பொறாமை நீங்கவேண்டித்
தோழி சொல்லியதற்குச் செய்யுள் :—

இழுதுநிணந்தின்றிருஞ்சிறைத்தெம்மன்னரின்குருதி
கழுதுபடியக்கண்டான்கன்னியன்னமின்னேரிடையா
யழுதுசுவற்சென்றவக்கரையோனுடுவந்தமையாற்
றொழுதுவழிபடற்பாலபிழைப்பெண்ணோன்றலையே. (உகூக)

வாரார்சிறுபறைபூண்டுமணிக்காசுடுத்துத்தந்தை
பேரான்சுவலினிருப்புவந்தான்பிழைப்பெண்ணைப்பெறும்
நேராய்வயவர்செடுங்களத்தோடநெய்வேலவிநந்த
பாரார்புகழ்மன்னன்றென்புனலூடன்னபல்வளையே. (உ௭௦)

இது மேலதனோடு ஒக்கும் பொருள். மகன்வாயிலாகப் புக்க
டத்துத் தலைமகள் வெப்பாற்றினாள், அது குறிப்பறிந்து தோழி தலை
ள் இந்நிலைமையளாயினாளென்னும். அதற்குச் செய்யுள் :—

மிலைடமணிப்பூண்மன்னரோடவிழிஞத்துவென்றவன்றூட்
புடைமணியானையினுன்கன்னியன்னாள்பொருகயற்கண்
ணுடைமணியானுடுநீவரவூடற்சிவப்பொழிந்து
மடைமணிநீலத்தணிநிறங்கொண்டுமலர்ந்தனவே. (உ௭க)

பரத்தையிற்பிரிந்து தலைமகன் வாயில்பெற்றுச் சென்று தலைம
ளைப் பொறாமைநீக்கத் தலைமகள் பொறாமைநீங்குவாள் சொல்லியத
ற்குச் செய்யுள் :—

பங்கயமல்லனன்னுடன் பராங்குசன்பாழியொன்னார்
மங்கையர்க்கல்லல்செய்தான்மணிநீர்வையையவார்துறைவா
யெங்கையைத்தீம்புனலாட்டியவீரம்புலர்த்திவந்து
மங்கையிற்சீறடிதீண்டிச்செய்யீர்செய்யுமாரருளே. (உ௭உ)

இஃது என்சொல்லியவாறோவெனின் நீர் நெருநல் உங்காதலை யைப் புனலாட்டிய ஈரம்புலர்த்திவந்து எமக்குச் செய்யும் ஆசருள் செய்யீரொன்றாளென்பது. (சுo

சக. பிரிவி னீட்ட நிலம்பெயர்ந் துறைவோர்க்
குரிய தன்றே யாண்டுவரை யறுத்தல்.

என் - னின்: தலைமகன் பெயர்ந்துறையும் இடத்துக் காலவரை யறை உணர் - ற்று. (இ - ள்.) பிரிவின் நீட்டம்=பிரிவுச்செலவு: நிலம் பெயர்ந்து உறைவோர்க்கு=இடத்தின் நீங்கி நாடிடையிட்டும் காடி டையிட்டும் உறைவோர்க்கு: உரியது அன்றே யாண்டு வரையறுத் ல்=உரித்தன்று யாண்டு வரையறுத்துப் பிரிதல். எ - று. என்பதனா போந்தபொருள் யாதெனின் நாளுந் திங்களும் இருதுவும் வரையறு துப் பிரியவென்பது. இன்ன நாள் வருதும் இன்னதிங்களுள் வருதும் இன்ன இருதுவின் வருதுமென்று சொல்லிப் பிரியுமென்பது. நாட்கு றித்துப் பிரியலுற்ற தலைமகன் பிரிவுணர்த்தப்பட்ட தோழி சென்று லைமகட்குச் சொல்லியதற்குச் செய்யுள் :—

கேளேபெருக்குமரும்பொருள்செய்தற்குக்கேடிறங்க
நாளேகுறித்துப்பிரியலுற்றார்நமர்தீவிழியா
லாளேகனலுங்கொல்யானைச்செங்கோலரிகேசரிதன்
வாளேபுரையுந்தடங்கண்ணியென்னோவலிக்கின்றதே. (உள

திங்கட்குறித்துத் தலைமகன் பிரிய வேறுபட்டாள் தலைமக வேறுபட, ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலென்பது பட சொல்லியதற்குச் செய்யுள் :—

வார்ந்தார்கருமென்குழன்மங்கைமாநிதிக்கென்றகன்ற
வீர்ந்தாரவர்கின்றுகாண்பர்கொல்லோவிகலேகருதிச்
சேர்ந்தார்புறங்கண்டசெந்நிலத்தன்றுதிண்டேர்மறித்துப்
பேர்ந்தான்றனதுகுலமுதலாயபிறைக்கொழுந்தே. (உஎ

என்பது என் சொல்லிற்றோவெனின், யான் ஆற்றேனாய றுகவல்கின்றது அவர் குறித்ததிங்கள் வரவுகண்டு தாமெடுத்துக்கொ ண்ட பொருள் முடியாதுபெயர்வர் கொல்லோவென ஆற்றேனவெ றாளென்பது. காரென்னும் இருதுக்குறித்துப் பிரிந்தான் தலைமக

ரியப், பருவவரவின்கண் வேறுபட்டாள் தலைமகள். வேறுபட, ஆற் ளெனக்கவன்றதோழிக்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியதற்குச் சய்யுள் :—

உளங்கொண்டுவாடின்றுகட்டாற்றெதிர்ந்தாருதிரவெள்ளங்
குளங்கொண்டுதேர்ப்பித்தகோனெடுமாறன்கைபோலுங்கொண்டல்
களங்கொண்டுகார்செய்தகாலைக்களவின்கணவமுகத்த
விளங்கண்டகம்விடலுகத்தினுவொக்குமீர்ம்புறவே. (உஎரு)

எனவே என்சொல்லினுளோவெனின், யாறுற்றேனுயன்று வறுபடுகின்றது. குறித்த பருவம் வந்தது கண்டு தாமெடுத்துக் கொ ட பொருள் முடியாது வருவர் கொல்லோ என ஆற்றேனுயினேனெ பது. பனியென்னும் இருதுக் குறித்துத் தலைமகன் பிரிய அப்பருவ ரவின்கட் தலைமகள் ஆற்ருளாமெனக் கவன்ற தோழிக்குச் சொ லியதற்குச் செய்யுள் :—

சுழலும்வரிவண்டலம்பச்சொரிமதம்வாய்ப்புகநீன்
றழலுங்களிற்றரிகேசரிதென்புனலுடையாய்
கழலும்வரிவளைகாக்கவந்தின்றுகனலுஞ்செந்தீத்
தழலுங்குளிர்ந்துபொடிப்படப்போர்க்கின்றதாழ்பனியே.(உஎசு)

தனியார்தகைநலம்வாட்டுங்கொலாற்றுக்குடிதனது
குனிவார்சிலையொன்றினுல்வென்றகோன்கொங்கநாட்டசொல்லே
கனியார்களவினிளமுட்கதிர்முத்தங்கோப்பனபோற்
பனியார்சிதர்நுனிமேற்கொண்டுநிற்கும்பருவங்களே. (உஎஎ)

இளவேனிலென்னும் இருதுக் குறித்துத் தலைமகன் பிரிந்த டத்துப் பருவவரவின்கட் தலைமகள் ஆற்ருளாமெனக் கவன்று தாழி சொல்லியதற்குச் செய்யுள்:—

வானலங்கொண்டகையான்மன்னன்மாறன்றன்மாற்றையன்ன
டானலங்கேயப்பனியோகழிந்ததுதண்குவளைத்
தேனலம்போதுதுழாய்வந்துதண்டென்றற்றீவிரியும்
வேனலங்காலமெவ்வாறுகழியுஞ்சொன்மெல்லியற்கே. (உஎஅ)

வேனிற் பருவங் குறித்துப் பிரிந்த தலைமகன் பிரிய வேறுப தலைமகள் ஆற்ருளாயினுளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலெ துபடச் சொல்லியதற்குச் செய்யுள்:—

மெல்லியலாய்நங்கண்மேல்வெய்யவாய்விழி ஏத்துவென்ற
மல்லியறேண்மன்னன்சென்னிநிலாவினன்வார்சடையான்
வில்லியல்காமனைச்சுட்டசெந்தீச்சுடர்சென்றவன்மேற்
செல்லியபாரித்தபோன்றனபிண்டியின்றேமலரே. (உகூ)

எங்ஙனம் ஆற்றுவலென்பது படச் ; சொல்லினளோவெனி ன், இவ் வேனில் வரவின்கண் நம்மேல் இவ்வகை வெய்யவாகி விரியா நின்ற பிண்டியலர் அவர்க்கு மிகவெம்மையைச் செய்யுமன்றே? செய் தவிடத்துத் தாமெடுத்துக்கொண்ட பொருள் முடியாது மீள்வர்கொ ல்லோவென ஆற்றேனுகின்றேன் என்றாளென்பது. இச்சூத்திர ந் தவளைப்பாய்த்தல், "வேந்தர்க்குற்றுழி" என்னுஞ் சூத்திரத்துடன் நோக்குடைத்தென்பது. (சக

சஉ. பரத்தையிற் பிரிவே நிலத்திரி பின்றே.

என் - னின்; பரத்தையிற்பிரிவு நாடிடையிட்டு நீங்கி உறை தல் இல்லையென்பதுணர் - றறு. மேற்சூத்திரத்துள் எய்தியது வில கியவாறு. (இ-ள்.) பரத்தையிற் பிரிவே=பரத்தையர் மாட்டுப் ரியும் பிரிவு: நிலத் திரிவு இன்றே=இடத்திரிபின்று எ - று. எனவே ஓரூரதென்பதூஉம் ஓரிடத்தினதென்பதூஉம் உணர்த்தப்பட்டதாம். னி ஒருதிறத்தார் தன்னிடத்தேயென்ப. அதுசொல்லுதல் பொரு தாது. "மான்றேர் மாமணி கறங்கக்கடை கழிந்தன்று" எனவும் "( ருகதில்ல மாவெஞ் சேரிசேர" எனவும் இவை எல்லாஞ் சான்றே செய்யுள் உண்மையான். இந்நிலத்து நீங்காதெனவே ஓரூரதெ பது பெறப்பட்டது. பட்டமையாற் தன்னிடத்ததாகவும் பெறும், ன்னிடத்துநீங்கிச் சேரியதாகவும் பெறுப வென்பது. இனி ஓரிடத் தென்பதனைத் தலைமகனிடம் பெரிதாகலாற் தலைமகனது இடமும் ப த்தையர் சேரியும் வேறாய் நீங்கி இருக்கும், அதனுள்ளே செய்குன் மும் நந்தனவனமும் வாவியும் விளையாடிடமும் எல்லாம் உடைத்தா ருக்குமென்பது. (உ

சங. பரத்தையிற் பிரிந்த கிழவோன் மனைவி
பூப்பின் புறப்பா டீரறு நாளு
நீத்தகன் றுறைத லறத்தா றன்றே.

என் - னின் ; தலைமகன் பரத்தையிற் பிரிந்த விடத்துத் லைமகட்குப் பூப்பு நிகழ்ந்த காலத்துத் தலைமகன் இவ்வாறு ஒழு

மின்பத உணர் - ற்று. (இ-ள்.) பரத்தையிற் பிரிந்த கிழவோன் ம
னவி=புறப்பெண்டீர்மாட்டுப் பிரிந்த தலைமகன் கிழத்தி: பூப்பின் பு
ப்பாடு ஈராறு நாளும்=பூப்புப் புறப்பட்ட நாண்முதற் பன்னிரு நாளு
நீத்து அகன்று உறைதல் அறத்தாறு அன்றே=நீத்தும் அகன்றும்
றைதல் அறநெறியன்று. எ - று. எனவே, நீயாதும் அகலாதும் உறை
ல் அறநெறியென்றவாறும். என்பது சொற்கேட்கும் வழியுங் கூ
யும் உறைகவென்றவாறும். இவ்வாறு உறைதல் செயற்பான்மைய
வன்றவாறு. அஃதாமாறு தலைமகன் பரத்தையிற் பிரிந்த காலத்துத்
லைமகட்குப் பூப்புத் தோன்றிற்று, தோன்றத் தலைமகன் உணரும். எ
னம் உணருமோவெனின் வாயில்கள் உணர்த்த உணருமென்ப
. என்னை வாயில்கள் உணர்த்துமாறெனின், தலைமகன் வாயில்களுந்
லைமகள் மாட்டு உளவாம்; தலைமகள் வாயில்களுந் தலைமகன்மாட்டு
ளவாம்; ஆதலான் அவர்கள் உணர்த்த உணருமென்பதாம். அல்ல
உந் தலைமகள் தமரன்றே தலைமகற்கு நாளானும் படிமக்கலத்தோ
செல்வார், அற்றைநாளாற் செங்கோலத்தோடு செல்ல உணருமெ
பாருமுளர். இனி ஒருதிறத்தார் பூப்பு நிகழ்ந்த நாளாலே சேடியை
செங்கோலஞ்செய்து செப்புப்பாலிகையுட் செம்பூவும் நீருங் கொ
டு தலைமகனை வலங்கொண்டு பூவும் நீரும் அவன் அடிமேற் பெய்து
ாக உணரும் என்பாருமுளர். இது மேலாயினரிடங்களிற் பூப்பு உ
ர்த்துமாறென்று இவ்வகை சொல்லுவார். நல்லது அறிந்துகொள்க.
வகை பூப்பு உணர்த்தப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொ
யதற்குச் செய்யுள்:—

ஞ்சாரிரும்பொழில்வல்லத்துவாண்மன்னர்போரழித்த
ஞ்சாவடுசெரியானையினானைசன்ஞாலமன்ன
ஞ்சாரகலல்குலாடன்மைசொல்லும்படாமுலைமேற்
சஞ்சாந்தணிந்துவந்தாள்செய்யகோலத்தின்சேயிழையே. (உஅ௦)

இவ்வகையாற் பூப்புணர்ந்து வாயில்களோடுஞ் சென்று தலை
பிடத்தானுய் மூந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறைவானுவது. உ
தபின்னை ஒன்பது நாளுங் கூடியுறைவானுவது. மூந்நாளுஞ்
ற்கேட்கும்வழி உறைதற்குக் காரணம் என்னையெனின், தலைமக
ரத்தையர்மாட்டானுக முன்னின்ற பொருமை உண்டென்று
ம். மூந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறையவே நீங்கும். நீங்கி
ளைக் கூடும். ஆகவே கருவுநின்றது மாட்சிப்படும். அதுநோக்கி

உணர்த்தப்பட்டது. அதனான் அறமெனப்பட்டது. அல்லாதுவிடி தலைமகன்மாட்டு ஓர்பொறுமை தோன்றும், பரத்தையர்மாட்டு நின். வந்தானென. அப்பொறுமை ஓர்வெகுளியைத் தோற்றும், தோற் வெகுளி பெரியதோர் வெப்பத்தைச் செய்விக்கும், வெப்பத்தினாற் க மாட்சிமைப்படாதாம், படாதாகவே அறத்தின் வழுவாமென்ப அதனான் முந்நாளுஞ் சொற்கேட்கும்வழி உறைவாருமென்ப பூப்புப் புறப்பட்ட முந்நாளும் உள்ளிட்ட பன்னிருநாளுமென்ப துணிபுற்றுங்கு முந்நாளுங் கூடி உறையப்படுங் குற்றமென்றே ன்றார்க்கு, பூப்புப் புறப்பட்டஞான்று நின்றகருவு வயிற்றிலே அழி ம், இரண்டாம் நாளின் நின்ற கருவு வயிற்றிலே சாம், மூன்றாம் நா நிற்குங் கருவு குறுவாழ்க்கைத்தாம், வாழினுந் திருவின்றாம்; அத ற் கூடப்படாதென்பது. "பூப்புமுதன் முந்நாட் புணரார் புணரின் யாப்புறு மரபின் முனிவரு மமரும் - யாத்த காரண மழியு மெ ப." எனப் பலரும் ஓதினாராதலான் அமையாதென்பது. (சூ

சக. கற்பினுட் பிரிந்தோன் பரத்தையின் மறுத் தறப்பொருட் படுப்பினும் வரைநிலை யின்றே.

என் - னின்; மேலைச்சூத்திரத்துக்கு உரியதோர் புறனை உணர்—ற்று. (இ - ள்.) கற்பினுட் பிரிந்தோன் = பரத்தையர் சே றைப் பூப்பு உணர்த்தப்பட்ட தலைமகன்: பூப்பு நிகழ்ந்த முதன்மூ று நாளும் வந்துசொற்கேட்கும்வழி உறைவானாயிற் தலைமகன் பினுட் பிரிந்தோனெனப்பட்டான்; கற்பென்பது பூப்பு; அப்பூப் கற்புக்காலத்தன்றிக் களவுக்காலத்து நிகழாமை நோக்கிப் பூப்பி யுங் கற்பென்று சொல்லினானென்பது. பரத்தையின் மறுத்தந்த அம்மூன்றுநாளுங் கழித்துப் பரத்தையர்சேரிநின்று நீங்கி வருவ அறப்பொருட் படுப்பினும் = அறத்தொடு படுப்பினும்: தலைமகளைத் ழியாற் சிவப்பாற்றுவித்துப் புக்குத் தலைமகளோடு புணர்தல்: வரைநிலை இன்றே = குற்றமெனப்படாது அத்துணைச் சிறப்பின் னும். எ - று. தலைமகளை வாயில்களாற் சிவப்பாற்றுவித்தற்குச் யுள்:—

பொன்னார்புனலணியூரன்வந்தன்னிற்புறங்கடையா
னென்னவளவிற்சிவந்தாள்சிவந்துமியல்பதுவன்
தன்னுயெனச்சிவப்பாற்றினள்வல்லத்தரசவித்த
மின்னாரயின்மன்னன்றென்புனனாடன்னமெல்லியலே. (ச

சருு. புகழுங் கொடுமையுங் கிழவோன் மேன.

என் - னின் ; தலைமகற்குரியதோர் இலக்கணம் உணர் - ற்று.
ள்.) புகழும் கொடுமையும்=புகழென்பது, தக்கானெனப்படுத
காடுமையென்பது, தகானெனப்படுதல் : கிழவோன் மேன=
இரண்டுந் தலைமகன்கண்ண. எ - று. எனவே, இத்தன்மைத்
...... என்றவாறு. அஃதாமாறு தலைமகன்மாட்
றந்தக்காற் தக்கானெனப்படுதலும் பரத்தையர்மாட்டு உறைந்
;கானெனப் படுதலும் என்றவாறு. யாராலோ அவை சொல்
லெதெனின் வாயில்களாலெனக் கொள்க. அவர் புகழுடைய
ரபதற்குச் செய்யுள்:—

ரடியசீள்புருவத்துமடந்தைகொழும்பணைத்தோள்
உயவாட்டமுணர்ந்துமனையிடைவந்தமையா
உயல்யானையரிகேசரிதெவ்வர்போலதன்று
பகாதலர்தாமேபெரியரிந்நீணிலத்தே.　　　　(உஅஉ)

ழுன் அவர் தகாமனைறதற்குச் செய்யுள்:—

ரடுறைதெவ்வர்விழிஞத்தவியவெனவலங்கைக்
ண்டுறைநீக்கியகோன்வையைநாடன்னகோல்வளையிவ்
ரடுறைகோதைவருந்தநல்லாரில்லுள்வைகுதலாற்
டுறைசூழ்வயலூரன்பெரிதுந்தகவிலனே.　　　　(உஅங)

சசா. கொடுமை யில்லைச் கிழவி மேன.

என் - னின்; தலைமகளது பெருமை உணர்—ற்று. (இ-ள்)
மை இல்லை=தக்காளெனப் படுதலல்லது தகாளெனப்படுதல்
கிழவி மேன=தலைமகண்மாட்டு. எ-று. தலைமகள் எக்காலத்
நுதன்மையள் என்றவாறு. எஃறதன் கருத்துத் தலைமகன் த
டு வந்து உறைந்த காலத்தே தக்காளாய்ப் பரத்தையர்மா
சென்று உறைந்த காலத்துத் தகாளாங்கொல்லோவெனின் ஆ
ன்றவாறு. அதற்குச் செய்யுள்:—

காங்கெதிர்ந்தாரவியகெல்வேலித்தன்னின்சிலையாற்
கான்றுரந்துவென்றூன்றமிழ்நாடன்னதாழ்குழலாள்
கார்வருபுனலூரன்றன்பண்பின்மையெங்கனையுங்
கான்கடலிடமெல்லாம்புகழ்தருங்கற்பினளே.　　　　(உஅச)

தலைமகன் பரத்தையர் சேரியனாகத் தலைமகள் பக்கம் புக்க ப
ணன் தலைமகளது நிலைமை கண்டு தன் விறலிக்குச் சொல்லியது.(சு

ருஎ. கிழவோன் முன்னர்க் கிழத்தி தற்புகழ்தல்
புலவிக் காலத்துப் புரைவ தன்றே.

என் - னின்; தலைமகள் சிறந்து இன்னதோர் குணமுடை
டென்பது உணர் - ற்று. (இ-ள்.) கிழவோன் முன்னர்க் கிழத்தி த
புகழ்தல் = தலைமகன் முன்னர்த் தலைமகள் தன்னைப் புகழ்தல் = புலவி
காலத்துப் புரைவது அன்றே = புலவிக்காலத்தன்றே அஃது உரிய
எ-று. அந்தக்காலத்துத் தகாது எனவே தலைமகள் எவ்விடத்துந்
ன்னைப் புகழப் பெறாளென்பது. எனவே தலைமகனது நிலைமை பெ
ரும். இனிக்கிழவி தற்புகழ்தல் பெறாளெனப் பரத்தை தற்புகழ்
ல் பெறுமென்பது போந்தது. அவ்வாறு பரத்தை தற்புகழ்தற்கு
செய்யுள்:—

வெஞ்சுடர்நோக்குநெருஞ்சியினூரனை வெண்முறுவற்
செஞ்சுடர்வாண்முகத்தாண்முன்னையென்பார்திரியலனே
வஞ்சுடர்வேலரிகேசரிகோளமன்றுட்டுடைந்தார்
தஞ்சுடர்வாட்படைபோலவுடைகவென்சங்கங்களே. (உ.அ

பிறவும் அன்ன, கண்டுகொள்க.

ருஅ. நாடு மூரு மில்லுஞ் சுட்டித்
தன்வயிற் கிளப்பிற் புலவிப் பொருட்டே.

என் - னின் ; தலைமகள் தற்புகழ்ந்தாளாகற்க, இவ்வாறு ெ
ல்லியக்கால் அதுவும் புலவிநிமித்தமென்பது உணர் - ற்று.(இ-ள்)
டும் ஊரும் இல்லுஞ் சுட்டி = நாடே ஊரே இக்லே இவற்றைக்கரு
தன்வயிற் கிளப்பிற் புலவிப் பொருட்டே = தன்கட்சொல்லிற் பு
ப்பொருட்டாம். எ - று. தானுறையும் நாட்டையுந் தன் ஊரை
தான்பிறந்த குடியையுஞ் சொல்லித் தலைமகள் தற்புகழ்ந்தாளாக
இவ்வாறு சொல்லியக்கால் இது புலவிப்பொருட்டாமென்றவா
அவ்வாறு என் நாடு இறப்பவுஞ் சிறியாராலே வாழப்படுவதென
"குறும்புறு பிருக்கை மறந்தலை மணந்து-சிறுகூழ் வல்சியிற் செல்
யிற்றே - யக்காட் டுள்ளு மெம்மூ ராமே-புல்வா யலக்கொல்லே சி
பற்றி-வளாகணி குறைந்த வாரித் தன்றே." அவ்வூருள்ளும் யாம்
த மனைகளெல்லாஞ் சிறியோர் இல்லாமன்றே, அன்ன சிறியரொ

் நமக்குத் தக்கதன்றே, அல்லது எம்பெருமானுக்கெனின் இறப்பவு பெருந்தன்மையவென்றே அங்கீரார்க்கு இவ்வாறு தலையளி பொறுக் ன்றே எனச்சொல்லுதலாம். இவ்வாறு சொல்லினவிடத்துத் தலை ன்மாட்டுப் புலவியே கொள்ளக் கருதிச்சொன்னளாமென்பது. அ ற்குச் செய்யுள்:—

வெறிதருபூந்தார்விசாரிதன்வேலைமுந்நீர்வரைப்பி
னெறிதருகோல்செல்லுமெல்லையுள்ளேமல்லகீர்மையில்லாச்
சிறியவர்வாழ்பதியேயெமரில்லஞ்சிறிதேதமக்கே
யெறிபுனலூரவெவ்வாறுமமையுநின்னின்னருளே. (உஅசு)

சசு. அவன்வயிற் கிளப்பின் வரைவின் பொருட்டே.

என் - னின்; இவ்வாறு சொல்லின் வரைவின்பொருட்டாக ன்பது உணர் - ற்று. (இ-ள்.) அவன்வயிற் கிளப்பின் = நாடும் ரும் இல்லுஞ் சுட்டித் தலைமகனைச் சார்த்திச் சொல்லின்: வரைவி பொருட்டே = வரைதலென்பது நீக்கிநிறுத்தற் பொருளவாம். எ-று. துதனை நீக்கிநிறுத்தலோவெனின் புலவியை நீக்கிநிறுத்தல். அஃதெ னபெறுமாறெனின் மேற்சூத்திரத்திற் புலவியென்று அதிகாரம் வா ின்றதாகலானென்பது. பரத்தையிற் பிரிந்து வாயிலாற்புக்க தலை ன ஏற்று எதிர்கொண்டு வழிபட்டபின்னைக் கரணத்தின்நீங்கி பாருமைக்குக் காரணம் பெற்றுத்தோற்றிற்று. அதுதோற்றத் தலை ன ஒன்றன் தலைக்கீடாகச் சொல்லுதல், எம்பெருமான் நீர்பெரி ய நாட்டிற் பெரிதாகிய ஊரில் பெரிதுமிக்ககுலத்திற் பிறந்த பே ழுக்கத்தினீர்க்குத் தகாதே சிறியேமாகிய எந்திறத்துத் தலையளி ச்சொல்லுதல். இவ்வாறு சொல்லுவாள் புலவிநீக்குவான் சொல்லி க வென்பது. அவ்வாறு சொல்லுதற்குச் செய்யுள்:—

ரியவண்டார்தொங்கன்மான்றேர்வரோதயன்வல்லத்தொன்னார்
ரியனவேல்கொண்டகாவலன்காக்குங்கடலிடம்போற்
பெரியநன்னாட்டுப்பெரியநல்லூரிற்பெரியவில்லிற்
ரியமிக்கீர்க்கியல்பன்றுகொலிவ்வாறொழுகுவதே. (உஅஎ)

இச்சூத்திரத்தைப் பருந்து வீழ்க்காடாகக் கிடந்ததென்று க னுள் வரைவின் பொருட்டாக வென்பாருமுளர். அதுபொருந்தா ன்னை? "வரைதல்வேட்கைப்பொருள" என்றசூத்திரத்துள் "அன் ரயிற் பிறவுந் தொகைஇ" என்றவழி அடங்கும். அல்லதூஉம், கற்பி களவுகொணர்ந்து உரைத்தல் பொருந்தாது. (சசு)

ரு௦. உணர்ப்புவயின் வாரா வூட றோன்றிற்
புலத்த றானே கிழவற்கும் வரையார்.

என் - னின்; தலைமகட்கே உரியதோர் இலக்கணம் ஓரிடத்.
த் தலைமகற்கும் உரித்தென்பது உணர் - ற்று. (இ-ள்.) உணர்ப்புவயி
'வாரா ஊடல் தோன்றின் = உணர்த்துதற்கு இடம்வாரா ஊடல் தலை
மகட்கு வெளிப்பட்டு நிற்பின்: புலத்தல் தானே கிழவற்கும் வரைய
ர் = புலந்து சொல்லுதற்றன்மை தலைமகற்கும் வரையார். எ-று. தலை
மகட்கே உரியவல்ல அவை இந்நேரத்துக்கட் தலைமகற்கும் உரித்தெ
றவாறு. தலைமகள்மாட்டு ஊடல் தோன்றுமிடத்து மூன்றுவகைய
ஊடல் தோன்றும், செய்தான்கொல்லோவெனவுஞ் செய்யாநின்று
கொல்லோவெனவுஞ் செய்யுங்கொல்லோவெனவும். அவற்றுட் செய்
நின்றான் கொல்லோவென நிகழ்காலத்துப் பிறந்தது, பரத்தை
தேரேற்றினன் பூச்சூட்டினன், அவளோடு ஆடினன்கொல்லோ
ணப் பிறப்பது. இனிச் செய்தானென்பது இறந்தகாலத்துத் த
புபற்றி நிகழ்வது. இனி எதிர்காலத்தது செய்யுங்கொல்லோவெ
கழ்வது. அவற்றுள் நிகழுங்காலத்துத்தான் நிகழ்வது உணர்த்துத
இடனுடைத்தன்று, தெற்றென அறிந்தேன் அல்லாதேன் எம்பெரு
னை வருத்துவலோவெனவுந் தானேயும்மீடல் நிலையுடைத்து, சி
சொல்லவும் மீண்டும் நிலையுடைத்து. இனி எதிர்காலத்தே நிகழ்வ
ண்டும் நிலையுடைத்து, தெற்றென அறிந்தேன் அல்லாதேன் ஒருகா
து நிகழ்வதெனக் கருதுதல் பொருந்தாது. என்னை? யாறு வ
கின்றதென்று ஆடைட் தலைச்சூடாரன்றே என்பது. இனி இற
காலத்துத் துணிவுபற்றி நிகழ்ந்ததுண்டே, அஃதெல்லாம் முன்
ச் செய்தானாகலானும் அஃது உணர்த்துதற்கு இடமன்று, அது
ந்திலேனெனச் சொல்லிவிடின் மறைவதன்றாகலானென்பது.
றியுஞ் செய்திலேனென்பானாயிற் செய்த தலமேலுஞ் செம்பூச்
றினற் போலக் கொடுமையுடைத்தாம். அன்றியுஞ் செய்திலே
ன்பானாயின் அது தான் உணர்த்துதற்கு இடனாயிற்றென்பது
வூடல் தோன்றுமெனினென்றவாறு. எந்நேரத்துக்கண்ணோ
ன்றுவதெனிற் சொல்லுதும். பரத்தையர் சேரியினின்று மற
து தோழியை வாயிலாகக் கொண்டான்; கொள்ளத் தோழிபு
ப் பலகாரணமுங் காட்டினள்; காட்டுவாள் நாம் இல்லிருந்து இ
வழிப்பட்டு மக்களை வளர்த்து விருந்து புறந்தருதல் அல்லது பே
துன்னாமன்றே, எல்லாம் ஊடலும் புலவியுந் துனியுங் கொள்ளற்ப

ல்லம், அல்லதூஉம் வண்டோரனையர் ஆடவர் பூவோரனையர் மகளி
ரென்பது, என்னை? வண்டுகள் தாது ஊதுமிடத்து நன்மலரோ ஊதுவே
மென்று, எல்லாமலரும் ஊதும்; இனிப் பூ அவாவினைக்கால் எம்மை
ய ஊதா எல்லாப்பூவையும் ஊதினவென்று புலவாதன்றே, அதுபோ
த் தலைமகனும் எல்லாப் பெண்பாலவரையுந் தலைப்பெய்தல் தன்மையா
ர், அவர்தன்மை அறிவேம்; போம்பொழுது புறந்தொழுது வரும்பொ
து முன்தொழுதுவற்றுக்கொண்டு வழிபடுதலல்லதுமலைத்தற்கண்ணே
அல்லம்; தலைத்திப்பற்றியமாதலே தலைமையென்றும் இவ்வாறு வழி
டாதே எம்பெருமானை வருத்தி என்செய்துமென்றும் ஏற்றுக்கொண
வழிபடுவது பொருளே போலக் காட்டுமென்றும் இங்ஙனஞ் சொல்
, அஃதொக்கும் பிறவென்று அப்போதைக்குச் சிவப்பு நீங்கிற்று. நீங்
ப்புகுதுகவென்றாள். என, அவன் புக்கான், புக்குப் பள்ளியிடத்தா
க, உள்ளுடைத்தாகிய சிவப்புத் தோற்றிற்று, தோன்றக் கண்சிவந்
நுதல்வேறுபட்டுக் காட்டினாள், காட்டப் பெயர்த்தும் ஆற்றானாயி
ன். ஆற்றானாய் நின்று இறந்த காலத்து நிகழ்ந்தனவற்றைப் பற்றிப்
லந்துசொல்லும். என்னை? மேலைக்காலத்து நாம் ஆற்றானாகத் தான்
ற்றாளாய் நாமாற்ற ஆற்றிவருகின்ற இவளேயெனின் இற்றையினூ
ருநாமாற்றாமையது அறியாமையால், இவ்வாற்றாமை எண்ணலுற்றிலா
மயில்; அணங்காதல் இவள் போல்வதோர் தெய்வம் நீ அவளெனக்
வன்றாமடமையால் இவளார் நீயாரென்பது நெஞ்சிற்குச் சொல்
ம். அதற்குச் செய்யுள்:—

இல்லென்றிரவலர்க்கீதல்செல்லாதவரில்லமெனப்
புல்லென்றுவாடிப்புலம்புநெஞ்சேநமக்கார்பொருந்தார்
வில்லொன்றுசேர்பொறிவானவன்மாளவிழிஞங்கொண்ட
கொல்லொன்றுவான்படையான்றமிழ்நாடன்னகோல்வளையே.

அளையணங்குந்துகிலாளல்லளாற்றுக்குடியில்வென்ற
வளையணங்குந்தமிழ்வேதனுசிதனெண்பூம்பொதியில்
வளையணங்கோவல்லையோவென்னயானமமொய்தவுண்க
ணிளையணங்கும்பணிநீர்கொள்ளநின்றவிந்நேரிழையே. (உ௮கூ)

என்பது, தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லியது. அது கேட்
ட தலைமகள், மேனாள் யான் செய்த குற்றேவல் உட்கொள்வானாயது
என்கட்பேரருளினானன்றே, இவ்வகைபேரருளினான் இறந்து இவ்வ
கை சிவத்தற்காகாதென்று சிவப்பு நீங்குவாளாவது. (௫௦)

ருக. நிலம்பெயர்ந் துறையு நிலையியன் மருங்கிற்
களவுறை கிளவி தோன்றுவ தாயிற்
றிணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரையார்.

என் - னின்; இன்னுங் கற்புக்காலத்துத் தலைமகற்கு உரியதோர் இலக்கணம் உணர்-ற்று. (இ-ள்.) நிலம் பெயர்ந்து உறையும் நிலையியன் மருங்கின் = நிலம்பெயர்ந்து உறையவென்பது உள்ளத்துக்கண் நிலைபெற்றவிடத்து: களவுறை கிளவி தோன்றுவது ஆயின் = களவுக் காலத்துக்கு உரிய சொற் தலைமகள்மாட்டுத் தோன்றுமேயெனின்: திணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் வரையார் = திணைநிலையிற்பெயர்ந்து கொள்ளுங்கோள் தலைமகற்கும் வரையார். எ-று. அஃதாமாறு தலைமகளை எய்திச் சற்புக்காலத்து ஒழுகாநின்ற நிலைமைக்கண் நெஞ்சு பொருட்குப் பிரிதும் என்றதென்பது. நட்டாரையாக்குதலுஞ் செற்றாரைச் சிதைத்தலும் ஒரு பொருட்குறைபாடு உடையார்க்கு நிகழாவாகலாற் குறைபாடு நீங்கப் பொருட்குப் பிரிதுமென்ற நெஞ்சிற்குத், தலைமகன் காம் பொருட்குப்பிரிய இவள் ஆற்றுமேற் பிரிதும், ஆற்றாளாயின் ஒழிதுமென்று நெஞ்சினோடும் ஒருப்பட்டுத் தலைமகளுழைப்புக்குப் பள்ளியிடத்தனாகப் பெரியதோர் அருளிச்செய்கை செய்தான். செய்யத் தலைமகள் எம்பெருமான் பண்டும் அருளிச்செய்கை செய்தான், இவை பண்டேபோலா, பெரிதும் இழுமத்தக்கனபோலக் காட்டின, பிரியக் கருதினான், கவடுபோலுமென, அவனும் மற்று நின்னிற்பிரியேன் பிரியின் ஆற்றேனாயேன் என்றசொற் பொய்ப்பட்டதாமென ஆற்றாளாயினாள். அவ்வாற்றாத்தன்மை தலைமகற்குப் புலனாயிற்றாக, அவள் குறிப்பினாலே பிரிவுணர்ந்து ஆற்றாளாயினாள், பிரிதுமென்று சொல்லின் இறந்துபடுமென்று தலைமகன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதற்குச் செய்யுள்:—

துளியுந் துறந்தவெங்கானஞ் செலவின்று சொல்லுதுமே
லொளியுந்திருநுதல்வாடியுய்யாள்கொலுசிதனென்ற
தெளியுஞ்சுடரொளிவாண்மன்னன்செங்கோலெனச்சிறந்த
வளியும்பொருதுநெஞ்சேசுணையகின்றவிவ்வாயிழையே. (உகo)

3० இவ்வண்ணம் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதற்குச் செய்யுள்:—

மையார்தடங்கண்வரும்பனிசோரவருந்திநின்றிச்
செய்யார்குழலாளினையாறையாற்றுநின்றுவென்ற
கையார்கொடுஞ்சிலைச்செங்கோற்கலிமதன்காய்கலிக்கு
வெய்யான்பகையெனநீங்குதுழோநெஞ்சம்வெஞ்சுரமே. (உகூச)

செருமால்கடற்படைச்சேரலர்கோனறையாற்றழியப்
பொருமால்சிலைதொட்டபூழியன்மாறன்பொருமுனைபோ
லருமாநெறிபொருட்கோசெல்வதன்றுநெஞ்சேயவடன்
பெருமாமழைக்கண்ணுநித்திலந்தந்தனபேதுறவே. (உகூஉ

இவ்வாறு நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கும்.

"மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே - யரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப் - பெருந்தோ ளுணுகிய நுசுப்பிற் - கல்செழு கானவர் நல்குறு மகளே."

இவ்வாறு பாலைநிலத்தாளுயினன் செலவழுங்கி மருதநிலத்தாளுயினனெனக்கொள்க. அது திணைநிலைப் பெயர்க்கோள் கிழவற்கும் உண்டாயினவாறு. பிரிவினை வேண்டாள் தலைமகளாயினுந் தலைமகனும் வேண்டாதாருக இங்கோத்துக்கண் என்றவாறு. இன்னும் நிலம்பெயர்ந்து உறையும் நிலையின் மருங்கினென்பதனை உடன்சொண்டு போவேனென்னத் தலைமகனும் உள்ளத்துக்கண் நிலைபெற்ற விடத்தென்றவாறு. களவுறை கிளவி என்பது களவுறைந்த காலத்து உரியசொல் அறத்தொடுநிலையென்றவாறு எனக்கொள்க. தோன்றுவதாயின் என்பது தலைமகன்மேற் றோழிமாட்டுத் தோன்றுமேயெனின் என்றவாறு. திணைநிலைப்பெயர்கோள் கிழவற்கும் வரையார் என்பது பாலைநிலத்தாளுயினன் தலைமகன் மருதநிலத்தளுயினனென்றவாறு. கிழவற்கும் வரையாரென்ற உம்மையாற் கிழத்திக்கும் வரையாரெனக் கொள்க. அவளும் உடன்போக்குக்கொண்டு பாலைநிலத்தாளாயினள் இவன் ஒழிந்தமை சொல்ல மருதநிலத்தாளாயினளெனக்கொள்க. மேலும் உடன்போக்குச் சூத்திரத்துள் உரைக்கும் பொருள் இதுவென்றுகொள்க. "பொருள்வயிற் பிரியினும் புணர்ந்துடன் போகினு - மதுபிரி வுரைப்பினும் பாலை யாகும்". (ருக)

ருஉ. நிலம்பெயர்ந் துறையு மெல்லாப் பிரிவு
மொழிந்தோ ரறியவு மறியா மையுங்
கழிந்து சேட்படூஉ மியற்கைய வென்ப.

என் - னின் ; இதுவுங் கற்புக்காலத்துத் தலைமகன்பிரிவின்கண் உரியதோர் இலக்கணம் உணர்-ற்று. (இ-ள்.) நிலம்பெயர்ந்து உறையும் எல்லாப் பிரிவும் = பரத்தையிற்பிரிவொழிந்த எல்லாப் பிரிவும் : ஒழிந்தோர் அறியவும் அறியாமையும் = தலைமகளுந் தோழியும் அறியவும் அறியாமையும் : கழிந்து சேட்படும் இயற்கைய என்ப = காடிடையிட்டும் நாடிடையிட்டும் அகன்று உறைதற்றன்மையென்றுசொல்லுவர் புலவர். எ - று. எனவே "ஓதல் காவல் பகைதணி வினையே - வேந்தற் குற்றுழிப் பொருட்பிணிப்பிரிவு" என்று இவற்றிற்குப் பிரிகின்று தலைமகளுந் தோழியும் அறியச் சொல்லிப் பிரியவும் உரியன், அறியாமைப் பிரியவும் உரியன், அவ்விரண்டும் இலக்கணமென்பது. அவற்றுள் அறியாமைப் பிரிதல் பயமின்று, அறியப்பிரிவது யான் இன்னதோர் இடத்தில் இன்னதோர் கருமம் முடித்து வருவேனென அவளை உடன்படுத்துப்பிரிவது. அதுவே தக்கது. அல்லாது அவர்சொல்லாது பிரிந்தவிடத்து இவ்வகைசொல்லாது பிரிதற் காரணம் என்னைகொல்லோவெனக் கவல்பவாகலின். அதுவன்று. அறியாமைப் பிரிதலென்பது சிலநாள் இடையுடைத்தாக ஓரதிகாரப்படுத்து அங்ஙனம் பிரிந்து ஒருகருமம் முடித்துக்கொண்டு வந்தார் தலைமக்கள். தலைமகளிரும் அவர் அது முடித்துவருந்துணையும் ஆற்றியிருந்தார். அஃது உலகத்தினது பண்பென்னும். என ஒக்கும் பிற தலைமக்கள் பிரிந்து பொருள்முடித்து நின்றக்காற் தலைமகளிர் ஆற்றாராபவேயெனின், அவரது ஆள்வினையை இடையூறுசெய்தாராவர் பிற, அதனால் அவர் பிரிந்துபொருண்முடித்து வருந்துணையும் ஆற்றுவதேயாகாதே செய்யப்படுவதெனா ஆற்றுவேனென்றாள் இடையீடு உடைத்தாலோ வென்பதனான். என்னை? சாதலுங் கெடுதலும் எல்லா உயிரும் அறியுமன்றே என்பதனாற் கலங்கவாம் அன்னது இவட்கென்பது. இங்ஙனம் உணர்த்திவைத்தார் பிரியும் ஞான்று கதுமெனக் கலங்கி ஆற்றாளாகவும் பெறும். பிறர் சாந்தன்மையானென்பதனாற் பெற்றதே இலேசாகப் பிரிவது கருமமென்று முற்படாது பிரிதலும் உடையனென்பது. அதனான் ஆற்றுவேனென்றாயன்றே, ஆற்றாளாவதற்குக் காரணமில்லைபிற, பொய்யாத்தன்மையளாகலான், இன்னும் உணர்த்துவித்தற்குத் தோழியை ஓம்படையேவிப் பிரியவும் பெறுமென்பது. அறியப்பிரிவது வலியுடைத்து. அறியாமைப் பிரிந்த தலைமகனோடுடைய கிழத்திசொல்லியதற்குச் செய்யுள்:—

செல்லாரவரொன் றியானிசழ்ந்தேன்சுரஞ்செல்வரென்க
ணெல்லாளவளென் றவரிசழ்ந்தார்மற்றவையிரண்டுங்
கொல்லாரயிற்படைக்கோனெடுமாறன்குளந்தைவென்ற
வில்லான்பகைபோலெனதுள்ளந்தண்ணமெலிவிக்குமே. (உகரு)

அஃதேல், நிலம்பெயர்ந்து உறையும் பிரிவும் ஒழிந்தோர் அறியவும் அறியாதேயுமென அமையாதே, எல்லாமென்றது எற்றிற்கோவெனின், களவுக்காலத்தும் ஒருபிரிவு சொல்லப்பட்டது. நிலம்பெயர்ந்து உறைவது பட்டபின்றை வரையாக்கிழவன் நெட்டிடைக்கழிந்து பொருள்வயிற் பிரிவதென அங்கும் அறியப் பிரியவும் அறியாமற்பிரியவுமெனச் சொல்லப்பட்டதென்பது. சேட்படுமியற்கையதென அமையாதே, சுழிந்ததென்றதெற்றிற்கோவெனின், சுழிந்தபின்றைக் கழிதலே யல்லது இடைச்சுரத்தே நின்றானும் அந்நிலத்தே நின்றானும் மீளுதலில்லையென்பது. என்னை? சிற்றறிவினரன்றே ஒரு கருமம் எடுத்துக்கொண்டு முடிப்பான் புக்கு முடியாது தவிர்வாரென்பது. "ஆடிய வெறியு மழுங்கிய செலவு - நாடுங் காலை யில்லென மொழிப." என்றாராகலின். இன்னும் அறியாமற் பிரிதற்குச் செய்யுள்:—

"செல்வா ரல்லரொன் றியானிசழ்ந் தனனே - வீவா ளல்ல
ளென் றவரிசழ்ந் தனரே - யாயிடை யிருபெய ராண்மை செய்த -
பூசனல் லார்க்கது யாங்கெனை-னல்ல நெஞ்ச மலமறுக் குறுமே."

என்பதூஉங் கொள்க. (ருஉ)

## ருங. எல்லா வாயிலுங் கிழவோன் பிரிவயிற் பல்லாற் றானும் வன்பொறை குறித்தன்று.

என் - னின்; பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகளை ஆற்றுவிக்குமாறுணர் - ற்று. (இ - ள்) எல்லா வாயிலும் = தலைமகனும் விருந்தும் ஒழிந்த எல்லாவாயில்களும்: தோழியும் பார்ப்பானும் பாணனும் பாடினியுமென இவர்கள்; கிழவோன் பிரிவயின் = தலைமகன் நாடிடையிட்டுங் காடிடையிட்டும் பிரியும் பிரிவின்கண்: பல் ஆற்றானும் வன்பொறை குறித்தன்று = பலநெறியானும் ஆற்றுவித்தலைக் கருதின. எ-று. என்பது பருவங்குறிக்கப்பட்ட தலைமகன் பருவவரவின்கண் ஆற்றாளாய்க் கார்ப்பருவம்வரும்வழி அவர் பாணிப்பாரல்லர், வந்தார் வாராநின்றார் வருவரெனவும், இதனைப் பருவமன்றென்றும், பழி

த்து, அதனைப் பருவமேயெனக் கருதினையேயெனில் அவராற் குறிக்க ப்பட்ட பருவமன்று, என்னை? அவர் பொய்யுரை உரையாராகலான், யாந்தெளியேமெனவுங் காலங் காட்டியுஞ் சோகினைஞ் சொல்லி யாழ்பண்ணியும் எல்லாப் பாசுரத்தானுந் தலைமகளை ஆற்றுவிக்கு மென்றவாறு. தலைமகன்றன்னை அன்பிலன் கொடியனெனவும் இத்தொடக்கத்தன வெல்லாஞ் சொல்லியும் ஆற்றுவிக்கும். அவற்றுட் பருவவரவின்கண் ஆற்றளாய தலைமகளை ஆற்றுவித்தற்குப் படைத்துமொழிந்து பருவமன்றென்றதற்குச் செய்யுள்:—

கடாவுநெடுந்தேர்க்கலிமதனன்கலிதேயச்செங்கோ
னடாவிநகைமூத்தவெண்குடைவேந்தனண்ணார்மதில்பாய்ந்
திடாமதமாமழைபெய்பகடோதையெனமுழங்கப்
பிடாவுமலர்வனகண்டேமெலிவதென்பெண்ணணங்கே. (உகூச)

விடக்கொன்றவைவேல்விசாரிதன்மற்றிவ்வியலிடம்போய்
நடக்கின்றசெங்கோலொருகுடைவேந்தனண்ணார்முனைபோற்
கடக்குன்றஞ்சென்றநங்காதலர்பொய்யலர்நையல்பொன்னே
மடக்கொன்றைவம்பினைக்காரெனவெண்ணிமலர்ந்தனவே. (உகூரு)

பூரித்தமென்முலையாயன்றுபூலந்தைப்போர்மலைந்த
வேரித்தொடையல்விசயசரிதன்வீண்டோய்கொல்லிமென்
மூரிக்களிறுமுனிந்துகையேற்றமுழங்குகொண்டன்
மாரிக்குமுல்லையின்வாய்நகவேநீவருந்துவதே. (உகூசு)

"நீரற வறந்த நிரம்பா நீளிடைத் - துகில்விரித் தன்ன வெயில் விருப்பி-னஞ்சுவரப் பரிக்கும் வெஞ்சுர மிறந்தோர் - தாம்வரத் தெளித்த பருவங் காண்வர - விதுவோ வென்றிசின் மடந்தை மதியின்று - மறந்து கடன்முகந்த கமஞ்சூன் மாமழை - பொறுத்தல் செல்லா திறுத்த வண்பெயல் - காரென வுணர்ந்த வுள்ளமொடு கோவில் பிடவுங் கொன்றையுங் கோடலின் - மடவ வாகலின் மலர்ந்தன பெரிதே."

இவை பிரிவிடைப் பருவங்கண்டும் ஆற்றளாய தலைமகளை இது பருவமன்று அவர் பொய்யுரையாராகலான் வம்பினைப் பருவமென்று மடமையாற் பிடவுங் கோடலுங் கொன்றையும் மயங்கிப் பூத்தன வென்று வற்புறுத்தாள்.

மையார்தடங்கண்மடந்தைவருந்தற்கவாளன்முனைமே
னெய்யாரயிலவர்காணப்பொழிந்தநெடுங்களத்து
வெய்யாரமரிடைவீழச்செந்தூவிவெள்ளம்புகைத்த
கையார்சிலைமன்னன்கன்னிநன்னீர்கொண்டகார்முகிலே. (௨௯௭)

இது பிரிவிடையாற்றாளாகிய தலைமகளைத் தோழி அவர் குறித்த பருவம் வந்ததாகலின் அவரும் பொய்யார் வருவரென வற்புறுத்தியது :—

கொடியார்நெடுமதிற்கோட்டாற்றரசர்குழாஞ்சிதைத்த
வடியாரயிற்படைவானவன்மாறன்வண்கூடலன்ன
துடியாரிடையாய்வருந்தல்பிரிந்ததுளங்கொளியா
படியார்கழலாரணுகவந்தார்த்ததகல்விசும்பே. (௨௯௮)

இதுவும் அது.

ஆமானனையமென்னோக்கியழுங்கலகன்றுசென்ற
தேமாநறுங்கண்ணியாளையுங்காட்டுந்தென்பாழிவென்ற
வாமாநெடுந்தேர்மணிவண்ணன்மாறன்வண்டீந்தமிழ்நர்
கோமான்கொடிமேலிடியுருமார்க்கின்றகூர்ம்புயலே. (௨௯௯)

அறையார்கழன்மன்னனுற்றுக்குடியழலேறவென்று
கறையார்சுடர்வேல்வலங்கொண்டகோன்கடன்ஞாலமன்னாய்
நிறையாம்வகைவைத்துநீத்தவர்தேரொடுநீமறந்த
விறையார்வரிவளைசேரவந்தார்த்தனவேர்முகிலே. (௩௦௦)

இதுவும் அது.

அஃதேயெனின் எல்லாவாயிலுங் கிழவோன் பிரிவினில் வன்பொறை குறித்த என்றது பல்லாற்றானும் என மிகைபடக் கூறி பவதனான் கற்புக்காலத்துக் கடிமனைசென்ற செவிலி தலைமகனது நிலைமையுந் தலைமகளது நிலைமையும் பார்த்துவந்து நற்றாய்க்குச் சொல்லியனவுங்கொள்க. அதற்குச் செய்யுள் :—

திருநெடுங்கோதையுந்தெய்வந்தொழாடெவ்வர்மேற்செலினும்
பெருநெடுந்தோளண்ணல்போந்தன்றித்தங்கான்பிறழ்வில்செங்கோ
லருநெடுந்தானையரிகேசரியந்தண்கூடலன்ன
கருநெடுங்கண்மடவாயன்னதாலவர்காதன்மையே. (௩௦௧)

விஷயம். பக்கம்.

அருணினைவு - நற்குணம்பத்தினுளொன்று ; பௌ. ௩௦௭
அருத்தாபத்தியளவை, உ௫௦
அருவமாய் எங்கும் நிறைந்துள்ள முதற்றெய்வம், ௧௪௧
அருளினிலக்கணம், ௭௬
அரூபப்பிடமர் - அரூபப்பிரமர் ; பிடமர் பிரமரென்னும் வடமொழிச் சிதைவென்பர் ; இப்படியே, ரகாரத்திற்கு டகாரம் வழங்குதலை இந்துஸ்தானி பாஷையிற் பரக்கக்காணலாம். பௌ. ௬௫
அரூபப்பிரஹ்மசாதியார்நால்வகையினர்- இவர்கள் தியானமைந்தனுள் ஐந்தாவதில் தேறியவர்கள் ; பௌ. ௬௫
அரூபப் பிரஹ்மலோகம் நான்கு - ஆகாசானந்தியாயதனலோக முதலியன; பௌ. ௩
அல்லியம் - புறநாடகம் பதினொன்றனுள் ஒன்று ; அது திருமாலாடல் ; அதற்கு உறுப்புக்கள் ஆறு, ௯௦
அலரிமாலை, ௫௭
அலவைப்பெண்டிர் - வியபிசாரிகள், ௧௧
அலைவலைமை - நெஞ்சிற் றோன்றியதை ஆராயாது செய்யுந்தன்மை, ௧௫௯
அவந்திக்காண்டம் - பெருங்கதையின் பேருறுப்பினுள் ஒன்று, ௯௨
அவந்திநாடு - அவந்திதேசம், ௧௯௯
அவித்யை - பேதைமை ; அது துவாதசநிதானத்துள் ஒன்று ; பௌ. ௯௦௯, ௯௧௭
அவிநுகர்ச்சி [அவி-தேவருணவு], ௧௯௦
அவிப்பலி - வீரர்கள் தங்களுயிரைப்பலியாகக்கொடுத்தல் ; அது புறப்பொருளின் பகுதியாகிய வாகைத்திணையின் துறைகளுளொன்று, ௫௭
அழற்கணாகம் - திருஷ்டிவிஷமென்னும் பாம்பு, ௭௬
அளவர் - அளத்திற்றொழில் செய்வோர், உ௬௯
அளவையிலக்கணம், உ௮௫
அற்புதசக்தி - இஃது இருத்தியெனப்படும் ; பௌ. உ௯௯
அற்றைப்பரிசம் - விலைமாதர்கள் ஆடவரிடத்து அன்றன்றுவாங்கும் விலை, உ௧௮
அறச்சாலை - தருமசாலை, உ௭உ
அறவாழி - தருமசக்கரம் ; பௌ. ௰
அறவியமனம் - அறத்தோடுகூடியமனம், ௯௮
அறவியான்-அறத்தோடுகூடியவன், ௯௨
அறவிலைவாணிகன் - பொருளைவிலையாகக்கொடுத்து அதற்குத் தருமங்கொள்ளும் வியாபாரி, ௧௫௫
அறுசுவை, உ௭௩
அறைபோகமைச்சர் - கீழறுக்குமந்திரிகள், ௧௦
அன்னதானம், ௧உ௩
அன்னம்பட்டீயம் - ஒருதமிழ்நூல் ; தத்தியரூபமாகவுள்ளது ; இது தருக்கசங்கிரகதீபிகையெனவும் பெயர்பெறும் ; தாரியற்றிய வடமொழித் தருக்கசங்கிரகத்திற்கு உரையாகத் தெலுங்கராகிய அன்னம்பட்டரென்பவரால் வடமொழியிற்செய்யப்பட்டுப் பின்பு திருவாவடுதுறையாதீனச் சிவஞான முனிவரால் மொழிபெயர்க்கப்பட்டது, உ௮௬
அநுமானவளவை, உ௪௧
அநுமானஸூத்திரம் - ஒருபௌத்தநூல் ; அநுமேயத்தினிலக்கணங்களைக்கூறுவது ; பௌ. உ௩௬
அநுமேயம் - பௌத்தர்களுடையபிரமாணமூன்றனுள் ஒன்று ; பௌ. உ௮௬
அநுவாதம் - முன்னர்ப்பெறப்பட்டதொன்றனை வேறொன்று விதித்தற்பொருட்டுப் பின்னரும்எடுத்தோதுதல், ௩௧௧
அஷ்டாங்கசீலம் - பௌ. ௧௰௦, உ௬௬
அஷ்டாங்கமார்க்கம் - ஸம்மியக்திருஷ்டி முதலியவற்றையுடைவழி : அது நற்பார்க்கமென்றுங்கூறப்படும் ; பௌ. ௯௯
அஸ்தமிக்கும் சூரியன், ௭உஉ
அஸ்தேயம் - திருடாமை, ௧௭௮
அஸங்கிரஹம் - இரவாமை ; இஃது அப்பிரதிக்கிரகமெனவும் வழங்கும் ; பௌ. இச்சொற்கு இவ்வாறன்றிப் பொருள்களைப் பின்பு வேண்டுமென்று சேகரித்துவைத்துக்கொள்ளாமையென்றும் பொருள்கூறுவர், ௧௭௪
அஸம்ஜ்ஞாஸத்துவலோகம் - பிரஹ்மலோக மிருபதினுட் பதினொன்றாவது ; அஃது உருபப் பிரஹ்மலோகம் பதினாறனுள் ஒன்று ; பௌ. ௯

விஷயம். பக்கம்.

அஹிம்ஸாபரமோதர்ம: - கொல்லாமையே தருமங்களுள் மேலானது, ௯௯

அஹிம்ஸை - கொல்லாமை, கஅஅ

அக்ஷபாதமுனிவர் - கௌதமர் : இவர் நையாயிகமதாசாரியர் காலிற்கண்ணுடைமையின், இவர்க்கு இப்பெயர்வந்த தென்பர் : நையாயிகம் - பதார்த்தம், உ௱உ

## ஆ.

ஆக்கிநேயபுராணம் - ஒருவடநூல் : பதினென்புராணத்துளொன்று: அது பதினாறாயிரங் கிரந்தங்களையுடையது, அ௯

ஆகமம், ௨௰, உ௬

ஆகமவளவை, உ௰

ஆகாசானந்தியாயதனலோகம் - பிரமலோகமிருபதினுட் பதினேழாவது; அஃது அருபப்பிரமலோகம் நான்கினுள் ஒன்று. ௯

ஆகாயகமனமந்திரம், ௪௬

ஆகாயசாரிகள் - சாரணர். உ௱, உ௯

ஆசனம் வரையறுத்தல் - தவத்தோர்க்குரிய நியமம் எட்டினுள் ஒன்று, ௯௩

ஆசாரக்கோவை - ஒருதமிழ்நூல் : இது சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்று. இந்நூலாசிரியர் பெருவாயின் முள்ளியென்பவர், ௬௭, உ௪௭

ஆசீவகவாதச்சருக்கம் - நீலகேசித்திரட்டின் உறுப்புக்களுள் ஒன்று, உ[illegible]

ஆசீவகவாதம், [illegible]

ஆசையறுத்தல் - நற்குணம் [illegible] ஒன்று. மேபா. ௯[illegible]

அட்டகுணிகர், [illegible]

ஆடம்பரக்-[illegible] ஒன்று; இது சடக்கடமென்றும், சடந்தமென்றும், சடமுழவென்றும் வழங்கப்படும் : இது வயிற்றில் புத்தகமுடையபாட்டம் உண்டென்பர் ; பொ. [illegible]

ஆடலாசிரியன் - ந்ருத்தகன் ; இவன் பரதநூலுட்கூறியபஞ்சாசாரியர்களுள் ஒருவன், ௭௯

ஆண்டலைப்பறவை - ஆண்மகனது தலைபோன்ற வடிவமுள்ள ஒருவகைப் பக்ஷி, [illegible]

ஆத்திமாலை - சோழர்களுக்குரிய அடையாளமாலை, ௯௭

ஆத்திரேயம் - ஒருவடநூல் ; இது வேதாங்கமாகிய கல்பவகைகளுள் ஒன்று : அத்திரிமுனிவராற் செய்யப்பட்டது, உ௱௪

ஆதிரை - சாதுவன்மனைவி, ௬

ஆந்திரதேசம் - தெலுங்கநாடு. க௱௬

ஆப்தன் - உண்மையையே சொல்லுபவன், உ௱௰

ஆப்பி - சாணம் ; இது வடமொழியில் 'கோபுரீஷம்' என்றுகூறப்படும், க௫௯

ஆபத்சம்பம் = ஆபஸ்தம்பம் - ஒருவடநூல் : இது வேதாங்கமாகிய கல்பவகைகளுள் ஒன்று ; ஆபஸ்தம்பமுனிவரால் செய்யப்பட்டது, உ௱௪

ஆபரணங்களில்லாததோற்றம் - இயற்கையழகு, ௯

ஆபஸ்தம்பசூத்ரம் - ஒருவடநூல் ; இது ஆபஸ்தம்பமுனிவராற் செய்யப்பட்டது ; இல்லறநெறியைக்கூறுவது, ௭௯

ஆபாஸ்வரலோகம் - பிரமலோக மிருபதினுள் ஆறாவது : இது உருபப்பிரமலோகங்களுள் ஒன்று, ௯

ஆம்பல் - இரவில் மலரும் பூ, உ௬௮

ஆயதனம் - இடம், ௯௰

ஆயம்பட்டு - எண்பேராயம் : இவை அரசர்களுக்குச் சகாயஞ்செய்வோராகிய ஐவகையினருடைய கூட்டம் ; இவர்களை அஷ்டபரிவாரமென்பர் வடநூலார், ௯0

ஆயுதங்கள் [illegible] - சங்குமுதலியன : இவை திருமாலுக்குரியவை, [illegible]

ஆரம் - உண்டாக்கப்பட்டசோலை இது உபவனமென்றும் வழங்கப்படும், [illegible]

ஆரியப்பேடு - ஆரியக்கூத்தாடிப்பேடு, ௯0

ஆரியபாஷைதனவைத்ரம் - மத்தியமநிகாயமென்னுநூலின்பகுப்பினுளொன்று : இதில், புத்தசரிதம் கூறப்படும், உ௬௯

ஆரியவரசர் - கனகன் விசயன் முதலியோர், உ௱௯

ஆலந்தானம் - பலரும் வந்து இருத்தற்குரிய இடம், உ௭

க்கச்சினைதவின்றி விழுப்பமுடைத்தாய் ஓங்கிவாராநின்றதொரு பெருங் குலமன்றே, அக்குலத்தை நீ அழித்தல் தக்கதோ, நானும் கற்புமன்றே பெண்டிர்க்கு அணிகலமாவனவென்பதனால் இக்குலத்தினவர் கற்பெனப்பட்ட சிறையழியாமை காத்துக்கொண்டொழுகினார், அதனை நீ அழிக்கின்றாயாகலின் நின்கட் பெரியதோர் பழியாக்குகின்றாயென்று, நம்பெருமானுந் தமது ஆண்மைத்தன்மை காட்டிப் பிரிந்தார், நீயும் அவர்கருதியது முடித்துவருந்துணையுங் கற்புக்காத்திருக்க வேண்டுமென்றும், சான்றோர்மகளிரென்பார் சிறியரன்றிப் பெரியராதல் வேண்டும், அத்தன்மையென்பது தங்குலநோக்கித் தங்கற்புக்காத்தொழுகினதனின் மிக்கதில்லையென்றும், இவ்வகை ஆற்றுவித்தல். து சிறைப்புறங் குறித்தலென்பது. அதற்குச் செய்யுள் :—

உலத்திற்பொலிந்ததிண்டோண்மன்னனென்றேருசிதன்மற்றிந்
நிலத்திற்பொலிந்தசெங்கோலவனீள்புனற்கூடலன்ன
நலத்திற்குநாணிற்குங்கற்பிற்குஞானத்தினல்லநங்கள்
குலத்திற்குந்தக்கதன்றாலின்னையாருதல்கோல்வளையே. (௩௦௯)

இவ்வகை சொல்லி ஆற்றுவித்தலே சிறைப்புறங் குறித்தலென்றவாறு. (௫௪)

௫௫. சிறைப்புறங் குறியா தோன்றலு முளவே
யவர்ப்புணர் வறியுங் குறிப்பி னான.

என் - னின்; தலைமகன் பிரிந்தவழித் தலைமகள் ஆற்றாளாயினவிடத்துத் தலைமகனது வரவுசொல்லி ஆற்றுவிக்கவென்பது உணர்த்-ற்று. (இ-ள்) சிறைப்புறங் குறியா தோன்றலும் உளவே = மேற் றோழி கற்பெனப்பட்ட சிறையை அழிக்கின்றாயென்றன்றே ஆற்றுவித்தது, அவ்வாறன்றி வருவனவும் உள: அவர் புணர்வு அறியுங் குறிப்பினான = தலைமகன் வினைமுற்றியானும் பொருண்முற்றியானும்வருங் குறிப்பின்கண். எ - று. அஃதாமாறு மேல் ஆவ்வகையாற் பிரிவெடுத்துக்கொண்டு ஆறுவித்தார், ஆற்றல்வேண்டு பிரிந்தவழித் தோழி தலைமகளை ஆற்றுவித்துக்கொண்டு இருந்தாளன்றே, இருந்தவிடத்துத் தலைமகனுந் தானெடுத்துக்கொண்ட வினைமுடித்தானன்றே, முடித்தவழியாற் குறித்தகாலம் வந்ததென்று மறுத்துஞ் சார்ந்தாரன்றே, சார்ந்தவிடத்துச் சங்கு படகம் வந்து இசைத்தன, இசைப்பத் தோழி தலைமகனது வரவுணர்ந்து எம்பெருமாட்டி நீ

இறந்துபடுவோன் புக்காயாற் கண்டானன்றே, உள்ளாரால் எய்தப்ப டாத பொருளில்லை, நீ ஆற்றியுள்ளாயாகின்றே, இன்றும் எம்பெரு மானை வழிபடுவாயாயினையாயிற்றென இவ்வாறு சொல்லுதல் நிறை ப்புறங்கூறியா தோன்றலுமுளவேயென்பது. சங்கம் படகம் இசைப்ப ச் சங்கினை வாழ்த்திச் சொல்லியதற்குச் செய்யுள்:—

தேனிறவார்கண்ணிச்செம்பியன்மாறன்செழுங்குமரி
வானிறவெண்டிரைமால்கடற்சேர்ந்தினைமன்னனளந்த
நீனிறவண்ணனுமேந்திளன்றம்முனிறம்புனைநீம்
பானிறவெண்சங்கையார்நின்னின்மிக்கபடிமையரே. (௩௦௪)

"புரிவளை வான்கோடு புத்தேளோ டொத்தி - திருவமர் மார்ப னுமேந்திளன் றம்முன் - னுருவம் புனையுநின் கேழ்."

என்பதூஉங்கொள்க. (௫௫)

௫௬. திணையே கைகோள் கூற்றே கேட்போ
ரிடனே கால மெச்ச மெய்ப்பாடு
பயனே கோளென் றாங்கப் பத்தே
யகனைந் திணையு முரைத்த லாறே.

என் - னின்; மேற் களவுங் கற்பும் உணர்த்தினார், இனி அவ் விரண்டும் பற்றிவருகின்ற பாட்டினை இக்கூறப்பட்ட பத்திலக்கண த்தானும் உரைக்கவென்பது உணர்-ற்று. (இ-ள்.) திணையென்ப து, பலபொருளொருசொல் ஒன்றாய்க்கிடந்தது; நிலத்திணையுந் திணை யென்ப, குலத்திணையுந் திணையென்ப, ஒழுக்கத்திணையுந் திணையெ ன்ப; ஆகவே ஆகுபெயரால் அவ்வாறு ஒழுகலாறு நிகழ்ந்த இடத் தையுந் திணையென்றார். அவை குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெ ய்தலென ஐந்து வகைப்படும். அவை அறியுமிடம் முதல் கரு உரிப் பொருள் பற்றி அறியப்படுமென்றவாறு. அவ்விலக்கணமெல்லாம் மேல் "அன்பினைந்திணை" என்ற வழியே உணர்த்திப் போந்தாம் அவை திணையெனப்படுவன. அகப்பாட்டின் ஒருபாட்டுக் கேட்டவ் டத்து இவ்வைந்திணையுள்ளும் இன்னதொன்றுபற்றி வந்ததென்று சொல்லுவது.

இனிக் கைகோளென்பது, களவுகற்பென்றவாறு. இது கள வுபற்றி வந்தது, இது கற்புப்பற்றி வந்ததென அறிவது.

இனிக் கூற்றென்பது, கூறுதற்கு உரியாரை அறிந்து அவருள் இன்னுர் கூற்று இப்பாட்டென்பது அறிவது; அக் கூறுதற்கு உரியாரைச் செம்பூட்சேயார் கூற்றியலுள்ளும் தொல்காப்பியனுர் பொருட்பாலுள்ளுங் கண்டுகொள்க. "பார்ப்பான் பாங்கன் ரேழி செவிலி-சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ - டளவியன் மரபி னறுவகை யோருங் - களவினிற் கிளவிக் குரிய ரென்ப." "பாணன் கூத்தன் விறலி பரத்தை - யாணஞ் சான்ற வறிவர் கண்டோர் - பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா-முன்னுறக் கிளந்த வறுவரொடு தொகைஇத்-தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்." என்று ஓதினுர் தொல்காப்பியனுரெனக் கொள்க. இச்சொல்லப்பட்டாருள் இன்னுர் கூற்றென்று

இனிக் கேட்போரென்பது, இன்னுர்கூற இன்னுர் கேட்டாரென்றறிவது; தோழிகூறத் தலைமகள் கேட்டாள், தலைமகள்கூறத் தோழிகேட்டாள், தோழிகூறத் தலைமகன் கேட்டான், தலைமகன் கூறத் தோழிகேட்டாள் என்று இவ்வகையனவுமெல்லாம் அறிந்துரைப்பது.

இடமென்பது, இவ்வாறொருவர் கூற ஒருவர் கேட்கும் இடமென்றவாறு. அவை தன்மை முன்னிலை படர்க்கையென்பன. அவற்றுள் யானென்பது தன்மை, நீயென்பது முன்னிலை, அவனென்பது படர்க்கை, அவற்றுள் அன்னதுபற்றி வந்ததென்றறிவது.

காலமென்பது, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமென மூன்றுவகைப்படும். அவற்றுள் உண்டானென்பது இறந்தகாலம், உண்ணாநின்றனென்பது நிகழ்காலம், உண்பானென்பது எதிர்காலம்; இவற்றுள் இன்னதுபற்றி வந்ததென்றறிவது.

எச்சமென்பது ஒழிவு. அஃது இரண்டுவகைப்படும்; சொல்லெச்சமுங் குறிப்பெச்சமும். அவையாமாறு முன்னர்ச்சொல்லுதும்.

மெய்ப்பாடென்பது எட்டுவகைப்படும். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, உவகை, அச்சம், பெருமிதம், வெகுளி, எனவிவை. அவற்றுள் இன்னதோர் மெய்ப்பாடு வந்ததென்றறிவது.

பயனென்பது, இது சொல்ல இன்னது பயக்குமென்றறிவது.

கோளென்பது, ஒருபாட்டினகத்துப் பொருள்கொண்டு நிற்கும் நிலை; அது ஐந்துவகைப்படும்; விற்பூட்டு, விதலையாப்பு, கொண்டுகூட்டு, பாசிநீக்கு, ஒருசிறைநிலை. அவற்றுள் இன்னதோர் பொருள்கொண்டு நின்றது இப்பாட்டென்றறிவது; அவற்றுள்,

விற்பூட்டுப்பொருள்கோள் வருமாறு:—

அருவர்வயங்கிழாய்வாட்டாற்றெதிர்நின்றுவாண்மலைந்த
வுருவமணிநெடுந்தேர்மன்னர்வீயவொளிதருமேற்
புருவமுரிவித்ததென்னவன்பொன்னங்கழலிறைஞ்சாச்
செருவம்படைமன்னர்போலவெங்கானகஞ்சென்றவரோ. (௩௦௫)

இனி விதலையாப்பு வருமாறு:—

பண்டானனையசொல்லாய்பரிவிட்டுப்பறந்தலைவாய்
விண்டார்படச்செற்றகோன்கொல்லிப்பாங்கர்விரைமணந்த
வண்டார்கொடிநுடங்கிடைபோலவணங்குவன
கண்டாற்கடக்கிற்பரோகடவாரன்பாகானகமே. (௩௦௬)

பாசிநீக்கம் வருமாறு:—

சென்றார்வருவதுநன்கறிந்தேன்செருச்செந்நிலத்தை
வென்றான்பகைபோன்மெலியனமடந்தையும்வெற்பெடுத்து
நின்றானளந்தநிலமுங்குளிர்ந்ததுநீள்புயலாற்
பொன்றான்மலர்ந்துபொலங்கொன்றைதாமும்பொலிந்தனவே. ()

கொண்டுகூட்டுப்பொருள் வருமாறு:—

கோவைக்குளிர்முத்தவெண்குடைக்கோனெடுமாறன்முந்நீர்த்
தூவைச்சுடர்வேலவர்சென்றநாட்டுள்ளுந்துன்னுங்கொல்லோ
பூவைப்புதுமலர்வண்ணன்றிரைபொருநீர்க்குமரிப்
பாவைக்கிளையனையாய்கொண்டுபெண்டித்தபன்முகிலே. (௩௦௮)

ஒருசிறைநிலை வருமாறு:—

கோடன்மலர்ந்தகுருகிலைதோன்றினகொன்றைசெம்பொன்
பாடன்மணிவண்டுபாண்செய்யப்பாரித்தபாழிவென்ற
வாடனெடுங்கொடித்தேரரிகேசரியந்தண்பொன்னி
நாடன்பகைபோன்மெலிகின்றதென்செய்யகன்னுதலே. (௩௦௯)

விற்பூட்டென்பது தலையுங் கடையும் பொருள்சொல்வது; விதலையாப்பென்பது முதலும் இடையுங் கடையும் பொருள்கொள்வது; பாசிநீக்கமென்பது சொற்றோறும் அடிதோறும் பொருளேற்றுநிற்பது; கொண்டுகூட்டென்பது பொருள்களைக் கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளுமாறறிந்து கொள்வது; ஒருசிறைநிலையென்பது ஒருபாட்டினகத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒருவழி நிற்பது.

ஆங்கப் பத்தே அகனைந்திணையும் உரைத்தலாறே = ஆங்கென்பது அசைச்சொல்; பத்தென்பது தொகை; ஏயென்பது ஈற்றசை யேகாரம், அகனைந்திணையும் உரைத்தலாறே = அகனைந்திணையும் அறிந்து உரைக்க அகப்பாட்டினை வல்லோர் சொல்லுமிடத்து. எ - று.

முளிதருவேனற்கட்காவலரார்ப்பமுகிற்கணங்க
டளிதருதண்சிலம்பாதக்கதன்றுதரணிதன்மே
லளிதருசெங்கோலரிகேசரியந்தண்கூடலன்ன
வொளிதருவாணுதலாளையவிவ்வாறொழுகுவதே. (௧௪௦)

இப்பாட்டிற்குத் திணை, குறிஞ்சி; கைகோள், களவு; கூற்று, தோழிகூற்று; கேட்டான், தலைமகன்; இடம், முன்னிலை; காலம், எதிர்காலம்; வந்தொழுகாநின்றானுக்கு உரைத்தமையான் நிகழ்காலமாகவுங் கொள்க; எச்சம், நீயென்பது எஞ்சிற்று; மெய்ப்பாடு, அச்சம்; இவ்வொழுக்கம் பிறரறியின் இறந்துபடுமென்னும் நிலையினளாயினமையின்; பயன், வரைவுகடாதல்; பொருள்கோள், தளிதருதண்சிலம்பா தக்கதன்று இவள் நைய இவ்வாறு ஒழுகுவது எனக் கொண்டமையின் இது விதலையாப்பு.

மானக்கடுஞ்சிலைமான்றேர்வரோதயன்வாண்முனைபோன்
றானப்படநினைந்தூடல்பொன்னேயுறுவெஞ்சுரத்து
நானக்குழன்மிசைநான்கொய்துகொண்டுநயந்தணிந்த
கானக்குரவிணம்போதேகமழுமெங்கைத்தலமே. (௧௪௧)

இப்பாட்டுத் திணை, மருதம்; கைகோள், கற்பு; கூற்று, தலைமகன் கூற்று; தலைமகன் பரத்தையைக் கோலச்சிறப்புச் செய்தானென்று வேறுபடலுற்ற தலைமகள் குறிப்பறிந்து தலைமகன் சொல்லியது; கேட்டாள், தலைமகள்; இடம், முன்னிலை; காலம், இறந்தகாலம் பற்றிவந்த நிகழ்காலம்; எச்சம், என்னேடென்பது எஞ்சிற்று; மெய்ப்பாடு, நடுக்கம்; பயன், கேட்டுத் தலைமகள் ஊடல் தீர்வாளாவது; கொ

ள், விதலையாட்பு, யான் கொய்தணிந்த குரவினம்போதே இன்னுங் கமழும் என் கைத்தலமென்று மூன்றிடத்துப் பொருள் கொண்டமை யானென்பது. (ரு௬)

ருஎ. அவற்றுள், எச்சமுங் கோளு மின்மையு முரிய.

என் - னின்; மேற்கூறப்பட்ட பத்தினுள்ளும் எச்சமுங் கோளும் இன்றியும் உரியவென்பது உணர் - ற்று. (இ - ள்.) அவற்றுள் = மேற்கூறப்பட்ட பத்தினுள்ளும்: எச்சமுங் கோளும் இன்மையும் உரிய = எச்சமானுங் கோளானும் இவ்விரண்டினுள்ளும் ஒன்றொழிந்தும் இரண்டுமொழிந்தும் நிற்கவும் பெறும். எ - று. அவற்றுள் எச்சமின்றிவந்ததற்குச் செய்யுள் :—

ஆமானையமென்னோக்கியழுங்கலகன்றுசென்ற
தேமாநறுங்கண்ணியானையுங்காண்டுந்தென்பாழிவென்ற
வாமாநெடுந்தேர்மணிவண்ணன்மாறன்வண்டூந்தமிழ்நர்
கோமான்கொடிமேலிடியுருமார்க்கின்றகூர்ம்புயலே. (௩௧௨)

இனிக் கோளின்றி வந்தது வருமாறு :—

வரிநிலைமையைநீக்கிமண்காத்துவல்லத்தெதிர்ந்தா
ரோடுநிலைமைகண்டான்வையையொண்ணுதன்மங்கையரோ
டாடுநிலைமையையல்லையவரொடம்பூம்பொழில்வாய்
நீடுநிலைமையுமல்லைசொல்லாயென்னெடுந்தகையே. (௩௧௩)

எனக் கொள்க.

ருஅ. சொல்லே குறிப்பே யாயிரண் டெச்சம்.

என் - னின்; மேற்கூறப்பட்ட எச்சம் இரண்டுவகைப்படும் என்பது உணர் - ற்று. (இ - ள்.) சொல்லே குறிப்பே ஆ இரண்டு எச்சம் = சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமென இரண்டு எச்சம். எ - று. சொல்லெச்சமென்று சொல்லப்பட்ட வாய்பாடன்றிப் பிறவாய்பாட்டாற் றோன்றினுமென்றவாறு. எச்சமென்பது ஒழிதலென்றவாறு. சொல்லெச்சத்திற்குச் செய்யுள் :—

பள்ளத்துநீலம்பறந்தலைக்கோடிப்பட்டார்குருதி
வெள்ளத்துச்செங்கழுநீர்வைத்தகோன்றெண்டிவண்டுமென்பூ
வள்ளத்துத்தேமகிழ்கானல்வந்தார்சென்றதேர்வழியெம்
முள்ளத்தினூடுநினைதயவந்துருமொலிகடலே. (௩௧௪)

அறையார் கழல் மன்னன்'' (பாண்டிக்
முதலிய மூன்றும் விடுப் போயின.

இனிக் குறிப்பெச்சம் வந்தசெய்யுள்:—

இடியார்முகிலுருமேர்தியகோனிரணோதயன்றன்
வடியாரயிலன்னகண்ணிதன்வாட்டமுணர்ந்துவண்பூங்
கடியார்கருங்கழிமேய்கின்றகானற்கலந்தகன்ற
கொடியாரினுமிகத்தாமேகொடியகுருகினமே. (௩௪௫)

எனவுங் கொள்க.

௫௬. முற்படக் கிளந்த பொருட்படைக் கெல்லா
மெச்ச மாகி வரும்வழி யறிந்து
கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே.

என் - னின்; இந்நூலுள் எடுத்தோதாதே இலேசேயென்று இவற்றான் முடியாது நின்றனவெல்லாம் இது புறனடையாகத்தந்து கொணர்ந்துரைக்கவென்பது உணர் - ற்று. (இ - ள்.) முற்படக்கிளந்த பொருட்படைக்கு எல்லாம்=முன்னால் உரைக்கப்பட்ட சூத்திரப்பொருட்கெல்லாம் : எச்சம் ஆகி வரும் வழி அறிந்து =ஒழிவுபட வரூஉம் இடம்ஆராய்ந்து : கிளந்த அல்லவேறுபிற தோன்றினும்=சொல்லப்பட்ட வாய்பாடின்றிப் பிறவாய்பாடு தோன்றினும்: கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே=அச்சொல்லப்பட்ட பத்திலக்கணத்தானே உணர்ந்து உரைக்கப்படும். எ - று. இது களவிடத்தொழிந்தது கற்பிடத்தொழிந்ததென்று அறிந்து என்றவாறு. தலைச்சூத்திரத்துள் அன்பினைந்திணையென்றதல்லது அன்பு உணர்த்துமாறு ஆண்டு உணர்த்தியதில்லை; இதுவே ஓத்தாகத் தந்துணர்ந்து அதன்விகற்பமெல்லாங் கொள்க. அன்பினுடைய ஐந்திணைக்குரிய இறைச்சிப்பொருள் உணர்த்தியதில்லை; அவை “தெய்வ முணாவே மாமரம் புட்பறை - செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ” ஐவகை நிலத்திறோதப்பட்ட இடமுங் காலமுந் தெய்வமும் உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையுஞ் செய்கையும் யாழும் ஆணுப்பெயரும் மகடூஉப்பெயரும் அவ்வவ நிலத்துக்கு மக்களும் நீரும் இருதும் என்றித்தொடக்கத்தனவாய ஐந்திணைக்குரியன உரிப்பொருளும், அவற்றின் நிமித்தமும், ஐந்திணைக்குரிய விகற்பமும் எல்லாம் இதுவே ஓத்தாகத் தந்துரைக்க.

இனி எண்வகை மணத்தின் விகற்பமும் இதுவே ஒத்தாகவுரைக்க. இனிக் கந்தருவ வழக்கின் விகற்பமும் இதுவே ஒத்தாகவுரைக்க. இயற்கைப்புணர்ச்சியின் இருவருந் தம்முட் தலைப்பெய்யுமாறும், புணரும் இடத்துத் தன்மையும், அது கன்மேற் பொதும்புபட்டுக் கோட்டுப்பூவுங் கொடிப்பூவும் நிரந்து மேற் சித்திரப்படாம் விரித்தாலே போன்று வண்டுந் தும்பியும் வரிக்கடைப் பிரசமும் யாழுங் குழலும் முரன்று கடற்றிரையுங் கானியாறும் முழவுந் துடியும் பாடியம்ப இரவோரன்ன கொழுநிழற்றுய் நிலவோரன்ன வெண்மணலொழுகி அகத்தார் புறத்தாரைக் காண்டல் எளிதாய்ப் புறத்தார் அகத்தாரைக்காண்டல் அரிதாய் வானோரும் விழைவைத் தவிர்ந்தோரும் விரும்பியபொழிலுள் இயற்கைப்புணர்ச்சியது இறுதிக்கட் தலைமகளை அ-றுவித்துப் பிரியும் பிரிவும் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க.

இனிப் பாங்கற்கூட்டத்துக் கட் தலைமகனது வேறுபாடு கண்டு பாங்கன் வினவத் தலைமகன் சொல்லினவும், அவை கேட்ட பாங்கன் கழறினவும், பாங்கற்கெதிர்மறையாகச் சொல்லினவும், எதிர்ப்பட்ட தலைமகனது ஆற்றாமை கண்டு பாங்கன் தலைமகற்குக் கவன்றனவும், கவன்ற பாங்கன் நின்றுற் காணப்பட்ட உரு எவ்விடத்து எத்தன்மைத்தென்றதுவுந், தலைமகன் இன்னவிடத்து இத்தன்மைத்து என்றுற் காணப்பட்ட உருவென்னுமாறும், அது கேட்ட பாங்கன் அவ்விடத்தெதிர்சொல்லுமாறும், அவ்விடம் புக்குப் பாங்கன் தலைமகளைக் கண்டு நின்று சொல்லினவும், பாங்கன் மீண்டுவந்து இடங்காட்டினவும் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க. "அவ்வியல்பல்லது" என்னுஞ் சூத்திரத்து விகற்பம் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க.

தலைமகன் தோழியை இரந்து குறையுறுமாறுங், குறையுறுநின்றவழித் தோழி கையுறை மறுக்குமாறும், மதியுடம்படுக்குமாறும், படுத்தவழி இருவர் குறிப்புப்பற்றிக் கூட்டமுண்மை உணருமாறும், உணர்ந்தாளது நெஞ்சிற்குச் சொல்லுமாறும், பின்னைத் தோழி தலைமகனது ஆற்றாமைக்குக் குறைநேருமாறும், நேர்ந்தாள் தலைமகளைக் குறையப்புக் கூறுமாறுந், தமர் இற்செறித்தவழித் தலைமகளது கற்பழிவு நோக்கி அறத்தொடு நிற்குமாறுங், குறையுறுநின்ற தலைமகனைத் தலைமகளது அருமைகூறிச் சேட்படுக்குமாறுந், தோழி அறத்தொடுநிற்கும் விகற்பமும், இரவுக்குறி விகற்பமும், பகற்குறிக்கட் தோழியுந் தலைமகனுஞ் சொல்லும் விகற்பமும், இரவுக்குறி நிகழும் இன்னவிடமெ

ன்று சொல்லும் விகற்பமும், இரவுக்குறிக்கண் அம்பலும் அலரும் உண்டாமாறும், இரண்டுங் களவாமாறும், வெளிப்பட்ட பின்றை நிகழுஞ் சொல்லும், புணர்ந்துடன்போக்கும், உடன்போக்கின்கட் டோழியுந் தலைமகனுஞ் சொல்லும் விகற்பமும்; இடைச்சுரஞ் செலவழுங்குமாறும், மாட்சிமைப்படாத இடத்துத் தோழி தலைமகளைக் கையடைந்தான் ஒழியுமாறுந், தலைமகன் என்று கொண்டுபோமாறும்; அவர்களை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லும் வாய்பாடுஞ், செவிலி பின்செல்லுமாறும், பின்செல்ல இடைசசுரத்துக் கண்டார் சொல்லும் முறைமையுங், கண்டார் இடைச்சுரத்துத் தலைமகளது நிலைமையுற்று மீட்குமாறுந், தலைமகன் மகிழ்ச்சியாமாறுந், தலைமகன் பொருள் முதலாயினவற்றிற்கு வரைவிடைவைத்துப் பிரிந்து தலைமகளைத் தோழி ஆற்றுவிக்குமிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவனவும், வரைவொடுபுக்கவழித் தந்தையுந்தன்னையன்மாரும் மறுக்குமாறும், அவ்வழி நற்றாய் அறத்தொடு நிற்குமாறுங், கற்புககாலத்துத் தலைமகன் தலைமகளைப் பிரியும் பிரிவென்று சொல்லப்பட்ட பிரிவும், பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றாளாகத் தோழி வற்புறுத்தனவும், பருவங்காட்டினவுந், தலைமகன்வினைமுற்றுவித்து வந்தவாறும், அஃதுணர்ந்த தோழிசொல்லினவுந், தலைமகன் வினைமுற்றினன் தேர்ப்பாகற்குச் சொல்லினவும், முகிலுக்குச்சொல்லினவுந், தலைமகன் தலைமகளுடனிருந்த தோழிகேட்பச்சொல்லினவும், மற்றும் பரத்தையிற் பிரிவின்கட் டுணிவுபுலவியூடலும், அவற்றது விகற்பமும், பரத்தையிற் பிரிந்த தலைமகற்குத் தலைமகள் வாயின் மறுத்தனவும், வாயில்வேண்டிப் பாணன் முந்துறுத்தனவும், வாயில் பெற்றுப் புக்கனவும், மற்றும் பிறவுமெல்லாம் இதுவே ஒத்தாகத் தந்துரைக்க. (௫௯)

௬௦. களவு கற்பெனக் கண்ணிய வீண்டையோ
ருளநிக ழன்பி னுயர்ச்சி மேன.

என் - னின்; மேல்வகுத்த களவு கற்புகட்குப் பிறிதும் ஆவதோர் புறனடை உணர் - ற்று. (இ-ள்.) களவு கற்பு எனக் கண்ணிய= களவென்றுங் கற்பென்றும் புலவோரால் வகுத்துரைக்கப்பட்ட ஒழுக்கங்கள்: ஈண்டையோர்= இவ்வுலகத்திற் பிறந்தாலுஞ் சஞ்சரித்தாலும் பொருந்துவோரது: உளம் நிகழ் அன்பின் உயர்ச்சி மேன= உயர்குலத் தலைவன் தலைவியென்று இன்னோரது உளத்தின்கண் நிகழ்கின்ற அன்பினது உயர்வின் கண்ணவாம். எ - று. தேவர்க்கும் நாகர்க்கு

ம் இவ்வொழுக்கம் அவ்வவுலகத்திலில்லையென்பார் ஈண்டையோரென்றார். எனவே, அன்னோர்க்கு அஃது இவ்வுலகத்து ஓரோர்காலத்து நிகழுமென்றாராயிற்று. அது இவ்வுலகிலும் இயற்கையான் நிலைபெறாது புலவரான் இல்லது இனியது நல்லதென நாட்டப்பட்டதோர் ஒழுக்கமென்பார் கண்ணியவென்றார். இனி இரட்டுறமொழிதலான் ஈண்டையோரென்பதை ஒரு பெயராகக்கொள்ளாது ஈண்டை ஓர் எனக்கொண்டு "தானே யவளே தமியர்" என்றதனாற் தானேயவன் அவளேதானென இயன்ற ஈருடலின் ஓருயிர் போல்வார் உளத்தென்று கொள்ளினும் அமையும். அன்பின் உயர்ச்சியெனவே அஃதில்லாவிடத்து இவ்வொழுக்கங்கள் நடைபெறா என்பதூஉம் அதனானே அஃது உயர்ந்தோர் மாட்டதென்பதூஉம் அவருள்ளும் அரசர்க்கே சிறந்ததென்பதூஉம் பெற்றாம். அற்றாயின் உயர்ந்தோர் மேன எனப் பாடமோதலாகாதோவெனின், "அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும் - கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்." என மற்றை வருணத்தோர்க்குஞ் சிறுபான்மை அஃதுரியதென்று தழீஇக்கோடல் கருதப்பட்டதென்க. (௬௦)

முற்றும்.

கிடம்விளங்காமேற் கோண்
க்கம்

௬௧ — ஸைபயன்மாலைப்படு

௮௧ — செருநுழம்பொ

௬௭ — வெவ்வாராங்குருகின்

௬௪. சனல்கர்வல்

௯௪. அம்பறுநங்கேதம

,, கண்ணைணமலரும்

,, நெய்த்துணகண்

௧௨௧. தான்ஞெர்வருந்திய

௧௦௫ நண்ணறிவுடைய

௧௦௬. நிவளேளரின்னல

௧௫௬. மான்றேர்மாமை
வை வருத்தில்லம்.

௧௭௨. புரிவளைவான்